2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

வரு.74 இல. 40 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
24 பக்கங்கள் 80/-
2022 ஒக்டோபர் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
October 09 Sunday, 2022






03 தேர்தலை விட பொருளாதார மீட்சிக்கே முன்னுரிமை


06 இலங்கையை சோதனைக் களமாக்க சில நாடுகள் முயற்சி


12 அனைவரையும் தன்வசப்படுத்திய தர்ஷன்


24 பயணம் ஆரம்பம்


ஜாமியா நளீமிய்யா கலாபீடம் விழாக்கோலம்

# தேசிய மீலாதுன் நபி விழா இன்று ஞாயிறு பேருவளையில்

விதுர, அலிசப்ரி, ஹாபிஸ் நஸீர், மர்ஜான் பளீல், இம்தியாஸ் உட்பட பலர் கலந்து கொள்வர்



பேருவளை விசேட நிருபர்

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டிலான தேசிய மீலாதுன் நபி பெருவிழா இன்று 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு பேருவளை

05

குறுகிய, நடுத்தர, நீண்டகால கொள்கை தயாரிப்பு;

# தேசியசபையின் உபகுழுவின் தலைவராக நாமல் MP தெரிவு



தேசிய சபையினால் நியமிக்கப்பட்ட குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான உப குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ (07) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உபகுழுவின் தலைவர் பதவிக்கு நாமல் ராஜபக்ஷவின் பெயரை, பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் இதனை வழிமொழிந்தார்.

இதில் கொள்கைத் தயாரிப்புத் தொடர்பில் குழுவின் உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர். அரச நிர்வாகக் கொள்கைகளை நவீனமயப்படுத்தல், சுகாதாரம் மற்றும் கல்விக்

05

ஜெனீவாவில் எமக்கு தோல்வியில்லை

# இலங்கைக்கு சார்பாக 27 நாடுகள் இருந்தன

ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் கருத்து

கே.அசோக்குமார்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானம் வெற்றிபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டாலும் இலங்கைக்கு ஆதரவாக 27 நாடுகள் இருக்கின்றன என்பது உறுதியாகியுள்ளதாக ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக 20 நாடுகள் வாக்களித்துள்ளன. ஆனால் மேலும் 20 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை. இலங்கைக்கு ஆதரவாக 07 நாடுகள் வாக்களித்ததுடன் 27 நாடுகள் பிரேரனைக்கு எதிராகவுள்ளமையே தெளிவாகிறதென்றும்

05

சுமார் ரூ.1560 கோடி பெறுமதியான 250 Kg போதைப் பொருளுடன்

# ஈரான், பாகிஸ்தான் கப்பல்கள் நடுக்கடலில் மடக்கிப்பிடிப்பு

இலங்கை நோக்கி வருகையில் இந்திய கடற்படை அதிரடி

12 ஈரான் மற்றும் பாகிஸ்தான் பிரஜைகள் கைது



ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளில் இருந்து இந்தியாவுக்கும் இலங்கைக்கும் கடத்தப்பட்ட சுமார் 1,560 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) பெறுமதியான 250 கிலோ ஹெரோயின் போதைப்பொருளை இந்திய கடற்படையினரும் போதைப்பொருள் கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகள் மற்றும் குஜராத் பொலிஸாரும் பறிமுதல் செய்துள்ளனர்.

ஈரானிலிருந்து கொண்டுவரப்பட்ட 200 கிலோ ஹெரோயினை நடுக்கடலில் வைத்து இலங்கை படகொன்றுக்கு மாற்ற முற்பட்ட போதே கைப்பற்றப்பட்டுள்ளதாக இந்திய கடற்படை தெரிவிக்கிறது. முதல் சம்பவமாக கடற்றொழில்

05






அல் குர்ஆனினதும், நபிகள் நாயகத்தினதும் போதனைகள் சகல காலங்களுக்குமானவை

மீலாதுன் நபி செய்தியில் மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம்

05

சவால்களுக்கு மத்தியில் வெற்றிப் பயணம்

# ஜனாதிபதியை அன்று விமர்சித்த பலரும் இன்று அவருடன் இணைவு

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

லோரன்ஸ் செல்வநாயகம்



பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதாகவும் அவரை விமர்சித்தவர்களே தற்போது அவருடன் சேர்ந்து பயணிக்க முன் வந்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய தெரிவித்தார்.

பொறுப்பை பாரமெடுக்குமாறு தெரிவித்த போது அப்போதைய நெருக்கடிகளுக்கு பயந்து பின்வாங்கிய எதிர்க்கட்சித் தலைவர்,

05

அரசின் உயர்மட்டத்தினருக்கு அறிவித்துவிட்டேன்

# பொலிஸ் பதிவு படிவங்களை நிரப்பி கொடுக்க வேண்டாம்

கொழும்பு மாநகர மக்களுக்கு மனோ MP தெரிவிப்பு



கொழும்பு, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி உட்பட கொழும்பு மாநகர மற்றும் மாவட்ட பொலிஸ் நிலையங்களினால், வீடு வீடாக கொண்டு வரப்படுவதாக கூறப்படும் பொலிஸ் பதிவு படிவங்களை நிரப்பி கொடுக்க வேண்டாமென கொழும்பு மாநகர மக்களிடம் மனோ கணேசன் எம்.பி கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் சட்டம், ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ் மாஅதிபர் விக்கிரமரத்ன ஆகியோருக்கு

05

உலகில் சுற்றுலா செல்ல சிறந்த நாடு;

# இருபது நாடுகள் பட்டியலில் இலங்கை 17ஆவது இடத்தில்



konde nat traval magazine சுற்றுலா இதழ், தமது வாசகர்கள் தேர்வு செய்த சுற்றுலா செல்வதற்கு சிறந்த நாடுகள் பட்டியலை ஆண்டு தோறும் வெளியிட்டு வருகிறது.

அதன்படி இந்த ஆண்டு சுற்றுலா செல்வதற்கு உலக அளவில் சிறந்த 20 நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் இலங்கை 17ஆவது

05

எங்கள் கருத்து...

## வேற்றுமையை வளர்ப்பதனால் விளையும் நன்மை எதுவுமில்லை!

பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து கடந்த 1948இல் சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் கடந்த கால்நூற்றாண்டு காலமாக எமது நாடு முரண்பாடுகளுக்குள்ளேயே சிக்கித்தவித்து வந்துள்ளது. ஒருபுறத்தில் அரசியல்ரீதியான முரண்பாடுகளும், மறுபுறத்தில் இனரீதியான முரண்பாடுகளுமாக சுமார் 75 வருடகாலத்தை எமது நாடு வீண்விரயம் செய்து வந்திருக்கின்றது.

ஆனால் அரசியல்ரீதியான பிளவுகளுக்கோ அல்லது இனரீதியான விரிசல்களுக்கோ இதுகாலவரை தீர்வு ஏற்படவில்லை. அதற்கு மாறாக அரசியல் கட்சிகளிடையேயும், இனங்களுக்கிடையேயும் முரண்பாடுகள் வளர்ந்து கொண்டே செல்கின்றன. நல்லிணக்கமும், புரிந்துணர்வும், ஐக்கியமும் தோன்றுவதற்கான சமிக்ஞைகளே தென்படவில்லை.

நாட்டுமக்களிடமிருந்து ஐக்கியம் எட்டாத தூரத்துக்குச் சென்று விட்டதற்குக் காரணகர்த்தாக்கள் எமது அரசியல்வாதிகள் சிலரைத் தவிர வேறெவருமில்லை! அரசியல்வாதிகளில் சிலர் தங்களது அரசியல் ஆதாயத்துக்காக மக்கள் மத்தியில் கட்சிரீதியாகவும், இனரீதியாகவும் வேற்றுமைகளை விதைக்கின்றனர். அதனை நம்புகின்ற மக்கள் பலிக்கடாக்கள் ஆகின்றனர். அதன் பலனாக ஐக்கியமென்பது வெகு தொலைவுக்குச் சென்று விட்டது.

முரண்பாடுகளையும், பிளவுகளையும் விதைப்பதென்பது அரசியல்வாதிகள் பலருக்கு அனுகூலங்களைத் தருகின்றது.

05



இலங்கை வந்துள்ள மக்கள் நீதி மைய கட்சியின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி ஸ்ரீதர் நேற்று யாழ்ப்பாணத்தில் இந்திய துணை தூதுவரை மரியாதை நிமித்தம் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

இலங்கை வானொலி தமிழ்ச் சேவையின்

# ஹரிஹர சர்மா ஐயா கனடாவில் காலமானார்



இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் பல்வேறு பதவிகளை வகித்த ஹரிஹர சர்மா வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார். சமய நிகழ்ச்சிகள் பலவற்றை காலத்திற்கேற்ப வடிவமைத்து வழங்கிய பெருமை இவரையே சாரும்.

நல்லூர் கந்தசுவாமி கோயில், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆகிய ஆலய தேர், தீர்த்த உற்சவ காலங்களில் அழகு தமிழில் நேர்முக வர்ணனை செய்து சைவ மக்களின் பாராட்டினைப் பெற்றவர் இவர்.

05

# உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகள் ஒத்திவைப்பு

புதிய திகதிகள் குறித்து அறிவிப்பு வெளியானது

இவ்வாண்டுக்கான (2022) க.பொ.த உயர்தரப் பரீட்சை, தர ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைகள் பிட்போடப்பட்டுள்ளன.

05

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

# நாளை திங்கட்கிழமை விசேட வங்கி விடுமுறை

இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

திங்கட்கிழமை (நாளை) விசேட வங்கி விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் 2022ஆம் ஆண்டுக்கான வங்கி விடுமுறை நாட்களைக்

05

நடைமுறையிலிருந்த முறைமையில் மாற்றம்;

# சட்டக் கல்லூரி பரீட்சைகள் தாய்மொழியில் அவசியம்

ශ්‍රී ලංකා නීති විද්‍යාලය
Sri Lanka Law College

சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் அமைப்பு கோரிக்கை

சட்டக் கல்லூரியில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் பரீட்சைக்குத் தோற்றும் உரிமையை மீண்டும் ஏற்படுத்தித் தருமாறு தமிழ், சிங்கள மொழிகளில் பரீட்சைக்கு தோற்றும் உரிமையை இழந்து

05

# யாழ். உத்தரதேவி தடம் புரண்டது



காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த உத்தரதேவி நகரங்களுக்கு இடையிலான கடுகதி ரயில் நேற்று காலை தடம்புரண்டுள்ளது.

தம்புத்தேகம மற்றும் சௌரத்கம ரயில் நிலையங்களுக்கு இடையில் இந்த

05

# அதிக வேகத்தினால் இளைஞன் உயிரிழப்பு



இங்கிரிய நம்பபான பகுதியில் விருந்தொன்றில் கலந்து கொண்டு காரில் வந்து கொண்டிருந்த இளைஞர்கள் மூவர் விபத்துக்குள்ளாகி உள்ளனர். வேகமாக வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி கால்வாயு டன்

05

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -










தொல்புரம் மேற்கு மணிவாசகர் சனசமூக நிலயத்தின் பெயர்ப்பலகை நிர்வாக உறுப்பினர்களால் 05/10/2022 அன்று மாலை 5.30 க்கு விற்றோரியா கல்லூரி முன் ஒழுங்கையில் உள்ள தற்காலிக இடத்தில் நிறுவப்பட்ட போது... (பட உதவி: எஸ் பாலச்சந்திரன்)


# NOTICE

**TO THE GENERAL PUBLIC AND ALL CUSTOMERS OF CONTINENTAL INSURANCE LANKA LTD.**



**W.W.G. Indika Prasanna Kumarasiri**
**No. 47/32, Seruwila Road, Kantale.**

This is to inform that the above person who was attached to the Trincomalee Branch is no longer employed with the company and that we shall not be held ourselves responsible for any dealings or transactions done by him in the future from the date of this Notice.

**Continental Insurance Lanka Ltd.**
**No. 79, Dr C.W.W. Kannangara Mawatha, Colombo 07.**

✆ +94(0) 115 200 200
+94(0)115 200 255
✉ info@cilanka.com
www.cilanka.com

Service, redefined. Continental INSURANCE


# இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் மீலாத் தின, சர்வதேச சர்வசமய கவியரங்கு

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் மீலாத் தினத்தை முன்னிட்டு இன்று பி.ப. 4.00 மணிக்கு விசேட கவியரங்கு நடைபெறும்.

இது சர்வதேச சர்வசமய கவியரங்காக நடைபெறும். இவ்வாறான ஒரு கவியரங்கு நடப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டு கவிஞர் தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் நடைபெறும் இக் கவியரங்கில் இலங்கையில் இருந்து பௌத்த கவிஞராக பொகவந்தலாவ ராகுல தேரரும், மதுரையில் இருந்து கிறிஸ்தவ கவிஞராக தமிழ்மாமணி அருட்தந்தை மணிவளனும், இந்து மத கவிஞராக புதுச்சேரி மாநிலத்திலிருந்து, தமிழ் மாமணி துறைமாலிறையனும் மலேசியாவில் இருந்து இஸ்லாமிய கவிஞராக கவிச்சுடர் பெருங்குளம் ஹாஜா மொஹிதீனும் கலந்து கொள்கின்றனர்.



பௌத்த கவிஞர் பொகவந்தலாவ ராகுல தேரர் அவர்கள் - இலங்கை

கிறிஸ்தவ கவிஞர் தமிழ்மாமணி அருட்தந்தை மணிவளன் அவர்கள் - மதுரை

தலைமை - கலாபூஷணம் தமிழ்த் தென்றல் அலி அக்பர்

இந்து மத கவிஞர் தமிழ் மாமணி துறைமாலிறையன் அவர்கள் - புதுச்சேரி

இஸ்லாமிய கவிஞர் கவிச்சுடர் பெருங்குளம் ஹாஜா மொஹிதீன் அவர்கள் - மலேசியா

முஸ்லிம் சேவை பணிப்பாளர் பாத்திமா ரினூஸியாவின் மேற்பார்வையில் இடம்பெறும் கவியரங்கினை முஹம்மத் ரலீம் தயாரித்து வழங்குகிறார்.

# விஞ்ஞானக் கட்டுரைப் போட்டி

இலங்கை விஞ்ஞான முன்னேற்றத்திற்கான சங்கத்தின் (SLAAS) விஞ்ஞானத்தை பிரபலப்படுத்துவதற்கான குழு (CPS) 2022 இல் உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்காக விஞ்ஞான கட்டுரைப் போட்டியை நடத்தவுள்ளது. இந்தப் போட்டியின் நோக்கம் பள்ளி மாணவர்களிடையே விஞ்ஞானத்தைப் பிரபலப்படுத்துவதும் அவர்களின் விஞ்ஞான எழுத்தாற்றலை மேம்படுத்துவதும் ஆகும். கட்டுரையின் தலைப்பு "XPress Pearl கப்பலால் இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தம்" என்பதாகும். இன்றிலிருந்து ஆறு (6) வாரங்களுக்குள் கட்டுரைகள் அனுப்பப்பட வேண்டும். இலங்கையில் கல்விப் பொதுத் தாரதர உயர்தரத்தில் கற்கும் மாணவர்கள் இக்கட்டுரைப் போட்டியில் பங்கேற்கலாம். தமிழில் கட்டுரைகள் எழுதப்பட வேண்டும். ஆகக்கூடுதலாக 1000 சொற்களைக் கொண்டதாகவும் 750 சொற்களுக்குக் குறையாததாகவும் கட்டுரை அமைய வேண்டும். சுயவிபரக் கோவையுடன் பாடசாலை அதிபரின் சான்றுப்படுத்தி கட்டுரைகள் செயலாளர், சிபிஎஸ் விஞ்ஞான முன்னேற்றத்திற்கான இலங்கை சங்கம், 120/10, வித்யா மந்திரய, வித்யா மாவத்தை, கொழும்பு 7 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். உறையின் மேல் இடது மூலையில் "விஞ்ஞான கட்டுரை போட்டி" என எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு மாகாணத்தில் இருந்தும் மூன்று வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இலங்கை விஞ்ஞான முன்னேற்றத்திற்கான சங்கத்தின் (SLAAS) அங்கத்தவர்களது பிள்ளைகள் இப்போட்டியில் பங்கேற்க இயலாது.



மட்டக்களப்பு மாவட்ட மட்ட ஆங்கில மொழி தின நாடகப் போட்டிகள் மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையில் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் சனிக்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வி அ.கனகசூரியம் மற்றும் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் ரி. ரவி, மட்டக்களப்பு மத்தி வலய கல்விப் பணிப்பாளர் எஸ். எம். எம். எஸ். உமர் மௌலானா உட்பட மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிமனை உயரதிகாரிகள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருப்பதனையும் அரங்கில் இடம்பெற்ற கலை நிகழ்வு ஒன்றினையும் படங்களில் காணலாம்.

(படம்: ஆரையம்பதி தினகரன் நிருபர்)


# புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

## கிராமியக் கலைகள் நிலையம்

**சித்திரம் மற்றும் சிற்ப காப்பு தொடர்பிலான ஓர் ஆண்டு கற்கைக்கான புதிய மாணவர் சேர்ப்பு**

- கற்கைக்கான விரிவுரைகள் கிராமிய கலைகள் நிலையத்திலும், நடைமுறை ரீதியான செயற்பாடுகள் தொல்பொருளியல் திணைக்களத்தின் ஆய்வுகூடம் மற்றும் வேலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும்.
- கற்கை முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.



### இலக்கு

- இலங்கை கலாசார உரிமைகளை அழியாது பாதுகாத்தல்.
- அழிவுக்கு உள்ளாகியுள்ள மற்றும் உள்ளாகிவரும் கலாசார உரிமைகளை புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல்.
- படைப்பாற்றல் கொண்ட சுவர் ஓவியம் மற்றும் சிற்ப பாதுகாப்பு கலைஞர்களை உருவாக்கல்.
- இளைஞர்களுக்கு சிறந்த பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புதல்.

### நிபந்தனைகள்

- வயது: 18 - 45 வயதுக்கு இடைப்பட்டோர்.
- கல்வித் தகைமை: சித்திரப் பாடம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி.
- காலம்: நடைமுறை மற்றும் கோட்பாட்டு பயிற்சியுடன் ஓர் ஆண்டு காலம்.
- கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
- அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரர்கள் நடைமுறை பரீட்சை ஒன்றின் பின் இணைக்கப்படுவதோடு, பரீட்சைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.



### விண்ணப்பங்களை அனுப்புதல்

- தமது சுயவிபரக்கோவை, கல்வித் தகைமை மற்றும் சிறப்பு தேர்ச்சிகள் தொடர்பிலான விபரங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்றை கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது பதிவுத் தபாலில் கீழுள்ள முகவரிக்கு அனுப்ப முடியும்.
- கூகுள் விண்ணப்பப் படிவத்தை (GOOGLE FORM) பூர்த்தி செய்து, விண்ணப்பிக்க முடியும். (கீழுள்ள Whatsapp இலக்கத்தின் ஊடாக கூகுள் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்)
- விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2022.10.25 ஆகும். அன்றைய திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் மற்றும் முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- 2022.11.15 ஆம் திகதி கற்கை ஆரம்பிக்கப்படும்.
- விண்ணப்பத்தை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கையின் பெயரை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

முகவரி - பணிப்பாளர், கிராமியக் கலைகள் நிலையம், பெலவத்த, பத்தரமுல்லை.
விசாரணைக்கு - 0112786716 / Whatsapp - 0753418888 E-Mail - folkartcentersrilanka@gmail.com

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






# தேர்தலொன்றுக்கு செல்வதை விடவும் பொருளாதார மீட்சிக்கே முன்னுரிமை

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பேட்டி

**தேர்தலொன்றுக்குச் செல்வதைவிட பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதற்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட அவர் இவ்வாறு தெரிவித்தார்.**



**கே: தேசியப் பேரவை பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன? நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த இது உதவுமா?**

பதில்: ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த முயற்சியை வெற்றியடையச் செய்வது அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பொறுப்பாகும். இது இலங்கைக்கு மிகவும் சவாலான காலகட்டம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். யார் சரியானவர், யார் தவறு செய்தவர், எங்கே தவறு என்ற வரலாற்றைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி மக்களுக்கு நியாயமான வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்ய வேண்டும்.

எனவே, இத்தருணத்தில் ஒன்றிணைந்து செயற்படுவது அனைவரின் பொறுப்பாகும். நாடு ஏற்கனவே பாரிய சவாலுக்கு முகங்கொடுத்துள்ளது. இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். தேர்தல் அறிவிக்கப்பட்டதும், பிரிந்து சென்று போட்டியிடலாம். தற்போது நாடு எதிர்நோக்கும் எரியும் பிரச்சினைகளுக்கு கைகோர்த்து தீர்வுகளை வழங்குவது அனைவரினதும் பொறுப்பாகும்.

**கே: தேசியப் பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தை விமல் வீரவன்ச தலைமையிலான சுயாதீனக் குழு மற்றும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுயாதீனக் குழுவினர் ஆகியோர் புறக்கணித்திருந்தனர். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: அவர்கள் அதில் கலந்து கொண்டால் நல்லது. பல சித்தாந்தங்களைக் கொண்ட அரசாங்கமாக இருக்கும்போது, அவர்கள் குறிப்பிட்ட சித்தாந்தம் முக்கியத்துவம் பெற வேண்டும் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் நாம் தற்பொழுது கட்சி அரசியல் செய்யும் நிலையில் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மீண்டும் ஒருமுறை அவர்கள் இது பற்றி மறுபரிசீலனை செய்து, நாடு முன்னேறுவதற்கு வழிகாட்டல்களை வழங்குவது நாட்டு மக்களுக்கே நன்மையாக அமையும் என நான் நினைக்கின்றேன். அப்படிச் செய்வதன் ஊடாகவே அரசாங்கம் நாட்டுக்காக சிறந்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். வெறுமனே தவறுகளைக் கண்டுபிடிக்கும் அரசியலை முன்னெடுப்பது அரசாங்கத்திற்கோ அல்லது எதிர்க்கட்சிக்கோ அல்லது இலங்கையில் உள்ள மக்களுக்கோ உதவுவதாக அமையாது.

**கே: அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் ஜனாதிபதி எடுத்த தீர்மானம் குறித்த பல்வேறு விமர்சனங்கள் இருந்தன. சட்டம் மற்றும் ஒழுங்கைப் பராமரிக்க உயர் பாதுகாப்பு வலயம் அவசியமா?**

பதில்: இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பாதுகாப்புப் பணியாளர்களைத் தவிர வேறு எந்தவொரு தனிநபரும் அது தேவையா இல்லையா என்று கருத்துத் தெரிவிக்க முடியாது என்று நினைக்கிறேன். உயர்பாதுகாப்பு வலயம் எதுவாக இருக்க வேண்டும்? இது தேவையா அல்லது இல்லையா என்பதை முடிவு செய்வதில் அரசியல்வாதிகள் தலையிடக் கூடாது.

அது பற்றி முடிவெடுப்பது பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிசாரின் பொறுப்பு என்று நினைக்கிறேன். அது தேவை என்று அவர்கள் கருதினால், அதைச் செய்ய அனுமதிக்க வேண்டும். அதை அகற்றுவதற்கான நேரம் இது என்று அவர்கள் நினைத்தால், அவர்கள் அதனை அகற்றலாம்.

இருப்பினும், ஏதேனும் அநீதி நிகழ்ந்தால் அரசியல்வாதிகள் என்ற ரீதியில் நாம் தலையிடலாம். கடந்த காலத்தைப் பார்க்கும் போது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஒருதலைப்பட்சமான அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருந்தது. பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி அவர்கள் பேசுவது நன்றாகவும், மனிதாபிமானமாகவும் இருந்திருக்கும்.

**கே: அரசு அதிகாரிகளுக்கு சமூக ஊடகங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பது அவர்களின் பேச்சு சுதந்திரத்தை மீறுவதாகக் கூறி, உச்சநீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுவை தாக்கல் செய்ய அரசு துறை அதிகாரிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன. நீங்கள் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

பதில்: இலங்கையின் உச்சநீதிமன்றத்திற்கோ அல்லது நீதித்துறையின் கட்டமைப்புக்கோ சென்று தமது மனித உரிமைகள் மீறப்பட்டால் நீதியைப் பெறுவதற்கு அவர்களுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளன. நாங்கள் அதைத் தடுக்க விரும்பவில்லை. மறுபுறம், அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கான நடத்தை நெறிமுறை உள்ளது. எனவே, அந்த நடத்தை விதிகளுக்குள்ளேயே விஷயங்களும் இருக்க வேண்டும். இதை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டால், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி செயற்பட வேண்டும்.

**கே: பொதுத்தேர்தலை கூடிய விரைவில், அநேகமாக அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் நடத்த வேண்டும் என்று பல கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. இதில் உங்கள் பார்வை என்ன? தேர்தலை நடத்துவதற்கு நீங்கள் உடன்படுகிறீர்களா அல்லது தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு தங்கள் போக்கை நடத்த வேண்டுமா?**

பதில்: ஜனாதிபதியும் அரசாங்கமும் இரண்டு வருட கால அவகாசத்தை முடிக்க வேண்டுமா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இடையூறு இல்லாமல் சட்ட மறுசீரமைப்புக்கு அனுமதித்தால் நாங்கள் தேர்தலுக்குச் செல்லலாம் என்று நினைக்கிறேன், அது ஒரு பிரச்சினை அல்ல. பொருளாதாரத்தின் மறுசீரமைப்பு செயல்முறையை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது. நாம் நினைப்பது போல் அதுவே முதன்மையானதாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, பொருளாதாரம் இன்னும் மீளவில்லை. பணவீக்கம் சுமார் நூறு சதவீதமாகக் காணப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமன்றி ஏனைய பொருட்களுக்கும் தட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் நாட்டை மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். நிர்வாகக் குழுக்களின் மிகப்பெரும் சிரமத்திற்கு மத்தியில் அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடியதாகவுள்ளது. சில பிரிவுகளுக்கு சிரமம் இருப்பதை நான் அறிவேன்.

எனவே, பொருளாதாரத்தை மீட்டெடுக்க அரசாங்கத்தை அனுமதிக்குமாறு ஒவ்வொரு அரசியல் கட்சிகளையும் மற்றும் சிவில் சமூக குழுக்களையும் கேட்டுக் கொள்கிறோம். அதை மீட்டெடுத்த பிறகு, நாங்கள் தேர்தலுக்குச் செல்லலாம், மக்கள் விரும்பும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம். இந்தக் கடினமான சவாலான காலகட்டத்தை எங்களால் சமாளிக்க முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எங்கள் வாழ்நாளில் இதுபோன்ற கடினமான காலகட்டத்தை நாங்கள் கடந்து சென்றதில்லை என்று நினைக்கிறேன். இன்னும் பிரச்சினை தீரவில்லை, அதைத் தீர்த்து வைக்க வேண்டும். அதுவே எங்களின் முதன்மையான நோக்கமாகும்.

**கே: மக்களின் உரிமைகளை அரசாங்கம் நசுக்குவதாகப் பல குற்றச்சாட்டுகள் உள்ளன. மறுபுறம் தொடர்ச்சியான போராட்டங்கள் பொருளாதாரத்தை சீர்குலைப்பதாகவும், சுற்றுலா போன்ற துறைகளையும் பாதிக்கின்றன என்றும் அமைச்சர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சுற்றுலாத்துறை ஊக்குவிக்கப்பட வேண்டும். இலங்கைக்கு வரும் அந்நிய செலாவணி அதிகரிக்கப்பட வேண்டும். எனவே, சுற்றுலாப் பயணிகள் வந்து விடுமுறையைக் கழிக்க இலங்கையில் அமைதியான மற்றும் வன்முறையற்ற சூழல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அந்நிய செலாவணி தட்டுப்பாடு ஏற்படும் போதுதான் பெரும்பாலான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

**கே: நாட்டில் நெருக்கடியை உருவாக்கி மக்களின் வாழ்க்கையைச் சீர்குலைக்க சில குழுக்கள் திட்டமிட்டு முயற்சிப்பதை நீங்கள் காண்கிறீர்களா?**

பதில்: மக்களின் வாழ்க்கையைச் சீர்குலைக்கும் வகையில் யாரேனும் திட்டமிட்டு மேற்கொள்ளும் முயற்சிகளை நாங்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். அத்துடன் அவற்றை நாங்கள் வேடிக்கை பார்க்கவும் மாட்டோம். ஒவ்வொரு நிமிடமும் பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு வேண்டுமென்றே இடையூறு ஏற்படுத்த முயல்வதால் அவர்களுக்கு கூடுதல் அழுத்தத்தை சேர்க்கும்.

**கே: பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரச செலவினங்கள் குறைக்கப்படும் என ஜனாதிபதியும் அரசாங்கமும் அறிவித்திருந்த போதிலும், 38 புதிய இராஜாங்க அமைச்சர்களை நியமிக்கக் காரணம் என்ன?**

பதில்: இராஜாங்க அமைச்சர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை மக்கள் உணர்வார்கள். மக்கள் அழுத்தத்தில் இருப்பதையும், அவர்கள் கடுமையான இன்னல்களுக்கு உள்ளாகியிருப்பதையும் நாங்கள் அறிவோம். சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையில் தாக்கம் உள்ளது மற்றும் பணவீக்கம் மக்களின் இன்றைய வாழ்க்கை முறையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சந்தையில் உள்ள பொருட்களை வாங்கும் நிலையில் மக்கள் இல்லை. அவர்கள் குடும்பத்தில் நிம்மதி இல்லாமல் இருக்கலாம். இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் உள்ளன.

இராஜாங்க அமைச்சர்கள் ஒருபோதும் நாட்டுக்கு சுமையாக மாற மாட்டார்கள். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு நாம் அனைவரும் மிகவும் கடினமாக உழைத்து ஒன்றுபட்டு செயல்படுகிறோம். நாம் அதைச் செய்வோம். நாம் தோல்வியடைந்தால், எங்கள் மீது பழியைப் போடுங்கள். அதைச் செய்ய எங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

**நாம் தோல்வியடைந்தால், எங்கள் மீது பழியைப் போடுங்கள். ஆனால் அதற்கு முன்னர் எங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்!**

**தேசியப் பேரவை அமைக்கும் முயற்சியை வெற்றியடையச் செய்வது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பொறுப்பு. கடந்தகால வரலாற்றைப் பேசுவதால் பயனில்லை!**






# பெண்களுக்கான தொழில்வாய்ப்புகளில் புதிய சிந்தனை உதயமாவது அவசியம்!

கடந்த வாரத்தில் புதுடில்லி நகரில் நடைபெற்ற விழாவொன்றில் கணனியில் உள்ளடக்கப்பட்ட தரவுகளால் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. புதுடில்லி போக்குவரத்து அமைச்சு இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தது. நகரத்தில் காணப்படும் அதிகளவான காற்று மாசடைதலை குறைக்கும் ஒரு நடவடிக்கையாக 'இமோபிலிடி' திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் அங்கும் இங்கும் பயணிக்கும் போது கனிம எரிபொருளை பயன்படுத்தாமல் இருப்பதே இதன் நோக்கம் எனக் குறிப்பிடப்படுகிறது.

புதிதாக போக்குவரத்துக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள மின்சாரத்தால் இயங்கும் முச்சக்கர வண்டி இரண்டு நிறங்களாலானவை. நீலநிறமான வண்டிகளை சாரதிகள் ஓட்டுவதோடு, ஊதா மற்றும் நீலம் கலந்த இளஞ்சிவப்பு மின்சார முச்சக்கரவண்டிகளை ஓட்டுவது பெண் சாரதிகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்களை பொதுப்போக்குவரத்துத் துறையுடன் இணைப்பதானது நல்லதொரு முயற்சியாகும். முற்றிலுமாக பெண்களைக் கொண்டு ஒரு சில விமான சேவைகள் அங்கு நடத்தப்படுகின்றன.

இந்தியாவில் நகரப் பிரதேசங்களில் பொதுப்போக்குவரத்துக்கு பெண்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளும் முயற்சி இதுவாகும். அது வெற்றிகரமான பலனை அளித்துள்ளதாக புதுடில்லி போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆரம்பத்தில் பெண்கள் சன நெருக்கடியான டில்லி நகரில் மின்சார முச்சக்கரவண்டிகளை செலுத்துவதற்கு விரும்பவில்லை என தெரிவித்த போதும், பின்னர் அது குறித்து அக்கறை செலுத்தியதாக ஊடக அறிக்கைகள் தெரிவித்திருந்தன.

ஆரம்பத் திட்டத்தின்படி புதுடில்லி நகருக்கு புதிதாக 40,000 மின்சாரத்தால் இயங்கும் முச்சக்கரவண்டிகளை அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. முற்றிலுமாக பெண்கள் செலுத்தக் கூடிய அனுமதிப் பத்திரங்களுடன் கூடியது என அறிவிப்பு செய்யப்பட்டது.

முதற்கட்டமாக 20,000 இருபாலாரினதும் விண்ணப்பதாரர்களிடையே 743 பெண்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. மின்சாரத்தால் இயங்கும் முச்சக்கரவண்டிகளின் மூலம் பொதுப்போக்குவரத்து நடவடிக்கைகள் பெண்களால் ஆரம்பிக்கப்பட்டன.

இரண்டு நிறங்களின் அடிப்படையில் பொதுமக்களுக்கு தெரிவு செய்யும் உரிமை கிடைக்கிறது. சூழலைப் பாதுகாக்க விரும்புபவர்களுடன் முச்சக்கர வண்டி பயணத்துக்கு வழிவகுக்கும் புதிய வர்த்தக சந்தை ஒன்று உருவாகும். இந்தியா பொருளாதாரத்தைப் பற்றி மதிப்பீடு செய்யும் விதத்தில் சமூக மாற்றத்திற்காக பெண்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவுடன் இணைந்ததாக இலங்கையிலும் பெண்கள் முன்னணியில் திகழ்கிறார்கள். சுகாதாரம், கல்வி, சட்டம் போன்ற துறைகளில் பெண்கள் பிரதிநிதித்துவம் ஆண்களின் வீதத்தையும் தாண்டியுள்ளது. புதிய தரவுகளுக்கு அமைய இந்த வருடத்தில் முதலாவது காலாண்டு பகுதியில் வருமானம் ஈட்டும் திட்டங்களில் ஈடுபட்ட பெண்களின் வீதம் நூற்றுக்கு35.4 ஆகும். நகரத்தில்34.1%, கிராமங்களில் 35.3% ஆகும். தோட்டப்புறங்களில் நூற்றுக்கு 40.9 வீதமாகும்.

கிராமிய மற்றும் தோட்டத்துறையில் பெண்களின் பங்களிப்பு உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதற்கான காரணம் அவர்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகும். நெல் விவசாயம் ,தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கை போன்ற பிரிவுகளிலேயே அவர்கள் அதிகமாக ஈடுபடுகின்றார்கள்.

குடும்பத்தின் அபிவிருத்தி, குடும்பத்தின் கலாசார தொடர்புகளை பாதுகாப்பதோடு இளஞ்சிவப்பு நிற பொருளாதார வளர்ச்சிக்கும் புதிய நடவடிக்கைகளை பரிந்துரைப்பது நல்லது. ஒரு வருட காலத்திற்குள் கணனி தொடர்பான பிரிவுகளின் ஏற்றுமதி வருமானம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை அண்மித்துள்ளது. இளம் பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஈடுபடுத்துவதற்கு பதிலாக கணனி மென்பொருள் மற்றும் தரவுகள் தொடர்பாக புதிய தொழில்முனைவுகளில் ஈடுபடுத்த முடியும்.

இந்தியா முச்சக்கர வண்டியில் ஆரம்பித்துள்ள முயற்சியை தொழில்நுட்ப கட்டத்திற்கு கொண்டு செல்ல இலங்கையால் முடியும். அதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குவது அவசியம். அடிப்படைக் கட்டமைப்பை தயாரித்து புதிய பிரிவுகளை மேம்படுத்த வேண்டியுள்ளது. தகவல் தொழில்நுட்ப பிரிவில் உள்ள நிபுணர்கள் இங்குள்ள கவர்ச்சியான சந்தர்ப்பங்களை அறிந்து சமூகத்துக்கு அறியத்தர வேண்டும். அரசு கொள்கை வகுப்பாளர்கள் இந்த புதிய பாதை உள்ளிட்ட புதிய துறைகளுக்கு இளஞ்சிவப்பு நிற பக்கத்தை திறக்க முடியும். அது தற்போது முகம் கொடுத்துள்ள பொருளாதார பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கு புதிய பாதையின் நுழைவாயில் என குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# தமிழ் மக்களின் தனித்துவ அலைவரிசையாக நேத்ரா அலைவரிசையை மாற்றியமைப்பேன்!

## தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழர் வாழ்வியலுக்கும் நான் அந்நியமானவன் அல்லன்!

### மனம் திறக்கிறார் நேத்ரா பணிப்பாளர் நிலார் என். காசிம்

ஜீவிதன்

**தொலைக்காட்சித் துறையில் 30 வருட அனுபவம் கொண்டவர். நிகழ்ச்சித் தயாரிப்பாளர், தொகுப்பாளர், செய்தி யாசிரியர் உள்ளிட்ட பதவி நிலைகளில் பணியாற்றித் தற்போது நேத்ரா அலைவரிசையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பத்திரிகையாளராகப் பணியை ஆரம்பித்த நிலார் என். காசிம், கவிஞர், கலைஞர், எழுத்தாளர், பத்திரிகையாளர் மாத்திரமன்றி, இலங்கை இலக்கியத் துறையில் நிலையான ஓர் இடத்தைத் தக்கவைத்துக்கொண்டிருப்பவர். விசேடமாக சிங்கள மொழியில் சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட முதல் சிறுபான்மைக் குடிமகன். தமிழ் இலக்கியத்தைச் சிங்களத்திற்குக் கொண்டுசென்ற பெருமகன்!**

**சிங்களத்தில் தற்போது பிரபலமாக ஒலித்துக்கொண்டிருக்கும் பாடல்கள் உட்பட சுமார் 700 இற்கும் அதிகமான பாடல்கள், கவிதைகள், கட்டுரைகள் என எழுதி கலை, இலக்கியப் பணியாற்றி வருபவர். ஹரிகரன் இலங்கை வந்து பாடிய பிரபலமான சிங்களப் பாடலை இயற்றியவர். ஆஷா போஸ்லே இலங்கை வந்து பாடிய பாடலை எழுதியவர். சிங்கள பாடல் துறையில் இவருக்கெனத் தனியான ஓர் அத்தியாயத்தை எழுதச் செய்தவர். இவர் நேத்ரா பணிப்பாளராக மனம் திறக்கிறார் இப்படி......**

'நேத்ரா அலைவரிசை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து நிரந்தரப் பணிப்பாளர் எவரும் நியமிக்கப்பட்டிருக்க



வில்லை. உதவிப் பணிப்பாளர்களாக ரவீந்திரன், எம். என். ராஜா ஆகியோர் கடமையாற்றினார்கள். பதில் பணிப்பாளர்களாக சிங்கள அதிகாரிகள் பணிபுரிந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் கணிசமான சேவையை ஆற்றியிருக்கிறார்கள். தமிழ்ப்பிரிவு இருந்த காலத்திலிருந்து ஓர் அனுபவமிக்கவராக விஸ்வநாதன் விளங்குகிறார். அவர்களுக்குப் பின்னர் சிங்கள உத்தியோகத்தர்கள் காலத்திற்குக் காலம் பொறுப்பு வகித்திருக்கிறார்கள். இவ்வாறு மூன்று நான்கு பேர் பணியாற்றியிருக்கிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாகக் கொரோனா பரவலுடன் சகல அலைவரிசைகளும் வீழ்ச்சியடைந்தன. அதனால், ஐ, நேத்ரா ஆகிய இரண்டு அலைவரிசைகளையும் முற்றிலும் கல்வி ஒளிபரப்புக்காக வழங்குவதெனக் கூட்டுத்தாபன நிர்வாகம் முடிவு செய்தது. அந்தக் காலப்பகுதி அவ்வாறே கடந்து சென்றது, எந்த நிகழ்ச்சிகளும் இருக்கவில்லை. அதற்காகக் கல்வி அமைச்சின் அனுசரணை கிடைக்கப்பெற்றது. பின்னர், பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதால், கல்வி ஒளிபரப்பை நிறுத்த வேண்டிய கட்டம் ஏற்பட்டது. அப்போது அலைவரிசையை மறுசீரமைத்து மீளக்



கட்டியெழுப்ப வேண்டும் என்றும் அதற்குப் பொருத்தமான ஒருவரை, வர்த்தக விளம்பரத்துறையை வென்றெடுக்கக்கூடிய ஒருவரை பணிப்பாளராக நியமிக்க வேண்டும் என்றும் ஒரு யோசனை முன்வைக்கப்பட்டது. அப்போது ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் எனக்கிருக்கும் அனுபவம், சிரேஷ்டத்தன்மை, இலக்கிய ஆளுமை போன்றவற்றைக் கருத்திற்கொண்டு, என்னை இந்தப் பதவியில் நியமிப்பதெனக் கூட்டுத்தாபன நிர்வாகம் முடிவு செய்தது. அதன்படி, பணிப்பாளர் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தில் சுமார் முப்பது ஆண்டுகளாக நான் கடமையாற்றிக்கொண்டிருக்கிறேன்.

நான் இந்தத் தொலைக்காட்சிக் கலாசாரத்தில், சிங்கள மொழியில் ஒரு பணிப்பாளராக, செய்தி ஆசிரியராக, தொகுப்பாளராக, செய்திப் பிரிவின் பணிப்பாளராக இந்த முப்பது ஆண்டுகளில் கடமையாற்றியிருக்கிறேன். இவற்றின் அனுபவங்களுடன் சந்தைப்படுத்தல் பிரிவிலும் ஒரு பிரதிப் பணிப்பாளராக சிலகாலம் பணியாற்றினேன். நேத்ரா பொறுப்பை எனக்கு வழங்கியபோது, இல்லாமற்போயிருந்த அந்த அலைவரிசையை மீளக் கட்டியெழுப்புவதுதான் பாரிய பணியாகவிருந்தது. ஏனெனில், எமது தமிழ் தயாரிப்பாளர்கள் ஒவ்வோர் இடத்திலும் சிதறியிருந்தார்கள். அவர்களது திறமைகளும் படைப்பாற்றல்களும் பயன்படுத்திக் கொள்ளப் பட்டிருக்கவில்லை.



முன்பு எமக்கிருந்த கலையக வசதிகள் எல்லாம் இல்லாமற்போயிருந்தன. எனவே, முதலில் அனைத்துத் தயாரிப்பாளர்களையும் ஓரணியில் இணைத்துக்கொள்ள வேண்டிய தேவையிருந்தது. எனது முதல் பணியாக அதனைச் செய்தேன். அதன்பிறகு தேவையான வளங்களை ஏற்படுத்திக்கொடுத்தேன். எனினும், சகல அரச நிறுவனங்களுக்குமிருந்த செலவுக் கட்டுப்பாடு எனும் சவால் எமக்கும் இருந்தது. இருந்தபோதிலும் இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்குத் தமக்கென ஒரு தனி அலைவரிசை உண்டு என்கின்ற நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில், நேரலை, செய்தி, நடப்புவிவகாரம் முதற்கொண்டு நிகழ்ச்சிகளை வடிவமைக்கக்கூடியதாகவிருந்தது.

காலையில் பத்திரிகைக் கண்ணோட்டம் முதல் இரவு செய்தியறிக்கை, நாடகங்கள் வரை நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்க முடிந்தது. இதனால், ஒருசில மாதங்களிலேயே தமக்கென ஒரு தனியலைவரிசை உண்டு என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் உருவானது. இதன் மூலம் தமிழ் புத்திஜீவிகள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் எனப் பல தரப்பினரிடமிருந்தும் நல்ல வரவேற்பு கிடைத்தது. தமிழ் மக்களின் குரலுக்கும் அவர்களின் கலை, இலக்கிய, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களுக்கும் முக்கியத்துவம் இருக்க வேண்டும். தமிழ் மக்களின் வாழ்வியல் இதில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும். இதனை நிறைவேற்றக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இதன்போது விஸ்வநாதன் போன்றோர் என்னைப் பாராட்டினார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வர்த்தகத்துறையை வெற்றிகொள்வது எவ்வாறு என்ற சவால் எமக்கு ஏற்பட்டது. நான் எனக்கிருந்த அனுபவத்தைக்கொண்டு சிறந்த திட்டமொன்றை வகுத்து நிர்வாகத்திடம் சமர்ப்பித்து ஒப்புதலையும் பெற்றுக் கொண்டேன். எனினும், கடந்த மார்ச் மாதம் பதவியேற்ற எனக்கு ஆறு மாத காலத்தில் நிறுவனத் தலைவர்கள் இருவருடனும் பணிப்பாளர் நாயகங்கள் இருவருடனும் பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. முதலில் இருந்த தலைவருடன் கலந்துரையாடி இணக்கத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும்போது புதியவர் வந்தார். அவருக்கு விடயத்தை ஆரம்பத்திலிருந்து தெளிவுபடுத்தி செயற்படுத்துவதற்குக் காலம் தேவைப்பட்டது. எவ்வாறெனினும், எமது திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணியில் தற்போது மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றோம். அந்த வகையில் எமது அலைவரிசையை முன்னணிக்குக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. தேசிய அலைவரிசையைவிடவும் நேத்ராவை மிக வேகமாக முன்னேற்றி எமது இலக்கை அடைய முடியும் என்று நம்புகிறோம்.

இப்போது எமது தயாரிப்பாளர்கள் முன்னரைவிட மிகவும் திருப்தியுடன் பணியாற்றுகிறார்கள். எதிர்பார்ப்புகளுடன் கடமையாற்றுகிறார்கள். ஆதலால், நாங்கள் சரியான ஒரு பயணத்தை ஆரம்பித்திருக்கின்றோம் என்று சொல்ல முடியும். எனவே, எதிர்காலத்திலுள்ள சவால்களை வெற்றிகொள்வது பெரும் கடினமில்லை என்று திடமாக நம்புகிறோம்.'

**தற்போதைய தமிழ் நிகழ்ச்சிகளில் உங்களுக்குத் திருப்தியடையக்கூடிய நிலைமை காணப்படுகிறதா?**

முன்பு நேத்ரா பிரிவு என்று இருந்தது. இதனை ஒரு பிரிவாக அன்றித் தனியான ஓர் அலைவரிசையாகக் கருதுமாறு நான் நிர்வாகத்திற்குக் கூறியிருக்கின்றேன். கூட்டுத்தாபனத்தில் சுமார் ஆயிரம் பணியாளர்கள் உள்ளனர். இதில் ஐந்துவீதமானவர்கள்கூட நேத்ராவில் இல்லை. இதன் வேறுபாட்டைப் புரிந்துகொள்ளுங்கள்.



அதனால், சுயாதீனமான ஓர் அலைவரிசைக்குரிய அனைத்து வளங்களையும் பெற்றுக்கொடுக்குமாறு கோரிக்கை விடுத்திருக்கின்றேன். எனது இந்தக் கோரிக்கையை நிர்வாகம் ஏற்றுக்கொண்டுள்ளது. கடந்தகாலத்தில்குறைபாடுகள் நடந்திருக்கலாம், அதனைப் பற்றிப் பேசவேண்டியதில்லை. தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு என்னுடையது. அடுத்தது, நாடகங்களைப் பொறுத்தவரை இலங்கையர்கள் பெரும்பாலும் இந்திய நாடகங்களில் மூழ்கிப்போய் இருக்கிறார்கள். அந்த மனோபாவத்திலிருந்தும் மோகத்திலிருந்தும் எமது ரசிகர்களை விடுவிக்கும் வகையில் ரூபவாஹினி நாடகங்களைத் தயாரித்த சந்தர்ப்பங்களும் உண்டு.

(17 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்பாதுகாப்பு வலயம்

# வடக்குக்கு மட்டும் உரிமையானதன் காரணகர்த்தாக்கள் யார்?

கருணாகரன்

**உயர் பாதுகாப்பு வலயங்களாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் செய்யப்பட்ட பிரகடனத்தை ஒரு மாதத்தில் அவரே நீக்க வேண்டியேற்பட்டது. அதனால் அந்தப் பிரகடனம் நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான அழுத்தம் தென்பகுதியில் எழுந்ததே காரணமாகும். இதைச் செய்தவர்கள் சிங்கள உயர் குழாத்தினர். சட்டம் மற்றும் அறிவியல் துறைகளில் இருந்தோர்.**

இவ்வாறே "அரகலய" போராட்டத்தில் இணைந்திருந்தோரின் கைதுகளுக்கு எதிரான குரலும் கண்டனமும் தென்னிலங்கையில் பலமாக எழுந்துள்ளது. இதன்காரணமாகவே சிறைப்பிடிக்கப்பட்ட அரகலயவினர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்படுகின்றனர். பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் வழக்குகள் தொடரப்பட்டாலும் சிறை நீடிக்கப்படவில்லை.

இதேவேளை அரசாங்கத்தின் இந்த மாதிரியான நடவடிக்கைகளை சர்வதேச சமூகமும் எதிர்க்கிறது. கண்டனம் செய்கிறது. இதுவும் அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுக்கிறது.

ஆனால், இதே நிலைமை – இதே பிரச்சினைகள் வடக்கிலும் கிழக்கிலும் உண்டு.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொது மக்களின் காணிகள், வாழிடங்கள், தொழில் மையங்கள் உட்படப் பல இடங்கள் பல ஆண்டுகளாக உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

பலாலி, மயிலிட்டி, கட்டுவன், காங்கேசன்துறை, வடமராட்சி கிழக்கு, தீவுப் பிரதேசத்தில் பல இடங்கள், இயக்கச்சியில் பல பகுதிகள், கிளிநொச்சி நகரத்தில் பல இடங்கள், வட்டக்கச்சி, முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான், கேப்பாபிலவு, மாங்குளம் பிரதேசத்தில் பெருமளவு பகுதி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு என எல்லா மாவட்டங்களிலும் இந்த அத்துமீறல் உண்டு.

மக்களுடையதும் அரசினதும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் படைகளின் முகாம்களாகவும் தளங்களாகவும் நீடிக்கின்றன. கீரிமலை காங்கேசன்துறை பிரதான வீதி உள்பட பல பிரதான வீதிகள் படைத்தரப்பினால் மூடப்பட்டுள்ளன. இதில் கீரிமலை – காங்கேசன்துறை பிரதான வீதியானது காங்கேசன் துறைமுகத்துக்கானதாகும். திருகோணமலையிலும் இவ்வாறான தடைப்பிரதேசங்கள் உண்டு.

இதற்கு எதிராக பாராளுமன்றத்திலும் வெளியே மக்களாலும் மக்கள் அமைப்புகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் எனப் பல தரப்புகளாலும் கண்டனம் செய்யப்பட்டுள்ளது. எதிர்ப்பு நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனாலும் அரசாங்கம் அதையெல்லாம் பொருட்படுத்தவே இல்லை. மசியவும் இல்லை.

என்பதால் வடக்குக் கிழக்கில் தொடர்ச்சியாகப் பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அவர்களுடைய அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்பாடல் மட்டுறுத்தப்பட்டுள்ளது.

இதில் இன்னும் நாம் கவனிக்க வேண்டியது, பலருடைய சொந்தக் காணிகள் படையினரால் அத்துமீறிக் கையகப்படுத்தப்பட்டுள்ளமையாகும். இந்தக் காணிகள் இவற்குக்க உரித்தானவர்களுடைய சொத்து. உரிமை. உறுதிக்காணிகள். எந்தச் சட்டத்திலும் இவ்வாறான காணிகளை எதன் நிமித்தமும் உரியவர்களுடைய அனுமதியின்றி அடாத்தாக வைத்திருக்க முடியும் என்று சொல்லப்படவில்லை. ஆனாலும் படைத்தரப்பு இவற்றை அத்துமீறி வைத்திருக்கிறது. இப்படிப் பல கிராமங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

யுத்த காலத்தில் இவ்வாறு நிகழ்வது தவிர்க்க முடியாதது. அந்தச் சூழலும் நிலைமையும் வேறு. அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் நடவடிக்கைகளும் வேறு. ஏன் சட்டமும் கூட அப்பொழுது நெகிழ்ந்து வேறு விதமாகி விடுவதுண்டு. இதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இப்பொழுது நிலைமை வேறு. இது யுத்தம் முடிந்து யுத்தத்தின் பிரதான தரப்பான விடுதலைப்புலிகள் முற்றாகவே அழிக்கப்பட்ட அல்லது முடக்கப்பட்டு விட்ட – 13 ஆண்டுகளுக்குப்பிறகான நிலைமை – சூழலாகும். அதாவது இயல்பு நிலை உருவாக்கப்பட்டு, மீள்குடியேற்றம் செய்யப்பட்ட சூழலாகும்.

நாட்டில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததாக வெற்றிப் பிரகடனம் செய்யப்



பட்டதோடு, வெற்றிகரமாக இயல்பு நிலை உருவாக்கப்பட்டதாக உத்தியோக பூர்வமாக பிரகடனம் செய்து பல வெற்றிக் கொண்டாட்டங்களையும் நடத்தி விட்டது அரசாங்கம். யுத்த வெற்றி, இயல்பு நிலை உருவாக்கம், புனரமைப்பு, புனர்வாழ்வு போன்றவற்றுக்கெல்லாம் உரிமை கோரியிருக்கிறார்கள் தலைவர்கள்.

இதற்குப் பிறகும் எந்த விதமான அறிவிப்புகளோ அக்கறைகளோ இல்லாமல் குறித்த காணிகளையும் மையங்களையும் படையகங்களாகவும் உயர்பாதுகாப்பு வலயங்களாகவும் அடாத்தாகப் பிடித்து வைத்திருப்பது தவறாகும். இது நீதி மீறல், மட்டுமல்ல, தன்னுடைய சொந்தக் குடிமக்கள் மீதான அடக்குமுறையை தொடருவதாகும். ஏனெனில் இந்த நிலங்களும் உடமைகளும் எதிர்த்தரப்பாகிய விடுதலைப் புலிகளுடையவை அல்ல. அவ்வளவும் மக்களுடையவை. அல்லது அரசுக்குச் சொந்தமானவை. அரசுக்குச் சொந்தமானவை என்றால் அதுவும் மக்களுக்குரியதே.

இவ்வாறே அரசியற் கைதிகள் என்ற பேரில் ஒடுக்குமுறைக்கு எதிராகச் செயற்பட்ட விடுதலையாளர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுமாகும். இவர்களுடைய விடுதலையை இனிமேலும் தாமதிக்கவேண்டியதில்லை.

இதைக்குறித்தெல்லாம் தென்பகுதியில் உள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சட்டவாளர்கள், நீதிமான்கள், அறிவுசார் புலத்திலுள்ளோர், ஊடகர்கள், அரசியலாளர்கள் எவருக்கும் அக்கறைகள் கிடையாது. இவர்களில் பலரும் உத்தியோகபூர்வமான பயணிகளாகவும் சுற்றுலாப் பயணிகளாகவும் கடந்த 13 ஆண்டுகளிலும் வடக்குக் கிழக்கு வந்து சென்றிருக்கின்றனர்.

இப்படி வரும்போது எப்படியான சூழலில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர்? மக்களுக்கான உரிமைகள் எவ்வளவுக்கு மீறப்பட்டுள்ளது? எவ்வளவு நிலப்பகுதி படையாதிக்கத்தின் கீழுள்ளது? யுத்தத்திற்குப் பிறகும் இப்படியெல்லாம் செய்வது சரியா? என்பதையெல்லாம் நேரிலேயே பார்க்க முடிந்துள்ளது.

இதைப்போல காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நடத்துகின்ற போராட்டம், தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலையாளர்களின் (கைதிகளின்) விடுதலைக்காகப் போராடும் மக்களுடைய நிலைமை போன்றவற்றையும் கண்டறிந்துள்ளனர்.

ஆனாலும் இதைக்குறித்து இவர்களுடைய அகக்கண் திறக்கப்படவே இல்லை. அப்படித் திறக்கப்பட்டிருந்தால் இதற்கான ஆதரவுக் குரலை – அரசாங்கத்தின் நியாய மீறல் நடவடிக்கைகளுக்கு எதிரான குரலை எழுப்பியிருப்பர். குறைந்த பட்சம், இப்பொழுது தெற்கில் நடப்பவற்றுக்கு எதிராக எழுப்புகின்ற குரலோடு சேர்த்து இவற்றுக்கும் எதிராகச் செயற்பட்டிருப்பர். ஆனால் அப்படி நடக்கவே இல்லை.

இதேவேளை தமிழ், முஸ்லிம் தரப்புகளும் நீதிக்காகச் சிந்திக்கக் கூடிய சிங்களத் தரப்புகளோடு இணைந்து பயணிக்கத் தயாராக இல்லை. உரையாடல்களையும் உறவாடல்களையும் சரியாக நடத்துவதும் இல்லை. அந்தத் தரப்பிலிருந்தும் பொருத்தமான மன அமைப்புக் காணப்படுவதில்லை. இது இனவாதம் எதிலும் எல்லாத் தரப்பிலும் வலுவாக செறிந்து போயுள்ளது என்பதையே தெளிவாகக் காட்டுகிறது. நமக்கு நடந்தால் வலிக்கும். மற்றவர்களுக்கு அதேபோல் நடந்தால் வலிக்காது என்ற விதமான சிந்தனையே இதன் அடியொலிப்பாகும். இல்லையென்றால், தெற்கில் உயர்பாதுகாப்பு வலயம் கூடாது. வடக்குக் கிழக்கில் என்றால் சரியானது, ஏற்புடையது என்ற எண்ணம் வருமா? இது எவ்வளவு பிழையான சிந்தனை? இப்படிச் சிந்திப்பது அழகற்றது, நியாயமற்றது, அறிவற்றது அல்லவா!

அரசாங்கம்தான் தவறிழைக்கிறது. அரசியல்வாதிகள், அரசியற் கட்சிகள் எல்லாம் தவறாகச் செயற்படுகின்றனர் என்றால் மக்கள் நிலை நின்று சிந்திக்கக் கூடிய தரப்புகளும் தவறு விடலாமா? இப்படி பேதநிலைப்பட்டுச் சிந்திக்கலாமா? இப்படி விலக்கிச் சிந்தித்தால் புறக்கணிக்கப்படுகின்ற மக்கள் விலகி (தனித்து) நிற்கத்தானே விரும்புவர்?

சட்டமும் நீதியும் உரிமையும் அன்பும் கருணையும் நியாயமும் அனைவருக்கும் பொதுவானவை. ஏன் ஆட்சியும் தான். இவையெல்லாம் ஆளாளுக்கு வேறுபடுமாக இருந்தால், குழப்பங்களும் பிரச்சினைகளும் அமைதியின்மையுமே ஏற்படும். இனம், மதம், சாதி, பிரதேசம், பால் என்று ஏதாவதொன்றின் பேராலும் பேதமாக இவற்றில் பாரபட்சம் நிகழுமாக இருந்தால் அதனால் நாடு முடிவற்றுப்பாதிப்படையும். இனப்பிளவு, நிலப்பிளவு, சமூகப் பிளவு என்று பிளவுகளே ஏற்படும்.

இன, மத, பிரதேச, வர்க்க ரீதியான பிளவுகளே இலங்கையைக் கடந்த காலத்தில் நாசப்படுத்தின என்பதை நாம் அனைவரும் நன்றாகவே அறிவோம். ஏன் இப்பொழுது கூட இந்தப் பிளவுகள்தான் நாட்டை நெருக்கடிக்குள்ளும் அமைதியின்மைக்குள்ளும் தள்ளி விட்டுள்ளன. உள்ளே நமக்குள் இணக்கம் கண்டு, ஒருங்கிணைந்து ஒற்றுமையாக இருக்க முடியாமல் தவிக்கும் நாம் பிராந்திய சக்திகளுக்கும் சர்வதேச சக்திகளுக்கும் முன்னால் மண்டியிடுகிறோம். உதவிப் பிச்சை கேட்கிறோம்.

வளமானதொரு நாட்டை நியாயமாகப் பரிபாலனம் செய்ய முடியாததன் விளைவுகளுக்காக எவ்வளவு உயிர்களைப் பலியிட்டிருக்கிறோம்! எவ்வளவு கோடி பெறுமதியான வளங்களையும் சொத்துகளையும் அழித்திருக்கிறோம்! மகத்தான ஒற்றுமையைச் சிதறடித்திருக்கிறோம்! மாண்பையெல்லாம் இழந்து உலகத்தின் முன்னே குற்றவாளிகளாகவும் கடன்காரர்களாகவும் திறனற்றோராகவும் அகதிகளாகவும் மண்டியிட்டுக் கூனிக்குறுகி நிற்கிறோம்.

இப்படியெல்லாம் சீரழிந்து கிடந்தாலும் நம்முடைய அறிவீனமும் மமதையும் நம்மை விட்டுப் போவதாக இல்லை. அத்தனை பைத்தியக்காரத்தனத்தையும் மூட்டை கட்டிப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம்.

எங்களிடையே எந்த விதமான மாற்றங்களும் நிகழவில்லை. ஆனால், இலங்கையின் மீதான சர்வதேச இறுக்கம் வரவரக் கூடிக் கொண்டே வருகிறது. ஆம், சுருக்குக் கயிறு நம்முடைய குரல்வளையை நசுக்குகிறது. இதைத் தெரிந்தும் தெரியாதவர்களைப் போல நாம் மகிழ்ந்து கொண்டிருக்கிறோம். மூடர்கள் வேறு எப்படி இருப்பர்?

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையில் மாற்றம் வரும்

## அடுத்த வாரமளவில் திருத்தம் வர வாய்ப்பு



முட்டைக்காக தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையில் அடுத்த வாரமளவில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பொருளாளர் விஜய அல்விஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முட்டைக்கான உற்பத்தி செலவுடன் ஒப்பிடுகையில் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலை அநீதியானதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

முட்டைக்கான விலை திருத்தம் தொடர்பில் எதிர்வரும் 14 ஆம் திகதி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர், நுகர்வோர் அதிகார சபை, வர்த்தக அமைச்சு மற்றும் தமது சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு இடையே சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதன்போது, முட்டைக்கான உற்பத்தி செலவீனம், போக்குவரத்து மற்றும் மின்கட்டணம் என்பவற்றை கருத்திற் கொண்டு உரிய விலைத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பொருளாளர் விஜய அல்விஸ் தெரிவித்துள்ளார்.

# கணவனுக்கு தீக்காயங்கள் ஏற்படுத்திய மனைவிக்கு சிறைத்தண்டனை

**யாழ்.விசேட நிருபர்**

கணவனுக்கு பெற்றோல் ஊற்றி தீவைத்து ஆபத்தான முறையில் தீக்காயங்களை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் முற்படுத்தப்பட்ட குடும்பப் பெண்ணை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் இந்தச் சம்பவம் கடந்த நான்காம் திகதி இடம்பெற்றுள்ளது.

குடும்பத் தலைவர் மீது பெற்றோல் ஊற்றப்பட்டு தீவைக்கப்பட்டதால் ஆபத்தான நிலையில் தீக்காயங்களுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார், படுகாயங்களுக்கு உள்ளாகிய குடும்பத்தலைவரின் மனைவியை கைது செய்து நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினார்

அதன் போது குடும்பப் பிரச்சினை காரணமாக சந்தேக நபரே கணவன் மீது பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் சமர்ப்பணம் செய்தனர்.

சந்தேக நபரின் வீட்டுக்குள் பாம்பு ஒன்று வந்துள்ளது. அதனை விரட்ட சந்தேக நபர் பெற்றோலை விசிறியுள்ளார். அது அங்கு ஏற்றப்பட்டிருந்த சாம்பிராணி குச்சியில் பட்டு தீ ஏற்பட்டுள்ளது.

கணவன் மீது பெற்றோலை ஊற்றும் எண்ணம் சந்தேக நபரிடம் இல்லை என்று சந்தேக நபரின் சட்டத்தரணி சமர்ப்பணம் செய்தார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, சந்தேக நபரான பெண்ணை வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# சமூக சேவையாளர் பாஸி ஸுபைரின் தாயார் காலமானார்

தர்கா நகர், ஸென்ரல் வீதியைச் சேர்ந்த உம்முல் எஹியா அவர்கள் காலமானார். அன்னார், காலம் சென்ற ஸுபைர் மரிக்கார் அவர்களின் அன்பு மனைவியும், அல்ஹாஜ் ஷாபி, அல்ஹாஜ் Fபாஸி ஸுபைர் (அறிவிப்பாளர்), லாரிபிரா, Fபாஹிரா, ஆசிரியை ஸஹீலா, ரிஸ்வானா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸத்தார் (ஹம்பர் ஹவுஸ்), காலம் சென்றவர்களான Fபளீல், ராஸிக், கன்ஸீன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஜனாஸா, நேற்று (08) மாலை 05.00 மணிக்கு, தர்கா நகர் மீரா ஜும்ஆ மஸ்ஜித் (தெருவுப் பள்ளி) மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# அல் குர்ஆனினதும், நபிகள் நாயகத்தினதும் போதனைகள் சகல காலங்களுக்குமானவை

## மீலாதுன் நபி செய்தியில் மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம்



இறைவேதம் அல்குர்ஆனினதும், இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களினதும் போதனைகள் சகல காலங்களுக்கும் பொருத்தமானவை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள மீலாதுன்னபி செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது மீலாத் தினச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

உலக முஸ்லிம்கள் தங்கள் உயிரினும் மேலாக நேசிக்கும் இறைதூதர் முஹம்மது (ஸல்) அவர்களை குறிப்பிட்ட ஒரு நாளில் மட்டு மல்லாது, வாழ்நாள் முழுவதுமே நினைவு கூர்ந்து, அன்னாரை இம்மை,மறுமை ஈருலக ஈடேற்றத்திற்கும் வழிகாட்டியவராக வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் பின்பற்றியொழுகுகிறார்கள். ஓரிறைக் கொள்கையான ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக பொதுவாக தங்களது 63 ஆண்டுகால வாழ்க்கையையும் குறிப்பாக நபித்துவத்திற்குப் பிந்திய 23 ஆண்டுகால வாழ்க்கையையும் நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) முழுமையாக அல்லாஹ்விற்காக அர்ப்பணித்திருந்தார்கள். உள்நாட்டிலும், ஏனைய நாடுகளிலும் ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடிகளுக்கும், பிரச்சினைகளுக்குமான தீர்வுகளை நபி பெருமானாரைப் பின்பற்றி இஸ்லாத்தின் வெளிச்சத்தில் காண்பதற்கு உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் இந் நாளில் உறுதி பூணுவோமாக.

### உயர்தரம், புலமைப்பரிசில்...

இதன்படி க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 23.01.2023 முதல் 17.02.2023 வரையும் தர ஐந்து புலமை பரிசில் பரீட்சை இவ்வருடம் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாக பரீட்சை திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ்.உத்தரதேவி...

அனர்த்தம் நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இயந்திரத்துடன் கூடிய பெட்டியொன்றும், மேலும் ஒரு பெட்டியும் இவ்வாறு தடம் புரண்டுள்ளன. இந்த அனர்த்தம் காரணமாக வடக்குக்கான ரெயில் போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### இருபது நாடுகள் பட்டியலில்...

இடத்தை பிடித்திருக்கிறது.

இலங்கை இதில் 88.01 புள்ளிகளைப் பெற்றிருக்கிறது. கடந்த ஆண்டு இலங்கை இந்த பட்டியலில் 5ஆவது இடத்தைப் பிடித்திருந்தது. சுற்றுலாவை பிரதான வருவாய் ஆதாரமாக கொண்ட இலங்கை, பொருளாதாரத்தில் மீளும் முயற்சியாக மீண்டும் சுற்றுலா துறைக்கு புத்துயிரூட்ட முயன்று வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டுக்கான, சுற்றுலா செல்வதற்கான சிறந்த நாடுகள் பட்டியலில் முதல் 03 இடங்களை போர்ச்சுக்கல், ஜப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகள் பிடித்திருக்கின்றன.

### நாளை திங்கட்கிழமை...

காட்டும் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நபிகள் நாயகத்தின் பிறந்த தினம் ஒக்டோபர் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது, எனவே, அன்றைய தினம் பொது, வங்கி மற்றும் வர்த்தக விடுமுறையாகும்.

இதன் காரணமாக, ஒக்டோபர் நாளை திங்கட்கிழமை விசேட வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### தேசியசபையின் உபகுழுவின்...

கொள்கைகளை நவீனமயப்படுத்தல், கடற்றொழில், உணவுக் கொள்கைகள், மின்சக்தி மற்றும் வலுசக்தி, காலநிலை மாற்றம் தொடர்பான கொள்கைகள், தொழில்முனைவுகள் தொடர்பான கொள்கைகளை நவீனமயப்படுத்தல் தொடர்பில் யோசனைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள இத் துறைசார் நிபுணர்களை உப குழு முன்னிலையில் அழைப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் ஆலோசனைகள் மற்றும் யோசனைகளுக்கு அமைய குறுகிய கால யோசனைகளை ஒரு மாத காலத்துக்குள்ளும், நடுத்தரகால யோசனைகளை இரண்டு மாதங்களுக்குள்ளும், நீண்டகால யோசனைகளை மூன்று மாதங்களுக்குள்ளும் தேசிய பேரவையில் சமர்ப்பிக்க குழுவின் உறுப்பினர்கள் இணங்கினர்.

### ஹரிஹர சர்மா ஐயா கனடாவில்...

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் இயல், நாடக கட்டுப்பாட்டாளரக பணியாற்றி ஓய்வுபெற்றார். பின்னர் குடும்பத்தினருடன் கனடா சென்று அங்கு கனடா றிச்மண்ட் ஸ்ரீ முருகன் ஆலய பிரதம குருவாக தொண்டாற்றினார். ஹரிஹர சர்மாவின் இறுதிக்கிரிகைகள் நேற்று கனடா நேரப்படி காலை 9.00 மணிக்கு நடைபெற்றது. அவரின் ஆத்மா மோட்சத்தை அடைய வானொலி நண்பர்கள் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

### அதிக வேகத்தினால்...

மோதியுள்ளது.

இச்சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றைய இரு இளைஞர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாச்சிமலை, இங்கிரிய, மஹா இங்கிரிய பகுதியைச் சேர்ந்த முத்துமால கலனஜித் என்ற 19 வயதுடைய இளைஞனே விபத்தில் உயிரிழந்துள்ளார். மூன்று இளைஞர்களை ஏற்றிச் சென்ற கார் இங்கிரியவில் இருந்து இரத்தினபுரி நோக்கி அதிவேகமாக பயணித்ததில் கார் கட்டுப்பாட்டை இழந்து நம்பபான பகுதியில் விபத்துக்குள்ளானது.

இறந்தவர் காரின் முன் இடது இருக்கையில் அமர்ந்திருந்த இளைஞர் என தெரிவிக்கப்படுகின்றது.

### இலங்கைக்கு சார்பாக...

இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

அரச தொடர்பாடல் பொறிமுறை தொடர்பில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் ஆகியோரின் ஊடகச் செயலாளர்கள், ஊடக இணைப்பாளர்களை தெளிவுபடுத்தும் செயலமர்வில் கலந்துகொண்டு பேசும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த செயலமர்வு கடந்த 07 ஆம் திகதி அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றும்போது,

பிரேரணைக்கு எதிராக அதாவது, இலங்கைக்கு ஆதரவாக சீனா, பாகிஸ்தான்,பொலிவியா, கியூபா,எரித்திரியா,உஸ்பெகிஸ்தான், வெனிசியூலா என்பன வாக்களித்தன.

அத்துடன் இந்தியா, ஜப்பான், மலேஷியா, இந்தோனேஷியா, பிரேஸில், ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார் உள்ளிட்ட 20 நாடுகள் வாக்களிப்பிலிருந்து விலகியிருந்தன.

ஆரம்பத்தில் இலங்கை`கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக சுமார் 30 நாடுகள் வாக்களிக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதும் அது 20 நாடுகளாக குறைந்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

### ஈரான், பாகிஸ்தான் கப்பல்கள்...

படகு மூலம் கொண்டு வரப்பட்ட 1200 கோடி ரூபா பெறுமதியான 200 கிலோ போதை பொருள் பாக்கெட்டுகளுடன் படகிலிருந்த ஈரானியர் 06 பேர். இந்திய கடற்படையினரும் போதைப்பொருள் கட்டுப்பாட்டுத் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டாவது சம்பவமாக பாகிஸ்தானிலிருந்து கடத்தி வந்த 360 கோடி ரூபா பெறுமதியான (இந்திய ரூபா) 50 கிலோ ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டது. ஹெரோயினையும், படகையும் குஜராத் பொலிசார் பறிமுதல் செய்து விசாரித்து வருகின்றனர்.

அத்தோடு கேரள மாநிலம் கொச்சி கடற்பகுதியில் படகு மூலம் கடத்தப்பட்ட சுமார் 1200 கோடி ரூபா பெறுமதியான 200 கிலோ ஹெரோயின் பாக்கெட்டுகளை பறிமுதல் செய்தனர்.

ஆப்கானிஸ்தானில் தயாரிக்கப்பட்ட ஹெரோயின் பாகிஸ்தான் வழியாக ஈரான் நாட்டு படகில் ஏற்றப்பட்டு, இந்தியா மற்றும் இலங்கையில் விற்பனை செய்ய கொண்டு வரப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக ஈரான் நாட்டைச் சேர்ந்த ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய கடற்படை மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டுத்துறை மூத்த அதிகாரி சஞ்சய் குமார் சிங் தெரிவித்துள்ளார். கைப்பற்றப்பட்ட பாக்கெட்டுகளில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளை சேர்ந்த தனித்துவமான அடையாளங்கள் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடுக்கடலில் இலங்கை கப்பலுக்கு இந்த போதை பாக்கெட்டுகள் மாற்றப்படவிருந்த நேரத்தில் அவை கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் சஞ்சய் குமார் சிங் கூறியுள்ளார். கைது செய்யப்பட்டவர்களும், போதைப் பொருள் பாக்கெட்டுகளும் கொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பாகிஸ்தானிலிருந்து கடத்தி வந்த 360 கோடி ரூபா (இந்திய ரூபா) பெறுமதியான 50 கிலோ ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டது. ஹெரோயினும், படகையும் பொலிசார் பறிமுதல் செய்து விசாரித்து வருகின்றனர். குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் கடலோர காவல்படை மற்றும் தீவிரவாத தடுப்பு பிரிவு பொலிசார் அரபிக்கடல் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சந்தேகத்திற்கு இடமாக வந்த ஒரு படகை தடுத்து சோதனை செய்தனர். அப்போது அதில் 50 கிலோ ஹெரோயின் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றை பறிமுதல் செய்த பொலிசார் படகில் இருந்த 06 பணியாளர்களிடம் விசாரணை நடத்தினர். அப்போது அந்த படகு பாகிஸ்தானை சேர்ந்த அல்சாகர் படகு என்பதும் அங்கிருந்து ஹெரோயினை கடத்தி வந்ததும் தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து 50 கிலோ ஹெரோயினும், படகையும் பறிமுதல் செய்த பொலிசார் அதிலிருந்த ஊழியர்களையும் விசாரணைக்காக ஜாகாவ் துறைமுகத்திற்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### சட்டக் கல்லூரி பரீட்சைகள்...

வேதனைக்குள்ளாகியுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களின் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

ஆரம்பத்தில் தமிழ் ,சிங்கள் மொழி மூல மாணவர்கள் தமது தாய் மொழி மூலம் சட்டக்கல்லூரியின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளின் பரீட்சைகளுக்குத் தோற்றக் கூடிய வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இச் சந்தர்ப்பம் 2020 டிசம்பர் மாதம் 30 ஆம் திகதிய புதன் கிழமை 2020/12/20 அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் மாற்றப்பட்டுள்ளதோடு,பரீட்சையில் ஒரு சில பாடங்கள் மாத்திரம் ஆங்கில மொழி மூலம் தோற்ற வேண்டிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இதனால் அவர்களுக்கு தமது தாய் மொழிகளான தமிழ், சிங்களம் மூலம் அப்பாடங்களுக்கு தோற்ற முடியாத நிலை உருவாகியுள்ளது.

மாணவர்களுக்கு தமது பிரயோக மொழியைத் தவிர மற்றமொரு மொழியினால் பரீட்சை எழுதுவதற்கு கட்டாயப்படுத்துவது வியப்பான ஒரு விடயமாகும்.

அத்துடன் தமது தாய்மொழி தமிழ், சிங்கள மொழிகளில் கற்கும் ஒரு மாணவனுக்கு சட்டக் கல்லூரியில் ஆங்கில மொழியில் சட்டப் பரீட்சைக்கு தோற்றுமாறு கட்டாயப் படுத்துவது நியாயமற்றதாகும்.

விருப்பமான மொழியொன்றினால் பரீட்சை எழுதுவதற்கு முன்னர் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்த வாய்ப்பை மீண்டும் வழங்குமாறு நாம் கேட்டுக் கொள்கிறோம். சட்டக் கல்லூரியில் அனைத்து விரிவுரைகளும் தற்போது நடத்தப்படும் முறையிலேயே ஆங்கில மொழியில் நடத்தப்படுவது தொடர்பாக எமக்கு எந்த விதமான ஆட்சேபனையும் கிடையாது.

ஆயினும், முன்னர் இருந்தது போல பரீட்சைக்கு மாத்திரம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தோற்றுவதற்கான வாய்ப்பை வழங்குமாறு நாம் மீண்டும் மீண்டும் முறையிட்டுக் கேட்டுக் கொள்கிறோமென்றும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களின் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

# எங்கள் கருத்து

## வேற்றுமையை வளர்ப்பதனால் விளையும் நன்மை எதுவுமில்லை!

அரசியலில் தங்களது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கு இனவாதமும், அரசியல் பேதங்களும் அவர்களுக்கு கைகொடுத்து உதவுகின்றன. ஆனால் சாதாரண மக்களுக்கு நன்மை எதுவுமே விளைவதில்லை என்பதுதான் யதார்த்தம். மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதற்காக அரசியல்வாதிகளில் அநேகர் மனம்வருந்துவதுமில்லை.

இதுவே எமது நாட்டின் மாற்றமுடியாத கலாசாரமாகிப் போயுள்ளது. இவ்வாறான அவலநிலைமை மேலும் தொடர்வதற்கான கவலைக்குரிய அறிகுறிகளே இன்னும் தென்படுகின்றன. கொவிட் பெருந்தொற்று காரணமாக நாம் இழந்து போன உயிர்களும், பொருளாதார நலன்களும் கொஞ்சநஞ்சமல்ல. அதன் பின்னர் உருவெடுத்த பொருளாதார நெருக்கடியினால் வரலாறு காணாத பாதிப்புகளை அடைந்தோம். பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இன்னுமே எம்மால் மீளமுடியாதிருக்கின்றது. ஆனாலும் எமது நாடு இன்னுமே முரண்பாடுகளையும், பேதங்களையும் கைவிடுவதாக இல்லை. நாம் இன்னும் பாடம் கற்கவில்லை என்பதே உண்மை.

இவ்வாறான நிலைமையில், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் பழைய முரண்பாடுகளை மறந்து அனைவரையும் ஒன்றிணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் அறைகூவல் விடுத்துள்ளார். நாட்டின் இன்றைய நெருக்கடி வேளையில் ஜனாதிபதி விடுத்திருக்கும் இந்த அழைப்பை அனைத்துத் தரப்பினரும் சாதகமாக அணுகுவதே நாட்டின் எதிர்கால நலனுக்கு நன்மையாக அமையுமென்பதில் ஐயமில்லை.

வேற்றுமையினால் விளைவது தீமையைத் தவிர வேறொன்றுமில்லை என்ற யதார்த்தமான தத்துவத்தை முதலில் புரிந்து கொள்ள வேண்டியவர்கள் அரசியல்வாதிகளாவர். ஏனெனில் அரசியல்வாதிகளின் வார்த்தைகளே மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மக்களை எந்தவொரு திசையை நோக்கியும் மாற்ற இயலுமானவர்களும் அரசியல்வாதிகளேயாவர்.

### பொலிஸ் பதிவு படிவங்களை...

அறிவித்துள்ளதாகவும் அவர்களும் இதை ஏற்றுக்கொண்டு உடன் நிறுத்துவதாக தன்னிடம் உறுதி அளித்துள்ளதாகவும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் பொறுப்பிலுள்ள சகலருக்கும் அறிவிப்பதாக தன்னிடம் உறுதி அளித்துள்ளதாகவும் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார். பொலிஸாருக்கு மட்டுமல்ல, எந்த ஒரு அரச நிறுவனத்துக்கும், தனிப்பட்ட வீட்டுத் தகவல்களை கொடுக்க நாம் விரும்ப மாட்டோம். கொடுத்தால் அது எங்கெங்கு போகுமென எமக்குத் தெரியும். பொலிஸ் சட்டத்தில் பதிவு செய்ய இடம் இருக்கிறது. அது எனக்கு தெரியும். ஆனால், அதை விசேட அவசர காலங்களிலேயே பயன்படுத்த வேண்டும்.

எங்காவது சட்டத்தை மீறுபவர்கள் இருப்பார்களானால் அவர்களை அடையாளம் கண்டு கைது செய்யுங்கள். விசாரணை செய்யுங்கள். அதில் எனக்கு மாறுபட்ட கருத்தது இல்லை. ஆனால், பொதுவாக வீடு வீடாக போக வேண்டாம். இன்று போர் நடைபெறுகின்ற, சட்ட விரோத ஆயுத அமைப்புகள் செயற்படுகின்ற அவசர கால நிலைமையல்ல. போர் காலத்திலும் நான் இங்கே தான் இருந்துள்ளேன். அந்த காலத்திலேயே இதை பொறுத்துக்கொள்ளாதவன் நான். இன்று இந்த சமாதான காலத்தில் இந்த பொலிஸ் படிவங்களை வீடு வீடாக கொண்டு சென்று பதிவு செய்வதா? உடன் நிறுத்துங்கள்!" என சம்பந்தப்பட்ட அரசியல், மற்றும் நிர்வாக தரப்பினரிடம் நான் கூறியுள்ளேன் என்றும் மனோ எம்.பி தெரிவித்துள்ளார்.

### தேசிய மீலாதுன் நபி விழா....

ஜாமியா நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் மிக விமர்சையாக நடைபெறவுள்ளது. இவ்விழாவில் புத்தசாசன, கலாசார மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி, சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள், முஸ்லிம் சமுதாய கலாசார திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் அன்ஸார், அரச ஹஜ் கமிட்டி தலைவர் அஹ்கம் உவைஸ், பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மத், பேருவளை பிரதேச சபை தலைவர் மேனக விமலரத்ன உட்பட அதிகாரிகள், சர்வ மத தலைவர்கள், ஜாமியா நளீமிய்யா கலாபீட தலைவர் யாகூத் நளீம், சீனன்கோட்டை பள்ளிச்சங்க தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியார் உட்பட கலாபீட முக்கியஸ்தர்கள் என பலரும் விழாவில் பங்குபற்றுவர்.

தேசிய மீலாத் விழா வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தில் நடைபெறுவதை முன்னிட்டு கலாபீடத்தை பிரதிபலிக்கும் வகையில் இலங்கை தபால் திணைக்களத்தினால் முத்திரை ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

நிகழ்வில் இஸ்லாமிய கலை, கலாசார நிகழ்ச்சிகளோடு உலமாக்கள் கௌரவிப்பு, களுத்துறை மாவட்ட அஹதிய்யா சமய பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கல் உட்பட பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

விழாவுக்கான ஏற்பாடுகள் முஸ்லிம் சமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் அன்ஸாரின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திணைக்கள அதிகாரி அஷ்ஷெய்க் முப்தி முர்ஸி (நளீமி) தெரிவித்தார்.

### ஜனாதிபதியை அன்று விமர்சித்த ....

தற்போது அது தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வருகின்றமை அவரது இரட்டை வேடத்தையே காட்டுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் விசேட உரை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

69 இலட்சம் வாக்குகளை பெற்ற முன்னாள் ஜனாதிபதி ஆர்ப்பாட்டத்தின் மூலம் பதவி விலக நேர்ந்தது.

50க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவருக்கு பிரதமர் பதவியை பொறுப்பேற்க அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் அவர் அந்த பொறுப்பை ஏற்கவில்லை. தற்போது அது தொடர்பில் அவர் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார். எனினும் தனியொரு பாராளுமன்ற உறுப்பினராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை பொறுப்பேற்றார். அதன் மூலம் நாட்டில் தற்போது சிறந்த பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

நான் ஆர்ப்பாட்டத்தை மதிக்கின்றேன். ஆனால் எல்லை மீறிய செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

நெருக்கடியான அந்த சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவும் அந்த பொறுப்பை பொறுப்பேற்காமல் இருந்திருந்தால் நாட்டுக்கு என்ன நடந்திருக்கும்?

எவரும் நாட்டைப் பொறுப்பேற்க முன் வராத நிலையில் அவர் தனிநபராக அதனை பாரமெடுத்தார்.

அவர் மீது நம்பிக்கை வைத்து பெரும்பான்மையானோர் அவருக்கு ஆதரவு வழங்கினர்.

கட்சி பேதமின்றி அவருக்கு ஆதரவு வழங்கப்பட்டது. நாட்டு மக்களும் அவர் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டனர். நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் பொருத்தமான தலைவராக அவரை மக்கள் குறிப்பிட்டனர்.

சர்வ கட்சி அரசாங்கத்திற்கு அவர் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். ஆனால் எந்த கட்சிக்கும் அதற்கான தேவை இருக்கவில்லை. மேலும் சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதி முன்னோக்கி செல்வார். விமர்சனங்களை முன் வைத்தவர்களும் இப்போது அவரோடு முன் செல்வதை காண முடிகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# இலங்கையை சோதனைக்களமாக பயன்படுத்த சில நாடுகள் முயற்சி!

## இலங்கையின் உறுதியான நிலைப்பாட்டை மனித உரிமைகள் பேரவையில் தெளிவாக எடுத்துக் கூறிய அமைச்சர் அலி சப்ரி!

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் மற்றுமொரு பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான வாக்கெடுப்பில் பிரேரணைக்கு ஆதவாக 20 வாக்குகளும், எதிராக 07 வாக்குகளும் பதிவாகியிருந்ததுடன், 20 நாடுகள் வாக்களிப்பில் பங்கெடுக்கவில்லை.**




இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற தலைப்பிலான இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் மீண்டும் நிராகரித்துள்ளது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இதனை ஜெனீவா பேரவையிலேயே பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி, மலாவி, மொன்டனீக்ரோ, வடக்கு மசிடோனியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளால் இலங்கை தொடர்பான புதிய பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டது. இந்தப் பிரேரணையை எதிர்க்கும் இலங்கையின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக பொலிவியா, சீனா, கியூபா, எரித்திரியா, பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகள் வாக்களித்திருந்தன.

பிரேசில், சீனா, வெனிசுலா, ஜப்பான் மற்றும் கொரியக் குடியரசு ஆகிய நாடுகள் வாக்கெடுப்புக்கு முன்னர் இலங்கைக்கு ஆதரவாக அறிக்கைகளை வெளியிட்டிருந்தன. இந்தியா வாக்கெடுப்பின் போது நடுநிலை வகித்திருந்தது.

இந்தத் தீர்மானமானது அனுசரணையாளர்களின் அரசியல் கருத்துக்களை முன்வைக்கும் நோக்கத்தை பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தாலும், அது இலங்கைக்கு வெளிப்படையாக உதவாது என இலங்கை சார்பில் கருத்துரைத்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டினார்.

மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் உருவாக்கப்பட்ட 'வெளிப்புற ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறை' குறித்த பிரேரணையின் உள்ளடக்கத்தை அமைச்சர் கடுமையாக எதிர்த்தார்.

இந்தப் பொறிமுறையானது சபையின் எதிர்பார்க்கப்பட்ட ஆணைக்கு வெளியே உள்ளது. எந்தவொரு இறையாண்மையுள்ள அரசும் அதன் அரசியலமைப்பிற்கு முரணாக இயங்கும் மற்றும் அதன் உள்நாட்டு சட்ட செயன்முறைகளின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே தீர்மானிக்கும் ஒரு வெளிப்புறப் பொறிமுறையின் மேலெழுதலை ஏற்க முடியாது' என்பதை அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த மேற்கத்தேய நாடுகள் முதன்முறையாக சில கூடுதல் குற்றச்சாட்டுகளை உள்ளடக்கியதாக கருதி, 'இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் ஊழலின் தாக்கம்' மற்றும் 'எதிர்ப்பு இயக்கத்தின் அடக்குமுறை' குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளன.

பொருளாதாரப் பிரச்சினைகளை உள்ளடக்கியமை குறித்து அமைச்சர் சப்ரி குறிப்பிடுகையில், சக்தி வாய்ந்த நாடுகள் மற்றைய நாடுகளின் உள்விவகாரத்தில் தலையிடுவதில் தமது செல்வாக்கைச் செலுத்துவது மற்றும் அது குறித்த தமது திறனை எவ்வாறு மேம்படுத்துவது என்பதில் இலங்கையை ஒரு சோதனைக் களமாகப் பயன்படுத்துகிறது என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

சபையின் ஸ்தாபகக் கோட்பாடுகளுக்கு மாறாக, வடக்குத் தெற்கு துருவமுனைப்பு மற்றும் அரசியல்மயமாக்கலுக்கு இந்தத் தீர்மானம் மற்றொரு உதாரணம் என வாக்கெடுப்பின் தீர்மானம் நிரூபிக்கின்றது. மனித உரிமைகள் பேரவையின் அடிப்படைக் கோட்பாடுகளான உலகளாவிய தன்மை, பக்கச்சார்பற்ற தன்மை, புறநிலை மற்றும் தெரிவு இல்லாமை ஆகியன ஆக்கபூர்வமான சர்வதேச உரையாடல் மற்றும் ஒத்துழைப்பிற்கு வழிவகுத்து, தொடர்ந்தும் ஆதரவளித்து வந்த தென்நாடுகளுக்கிடையிலான ஒற்றுமையை இந்த வாக்கெடுப்பு நிரூபித்தது என்பதும் அமைச்சர் அலி சப்ரியின் நிலைப்பாடாக இருந்தது.

இலங்கை பொருளாதார ரீதியில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்திருக்கும் சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு எதிராக பிரேரணையொன்றை நிறைவேற்றுவதற்கு சர்வதேச சக்திகள் முயற்சிப்பது நாட்டை மேலும் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளுவதாக அமைந்து விடும்.

மறுபக்கத்தில் ஐ.நா மனித உரிமை விவகாரத்தை தமது அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்த சில எதிர்க்கட்சிகள் உள்நாட்டில் முயற்சிக்கின்றன. அரசாங்கம் மீது எப்பொழுதும் விமர்சனங்களை முன்வைத்துவரும் அவர்கள், இலங்கைக்கு எதிரான வாக்கெடுப்பின் போது நாட்டுக்கு ஆதரவாக மேலும் பல நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்



கொள்ள அரசாங்கம் தவறிவிட்டதாக விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

அது மாத்திரமன்றி போராட்டக்காரர்கள் மீதான ஒடுக்குமுறைகள் அதிகரித்திருப்பதாக சித்தரிப்பதற்கும் அவர்கள் முயற்சிக்கின்றனர். நாடு எதிர்கொண்டுள்ள சவால்களிலிருந்து மீள்வதற்கு அரசியல் வேறுபாடுகளை மறந்து அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று சேரவேண்டிய தருணத்தில் பிரிந்து நின்று ஒருவர் மீது ஒருவர் விமர்சிப்பது நாட்டின் எதிர்காலத்துக்கு ஏற்றதாக அமையாது.

இது இவ்விதமிருக்க, இலங்கை அரசாங்கம் மீது கடந்த காலங்களிலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக யுத்தம் முடிவடைந்த பின்னர் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும், பொறுப்புக் கூறல் விடயத்திலும் உரிய நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்கத் தவறிய பட்சத்திலேயே இவ்வாறான பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன.

அது மாத்திரமன்றி சர்வதேசத்திடம் வழங்கிய உறுதிமொழிகளை அவ்வப்போது ஆட்சியில் இருந்த இலங்கை அரசாங்கங்கள் நிறைவேற்றுவதிலும் சிக்கல்கள் காணப்பட்டன. குறிப்பாக நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த எடுக்கக் கூடிய முன்னேற்றகரமான நடவடிக்கைகள் கூட முன்னெடுக்கப்படாது காலம் இழுத்தடிக்கப்பட்டது.

இதுபோன்ற காரணங்களாலேயே சர்வதேச சமூகம் மீண்டும் மீண்டும் இலங்கை மீது நெருக்கடியைக் கொடுத்து வருகிறது.

மறுபக்கத்தில் உள்ளகப் பொறிமுறையின் ஊடாகத் தமக்கு நீதி கிடைக்கவில்லையென்ற காரணத்தினால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் தரப்பினர் சர்வதேசத்தின் தலையீட்டை எதிர்பார்க்கின்றனர். அவர்களின் கோணத்திலிருந்து பார்க்கும்போது இதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

அதேநேரம், புலம்பெயர்ந்து வாழ் தமிழ் அமைப்புக்கள் தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்காக இலங்கைக்கு எதிரான பிரேரணைகளைக் கொண்டுவர ஆதரவு தெரிவித்து வருகின்றன.

தமிழ் அரசியல்வாதிகளும் இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் செய்கின்றனர். இவ்வாறான பின்னணியில் ஐ.நா மனித உரிமைப் பேரவை அமர்வுகள் ஒவ்வொரு தரப்பினராலும் தமது உள்நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எதுவாக இருந்தாலும் நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கு அனைவரும் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பதே கள நியாயமாகும்.



### பொருளாதார நெருக்கடி வேளையில் இலங்கையை மேலும் இக்கட்டான நிலைமைக்குள் தள்ளி விடுவதற்கு சர்வதேசத்தில் சில சக்திகள் திட்டம்!

**பி.ஹர்ஷன்...**

---

# உலகுக்கே சவால் விடுக்கும் வகையில் விண்வெளித்துறையில் சாதனை படைக்கும் இந்தியா!



**விண்வெளி ஆய்வில் இந்தியா பெரும் சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. எதிர்வரும் 2025– ஆம் ஆண்டில் வெள்ளிக் கிரகத்துக்கு விண்கலம் அனுப்புவதற்கு இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பான 'இஸ்ரோ' திட்டமிட்டுள்ளது.**

செவ்வாய்க் கிரகத்துக்கு விண்கலம் அனுப்பும் 'மங்கள்யான்' திட்டத்தை இஸ்ரோ நிறைவேற்றியிருந்தது. சந்திரனுக்கு விண்கலம் அனுப்பும் சந்திரயான்1, சந்திரயான்2 திட்டங்களையும் மேற்கொண்டது.

அதைத் தொடர்ந்து, வெள்ளிக் கிரகத்தின் மீது இஸ்ரோவின் பார்வை பதிந்துள்ளது. வெள்ளிக் கிரகத்தை ஆராய்ச்சி செய்ய விண்கலம் அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டத்தில் பிரான்ஸும் பங்கேற்கிறது. இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சித் திட்டத்தில் முதல்முறையாக பிரான்ஸ் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அணுசக்தி, விண்வெளி, பாதுகாப்பு ஆகிய துறைகளில் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் இந்தியா இணைந்து செயல்பட்டு வருகின்றது. விண்வெளிக்கு 3 இந்திய விண்வெளி வீரர்களை அனுப்பி வைக்கும் 'ககன்யான்' திட்டத்திலும் பிரான்ஸ் பணியாற்றி வருகிறது.

இதுஒருபுறமிருக்க, இந்திய விண்வெளித் துறையில் முதன் முறையாக எஸ்.எஸ்.எல்.வி ரொக்கெட் மூலம் 2 செயற்கைக்கோள்கள் அண்மையில் விண்ணில் செலுத்தப்பட்டிருந்தன. இந்தத் திட்டத்துக்கு 75 அரசு பாடசாலை மாணவிகள் உதவி செய்துள்ளனர். இது இந்தியாவில் சாதனை ஆகும். விண்வெளித் துறையில் வளர்ந்த நாடுகளுக்குப் போட்டியாக இந்தியா சார்பில் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. இதனால் விண்வெளித் துறையில் ஆண்டுதோறும் இந்தியாவின் வளர்ச்சி என்பது சிறப்பானதாக உள்ளது.

இந்தியாவில் எடை அதிகமான செயற்கைக்கோள்கள் பி.எல்.எல்.வி, ஜி.எஸ்.எல்.வி ரொக்கெட் மூலம் ஏவப்படுகின்றன. இதற்கு மாற்றாக எஸ்.எஸ்.எல்.வி எனும் ரொக்கெட் மூலம் எடை குறைந்த செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டது. இதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ சார்பில் எஸ்.எஸ்.எல்.வி எனும் சிறிய ரொக்கெட் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதையடுத்து 500 கிலோ எடையிலான செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த பயன்படும் வகையில் எஸ்.எஸ்.எல்.வி ரொக்கெட் வடிவமைப்புப் பணியை இஸ்ரோ மேற்கொண்டது. இந்த ரொக்கெட்டில் இஸ்ரோவின் புவி கண்காணிப்பு செயற்கைக் கோள் இ.ஓ.எஸ்_02 மற்றும் அரசு பாடசாலை மாணவிகள் உருவாக்கிய ஆசாதிசாட் (8 கிலோ) செயற்கைக் கோள்களை ஏவ திட்டமிடப்பட்டது. இதையடுத்து இந்த 2 செயற்கைக்கோள்களுடன் எஸ்.எஸ்.எல்.வி ரொக்கெட் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிக்கோட்டாவில் உள்ள முதலாவது ஏவுதளத்தில் இருந்து அண்மையில் விண்ணில் பாய்ந்து சாதனை படைத்தது.

இஸ்ரோவின் இ.ஓ.எஸ் 02 செயற்கைக்கோளானது புவிசுற்றுச்சூழல் ஆய்வுகள், வானியல், நீரியல், விவசாயம், மண் மற்றும் கடலோர ஆய்வுகளை மேற்கொள்கின்றது. மேலும் வெப்பநிலை மாற்றங்கள் குறித்த தகவல்களை சேகரித்து வழங்குகிறது.

மாணவிகள் தயாரித்த அசாதி சாட் செயற்கைக்கோளானது 8 கிலோ எடை கொண்டது. இது சோலார் பேனல்களை படம்பிடிக்கும் செல்பி கமராவுடன் தரவுகளை படம்பிடித்து பூமிக்கு அனுப்புகிறது. இந்த திட்டத்தின் சிறப்பம்சம் இதுதான். அசாதிசாட் செயற்கைக்கோள் நாடு முழுவதும் கிராமங்களில் உள்ள 75 அரசு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிகள் மூலம் உருவாக்கப்பட்டு விண்வெளிக்கு செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்தி இஸ்ரோ சாதித்துள்ளது.

இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் வகையிலேயே அசாதிசாட் எனும் சிறிய செயற்கைக்கோள் தயாரிக்கப்பட்டது. இஸ்ரோவின் அறிவுறுத்தலின்பேரில் தமிழகத்தில் மதுரை திருமங்கலம் அரசு பாடசாலை மாணவிகள் 10 பேர் உள்பட மொத்தம் 75 அரசு பாடசாலை மாணவிகள் இந்த பணியை சிறப்பாக செய்து முடித்தனர். தற்போது மாணவிகள் தயாரித்த அசாதிசாட் செயற்கைகோள் விண்ணில் சஞ்சரித்து தனது பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்துக்காக 'ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா' மாணவர் குழு உருவாக்கப்பட்டு இஸ்ரோவால் ஒருங்கிணைக்கப்பட்டது. இதன்மூலம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விண்வெளி ஆய்வு குறித்த ஆர்வம் ஏற்படுவதுடன், அவர்கள் அத்துறையில் சாதிக்க தூண்டுதலும் ஏற்படும். தற்போது இந்த திட்டம் வெற்றி பெற்றுள்ளதால் மீண்டும் இதுபோன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

விண்ணில் செலுத்தப்பட்டுள்ள இ.ஓ.எஸ் 02 மற்றும் அசாதிசாட் செயற்கைக்கோள்கள் தாழ்புவி சுற்றுப்பாதையில் 500 கிலோமீட்டர் உயரத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

உலக நாடுகளுக்கே சவால் விடும் வகையில் இந்தியாவின் இஸ்ரோ அமைப்பானது விண்வெளித்துறையில் சாதனைகளைப் படைத்து வருகின்றது.

### 2025ஆம் ஆண்டில் வெள்ளிக் கிரகத்துக்கு விண்கலம் அனுப்பும் திட்டம்



### செய்மதியைத் தயாரித்து புகழ் சேர்த்த அரசாங்கப் பாடசாலை மாணவிகள்!

**எஸ்.சாரங்கன்...**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



**உயிர்பிரியும் தறுவாயிலுள்ள பொருளாதாரத்திற்கு மூச்சுக்காற்றைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி புரியாமல், பொருளாதாரம் இறுதி மூச்சையும் இழுக்கும் வரை சிலர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை வைத்துக் கொண்டு அரசியல் செய்வதற்கு சிலர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறியிருந்தார்.**



# பொருளாதாரம் இறுதிமூச்சு இழுக்கும் வரை காத்திருக்கும் அரசியல் சுயநலக் குழுக்கள்!






## நாட்டை அதலபாதாளத்திலிருந்து மீட்டெடுப்பதற்கு அரசு முயற்சிக்கையில், பழைமைவாத பிற்போக்குவாதிகளால் முட்டுக்கட்டை முயற்சிகள்!



## இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான மனக்கசப்பை முடிவுக்குக் கொண்டுவந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நட்புறவு அணுகுமுறை; இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டுவதற்காக மீண்டும் களத்தில் ஜப்பான்!

நாடு எதிர்கொண்டுள்ள சவால்களிலிருந்து மீள்வதற்கு வெளிநாடுகளிலிருந்து கோரப்பட்டுள்ள உதவிகள், அவர்களிடமிருந்து வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் மற்றும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தக் கருத்தினை முன்வைத்திருந்தார்.

கடந்த சில வாரங்களாக தான் சந்தித்திருந்த வெளிநாட்டுத் தலைவர்களுடன் கலந்துரையாடிய விடயங்கள் மற்றும் அவர்களால் வழங்கப்பட எதிர்பார்த்திருக்கும் உதவிகள் குறித்து ஜனாதிபதி தனது உரையில் விரிவாகக் கூறியிருந்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட்ட இணக்கப்பாட்டை எட்டுதல், ஜப்பான்,இந்தியா மற்றும் சீனா ஆகிய கடன் வழங்கிய நாடுகளுடனும் தனியார் கடன் வழங்குனர்களுடனும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பொதுஉடன்பாட்டுக்கு வருதல், அதனைத் தொடர்ந்து, சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவாதத்துடன் நாணய நிதியத்திடமும் வேறு நாடுகளிடமும் கடனுதவி பெற்று பொருளாதாரத்தை பலப்படுத்துதல், பொருளாதார நிலைமையை பலப்படுத்திய பின்னர் அபிவிருத்திப் பொருளாதாரம் வரை பொதுத்திட்டமொன்றின் கீழ் நாட்டை உயர்ந்த நிலைக்கு கொண்டு வருதல் ஆகிய பிரதான நான்கு மூலோபாயத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே அரசாங்கம் காய்நகர்த்தல்களை மேற்கொண்டிருக்கிறது என்பது அவருடைய இந்த உரையின் மூலம் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைப் பெற்றுக் கொள்ளும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் முதலாவது கட்டத்தைத் தாண்டியுள்ளது என்றே கூற வேண்டும். அதிகாரிகள் மட்டத்தில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதுடன், இது குறித்த ஒப்பந்தம் விரைவில் இறுதிப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த கட்டமாக கடன்மறுசீரமைப்புக்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான அரசாங்கத்தின் முயற்சியில் ஜப்பான் உறுதுணையாக உள்ளது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

டன் ம று சீ ர மை ம ப் பு குறித்ததான பூர்வாங்க கலந்துரையாடல்கள் இந்தியாவுடன் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், சீனாவுடனான கடன்மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்க ஜப்பான் முன்வந்துள்ளது. கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை ஒருபுறம் தள்ளிவைத்து விட்டு மீண்டும் இலங்கைக்கு நேசக்கரம் நீட்டுவதற்கு ஜப்பான் முன்வந்திருப்பது இலங்கையைப் பொறுத்த வரையில் சிறியதொரு ஆறுதல் என்றே கூற வேண்டும்.

இதற்கான முழுமுயற்சிகளையும் எடுத்தமை ஜனாதிபதியையே சாரும். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்பட்டிருந்த சிறிய விரிசல் நீக்கப்பட்டு மீண்டும் பழைய நிலைக்கு நட்புறவு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் ஜப்பான் சர்வதேச வங்கி பிரதிநிதிகள் ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இலங்கையில் முதலீடுகளை அதிகரிப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாக இரு நிறுவன பிரதிநிதிகளும் அறிவித்ததாகவும், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிதா உடனான பேச்சுவார்த்தையில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாகவும் ஜனாதிபதி தனது பாராளுமன்ற உரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அத்துடன், 'கடன் மறுசீரமைப்புப் பணிகளில் மத்தியஸ்தராக ஜப்பான் முன்னணி வகிக்க உடன்பட்டிருப்பது நல்லதொரு அறிகுறியாகும். கடன் வழங்கிய நாடுகளின் மாநாட்டின் இணைத் தலைமைத்துவத்தை ஏற்குமாறு ஜப்பானிடம் கோர எதிர்பார்க்கிறேன். கடந்த காலத்தில் நடந்த சில நிகழ்வுகளால் ஜப்பானுடனான உறவில் விரிசல் ஏற்பட்டது.

ஜப்பானுடனான உறவை பலப்படுத்த கடந்த சில மாதங்களாக நாம் முயன்று வருகிறோம். ஜப்பான் தற்பொழுது பச்சைக்கொடி காட்டியிருக்கிறது. ஜப்பானுடன் முன்பிருந்த பலமான நட்புறவை மீண்டும் முழுமையாக உருவாக்க நாம் தொடர்ச்சியாக பாடுபட்டோம்' என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையைப் பொறுத்த வரையில் சர்வதேச அணுகுமுறையில் பாரியதொரு முன்னேற்றம் என்றே கூற வேண்டும். நாட்டில் யுத்தம் நிலவிய காலப் பகுதியில் நன்கொடையாளர்கள் மாநாடுகளை நடத்துவதற்கும், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் ஜப்பான் கணிசமான ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தது.

இதற்கான விசேட பிரதிநிதியாக யசூசி அக்காசி செயற்பட்டிருந்தார். பல தடவைகள் இலங்கைக்கு வந்து சென்றிருந்த அவர், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இருதரப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார். இவ்வாறான பின்னணியில் ஜப்பான் மற்றுமொரு நெருக்கடி சூழ்நிலையில் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஜப்பானுக்கு வழங்கவிருந்த அபிவிருத்தித் திட்டமொன்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டமையால் இரு நாட்டு உறவுகளில் தற்காலிகமான விரிசல் ஏற்பட்டிருந்தது. எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் இந்த நிலைமை மாற்றப்பட்டு மீண்டும் ஜப்பான் எமக்கு உதவ முன்வந்துள்ளது.



ஆசிய அபிவிருத்தி வங்கி 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்க முன்வந்திருப்பதாகவும், கடன்மறுசீரமைப்புக் குறித்து உரிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அதேசமயம், லண்டன் கிளப், பரிஸ் கிளப் போன்ற தனியார் கடன் வழங்குனர்களிடமிருந்தும் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுக்களையும் அரசாங்கம் ஆரம்பிக்கவிருப்பதாக ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் போன்று உள்நாட்டில் முன்னெடுக்க எதிர்பார்த்திருக்கும் விடயங்கள் குறித்தும் அவர் விளக்கமளித்திருந்தார். அதற்கமைய அடிப்படை நுகர்வுப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்தல், உள்நாட்டு உற்பத்திகளுக்கு உள்ள தடைகளை நீக்குவதன் மூலம் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை அதிகரித்தல், அந்நிய செலாவணியை அதிகரிப்பதற்காக அந்நிய செலாவணி கட்டுப்பாடுகளை சிறிதளவில் தளர்த்தல். அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை குறைப்பதற்கான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தல், மிகவும் சிறப்பான திறந்த பொருளாதார சந்தை பொறிமுறைகளை நடைமுறைப்படுத்தல், வைப்புகளுக்கான வட்டி வரையறைகளை ஏற்படுத்துவதன் மூலம் வட்டி வீதங்களை குறைந்தளவில் பேணுதல் போன்ற நடைமுறைகளைச் செயற்படுத்துவது அரசாங்கத்தின் திட்டம் என்பதையும் ஜனாதிபதி எடுத்துக் கூறியிருந்தார்.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதில் வரியின் பங்கு அதிகமாகும். எனவே, வரி வருவாயை அதிகரிப்பது தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளமை புலனாகிறது.

நாட்டை சரியான பாதையில் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிகளை எடுத்திருக்கும் நிலையில், அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகிறது. 'ஒரு சில குழுக்கள், உலகில் பல தசாப்தங்களுக்கு முன்னர் நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்கப்பட்ட கருத்தியல்களை இன்றோடு ஒப்பிட்டுப் பார்க்க முயற்சிக்கின்றன.

அக்காலத்தில், ஒரு சில அரசியல் குழுக்கள் உயிர் பிரியும் சந்தர்ப்பத்தில் உள்ள ஒருவருக்கு நீர்த் துளியொன்றை வழங்கி உயிரைக் காப்பாற்ற வேண்டாம் என்றே கூறினர். பட்டினியால் இறந்த பின்னர் சடலத்தை தோளிலே சுமந்துகொண்டு, நாடு பூராகவும் செல்லுமாறும் கூறினர். அந்தக் கருத்தியலை இன்றும் முன்னுதாரணமாகக் கொள்ள ஒரு சில குழுக்கள் முயற்சிக்கின்றன.

உயிர் பிரியும் தறுவாயில் உள்ள பொருளாதாரத்திற்கு மூச்சுக் காற்றை பெற்றுக் கொள்ள உதவி புரியாது, பொருளாதாரம் இறுதி மூச்சையும் இழக்கும் வரை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, மக்கள் பட்டினியால் இறக்கும் நிலைமை ஏற்பட்டால், சடலங்களின் மேல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். வரலாறு முழுவதும் உலகில் எங்கேயும் இவ்வாறான எதிர்பார்ப்புகள் நிறைவேறியது இல்லை என்பதை மட்டும் நான் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவ்வாறு அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டாலும் அந்த அதிகாரம் அதையும் விட துரதிர்ஷ்டவசமான முறையிலே நிறைவடையும்' என்பதையும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த விசேட உரை குறித்து கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு விவாதமும் நடைபெற்றது. இவ்விவாதத்தில் கலந்துகொண்ட பல ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கருத்துக்களுடன் இணங்கியிருந்தபோதும், நடைமுறை ரீதியில் காணப்படும் சவால்கள் குறித்து எதிர்க்கட்சியினர் விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

> “ ஜனாதிபதியின் சர்வதேச இராஜதந்திர அணுகுமுறைகளால் இலங்கையுடன் மீண்டும் வெளிநாடுகள் நெருங்கிய நட்புறவு

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# மக்கள் நலனை மனதில் கொள்ளாத உற்பத்தி நிறுவனங்களை வழிக்குக் கொண்டுவருவது எப்படி?

**சந்தைப் பொருளாதாரங்கள் குறித்த கலந்துரையாடல்களிலே நுகர்வோர் இறைமை (consumer sovereignty) என்ற சொற்றொடர் அடிக்கடி உச்சரிக்கப்படுவதை அவதானித்திருப்போம். சந்தையின் அடிப்படையில் இயங்கும் பொருளாதார முறைமையில் நுகர்வோனின் விருப்பு வெறுப்புக்கு அமையவே உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சேவைகளின் வகைகளும் அளவுகளும் தீர்மானிக்கப்படுகின்றன.**

நுகர்வோனே சந்தையில் அரசனாகக் (consumer is the king) கருதப்படுகிறான். உற்பத்தியாளன் பொருள்களையும் சேவைகளையும் சந்தையில் நிரம்பல் செய்தாலும் நுகர்வோன் அவற்றைக் கொள்வனவு செய்யாது புறக்கணித்தால் உற்பத்தியாளன் மிகப் பெரிய நட்டத்தை எதிர்நோக்க நேரிடும். எனவே தான் சந்தைப் பொருளாதாரங்களில் இயங்கும் உற்பத்தி செய்து சந்தைப் படுத்தம் விற்பனை நிறுவனங்கள் நுகர்வோன் அல்லது வாடிக்கையாளன் திருப்தி (consumer/ customer satisfaction) என்பதற்கு அதிகூடிய முக்கியத்துவம் கொடுக்கின்றன.

அதேபோல நெடுவாழ்வுப்பொருள்கள் மீதான நுகர்வோன் திருப்தியைத் தொடர்ந்து பேணி அவரைத் தமது நிறுவனத்தின் பொருள்களைத் தொடர்ந்து கொள்வனவு செய்யும் பொருட்டு விற்பனைக்குப் பிந்திய சேவை வசதிகளையும் நிறுவனங்கள் வழங்கும். அதேபோல் சேவைகளை விற்பனை செய்யும் நிறுவனங்கள் தமது சேவைகளில் வாடிக்கையாளர்களின் திருப்தி குறித்த பின்னூட்டல்களை பெற்று அதனடிப்படையில் தமது சேவைகளை வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்தும் வண்ணம் மேம்படுத்திக் கொள்கின்றன. சிறிய நிறுவனமோ பெரிய நிறுவனமோ வாடிக்கையாளரைத் திருப்திப் படுத்த முடியாதாயின் சந்தையில் நிலைத்திருக்க முடியாது என்பதே யதார்த்தமாகும். ஆனால் நடைமுறை உலகில் நுகர்வோனின் முக்கியத்துவம் சரியாக நாம் மேலே குறிப்பிட்டது போல அவதானிக்கப்படுகிறதா? இலங்கையில் இந்த நிலைமை உள்ளதா? இவை முக்கியமான கேள்விகளாகும். உதாரணமாக இலங்கையை சுற்றுலா உலகின் சொர்க்கபுரி என்றும் இங்குள்ளது போல வேறெங்கும் இல்லை என்றும் வினோதமா ன பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின் றன. ஆனால் இங்குவரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் சேவைகள் திருப்திகரமானவையாக உள்ளனவா அவர்களது அனுபவங்கள் எவ்வாறு அமைந்தன என்பது பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டு அவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதனடிப்படையில் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைக்கிடப்படுவதாக அறிய முடியவில்லை. நான் இதைத்தான் கொடுப்பேன் நீ இதைத்தான் அனுபவிக்க வேண்டும் என்னும் பாணியிலான சேவை வழங்கும் முறைமையினையே இங்கு காண முடிகிறது. உலகின் பல நாடுகள் இந்த நிலைப்பாட்டிலிருந்து கடந்து வந்து விட்டன. ஆனால் இலங்கையால் இதிலிருந்து இன்னமும் விடுபட முடியவில்லை.



**பணவீக்க காலத்தில் விலைகள் அதிகரிக்கின்ற நிலையிலும் கட்டாயம் அவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அதனால் விற்பனையாளர்கள் தாம் விரும்பியபடி விலைகளை அதிகரிக்க முடியும். அத்தியாவசிய மருந்து வகைகள், அரிசி, இறைச்சி, மீன், முட்டை உள்ளிட்ட உணவுப் பொருள்கள், பெற்றோலியப் பொருள்கள், நீர், மின்சாரம் போன்றன இவ்வகையில் உள்ளடக்கப்படுகின்றன.**

நுகர்வோனின் இறைமையானது பணவீக்க காலத்தில் மோசமாகப் பாதிக்கப்படும். தாம் விரும்பிய பொருள்களை அவர்களால் முன்புபோல் கொள்வனவு செய்ய முடியாது. அதேபோல கொள்வனவு செய்யப்படும் பொருள் அத்தியாவசியமான பொருளாக இருப்பினும் நுகர்வோர் இறைமை பாதிக்கப்படும். ஏனெனில் பணவீக்க காலத்தில் விலைகள் அதிகரிக்கின்ற நிலையிலும் கட்டாயம் அவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அதனால் விற்பனையாளர்கள் தாம் விரும்பியபடி விலைகளை அதிகரிக்க முடியும். அத்தியாவசிய மருந்து வகைகள், அரிசி, இறைச்சி, மீன், முட்டை உள்ளிட்ட உணவுப் பொருள்கள், பெற்றோலியப் பொருள்கள், நீர், மின்சாரம் போன்றன இவ்வகையில் உள்ளடக்கப்படுகின்றன. இவற்றின் விலைகளை பணவீக்க காலத்தில் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் அற்ற நிலையில் தமது இஷ்டப்படி விற்பனையாளர் அதிகரிப்பர். உற்பத்தி செலவில் ஏற்படும் அதிகரிப்பு காரணமாக மற்றும் எரிபொருள் விலையேற்றம் காரணமாக போக்குவரத்துச் செலவில் ஏற்படும் அதிகரிப்பு மற்றும் அரசாங்கம் வரிகளை அதிகரித்ததால் ஏற்படும் தாக்கம் என்பவற்றால் தாம் விலைகளை அதிகரிக்க நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளதாகக் காரணங் கூறுவர். உண்மையில் மேற்படி காரணங்களால் செலவுகள் அதிகரித்த போதிலும் விலை அதிகரிப்பின் சதவீதம் அதைவிடக் கூடுதலாகக் காணப்படுவதே வழமை.

பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் போது விற்பனையாளர்கள் தாம் பழையவிலையில் பெற்ற பொருள்களையும் புதிய விலைக்குறியீடுகளை ஒட்டி அதிக இலாபம் பெறலாம். நடைமுறையில் ஒரு சில நேர்மையான விற்பனை நிறுவனங்களே பழைய விலையில் கொள்வனவு செய்த பொருள்களை பழைய விலைகளில் விற்பனை செய்வதைக் காண்கிறோம். இவ்வாறான நிலைமையில் நுகர்வோர் தமது கொள்வனவு நடத்தையை மாற்றியமைக்க வேண்டும் என்பது மிக முக்கியமானது. குறிப்பாக உணவுப் பொருள் கொள்வனவு குறித்த விடயங்களில் மிகக் கவனமாக மாற்றங்களைச் செய்ய வேண்டும். இப்போதெல்லாம் இறைச்சி, முட்டை மற்றும் மீன் போன்ற புரதச் சத்துள்ள உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. ஆனால் இதே சத்துக்களைக் கொண்ட மாற்றீடுகளை தற்போதைய நெருக்கடி நிலை மாற்றமடையும் வரையிலாவது கொள்வனவு செய்வது நல்லது. பயறு, கௌபி போன்ற தானியங்களின் சில்லறை விலைகளும் மிக உயர்ந்துள்ளன. ஆயினும் நமது உணவுக் கூடையில் தற்காலிக மாற்றங்களைச் செய்வதன் மூலம் ஓரளவு விலை அதிகரிப்புகளில் இருந்து பாதுகாப்புத் தேடலாம். வைத்தியர்களும் போஷாக்கு நிபுணர்களும் இதுபற்றி இப்போது பரவலாக மக்களைத் தெளிவுபடுத்தி வருகின்றமை பாராட்டுக்குரியது. பால் மற்றும் பால் உற்பத்திப் பொருள்கள் இப்போது யானை விலை குதிரை விலையில் விற்கப்படுகின்றன. பால் உற்பத்தியாளர்களோ ஒரு லீற்றர் பாலுக்கு வெறும் நூற்றெட்டு ரூபா மாத்திரமே வழங்கப்படுவதாக அங்கலாய்க்கின்றனர். ஒரு லீற்றர் பைக்கற்றில் அடைக்கப்பட்ட பால் 525 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. அவ்வாறாயின் அதில் இடைத்தரகர்களே கொள்ளை இலாபம் ஈட்டுகின்றனர். முடிந்த வரையில் பால் உற்பத்தியாளர்கள் அருகில் உள்ள கிராமங்கள் நகரங்களுக்கு பாலை விற்பதன் மூலம் இரு தரப்பினரும் நன்மையடையலாம். உற்பத்தியாளர்களுக்கு சங்கங்கள் இருப்பது போல மேலை நாடுகளிலே நுகர்வோர் சங்கங்கள் உள்ளன அவை விலைகள் கட்டுக்கடங்காமல் மோசமாக அதிகரிப்பதை தடுக்கும் வல்லமை கொண்டவை. இலங்கையில் நுகர்வோர் சங்கங்கள் இல்லாவிடினும் இப்போது உள்ள சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி நுகர்வோரின் நலன்களைப் பாதிக்கும் விலையதிகரிப்புகள் குறித்து சமூகத்தை தெளிவுபடுத்தி பொது அபிப்பிராயத்தை உருவாக்கலாம்.

அண்மையில் விசுக்கோத்துக் கம்பனிகள் விசுக்கோத்து விலைகளை அதிகரித்தபோது அதற்கெதிராக பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட அபிப்பிராயத்தினால் அவற்றின் விற்பனைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இப்போது விசுக்கோத்துக் கம்பனிகள் தமது ஒரு சில விசுக்கோத்து வகைகளின் விலைகளைக் குறைத்து அவற்றை வாங்குமாறு காலில் விழுந்து கதறாத குறையாக விளம்பரம் செய்கின்றன. நுகர்வோர் கூட்டாக இயங்கினால் இது போன்ற நியாயமற்ற விலை அதிகரிப்புகளை தடுக்கலாம். வாங்க ஆளில்லாவிடில் எந்தக் கொம்பனாலும் இறங்கி வந்துதான் ஆக வேண்டும்.



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# ஈரானில் தொடரும் கிளர்ச்சிகளும் அமெரிக்க இஸ்ரேலிய அரசியலும்!

**உலகின் புராதன வரலாறு முழுவதும் நாகரீகங்களாலும் அவற்றுக்கிடையிலான மோதலாகவுமே நகர்ந்துள்ளது. இன்றும் அத்தகைய வரலாற்றுக்குள் மூழ்கியுள்ள தேசங்களும் மீண்டெழ முடியாத ஆட்சியாளர்களையும் காணமுடிகிறது. அதேபோல் அத்தகைய நாகரீகங்களால் பிற தேசங்களை மூழ்கடிக்கும் அதிகாரப் போட்டியை முதன்மைப்படுத்தும் தேசங்களையும் வல்லரசுகளையும் காணமுடிகிறது. மேற்குலகத்திற்கும் கீழைத்தேசத்திற்குமான மோதல் எவ்வாறுள்ளதோ அவ்வாறே இஸ்லாமிய தேசங்களுக்கும் மேற்குலகத்திற்குமான மோதல் நிகழ்ந்து வருகிறது. இஸ்லாமிய நாகரீகத்திற்கு எதிராக எழுந்த பயங்கரவாத போர் மேற்குலகத்தின் ஆக்கிரமிப்புக்கான இன்னோர் வடிவமாக காணப்பட்டது. அதன் நீட்சியாகவே மேற்காசியா முழுவதும் போரும் படையெடுப்பும் முரண்பாட்டுக்கான அடிப்படையும் காணப்படுகிறது. இஸ்லாமிய நாகரீகத்தின் பிறப்பிடமான ஈராக்கினை அழித்தொழித்தது போல் ஈரான் மீதான நடவடிக்கையை முதன்மைப்படுத்தும் மேற்குலகம் பொருளாதார ரீதியிலும் இராணுவ மற்றும் அணுவாயுத அடிப்படையிலும் அதிக நெருக்கடியை ஈரானுக்கு ஏற்படுத்திவருகிறது. ஈரானும் கடந்த காலத்தில் அதிகம் தப்பிப்பிழைத்த போதும் சமகாலத்தில் உள்நாட்டில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க முடியாது திணறிவருகிறது. இக்கட்டுரையும் ஈரானில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியையும் அதன் அரசியல் விளைவுகளையும் தேடுவதாக உள்ளது.**

17.09.2022 ஈரானிய பொலிஸாரால் ஹிஜாப் சரியாக அணியவில்லை என்ற குற்றச்சாட்டில் தடுத்துவைக்கப்பட்ட போது நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் கோமா நிலையிலிருந்த 22 வயதுப் பெண்ணான மாசா அமினி என்ற இளம் பெண் உயிரிழந்த சம்பவம் ஈரான் முழுவதுமாக பெண்களை போராட்டத்துக்குத் தூண்டியது. ஈராக்கின் வடமேற்கிலுள்ள சாகீஸ் நகரைச் சேர்ந்த குர்து இனப் பெண்ணான அமினி ஹிஜாப் சரியாக அணியாததற்காகவும் தளர்வான உடை அணிந்ததற்காகவும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் போது தாக்குதலில் கோமா நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார். அமினியின் ஊரான சாகீஸ்ஸில் தொடங்கிய போராட்டம், அதனை அடுத்து ஈரான் முழுவதும் பெண்கள் அமினியின் படுகொலைக்கு நீதி கேட்டுப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் ஈரானின் தலைநகரான தெஹ்ரானை மையப்படுத்தி போராட்டம் நிகழ்ந்தாலும் பின்னர் நாடு முழுவதும் பரவியது. இஸ்லாமியச் சட்டங்களை கடுமையாக அமுல்படுத்திவரும் ஈரானில் பெண்கள் மற்றும் சிறுமிகள் ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஈரான் ஓர் இஸ்லாமிய நாடு என்ற வகையில் அதன் சட்டதிட்டங்கள் தனித்துவமானவையாக அமைந்திருப்பதோடு மேற்குலகத்திற்கு எதிராக இஸ்லாமிய நாகரீகத்தை பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படை எண்ணத்துடன் செயல்படும் நாடாகவும் ஈரான் விளங்குகிறது. 1979ஆம் ஆண்டு ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சியானது அமெரிக்காவுக்கு எதிரானதாக அமைந்திருந்ததுடன் அமெரிக்கா ஈரானிய மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டது. அன்றிலிருந்து அமெரிக்கா பாரிய முயற்சிகள் முன்னெடுத்த போதும் ஈரானிய மண்ணில் காலூன்ற முடியாத நிலை காணப்படுகிறது. ஈரானும் அமெரிக்காவின் அனைத்து நகர்வுகளையும் முறியடித்துக் கொண்டே இருகிறது. தற்போது கூட இஸ்லாமியப் பெண்களது போராட்டம் ஈரானிய ஜனாதிபதி இப்ராகிம் ரைசி இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் தூண்டுதலினாலேயே நிகழ்வதாக குற்றம் சாட்டியுள்ளார். ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட 133 பேர் இதுவரை கொல்லப்பட்டுள்ளதாகவும் 06.10.2022 அன்று மேலும் ஒரு பெண் அமினி கொல்லப்பட்டது போன்றே கொல்லப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளது.

ஈரானிய மக்களது போராட்டத்திற்கான அடிப்படைக் காரணங்களை தேடுவதென்பது புதிய ஜனாதிபதி ரைசி பதவியேற்ற காலம் முதல் அவதானித்தல் அவசியமானது. ஏனெனில் இப்ராகிம் ரைசி அடிப்படையில் மனித உரிமையை மதித்த தலைவராக மட்டுமன்றி இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் தலிபான்களுக்கு ஒப்பானவர் என்ற பெயரை கொண்டவர்.



அத்துடன் அமெரிக்கா உட்பட மேற்குலகத்திற்கு விரோதமான கொள்கையைக் கொண்டவர். அணுவாயுதத்தை உருவாக்குவதிலும் ஈரானை மேற்காசியாவில் வலுவான அரசாக மாற்றவும் கூடியவர் என்ற அடிப்படையில் அபாயமானவராக விளங்குகிறார். கடந்த காலங்களில் அமெரிக்காவும் மேற்கு அணியும் ஈரானுக்கு எதிராக முன்வைத்த நெருக்கடிகள் அனைத்தையும் எதிர்கொண்டதுடன் அணுவாயுத பரிசோதனையை மேற்கொள்ளும் திறனில் ஈரான் முன்னோக்கி நகர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அணுவாயுத முகவர் அமையம் அறிக்கையிட்டுள்ளது. ஈரான் அணுவாயுத தாயாரிப்புக்கான யூரேனியத்தை செறிவூட்டும் திறனை ஈரான் கொண்டுள்ளதாக அவ்வமையம் தெரிவித்துள்ளது. இதுவே பிரதான பிரச்சினையாக இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் பலதடவை பல தாக்குதலை மேற்கொண்டு ஈரானின் அணுவாயுத பரிசோதனையை முடிவுக்கு கொண்டுவர முயன்றது. ஈரானின் இராணுவத் தளபதி மட்டுமன்றி அணு விஞ்ஞானியையும் தாக்குதலில் அழித்துள்ளது. ஆனால் ஈரானோ அதனையும் தாண்டி தனது அணுவாயுத பரிசோதனையை திட்டமிட்டபடி நகர்த்த முனைகிறது. தற்போது ரஷ்யாவுடனும், சீனாவுடனும் இணைந்து அணுவாயுத பரிசோதனையை மேற்கொள்ள முனைகிறது. சீனாவைக் காட்டிலும் ஈரான் அணுவாயுத விடயத்தில் ரஷ்யாவை அதிகம் தங்கிநிற்க முயலுகிறது. இஸ்ரேலுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான மேற்காசியாவைப் பொறுத்த கொள்கையே அதற்கான அடிப்படையாக தெரிகிறது. ரஷ்யா இஸ்ரேலை பகைத்துக் கொண்டாலும் ஈரானைக் கைவிடாது என்ற கொள்கையை ஈரான் நன்கு விளங்கி வைத்துள்ளது. இதுவே மேற்குக்கும் ஈரானுக்குமான நெருக்கடிக்கு காரணமாகும். அதாவது ஈரானின் அணுவாயுதப் பரிசோதனையை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்பதே அமெரிக்க-இஸ்ரேல் கூட்டின் உபாயமாகும்.

குறிப்பாக ஈரானின் பொருளாதார நெருக்கடியை முழுமையாக உருவாக்க முயன்ற அமெரிக்கா அதற்கான போராட்டங்களை ஈரானுக்குள் அதிகரித்தது. அதற்கான ஈரானின் அணுகுமுறையை ஈரான் வெற்றிகொள்ள ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா மீண்டும் அதிகரித்துள்ளது. தங்களது அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க போராடிவரும் ஈரானிய குடிமக்களுக்கும் துணிச்சல் மிக்க பெண்களுக்கும் அமெரிக்கா என்றும் துணைநிற்கும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் செய்தி வெளியிட்டுள்ளது. ஏற்கனவே விதிக்கப்பட்ட பொருளாதார தடைகளுக்கு மேலதிகமாக ஈரானின் உள்துறை, தகவல் தொடர்பு, மற்றும் சட்ட அமைச்சுகளுக்கு பொருளாதார தடைவிதித்துள்ளது. இதன் மூலம் ஈரானியப் பொருளாதார இருப்பினை முழுமையாக அழித்தொழிக்க முடியும் எனவும் ஈரானிய பாதுகாப்புக் கட்டமைப்பை இல்லாது செய்ய முடியுமெனவும் அமெரிக்கா திட்டமிடுகிறது.

இத்தகைய சூழலில் போராட்டம் பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் தொழில் நிலையங்களையும் நோக்கி விஸ்தரிக்கப்படுவதாகவும் ஹிஜாப் அணிவதை கைவிடுவதாகவும் அதற்கு எதிரான போராட்டமாக மாறிவருவதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இஸ்லாமிய மரபுகளைக் கொண்ட ஈரானியர்கள் மட்டுமல்ல மேற்காசிய அராபியர்கள் தமது பண்பாட்டை முழுமையாக மாற்றிக் கொள்வார்களா என்பது பிரதான கேள்வியாகும். ஹிஜாப் என்பதை அணிவதில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள கட்டுப்பாடுகளையே அந்த மக்கள் நிராகரித்துவருகின்றனர். அத்தகைய கட்டுப்பாட்டினால் அமினி கொல்லப்பட்டதற்கு நியாயம் கேட்கிறார்களே அன்றி தமது பண்பாட்டையும் மரபையும் நிராகரிப்பதற்கானதாக அவர்களது போராட்டம் அமையப் போவதில்லை. அத்தகைய மரபுக்குள்ளேயே ஈரானியர்களது அரசியல் இருப்பு காணப்படுகிறது. அமெரிக்காவையும் இஸ்ரேலையும் முன்னிறுத்துகின்ற நிலையை ஈரானிய அரசாங்கம் பலமானதாக முன்னெடுக்குமாயின் போராட்டத்தின் கனதி பலவீனமடையும். அது மட்டுமன்றி அத்தகைய போராட்டங்களுக்கு சரியான நியாயத்தை வழங்க முன்வருவதென்பது பண்பாட்டையோ மரபையோ நிராகரிப்பதாக அமையாது. அதனை அந்த நாட்டு மக்கள் அதாவது அராபியர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை. மாறாக பொலிஸாரின் அடாவடியையும் அரசாங்கத்தின் ஹிஜாப் மீதான அதீத கட்டுப்பாடுகளையும் நிராகரிப்பதாகவே போராட்டம் அமைந்துள்ளது. இதற்கு பதிலாக மேற்கு ஊடகங்களும் அதன் பிரதி ஊடகங்களும் குறிப்பிடுவது போல் ஈரானிய மக்கள் தமது பண்பாட்டை நிராகரிக்கும் போராட்டத்தை முன்னெடுப்பதாக கருத முடியாது.

எனவே ஈரானிய மக்கள் கிளர்ச்சிக்கு பின்னால் பொருளாதாரச் சுமை மட்டுமன்றி அடிப்படைவாதத்தை அதிகம் கொண்டுள்ள கட்டுப்பாடான ஆட்சியை தகர்ப்பது அதில் காணப்படும் அபாயமான விடயங்களை முடிவுக்கு கொண்டுவருவதென ஈரானிய மக்கள் போராடுகின்றனர்.

(17ஆம் பக்கம் பார்க்க)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






## மேஷம்

புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிநாதன் மற்றும் அட்டமாதிபதியாக விளங்கும் செவ்வாய் 3ம் இடத்தில் சஞ்சரிப்பதால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். முக்கிய புள்ளிகள் உங்களுக்கு வழிகாட்டுவார். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களின் பழக்கம் ஏற்படும். வழக்குகள் சாதகமாகலாம். அதே நேரத்தில் செவ்வாயின் பார்வை சனியின் மீது பதிகிறது. பெரிய பாதிப்புகள் இருக்காது. நினைத்தது நிறைவேறாவிட்டாலும் நடப்பது நன்மையாகவே அமையும்.

## ரிஷபம்

புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 2ல் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கை துணைக்கும் வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வரலாம். விரயங்கள் அதிகரிக்கும் என்பதால் அதனை சுப விரயங்கள் ஆக மாற்றிக் கொள்ளுங்கள். துணிவும் தன்னம்பிக்கையும் தேவைப்படும். தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு அவசியம். மிதுனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் மகரத்தில் சஞ்சரிக்கும் சனியை பார்க்கிறார். இதனால் தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படலாம். பூர்வீக சொத்துப் பிரச்சினை அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு கூடும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

## மிதுனம்

உங்கள் ராசிக்கு 6 ,11க்கு அதிபதியான செவ்வாய் புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) உங்கள் ராசிக்கு வருகிறார். இதனால் கடன் சுமை அதிகரிக்கும். உங்களிடம் ஒப்படைத்த பொறுப்புகளை மற்றவர்களிடம் கொடுக்கவேண்டாம். அவர்களால் அதை நிறைவேற்ற முடியாமல் பெரும் பிரச்சினையில் கொண்டு வந்து விடும். உங்கள் ராசியில் இருக்கும் செவ்வாய் மகரத்தில் உள்ள சனியை பார்ப்பதால் மிக மிக கவனத்துடன் செயல்பட வேண்டும். குறிப்பாக ஆரோக்கியத்தொல்லை, அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவு, கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாத நிலை உருவாகும், விரயாதிபதி செவ்வாய் சனியை பார்ப்பதால் விரயங்கள் கூடும். எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது.

## கடகம்

புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகள் வழியில் விரயம் ஏற்படலாம். மிதுனத்தில் உள்ள செவ்வாய் மகரத்தில் உள்ள சனியை பார்ப்பதால் கடல் தாண்டி செல்லும் யோகம் தடைப்படலாம். வாழ்க்கைத்துணையோடு போராட்டங்களும் கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகளும் ஏற்படும். இக்காலத்தில் தெய்வ வழிபாடு அவசியம் தேவை.

## சிம்மம்

புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) மிதுன ராசியில் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் நல்ல நேரம் தான். பூமி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். வீடு கட்டுவது, கட்டிய வீட்டை பழுது பார்ப்பது என்பனவற்றில் கவனம் செலுத்துவீர்கள். செவ்வாய் சனி பார்வை உள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. உத்தியோகத்தில் மாற்றங்கள் ஏற்படும். தொழிலில் நம்பிக்கைக்குரியவர்கள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

## கன்னி

புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 10ம் இடத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் புதிய தொழில் வாய்ப்பு கைகூடும். கடன் சுமை ஓரளவு குறையும். செவ்வாய் பூமிகாரன் என்பதால் வீடு கட்டுவது வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். செவ்வாய், சனி பார்வை இருப்பதால் ஒரு சில சமயங்களில் மனக்குழப்பம் அதிகரிக்கலாம். பணப் புழக்கத்திலும் தடைகள் வரலாம். 6க்கு அதிபதியான சனியை 8க்கு அதிபதியான செவ்வாய் பார்ப்பதால் விபரீத ராஜயோக அடிப்படையில் ஒரு சில காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

## துலாம்

புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் கூடும். கடன் சுமை குறையும். அதிகார வர்க்கத்தில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். மிதுன செவ்வாய் மகர சனியை பார்ப்பதால் பய உணர்ச்சி ஏற்படும். இந்த காலகட்டத்தில் எதிர்மறை சிந்தனைகளை வளரவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இக்காலத்தில் வரும் திருமணப் பேச்சுக்கள் நிலையானதாக இருக்காது. நீங்கள் விழிப்புணர்ச்சியுடன் இருந்தாலும் ஒரு சில ஏமாற்றங்களை சந்திக்க தான் வேண்டும்.

## விருச்சிகம்

புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிநாதன் மற்றும் 6ம் இடத்திற்கு அதிபதியாக விளங்குபவர் செவ்வாய். 6க்கு அதிபதி 8ல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகம் செயல்படும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். குரு பார்வையும் உங்கள் ராசியில் பதிவதால் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இக்காலத்தில் சனியை செவ்வாய் பார்க்கும் சூழல் ஏற்படுவதால் எதிர்மறை சிந்தனைகள் அடிக்கடி வந்து அலைமோதும். மன குழப்பம் உருவாகும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ளலாம். எதையும் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்து செயற்படுங்கள்.

## தனுசு

புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் செல்லும் பொழுது பிள்ளைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். பூமியால் லாபம் உண்டு. இக்காலத்தில் செவ்வாய் பார்வை சனி மீது பதிவதால் திடீர் பிரச்சினைகள் பலவும் தலைதூக்கும். உடல் நலத் தொல்லைகள் ஏற்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. சொத்துகளால் சில பிரச்சினை வரலாம். துணிந்து எந்த முடிவும் எடுக்க இயலாது.

## மகரம்

புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 6ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது உடல் நலம் சீராகும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். கடன் சுமை குறைய வழி பிறக்கும். தொழிலில் லாபம் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் இதுவரை கிடைக்காத ஊதிய உயர்வு இப்பொழுது தானாக வந்து சேரும். மிதுனத்தில் உள்ள செவ்வாய் மகரத்தில் உள்ள சனியை பார்ப்பதால் உறவினர்களிடையே பகை உருவாகலாம். உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்து பேசுபவர்களை இனம் கண்டு கொள்ளுங்கள். நேர்மறை சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். இடம் பூமி வாங்குவதில் இருந்த தடை அகலும். உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. ஊர்மாற்றம் இட மாற்றம் வருவதற்கான அறிகுறிகள் தென்படும்.

## கும்பம்

புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் பூர்வபுண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது புதிய பாதை புலப்படும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பாகப் பிரிவினை சுமுகமாகும். தொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரலாம். இக்காலத்தில் மிதுனத்தில் உள்ள செவ்வாய் மகரத்தில் உள்ள சனியைப் பார்க்கிறார். இதனால் விரயங்கள் கூடும். பயணங்கள் அதிகரிக்கும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்படலாம். கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு கூட்டாளிகளால் மனக்கலக்கம் ஏற்படும். ஆற்றல் மிக்கவர்கள் அருகில் இருந்தாலும் அவர்களின் உதவி கிடைக்காது. இட மாற்றம், ஊர் மாற்றம் உத்தியோக மாற்றம் போன்றவை எதிர்பாராத விதத்தில் வந்து சேரும்.

## மீனம்

புரட்டாசி 22 ஆம் திகதி (09/10/2022) மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 2 ,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 4ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பத்தில் நல்ல சம்பவங்கள் ஒவ்வொன்றாக நடைபெறும். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் மாறும். மிதுனத்தில் உள்ள செவ்வாய் மகரத்தில் உள்ள சனியை பார்ப்பதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. இடம், பூமி விற்பனையால் சில பிரச்சினைகள் ஏற்படும். உடன்பிறப்புகளை சார்ந்து இருப்பவர்கள் அவர்கள் மனதை புரிந்து கொண்டு நடப்பது நல்லது. குடும்பத்தில் முடிந்துபோன பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கலாம்.

---




சீரங்கன் பெரியசாமி
ஓய்வுநிலை பணிப்பாளர்,
விவசாயத் திணைக்களம்

# வீட்டுத் தோட்டம்

## மண் வளத்தை பாதுகாப்பது எப்படி?

எந்தவொரு பயிர்ச்செய்கையையும் மேற்கொள்வதற்கு மண் மிக முக்கியம். மண்ணில்லாத வேளாண்மை போன்றவற்றைத் தவிர ஏனைய அனைத்து வகையான பயிர்ச் செய்கைகளுக்கும் மண் மிகவும் முக்கியமானதாகும். ஒரு வீட்டுத்தோட்டத்தைப் பராமரிக்கும் போது மிக முக்கியமாக கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்களில் ஒன்று மண்ணின் நிலைபேறான உற்பத்தித்திறனைப் பராமரித்துக் கொள்வதாகும். அதாவது நமது தோட்ட மண்ணானது தொடர்ச்சியாக பயிர்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும். நம்மில் பலர் வீட்டுத்தோட்டங்களைப் பராமரிக்கும் போது ஏற்படக் கூடிய முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று மண்ணில் பயிர்கள் வளர்வதற்கு ஏற்ற சூழல் இல்லாமையால் எதிர்பார்க்கும் பலாபலன்களைப் பெற்றுக் கொள்ள முடியாது போவதாகும். எனவே மண்ணை பயிர்கள் வளரக்கூடிய ஒரு ஊடகமாகப் பராமரிக்க வேண்டியது அவசியம். எனவேதான் இக்கட்டுரைத் தொடரில் மண் பற்றிய சில விபரங்களை இன்று நாம் உங்களுக்குத் தருகின்றோம்.

மண் என்பது பல்வேறு பருமனைக் கொண்ட கனிப்பொருட் துணிக்கைகள், சேதனப் பொருட்கள், உயிர்

வாழும் உயிரினங்கள் ஆகியவற்றைக் கொண்டதொரு கலவை ஆகும். பேராசிரியர் சுல்தான் அகமட் குறிப்பிடுவது போன்று உண்மையில் மண் என்பது ஓர் உயிரினம் ஆகும். ஓர் உயிர் வாழும் அங்கியின் சகல பண்புகளும் மண்ணிலும் காணப்படுகின்றது. எனவேதான் மண்ணையும் ஓர் உயிருள்ள ஜீவன் போன்று பராமரிக்க வேண்டியது நமது பொறுப்பாகும். எனவே காய்கறிகளையோ அல்லது ஏனைய பயிர்களையோ பயிர்செய்யும் போது எதிர்கொள்ளும் மண் தொடர்பான பிரச்சினைகளையும், அவற்றிற்கான சில தீர்வுகளையும் நாம் தருகின்றோம். வளமான மண்ணானது பயிர்களுக்கு வழங்கும் சில நன்மைகளை சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிட முடியும்:

- ★ தாவர வேர்களைத் தாங்கி நிற்பதற்கான பௌதீகக் கட்டமைப்பை வழங்குகின்றது.
- ★ தாவரங்கள் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான போசனை களையும், நீரையும் பிடித்து வைத்திருந்து பயிர்களுக்குத் தேவையான போது அவற்றை வழங்குகின்றது.
- ★ ஆரோக்கியமான தாவர வேர்கள் சுவாசிப்பதற்கு அவசியமான ஒட்சிசனை வழங்க அல்லது காற்றோட்டம், போசணைகளை பயிர்கள் உறிஞ்சுதல் ஆகியவற்றிற்கு மண்ணிலுள்ள துளைகள் உதவுகின்றன.
- ★ மண்ணில் வாழும் உயிரினங்கள் நிலைபேறாக நிலைத்திருக்கவும், போசணைக் கூறுகள் சிதைவடையும் போது அவற்றைப் பயிர்களுக்கு வழங்கவும் சேதனப் பொருட்கள் உதவுகின்றன.
- ★ மண்ணானது தாவர ஆரோக்கியத்தை ஊக்குவிப்பதோடு, நோய்களை எதிர்த்து வளரவும் பயிர்களுக்கு உதவுகின்றன.

எமது தோட்டங்களில் பயிரிடும் போது நாம் எதிர்பார்ப்பது போன்று சிறந்த பயன்களை பயிர்கள் தராது போகலாம். இதற்கு பல காரணங்களைக் குறிப்பிடலாம். சில வேளைகளில் நீர் முறையாக வடிந்து செல்லாது தேங்கி நிற்கலாம், பயிர்கள் செழிப்பாக வளராதிருக்கலாம், போதியளவில் மேல் மண் இல்லாதிருக்கலாம், மண்ணின் ஆழம் குறைவாகக் காணப்படலாம், மண்ணில் நோய்கள் அல்லது பீடைகள் போன்றன காணப்படலாம், மண் இறுக்கமாகக் காணப்படுவதனால் காற்றோட்டம் குறைவாகக் காணப்படலாம். இவ்வாறான பிரச்சினைகளை இனங் கண்டு, அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். பொதுவாக மண்ணின் பண்புகளானது தோட்டத்திற்கு தோட்டம், இடத்திற்கு இடம் அல்லது வலயத்திற்கு வலயம் மாறுபடும். இதனையும் கவனத்திற் கொள்வது அவசியமாகும். பெரும்பாலான மரக்கறிகளையும், பழங்களையும் பயிர் செய்வதற்காக சேதனப் பொருட்கள் அடங்கிய வளமான மண்ணைப் போன்றே, நீர் நன்கு வடிந்து செல்லும் மண்ணும் அவசியமாகும். ஆனால் அவ்வாறான மண் எமக்கு எப்போதும் கிடைக்காது. எனவே அதற்கேற்ப நாம் காய்கறிகளைப் பயிரிட வேண்டும். பொதுவாக மண்ணில் ஏற்படக் கூடிய சில பிரச்சினைகளையும் அவற்றை எவ்வாறு தீர்த்துக் கொள்ள முடியும் என்பதையும் இனி கவனிப்போம்.

### மண்ணில் நீர் நன்கு வடிந்து செல்ல வேண்டும்

ஓர் ஆரோக்கியமான மண்ணில் நீர் நன்றாக வடிந்து செல்ல வேண்டும். நீர் தேங்கி நிற்குமாயின் பல பிரச்சினைகள் ஏற்படலாம். மண் மேற்பரப்பில் நீர் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தேங்கி நிற்கலாம். தோட்டத்தின் இயற்கையான அமைவிடத்திற்கமைய மண்ணின் மேற்பரப்பில் தொடர்ச்சியாக நீர் தேங்கி நிற்கலாம். இவ்வாறு தொடர்ச்சியாக நீர் தேங்கி நிற்பதற்கு பல காரணிகளைக் குறிப்பிட முடியும். முதலாவதாக மண்ணில் நீர் வடிந்து செல்லும் தன்மை குறைவாகக் காணப்படலாம். எல்லாவகையான மண்களிலும் நீரானது ஒரே வேகத்தில் வடியாது. உதாரணமாக களி மண் அதிகளவிற் காணப்படும் போது நீர் குறைவாகவே வடியும். எனவே நீர் தேங்கி நிற்கும். ஆனால் இதற்கு மறுதலையாக கற்பிட்டி போன்ற இடங்களில் அதிகளவிற் காணப்படும் மணல் மண்ணில் நீர் மிக விரைவாக வடிந்தோடி விடும். இவ்விரண்டு நிலைமைகளுமே பயிர்களிற்கு ஏற்றதல்ல. எனவே இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலைமையே மிகச் சிறந்ததாகும். பொதுவாக இருவாட்டி மண்ணில் நீரின் வடிந்தோடும் தன்மை திருப்திகரமான மட்டத்திற் காணப்படும்.

### மண்ணில் நீர் வடிந்து செல்லும் வேகத்தை அறிந்து கொள்ளல்

உங்கள் மண் களித்தன்மையானதா அல்லது மணற் தன்மையானதா என்பதை மண்ணை விரல்களிற்கிடையே நசித்து அறிந்து கொள்ள முடியும். பொதுவாக மணலை நசிக்கும் போது சொரசொரப்பை உணர்ந்து கொள்ள முடியும். இன்னொரு இலகுவான முறையிலும் இதனை நீங்கள் அறிந்து கொள்ள முடியும். இதற்காக முதலில் ஒரு மெகா குளிர்பான போத்தலில் மேற்பாகத்தை வெட்டி அகற்றிய பின்னர் அதன் அடிப்பகுதியில் சில துளைகளை இடுங்கள். இப் போத்தலில் முக்கால் பாகம் வரை உங்கள் தோட்ட மண்ணை நிரப்பிய பின் மண்ணின் மேல் நீரை ஊற்றவும். இந்நீரானது மிக விரைவாக துளைகளின் ஊடாக வடிந்து செல்லுமாயின் அம் மண்ணில் அதிகளவான மணல் காணப்படுவதை ஊகித்துக் கொள்ள முடியும். நீர் பல மணித்தியாலங்களாகியும் வடியாமற் காணப்படுமாயின் அம்மண் களித்தன்மையானது என்பதை ஓரளவு ஊகித்துக் கொள்ள முடியும்.


உரி மட்டைகளை அடுக்கி மண்ணரிப்பிலிருந்து பாதுகாக்கப்பட்ட ஒரு பாத்தி

உங்கள் தோட்ட மண் களித்தன்மையானதா, மணற் தன்மையானதா அல்லது நல்ல நீர் வடிப்பு கொண்ட இருவாட்டி மண்ணா என்பதை இன்னொரு வகையிலும் அறிந்து கொள்ள முடியும். தோட்ட மண்ணுடன் சிறிதளவு நீரைச் சேர்த்து அதனை உருண்டையாகப் பிடிக்கவும். உருண்டையாகப் பிடித்து நசித்த பின்னர் கையை விரிக்கும் போது உருண்டை உடையாது கெட்டியாகக் காணப்படுமாயின் அது களிமண். கையை விரிக்கும் போது பல துண்டங்களாக உதிருமாயின் மணல் மண். நல்ல இருவாட்டி மண்ணாயின் உருண்டையானது தளர்வாகக் காணப்படும்.

இவ்வாறு உங்கள் மண்ணில் நீர் மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ வடிந்து செல்லுமாயின் அதனைத் திருத்திக் கொள்வதற்கு மிகவும் இலகுவான வழி சேதனப் பொருட்களை மண்ணுடன் கலந்து விடுவதாகும். களிமண் அதிகளவிற் காணப்படும் போது மணல் மண்ணையும், சேதனப் பசளைகளையும் அதனுடன் சேர்த்து அதனை சீர்படுத்திக் கொள்ள முடியும்.

சில நேரங்களில் மழை பெய்யும் போது மாத்திரம் தற்காலிகமாக நீர் தேங்கும் இடமாக உங்கள் தோட்டம் காணப்படுமாயின் அதிலிருந்து பாதுகாப்பதற்கு நீங்கள் இரண்டு வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். முதலாவதாக உயரமான பாத்திகளை அமைத்து, அதில் தேவையான காய்கறிகளை நடுகை செய்து கொள்ள முடியும். அல்லது வளர்ப்புப் பைகள், சாடிகள், அல்லது அரிசிப் பைகள் போன்றவற்றில் தேவையான பயிர்களை நடுகை செய்து கொள்ள முடியும். இவ்வாறு பைகளில் அல்லது சாடிகளில் நடும் போது அவற்றின் அடிப்பகுதியில் துளைகளை இடுவதற்கு மறந்து விட வேண்டாம்.

உங்களது தோட்டத்தின் அமைவிடத்திற்கமைய சில இடங்களில் நீர் தேங்கி நிற்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீரை விரும்பும் பயிர்களான கங்குன், கொஹில போன்றவற்றை நட்டு பயன் பெற முடியும்.

### வளமான மேல் மண் இல்லாமை

சில சந்தர்ப்பங்களில் மண்ணரிப்பினாலோ அல்லது கட்டடங்களைக் கட்டும் போதோ வளமான மேல் மண் அகற்றப்பட்டு, வளமற்ற கீழ் மண் காணப்படலாம். இதனால் இவ்வாறான இடங்களில் பயிர்களை நடுவதால் எதிர்பார்க்கும் பயனைப் பெற முடியாது போய்விடும். இதனால்தான் புதிய வீடுகளுக்கருகே பயிர்களை நடும் போது அவை செழிப்பாக வளர்வதில்லை. இவ்வாறான இடங்களிற்கு வளமான மண்ணை வெளியிலிருந்து கொண்டு வந்து இடல் வேண்டும். மண்ணைக் கொண்டு வந்து இடுவது சாத்தியமற்ற போது பூச்சாடிகள், வெற்று உறைகளில் பயிர்களை செய்கை பண்ணி அவ்விடங்களில் வைத்து நிலத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்திக் கொள்ளவும். அதேவேளை சேதன உரங்களை தொடர்ச்சியாக இட்டு மண்ணைச் சீராக்கிக் கொள்ள முடியும்.

சில சந்தர்ப்பங்களில் எமது வீட்டுத்தோட்ட மண்ணில் கற்கள், சரளைக் கற்கள் போன்றன கலந்த வளமற்ற குவிக்கப்பட்ட மண் காணப்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பூச்சாடிகள், வெற்று உறைகளில் பயிர்களை செய்கை பண்ணி அவ்விடங்களில் வைத்து நிலத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்திக் கொள்ளவும்.

### மண் இறுக்கமடைதல்

சிலர் தோட்டத்திற்கு முதலாவது தடவை நீருற்றிய பின் மண் நன்கு உலர்ந்த பின்னரே அடுத்த தடவை நீரூற்றுவர். இவ்வாறு தொடர்ச்சியாக மண் நன்கு உலர்ந்து பின்னர் நீரூற்றுவதால் மண்ணின் மேற்பரப்பு இறுக்கமடையும். இதனால் நீர் வடிந்து செல்வது குறைவதோடு, காற்றோட்டமும் குறையும். எனவே வேர்கள் சுவாசிப்பதற்கு ஒட்சிசன் குறைந்து அவை தாவரங்கள் செழிப்பாக வளர்வதற்கு தடையாக அமையலாம். இதனை நிவர்த்தி செய்வதற்கு மண்ணில் ஓரளவு ஈரப்பதன் காணப்படும் போதே அடுத்த தடவை நீரூற்ற வேண்டும். இல்லாவிடில் காய்ந்து புற்கள், வைக்கோல், பயிர் மீதிகள் போன்றவற்றை மண்ணில் மேற்பரப்பில் இட வேண்டும். இதனை பத்திரக்கலவை இடல் என அழைப்போம். இதனால் மண்ணின் மேற்பரப்பிலிருந்து நீர் ஆவியாவது தடுக்கப்படுவதோடு, மண்ணில் ஈரப்பதன் பாதுகாக்கப்பட்டு, மண் இறுக்கமடைவதும் தடுக்கப்படும். வசதியிருப்பின் பொலித்தீன் போன்றவற்றினால் பத்திரக் கலவை இட முடியும். அதேபோன்று வீட்டுத் தோட்டத்திற்கு நீர்ப்பாசனம் செய்வதற்கு சொட்டு நீர்ப்பாசனம், விசிறற் பாசனம் போன்ற நவீன முறைகளைப் பயன்படுத்தலாம். இதனால் மண்ணின் மேற்பரப்பு இறுக்கமடைவது தடுக்கப்படும். சில நேரங்களில் கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக பார இயந்திரங்களைப் பயன்படுத்தும் போதும் இந்நிலை ஏற்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மண்ணை நன்கு கிளறி போதியளவில் சேதனப் பசளைகளை இட்டு, அதனை சீர்திருத்திக் கொள்ள முடியும்.

### மண் அமிலத்தன்மை

அதிகளவான மழை பெய்யும் பிரதேசமான மலை நாட்டிலுள்ள மண் பெரும்பாலும் அமிலத் தன்மையானதாகவே காணப்படும். காய்கறிப் பயிர்களின் வளர்ச்சிக்கு அதிகளவான அமிலத் தன்மை உகந்ததல்ல. இவ்வாறான இடங்களில் காய்கறிப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முன்னர் நீர்ச்சுண்ணாம்பை இட்டு மண்ணை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். இதனால் நல்ல விளைச்சலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

### மண் ஆழம்

மண் ஆழமானது இடத்திற்கிடம் வேறுபடலாம். மண் ஆழம் என்பது மேல் மண்ணிற்கும், தாய்ப் பாறைகளிற்கும் இடையேயுள்ள தூரமாகும். சில நேரங்களில் வன்படைகள் காணப்படும் போது ஆழம் மட்டுப்படுத்தப்படும். தாய்ப்பாறையானது மேல் மண்ணிற்கு அருகிலேயே காணப்படும் அல்லது மேல் மண்ணிலிருந்து சில அங்குல ஆழத்தில் வன்படை காணப்படலாம். இதனால் மண் ஆழம் குறையும்.

இவ்வாறு குறைந்த ஆழமுள்ள மண் காணப்படும் இடங்களில் வேர் அதிக ஆழத்திற்கு பரவாத மரக்கறிப் பயிர்களை நடலாம். ஆனால் இவ்விடங்களில் பல்லாண்டுப் பயிர்களான பழப்பயிர்களை நடுகை செய்யக் கூடாது. அத்துடன் மண் ஆழம் குறையும் போது மண்ணில் காணப்படும் நீரின் அளவும் குறையும். எனவே நீர்ப்பாசனம் செய்யும் போது மண் ஆழத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

### மண்ணரிப்பு

சாய்வான இடங்களில் அமைக்கப்படும் தோட்டத்திலுள்ள மண் அதிக மழை பெய்யும் போது கழுவிச் செல்லப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக வளமான மேல் மண்ணே இவ்வாறு அரித்துச் செல்லப்படும்.

(17 பக்கம் பார்க்க)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






என். சரவணன்

# கொழும்பில் அடிமைகளின் தீவு

கொழும்பு 2 இல் “ஸ்லேவ் ஐலன்ட்” என்று அழைக்கப்படும் பிரசித்தமான இடம் உண்மையிலேயே அடிமைகளின் தீவாக இருந்த இடம் தான். அது ஒரு காரணப்பெயர் தான். பிற்காலத்தில் இந்த இடத்தின் பெயரை சிங்களத்தில்“கொம்பன்ய வீதிய” (கொம்பனித் தெரு) என்று மாற்றியபோதும் இன்று வரை “ஸ்லேவ் ஐலன்ட்” என்று தான் பலரும் அழைத்து வருகிறார்கள்.

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் கறுப்பின அடிமைகளைக் கொண்டு வந்து இங்கே தான் அடைத்து வைத்திருந்தார்கள். அந்த கொடுமையான யுகத்தின் சாட்சியாக இன்றும் அந்த தீவு அமைந்துள்ளது. பிற்காலத்தில் இங்கே மருத்துவமனை, கூட்டுறவு சங்கங்கள், அலுவலகங்கள், கறுவா பயிர்ச்செய்கை, மத வழிபாட்டுத் தலங்கள், விமானப்படை, இராணுவத் தலைமையகம், வர்த்தக நிறுவனங்கள் எல்லாம் வந்து சேர்ந்ததால் இதன் அடையாளம் இன்று உருத்தெரியாமல் மாறியிருக்கிறது.

இடையில் ஒரு கால கட்டத்தில் ஆப்கானியர்கள் வாழ்ந்து வந்ததால் “ஆப்கான் டவுன்” என்றும், கறுப்பினத்தவர்கள் வாழ்ந்து வந்ததால் “காபிரி டவுன்” என்றும், மலாய இனத்தவர்கள் செறிவாக வாழ்ந்து வந்ததால் “மலே டவுன்” என்றும் கூட அழைக்கப்பட்டு வந்தது. அது மட்டுமன்றி சுற்றிவர “பேரை வாவி” இருந்ததால் “பேரை டவுன்” என்றும் கூட அழைக்கப்பட்டிருப்பதை பல ஆங்கில, சிங்கள ஆவணங்களில் இருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

16, 17 ஆம் நூற்றாண்டுகளில் போர்த்துகேயர் உலகெங்கிலும் தமது காலனித்துவ விஸ்தரிப்புக்காக கடினமான பணிகளுக்கு ஆபிரிக்க அடிமைகளை பயன்படுத்தி வந்தார்கள். சுமை தூக்கிகளாகவும், உதவியாளர்களாகவும், எந்தக் கட்டளையையும் நிறைவேற்றுபவர்களாகவும் பயன்படுத்தினார்கள். மேலும் அவர்களை நாடுபிடிக்கு போர்களில் முன்னரங்க போர் வீரர்களாகவும் பயன்படுத்தினார்கள். இந்த அடிமைகளை விற்கவும் வாடகைக்கு விடவும் என ஒரு பெரிய தரகு வர்த்தகமே அப்போது நடந்து கொண்டிருந்தது.

போர்த்துக்கேயர் இந்தியாவின் கோவா, மலபார் போன்ற பிரதேசங்களில் கொண்டு வந்து வைத்திருந்த ஆபிரிக்க அடிமைகளில் 2000பேரை அவர்கள் 1630களில் அடிமைச் சேவகத்துக்காக இலங்கைக்கு கொண்டு வந்தனர். போர்த்துகேயர் தான் இவர்களை தமது மொழியில் காபிர்கள் (Kaffir) என்று அழைத்தனர். இவர்கள் தமது எதிர்ப்பை தெரிவிக்காதிருப்பதற்காக அவர்களில் பலருக்கு உதடுகளுக்கும் இரும்புப் பூட்டு போட்டார்கள். கைகளிலும், கால்களிலும் கூட சங்கிலி போட்டு கட்டிவைக்கப்பட்டிருந்தார்கள். ஆத்திரத்தில் அவர்கள் எவரையும் கொன்று விடக்கூடும் என்பதற்காகவும், எதிர்ப்பை வெளிப்படுத்த வழியற்ற வகையிலும், தப்பி ஓடாத வகையிலும் அவர்கள் இவ்வாறு இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தார்கள். அது மட்டுமன்றி இவர்கள் மனித மாமிசம் உண்ணக் கூடியவர்கள் என்கிற பீதியும் ஐரோப்பியர்களிடம் இருந்தது.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட அடிமைகளின் பூர்வீகம் பெரும்பாலும் கிழக்காப்பிரிக்க நாடான ஸ்வாஹிலி கோஸ்ட் (Swahili coast and Portuguese East Africa) என்று அறிய முடிகிறது.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட அடிமைகளில் பலர் கொழும்பில் கறுவா பயிர்ச்செய்கைக்காகவும் பணியாளர்களாகவும் அதிகம் பயன்படுத்தப்பட்டனர். போர்த்துகேயர் மட்டுமன்றி ஒல்லாந்தரும் இதே போன்றே அடிமைகளைப் பயன்படுத்தினர். ஒல்லாந்தர் காலத்தில் இவர்களை ஆஸ்பத்திரி ஊழியர்களாகவும் பயன்படுத்தினார்கள்.

இந்த அடிமைகளை அவர்கள் கொழும்பின் பல இடங்களிலும் வைத்து வேலை வாங்கினர். அப்போது இந்த “ஸ்லேவ் ஐலன்ட்” க்கு அவர்கள் கொண்டுவரப்படவில்லை. ஆண்கள் பலர் கடுமையான வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட அதேவேளை பெண்கள் பலர் வீட்டு வேலைகளுக்கும், தோட்ட வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டனர்.

18ஆம் நூற்றாண்டில் டச்சுக் காலத்தில் ஏற்பட்ட “அடிமைகளின் கிளர்ச்சி” முக்கிய ஒன்றாக கருதப்படுகிறது. தம்மீது நிகழ்த்தப்பட்டு வந்த மோசமான அடக்குமுறைகளால் வெறுப்படைந்திருந்த அவர்கள் அதிகாரிகளுக்கு எதிராக கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். கொழும்பில் இருந்த அவர்கள் தமக்குள் ஒன்று திரண்டார்கள். இந்தப் பிரதேசத்தின் வீதிகளில் இரு மருங்கிலும் இருந்த கட்டிடங்கள் கடும் சேதத்துக்கு உள்ளாக்கின. இந்த வன்முறைக் கிளர்ச்சியின் போது காவல்துறையைச் சேர்ந்த பேரன்ட் டெண்டர் ஸ்டோன்ஸ் என்பவரும் அவரின் மனைவியும் படுக்கையில் வைத்து செங்கல்லால் அடித்து கொல்லப்பட்டார்கள். இவர்களைக் கொன்ற அந்த நபர் அவர்களின் வீட்டில் பணியாளராக இருந்தவர். அவர்கள் நித்திரைக்கு செல்லும் வரையில் ஒளிந்து காத்திருந்து பின்னர் கொன்றதாக அன்றைய தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அன்றைய ஆளுநர் ஐசக் மேப் இந்த கிளர்ச்சியை அடக்குவதற்காக கடும் கட்டளைகளை இட்டார். கிளர்ச்சி மிகவும் மோசமாக அடக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும், அந்தந்த நிறுவனங்களிலும் வீடுகளிலும் பணிபுரிந்த அனைத்து “காபிரி” மக்களும் "காபிரி கிரவுண்ட்" என்ற இடத்திற்கு அழைக்கப்பட்டனர். அங்கு, அனைத்து அடிமைகளின் பெயர்களும் அழைக்கப்பட்டு, அவர்களில் யாரெல்லாம் குறைந்திருக்கிறார்கள் என்று அடையாளம் கண்டார்கள். அவர்களைத் தேட விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எஞ்சியவர்கள் அனைவரும் அன்றைய கோட்டைச் சுவர்களுக்கு இடையே உள்ள குறுகலான பாதை வழியாக செலி போர்ட்டர் என்கிற இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அப்போது செலி போர்ட் என்பது ஒரு படகுத்துறை. படகுகளில் அங்கே இவர்களை கொண்டு சென்று அங்கிருந்து டச்சுக்காரர்கள் “ஐஜே” என்று அன்று அழைத்து வந்த தீவுக்கு படகுகளில் கொண்டு சென்றனர்.

தீவு ஒரு தீபகற்பமாக இருந்தது. குடாவுக்குள் அமைந்திருந்த இந்தத் தீவுக்கு கொண்டு செல்லப்பட்ட அந்த அடிமைகள் அதற்குள் இருந்த முடுக்கு, சேரிகளில் குடியமர்த்தப்பட்டனர். அந்தத் தீவு தான் “ஸ்லேவ் ஐலன்ட்”. வெளியுலக தொடர்பில்லாத நீரால் சுற்றிவளைக்கப்பட்ட தீவாக அது இருந்தது. அன்று இந்த பேரை வாவியில் ஏராளமான முதலைகள் இருந்தன. எனவே அக்கரை சிறிய தூரத்திலேயே இருந்த போதும் அதைக் கடக்க முடியாதவர்களாக இருந்தனர்.

அப்போது முதலை வேட்டை மிகவும் பிரபலமாக இருந்தது. அந்த முதலைகளை வேட்டையாடுவதற்காக இந்த அடிமைகளின் சிறு குழந்தைகளை முதலைக்கு இரையாக காண்பித்து அம்முதலைகளை பிடித்திருக்கிறார்கள். இதைப் பற்றிய விபரங்கள் பல நூல்களிலும் கிடைக்கின்றன. அத்துடன் அதை விபரிக்கின்ற அக்கால ஓவியங்களும் நூல்களில் பிரசுரமாகியுள்ளன.


முதலைகளுக்கு இரையாகக் காட்டுவதற்காக அடிமைகளின் குழந்தைகளை பலவந்தமாக அழைத்துச் செல்லும் ஆங்கிலேயர்கள்.

இன்று அப்படிப்பட்ட ஒரு தீவை நாம் நினைத்து பார்க்க முடியாது. அன்று காலிமுகத்திடலில் இருந்து ஐந்து லாம்புச் சந்தி, கொள்ளுப்பிட்டியின் ஒரு பகுதி உள்ளிட்ட பெரும்பகுதி பேரை வாவியாக இருந்தது. அதன் நடுவில் தீவாக இருந்த பகுதி தான் “ஸ்லேவ் ஐலன்ட்”. ஒரு சிறு பகுதி மாத்திரமே நிலத்தோடு இணைந்திருந்தது. பிற்காலத்தில் இந்த நீர்நிலைப் பகுதிகளில் பெரும்பகுதி மண்ணால் நிரப்பப்பட்டு தீவோடு இணைக்கப்பட்டு கட்டிடங்கள் எழுப்பப்பட்டன. பிற்காலத்தில் இராணுவத் தலைமையகம் கூட அப்படி நிரப்பப்பட்ட பகுதி தான். மண்ணால் நிரப்பப்பட்டு உருவானது இன்றைய நவீன துறைமுக நகரம் மட்டுமல்ல, “ஸ்லேவ் ஐலன்ட்”ஐச் சுற்றியும் இரண்டு நூற்றாண்டுக்கு முன்னரே இப்படி மண் நிரப்பப்பட்ட நிலம் உருவாகிவிட்டது. இதற்கு சான்றாக அன்றைய பல வரைபடங்களை நீங்கள் காண முடியும்.

ஆங்கிலேயர்கள் தான் இதற்கு அடிமைத் தீவு என்று பெயரிட்டனர். ஆனால் 1844 இல் ஆங்கிலேயர்கள் இந்த நாட்டில் அடிமை முறையை சட்டபூர்வமாக தடை செய்தனர். இலங்கையில் அவ்வாறு அடிமைமுறை தடை செய்யப்பட்ட காலத்தில் உலகின் பல ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளில் கூட அடிமை முறை ஒழிக்கப்படாமல் இருந்ததையும் இங்கே சுட்டிக் காட்ட வேண்டும்.


அடிமைகளின் குழந்தைகளைக் காட்டி முதலைகளை வேட்டையாடும் ஆங்கிலேயர்

இலங்கையில் ஆபிரிக்க கறுப்பினத்தவர்கள் மட்டுமல்ல, வடக்கில் தமிழ் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட சாதிகளாக கருதப்பட்ட கோவியர், நளவர், பள்ளர் போன்ற சாதியினரும் அடிமைகளாகவே நடத்தப்பட்டு வந்தார்கள். இந்த அடிமையொழிப்பு சட்டம் தான் அவர்களையும் விடுவித்தது.

டச்சுக்காரர்களிடம் இருந்து இலங்கை ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்ட போது இந்த ஸ்லேவ் ஐலன்ட் அப்படியே தான் பேணப்பட்டது. ஆனால் ஆங்கிலேயர்கள் கொழும்பைக் கைப்பற்றிய ஆரம்ப காலத்தில் இந்தத் தீவில் வயதானவர்களும், நோயாளிகளும் தான் அதிகம் இருந்திருக்கிறார்கள்.

1807இல் 700 பேர் அளவில் காப்பிரி இனத்தவர்கள் இருந்தார்கள் என்று கோர்டினரின் அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. அடிமைமுறை ஒழிப்பின் பின்னர் இந்த ஆபிரிக்க அடிமைகள் இங்கிருந்து நாட்டின் பல இடங்களுக்கும் இடம்பெயர்ந்தார்கள். புத்தளம், மட்டக்களப்பு, திருகோணமலை உள்ளிட்ட பல இடங்களுக்கும் இடம்பெயர்ந்தார்கள். சில படைத் தளபதிகளின் மாளிகைகளில் இசை நிகழ்த்தவும் பயன்படுத்தப்பட்டதை அறிந்துகொள்ள முடிகிறது. 1875 அளவில் “கபிர் வெல்ட்” என்கிற பெயரில் இவர்களுக்கென சாராயத் தவறணையொன்றை ஒரு ஆங்கிலேய படையினர் நடத்தியதாக அறியக் கிடைக்கிறது. கொழும்பு கோட்டையில் இருக்கிற இன்றைய இலங்கை வங்கி தலைமையக கட்டிடம் இருந்த இடத்தில் தான் அந்த தவறணை அன்று இருந்திருக்கிறது.

டச்சு காலத்தில் இந்த அடிமைகளைக் கொண்டு கொழும்பு கோட்டை மீள கட்டுவிக்கப்பட்டமை அன்றைய ஆளுநர் கோயன்ஸ்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் அந்த நேரத்தில் நாட்டில் சுமார் நாலாயிரம் ஆபிரிக்க அடிமைகள் இருந்தனர். கொழும்பு வுல்பெண்டால் தேவாலயத்தின் கட்டுமானப் பணிகளும் இவர்களைக் கொண்டு தான் செய்விக்கப்பட்டது.


பேர வாவியைச் சூழ உள்ள பகுதி ...

இலங்கையில் 1800இல் 4000 அடிமைகளும் 1817 இல் 22,000 அடிமைகளும் 1837இல் 27,000 அடிமைகளும் இருந்ததாக அன்றைய ஆங்கிலேய ஆளுனர் ஜேம்ஸ் மெக்கன்சி (James A. S. Mackenzie) குறிப்பிடுகிறார். அவர் இலங்கையில் அடிமை முறையை ஒழிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தவர்.

இவர்களால் அடித்துக் கொல்லப்பட்ட பேரன்ட் டெண்டர் ஸ்டோன்ஸ் வாழ்ந்த அந்த பங்களாவில் ஆவி உலவுவதாக அக்காலத்தில் பலரால் நம்பப்பட்டது. அதில் குடியிருந்தவர்கள் பலர் அதிக காலம் வாழவில்லை என்பதை இந்த நம்பிக்கைக்கு ஆதாரமாக ஆக்கிக்கொண்டனர். பின்னர் ஆங்கிலேயர்கள் இதனை கோப்பி களஞ்சியமாக ஆக்கிக்கொண்டனர். கோப்பி பயிர்ச்செய்கை நாசமான பின்னர் அதையும் முற்றாக இடித்துத் தள்ளிவிட்டனர்.

டச்சு மொழியில் “கபிர் வெல்ட்” (Kaffirs Veldt) என்றால் “காபிரிகளின் பிரதேசம்” என்று பொருள். அன்றைய கோட்டையில் ஆபிரிக்க காப்பிரிகள் தங்க வைக்கப்பட்டிருந்த இடமாக இருந்த “காப்பிரி முடுக்கு” தான் இன்று கொழும்பு புகையிரத நிலையத்துக்கு சற்று எதிரில் அமைந்திருக்கிற “ரோகிணி ஒழுங்கை”. இன்றும் அந்த ஒழுங்கையை “காப்பிரி முடுக்கு” என்று அழைப்போர் உள்ளனர். quadrille நடனம் இந்த காபிரிகளின் மதிப்புமிக்க கலாசார பாரம்பரியத்தின் அங்கமாக கருதப்படுகிறது.

கொழும்புக்கு ஆபிரிக்கர்களை கொண்டு வந்து சேர்த்த காலத்தில் கொழும்பில் அடிமைச் சேவகம் இருந்திருக்கவில்லை. இலங்கையில் வடக்கு பிரதேசத்திலும் கண்டி ராஜ்ஜியத்திலும் கணிசமான அடிமைமுறை சாதியத்தோடு தொடர்புபட்டு இருந்திருந்தாலும் இலங்கையில் அடிமைமுறை அவ்வளவு பிரசித்திபெற்ற ஒன்றாக இருக்கவில்லை. குறிப்பாக கொழும்பில் இருக்கவில்லை.

கி.பி. 8ஆம் 9ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் சில விகாரைகளில் காபிரி மக்கள் இருந்ததாக சில ஓலைச்சுவடிகளிலும் அரேபிய பதிவுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. சில காபிர்கள் விகாரைகளில் மடாதிபதிகளாவும் பதவி வகித்துள்ளனர். 1815இல் சிங்கள முஸ்லிம் கலவரத்தின் போது படைகளில் இருந்த தகவல்கள் இருக்கின்றன. மேலும் முதலாம், இரண்டாம் உலகப் போர்களில் இலங்கை நாட்டிற்காகப் போரில் கலந்துகொண்டிருக்கிறார்கள். ரொபர்ட் நொக்ஸின் அறிக்கைகளின்படி, இரண்டாம் ராஜசிங்க மன்னன் தனது சேவைகளில் காப்பிரி இனத்தவர்களை பயன்படுத்தியிருக்கிறார். ஜோன் டொயிலின் அறிக்கைகளின்படி, ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னர் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டபோது, காப்பரி இனத்தைச் சேர்ந்த 200 பேர் மன்னரின் படையில் பணியாற்றியிருந்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் கண்டியைக் கைப்பற்ற ஆளுநர் பிரெடெரிக் நோர்த் தென்னகத்திலிருந்து அடிமைகளை வாடகைக்கு எடுத்திருக்கிறார்.

இலங்கையில் இன்றும் “காப்பிலி” (Kafir) என்று அழைக்கப்படுகின்ற கறுப்பின மக்களின் வழித்தோன்றல்கள் நாட்டின் பல இடங்களிலும் பரவி சிங்கள மக்களுடன் கலந்து வாழ்ந்து வருகிறார்கள். சில இடங்களில் அவர்கள் ஒரு இனக் குழுவாகவே தமது பாரம்பரிய வழக்கங்களுடன் வாழ்ந்து வருவதைக் காண முடியும். உணவு வகைகள், சடங்குகள், நடனம், இசை, இறை நம்பிக்கை என அவர்களுக்கென தனியான பண்பாட்டு வழக்கங்களை இன்றும் கடைபிடித்து வருவதைக் காண முடியும்.

ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்திலேயே இந்த “ஸ்லேவ் ஐலன்ட்” பகுதி ஒரு “அடிமைத் தீவு” என்று அழைக்கப்படுவதற்கு எதிரான கருத்துக்கள் எழுந்தன. டச்சு காலத்தில் கொழும்பு நகர உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றிய “த பியர்” என்கிற பொறியியலாளரின் நினைவாக அடிமைத் தீவை சூழ இருந்த இந்த ஏரிக்கு “பேரை வாவி” (Beira lake) என பெயரிடப்பட்டது.

1659ஆம் ஆண்டு கொழும்பு நகர வடிவமைப்பாளரான அளவையியலாளர் ஏட்ரியன் லீச் கொழும்பு கோட்டையை நிர்மாணித்த வேளை தற்போதைய பேரை வாவிக்கு எந்த பெயரையும் இடவில்லை. மாறாக நீர் ஏரி என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலேயர் காலத்தில் இந்த பேரை வாவியிலிருந்து நீர்கொழும்பு, சிலாபம், வெள்ளவத்தை, பொல்கொட வாவி, களனி கங்கை வரை உல்லாச படகுச் சேவை இருந்திருக்கிறது. அந்தளவு இந்த ஏரி சிறந்த நீர்வழி வலைப்பின்னலின் மையமாக திகழ்ந்திருக்கிறது.

1880ஆம் ஆண்டு வெளியான The Ceylon Directory யில் வியப்பளிக்கும் விளம்பரத்தைக் காண முடிகிறது.ஒவ்வொரு ஐந்து நிமிடத்துக்கு ஒரு தடவை இந்தப் படகுச் சேவை நிகழ்ந்திருக்கிறது. 2சதத்தை அறவிட்டிருகிறார்கள்.

மாதக் கட்டணமாக ஒரு ரூபாய் அறவிடப்பட்டிருக்கிறது. நாளாந்தம் அதிகாலை 5.30யிலிருந்து இரவு 9வரை இந்த படகுச் சேவை நடத்தப்பட்டிருக்கிறது.

இதனை நடத்திய T.Buckney & Co என்கிற நிறுவனம் இதற்காக பல நீராவிப் படகுகளை வைத்திருந்ததை இந்த விளம்பரத்தின் அறிய முடிகிறது. அடிமைகளின் தீவு ஒரு தனி நூலாக ஆக்குமளவுக்கு பல கதைகளை உள்ளடக்கியது.

---

ஒரு கண்ணோட்டம்

# இக்பால் அலியின் நூல் வெளியீடு

*கடந்த 2022 ஆகஸ்ட் மாதம் 28 ல் கொழும்பு மெண்டரினா ஹோட்டலில் பிரமாண்டமாக வெளியிடப்பட்ட சிரஷ்ட ஊடகவியலாளரும் கவிஞருமான இக்பால் அலியின் நூல் பல்வேறுபட்ட கோணங்களில் வித்தியாசமான பல அம்சங்களை கொண்டிருந்தது குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன் பின்புற அட்டையில் வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர்களின் நிறப் படங்கள் வரிசையாக*

*பிரசுரமானது இந்நூலுக்கு வலுச் சேர்த்திருந்தது. இந்நூலானது லேக் ஹவுஸின் அனுசரணையுடன் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையினால் வெளியிடப்பட்டது. சமூகம் சார்ந்த பணிகளிலும் தன்னார்வ தொண்டிலும் இலங்கையில் முன்னணியில் திகழும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் 54 வது தேசிய தலைவரான சஹீட் எம் றிஸ்மியின் சுய விபரக்கோவையுடன் தொடங்கி, விடாமுயற்சி இருந்தால் எதனையும் சாதித்துவிடலாம் எனும் அனுபவச் செய்தியை எடுத்தியம்பியுள்ளார். ஒரு சமூகத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பது அச்சமூகத்தின் ஒற்றுமையேஎன்ற செய்தியை முழு இலங்கைக்குமே பறைசாற்றி கூறுகின்றார்.*

*அரசின் சட்ட திட்டங்களுக்கு இடைஞ்சலாக இருக்க மாட்டோம் என்கின்ற வாக்குறுதியை சமூகம் சார்பாக வெளிப்படுத்தி*






*உள்ளார். முதியோரின் தியாகங்களை பின்பற்றி புதிய தலைமுறைகள் உருவாக்கப்பட*

*வேண்டும் என்ற ஒரு உண்மையும் இங்கு வெளிப்பட்டு உள்ளது.*

*மிகச் சிறந்த சேவை குடிநீர் வழங்குதல் எனும் தலைப்பிலான கட்டுரையின் மூலம் நீர் ஒரு அரிய செல்வம் நீர் வளமுள்ள பிரதேசங்களிலுள்ளவர்கள் அதனை வீண்விரயம் செய்யக் கூடாது என்பதையும் நீர் இன்மையால் உலகம் படும் அவஸ்தையையும் சுட்டிக் காட்டியுள்ளார்.*

*எதிர்காலத் தலைமைகளை உருவாக்கும் பணியை ஒரு பாரிய சமூக வலையமைப்பினைக் கொண்ட ஒரு சமூக சேவை நிறுவனமான வை.எம்.எம்.ஏ.பேரவை செய்து வருகிறது என்பதையும் இங்கு வலியுறுத்தி கூறியுள்ளார். மேலும் இப்பேரவையின் பெண்களுக்கான தனியான பிரிவின் மூலம் பெண்களின் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களும் விதவைகளுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு சேவைகளும் செய்யப்படுகின்றன என்பதையும் இங்கு குறிப்பிட்டுள்ளார்.*

*கொரோனா 19 பெருந்தொற்றுக் காலத்தில் வை. எம் எம். ஏ. தலைமையகமும் இதன் நாடளாவிய அங்கத்துவ வை.எம். எம்.ஏ.க்களும் செய்த பாரிய சேவைகளை குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். இன்னும்*

*தேசிய பாதுகாப்புக்கு பாரிய பங்களிப்பு செய்யும் சிவில் நிறுவனங்களில் வை.எம். எம்.ஏ பேரவை முன்னணியில் திகழ்கிறது என்கின்ற உண்மைச் செய்தியையும் வெளிப்படுத்தியுள்ளார்.*

*விஷேட தேவையுடைய பிள்ளைகளின் ஆளுமையை உயர்த்த உதவிக்கரம் நீட்டுவோம் என்ற பொது அறைகூவலையும் விடுத்து, அவர்கள் எதிர்கால வாழ்வில் வளம் பெற பலவேலைத் திட்டங்களையும் ஆரம்பித்துள்ளார்.*

*மேலும் தங்கள் பிள்ளைகளுக்கு தேவையான நல்ல சூழலை அமைத்து கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு மற்றும் அவசியம் பற்றி பெற்றோர்களுக்கு பிரயோசனமான ஆலோசனைகளையும் கூறியுள்ளார். அது மட்டுமல்லாமல் முஸ்லிம் சமூகம் அவ்வப்போது எதிர்நோக்கிய*

*பிரச்சினைகளின் போதும், தட்டுத் தடுமாறும் சந்தர்ப்பங்களிலும் பொறுமையுடனும் நிதானத்துடனும் செயற்பட்டு சமூகத்தை நேர்வழிப்படுத்தும் நேரிய நோக்கில் சமூக வலைத்தளங்களிலும், பத்திரிகைகளிலும் பல அறிக்கைகளை இட்டு மக்களை நேரான பாதையில் சிந்தித்து செயற்பட வைத்த பெருமை*

*அவருக்கேயுரியது. அவ்வப்போது பத்திரிகைகளில் இடப்பட்ட அறிக்கைகள் சுருக்கமாக இப்புத்தகத்தில் தொகுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*இவ்விழாவின் இன்னுமொரு சிறப்பு என்னவெனில் இங்கு வருகை தந்தவர்கள் அனைவரும் ஒவ்வொரு துறைகளிலும் உச்சந் தொட்டவர்கள் ஆவார்கள். இந்நிகழ்விற்கு தலைமை வகித்தவர் இலங்கையின் பிரபல சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா (P.C.) ஆவார். பிரதம அதிதி உப வேந்தர் றமீஸ் அபூபக்கர் ஆவார்.*

எஸ்.தஸ்தகீர் ...

கல்முனை குறூப் நிருபர்

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# குருவிப் பேட்டை

மொழிவரதன்



அந்த வீட்டின் யன்னலருகே ஒரு பூனைக்கூட்டமே நின்றது. எப்படியும் ஐந்து பூனைகள் இருக்கும். இது எந்நாளும் நடப்பதுதான்.

நானும் அதிகாலை எழுந்து காலை வேலைகளை முடித்ததன் பின்னர் எனது குசினி கதவைத் திறந்து பார்ப்பேன். தினமும் அவை எப்போது ஜன்னல் திறக்கப்படும் என அண்ணார்ந்து பார்த்த வண்ணம் இருக்கும்.

குறித்த சில நிமிடங்களில் அந்த ஜன்னல் திறபட ஒருமித்த குரலில் பூனைகள் "மியாவ்... மியாவ்..." ஒலி எழுப்பும். அதேநேரம் "அட ஏன் கத்துற இரு தாரேன்"

என்றொரு குரலும் உள்ளே இருந்து வரும். ஆனாலும் பூனைகள் தமது பாட்டை நிறுத்தாது. "மியாவ் மியாவ் என அந்த ஊரையை கூட்டுவது போல் கத்தும். சிறிது நேரத்தில் குரல் ஒலி அடங்கி வேறு ஒருவித ஒலி அவற்றிடம் இருந்து எழும்.

ஆம் இந்த ஒலிக்கு பொருள் பாண், சோறு, பிஸ்கட், பாற்சோறு, கேக்துண்டு, மீன், இறைச்சி சோறு, எலும்பு இப்படி பல தீனிகள் அவற்றின் வாய்க்கு ருசி சேர்க்கும்.

காலையில் பாடசாலைக்கு புறப்பட்டு விடுவேன். என் வீடு அந்த வீட்டுக்கு எதிர்வீடு, சுமார் 100யார் தான் தூரம் இருக்கும்.

உலகிலேயே அதிகாலையில் மாத்திரம் தான் காலம் மிக வேகமாக முள்ளை நகர்த்துகின்றது என்பது ஏன் என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. இந்தக் கடிகாரம் வேறெந்த நேரத்திலும் அந்த அளவு வேகமாக நகரவே நகராது என்பது உலகறிந்த உண்மை.

பாடசாலை அசெம்பிளியில் வலய, மாகாண கூட்டங்களில் சில செயலமர்வுகளில் நேரம் போவதே தெரியாது. அவ்வளவு காதுக்கு இனிமையாக மூளைக்கு இலேசாக உரைகள் இடம்பெறும். ஆனால் இதற்கு மாறாக சில கூட்டங்கள் அல்லது அமர்வுகள் அறுவையாக அமைந்து அலுப்புக்குள்ளாக்கி தலைவலியை ஏற்படுத்து வதுமுண்டு.

அதிகாலையில் தான் குறைந்த நேரத்தில் அதிக வேலைகளை செல்கிறோம். இப்படியான பரபரப்பான காலை வேலைப்பளுவுக்கு மத்தியிலும் எதிர் வீட்டு முற்றத்தைப் பாராது விடுவதில்லை.

அங்கே காணப்படும் அவர் வீட்டு முற்றத்து மதிலில் காகங்கள், வீட்டுக்குருவிகள், ஏழு குண்டு குருவிகள், அணில்கள், கொண்டலத்தி, மைனா என்பன உட்கார்ந்திருக்கும். அவை அவ்வீட்டையும் என் வீட்டையும் சூழவுள்ள ஆணைக் கொய்யா, புளித்தோடை,மா, கொய்யா, ஜம்பு, புளிகொய்யா எனப்பல மரங்களிலும் அமர்ந்திருக்கும்.

"கா...கா" எனவும் "கீ...கீ" எனவும் அணில்கள் "கினி... கினீகினி..." எனவும் இசை எழுப்பிய வண்ணம் அந்த அதிகாலை இளம்வெயில் பொழுதை காதுக்கு இதம் சேர்க்கும் ஒரு சூழலை உருவாக்கும்.

பள்ளிக்கூடத்திற்காக காலை நேரத்தில் பதைபதைப்புடன் செயற்படும் அந்த அம்மா கதவைத்திறந்து பார்த்து எப்படியும் ஒரு குரல் கொடுக்கத் தவறுவதில்லை

"ஏன் கத்துறீங்க இருங்க வாறன் என்றவாறு உள்ளே நுழையும் அவர், பல்வகை உணவுகளுடன் வெளியே வருவார். வாசலின் முன்னும், மதிலின் மீதும், வெளியில் உள்ள ஒரு சிமெண்ட் தரையின் மீதும் வைப்பார். எல்லாப்பக்கமும் அவை பிரிந்தும் அடிபட்டும் கத்திய வண்ணம் உணவுகளை உண்ணும் மிகப் பாசத்துடன் அவற்றுக்கு தினமும் வைத்திடும் அந்த அம்மாவும் ஓர் ஆசிரியை தான். இந்த பாசப்பறவைகளை கவனியாது அவர் உதாசீனப்படுத்தியதை நான் பார்த்ததேயில்லை.

பல பூனைகள் அங்கே கூடுவதும் நடமாடுவதும் மாத்திரமல்ல, அவற்றின் பரம்பரையே அந்தச்சூழலிலேயே தொடர்ந்து சுற்றிச் சுற்றி வாழ்ந்து வருவது எனக்குத் தெரியும். அண்மையில் ஒரு பூனைக் குட்டி போட்டது அது நான் அறிந்தவரையில் மூன்றாவது பரம்பரை. முதலாவது பரம்பரையில் போட்ட இரண்டு குட்டிகள் வளர்த்தன. அவை சாம்பல் நிறமும், மஞ்சள் கறுப்பு வெள்ளை நிறமும் கலந்தவை. இவை குறிப்பிட்ட இரண்டாம் நிலையிலுள்ள பூனை போட்ட குட்டிகளே. ஒரு கறுப்புநிற குட்டியும், ஒரு விதமான செம்மஞ்சள், கபில நிறம், சாம்பல் கலந்த அந்த மற்றொரு குட்டியும் அங்கே இருந்தன.

எல்லாம் அந்த அம்மா வைத்த பாலை குடித்து வளர்ந்தவை. சின்னக்குட்டிகளாக அந்த வீட்டு வளவை அண்மிக்கும் போது மெதுவாக அந்த வீட்டுக்குள் அழைப்பதும், பெரிய பெண் தாய்ப் பூனை மட்டும் மியாவ்... என அருகில் வருவதும், சின்னக்குட்டிகள் பயத்தால் ஓடி ஒளிப்பதும் நான் அவ்வப்போது பார்க்கும் காட்சிகள். பாலை சிரட்டையில் அல்லது கோப்பையில் ஊற்றி வைத்தவுடன் பெரியபூனை குடிக்க ஆரம்பிக்கும். அதைக்கண்ட குட்டிகள் பயத்துடன் தயங்கித் தயங்கி சென்று தாயுடன் பாலை அருந்த தாய்பூனை சற்றே விலகி இடம் கொடுக்கும். இப்படியே பூனைக்குட்டிகள் அவ்வீட்டுடன் பழகி பின்னர் நேரடியாகவே சாப்பாடு கேட்டு "மியாவ்... மியாவ்" எனக் கத்தி தமது வரவினை அந்த அம்மாவுக்கு உணர்த்தும்.

இதேவேளை இனப்பெருக்க சீசனில் பெரிய பூனை ஒன்று அப்பிரதேசத்தில் உலாவும். மேலும் பல வண்ணங்களில் என்றுமே நாம் கண்டிராத ஆண் பூனைகள் அங்கே நடமாடும். ஒரு பெரிய பூனையை பெரியதுரை பங்களா பூனை என்பார்கள். இது இங்கு வந்து வேலை பார்க்கும் ராமூர்த்தி ஒரு நாள் சொன்ன தகவல்.

அழகான அடர்த்தியான முடியை கொண்டிருக்கும் அப்பூனை. மிகப் பயங்கரமாக அந்த இனப்பெருக்க சீசனில் குரலெழுப்பும். அது ஏனை பூனைகளை முறைத்து தனது கால் நகங்களை வெளித்தள்ளி பிறாண்ட முயலும். அந்தப் பூனையின் நடமாட்டமும் அதன் செயற்பாடும் அதன் பின்னணியும், செருக்கையும், திமிரையும் வெளிக் காட்டும். பூனைகளின் இனப்பெருக்க காலத்தில் மாத்திரம் வந்து உலாவும் இப்பூனை ஏனைய காலங்களில் தென்படுவதில்லை. இது அந்தக்கால நிலவுடைமையாளர்களின் பெண் லீலைகளையோ அல்லது ஓர் உயர் குழாத்தினரின் மனப் பாங்கையோ பிரதிபலிப்பதாக இருந்தது எனலாம்.

"இந்த தடிப்பூனை ஏன் இங்கே வருது"? என அந்த அம்மா ஒரு நாள் கேள்வி எழுப்பிய பொழுது எமது வீட்டு வேலிக்கருகில் வேலை செய்து கொண்டிருந்த ராமமூர்த்தி சிரித்துவிட்டு அந்த அம்மாவை பார்த்து,

"இங்கே உள்ள பெண் பூனையைத் தேடித்தான் அந்த ஆண் பூனை வருது" என்றார். நான் அங்கே நின்றிருந்த படியால் சம்பாஷணை எனது காதுகளிலும் விழுந்தது.

"அந்த தடிப்பூனை இந்தப்பூனையை சக்களத்தியாக வச்சிருக்கோ?" எனது எனது மனதுக்கள் எண்ணிக் கொண்டேன். ஆனால் அதனை வெளியே சொல்லவில்லை. இது அந்தத் தோட்டத்து சொந்தக்காரரின் பங்களா பூனை தானே?, அது அப்படியும் இருக்க நியாயம் உள்ளது தானே? என எனதுள்ளம் கூறியது.

இந்தப் பக்கத்து பூனைகளை பிற பூனைகள் வந்து குழப்புவதை அந்த அம்மா விரும்பாதது போல் "போ... போ... நீ எல்லாம் ஓடிப் போ" என செல்லமாக விரட்டுவதை நான் கண்டிருக்கின்றேன். மறுபுறம் இப்பூனைகளுக்கு இக்காலத்தில் என்ன நிகழ்கின்றது. என்பதை அறியாதரல்ல அவர். குருவிகளும், காகங்களும் போலவே நாய்களும் அங்கே கூடும்.

மேல் வீட்டு கபில நிற நாய் அடிக்கடி அங்கே காணப்படும். சற்று தூரத்தில் உள்ள ரோஜா விட்டு வெள்ளை நாய் அந்த ஏரியாவை ஆட்சி செய்யும். இந்த அம்மா வீட்டில் எந்த நாயும் உணவு உண்ண விடாது தடுக்கும் பெரிய குரலில் உரத்து குரல் எழுப்பி "நீயெல்லாம் இங்கே வராதே இது என் ராஜ்யம்" என்பது போல வாலை முறுக்கி பல்லைக் காட்டி ஏனைய நாய்களை ஓட ஓட விரட்டும்.

அந்த வீட்டு கேட் கதவு திறக்கும் கலி அதுக்கு நன்கு பரிச்சியம். ஓடி வரும் அவ்வெள்ளை நாய் அந்த அம்மா மடி மேல் காலை ஊற்றி வாலை ஆட்சி தனது விசுவாசத்தைக் காட்டும். எந்நேரமும் அவதானத்துடன் இருக்கும் அது, வீட்டுக்காரர்கள் தற்செயலாக உணவுக்காக ஏதும் ஒழுங்கு செய்யாமல் சென்றுவிட்டால் இரவில் அந்த அம்மா வீடு வந்து கதவுகளை பிராண்டி சாப்பாடு கேட்குமாம். இதனை அந்த அம்மா கூறுவார். இவ்வாறான நேரங்களில் அந்த றோவர் நாய் எதை போட்டாலும் சாப்பிடுமாம். மற்ற நேரங்களில் இறைச்சி மீன், முட்டை, மாசி, கருவாடு போன்ற ஏதோ ஒன்று உணவில் இல்லாவிட்டால் உண்ணாதாம்.

இந்நாய் மட்டுமல்ல, ஏனைய சில நாய்களும் அங்கே வரும். அதில் ஒன்றுதான் மேலே சுமமா கிடந்த வீட்டின் முன் முற்றத்தில் திடீரென வந்து குடியேறிய ஒரு கரிய நாய். இந்த நாய் எப்படி வந்தது என ஆராய்ந்த போது அந்த நாயின் ரத்த உறவுகொண்ட ஒரு நாய் செந்தில்வேல் வீட்டில் உள்ளதாய் கூறினார்கள். மேலும் முன்னால் உள்ள ராஜா வீட்டில் உள்ள கரிய நாயும் ஒரே குடும்பமாம். அது மட்டுமல்ல, இவைகளுக்கான தாய் பஸாரிலுள்ள மரக்கடை பக்கத்தில் உள்ள வீட்டில் உள்ளது. என்று தகவல் சொன்னவர் ராமமூர்த்தி.

கறுப்பு நாய் அங்கே வந்து வந்தேறிய போதும் அடுத்த வீட்டில் செவலை நாய் உள்ளதால் அங்கே சாப்பாடு கிடைக்காது. இதனால் அக்கறுப்பு நாய் அம்மா வீட்டையே உணவுக்காக எதிர்பார்க்குமாம். ஆரம்பத்தில் அந்த கறுப்பு நாய் அம்மாவை கண்டால் ஓடிவிடுமாம். பின்னர் படிப்படியாக பழகி உணவு கேட்டு உண்டு செல்கிறதாம். இந்த வீட்டுக்கு நாங்கள் வந்து வருடங்கள் இருபதை கடந்து விட்டன. அந்த அம்மா குடும்பம் வீடு கட்டி வந்து குடியேறி எப்படியும் பதினைந்து வருடங்களாவது சென்றிருக்கும். அந்த அம்மா அந்த காலத்திலிருந்து இன்றுவரை அதே பாசப் பிணைப்புடன் தான் பழகி வருகிறார்.

இதற்கிடையில் சில நாய்கள் இறந்து போயின. மேலே காணப்பட்ட ராஜா வீட்டு செவலை இறந்து விட்டது. ரோஜா வீட்டு ரோவர் காலமாகிவிட்டது. அந்த கறுப்பு நாய்.

எங்கோ போய்விட்டது. அத்துடன் சற்றுத்தூரத்திலுள்ள ரிச்சர்ட் வீட்டு நாய்கள் இல்லாமல் போயுள்ளன. அவை இறந்தோ காணாமலோ போயிருக்கலாம். மற்றொரு கறுப்பு நாய்க்கும் இப்போது கிழடு தட்டி விட்டது.

இப்படியே மாற்றங்கள் வந்து போனாலம் அந்த அம்மாவின் வரவேற்புகளும் உபசரிப்புகளும் கொஞ்சமும் குறைய வில்லை.

அண்மையில் புதிதாக ஒரு ஜோடி குருவி உலவத்தொடங்கியது. அதன் ஒலி புதியதாக இருந்தது. வித்தியாசமான அந்த குரல் ஒலி ஓர் இசையைபோல இருக்கும். ஆனால் அவை அம்மா வீட்டு உணவை உண்ணும் காக்காக் கூட்டங்களை துரத்தி துரத்தி தலையில் கொத்தும்.

இதைப் பார்த்த பக்கத்து வீட்டு ஆண்டியின் மருமகள் ஒரு காரணத்தை சொன்னாள். அவர்கள் வீட்டுக்குப் பின்னால் உள்ள மரத்தில் அப்புதிய குருவிகள் கூடுகட்டியதாகவும் காகங்கள் கூட்டைக் கலைத்து விட்டதாகவும், இதனால் கோபம் கொண்ட அந்த ஜோடிகள் காகங்களின் தலையில் பறந்து பறந்து கொத்துவதாகவும் சொன்னாள். எங்கள் வீட்டு மரத்திலேயே அவை பெரும்பாலும் அமர்ந்திருக்கும். அந்த அம்மா ஏதாவது போட காகக் கூட்டம் அங்கே வர, இவை பறந்து போய் கொத்துவதை நானும் கண்டேன். அந்தப் புதிய குருவி அசப்பில் வெள்ளை கறுப்பு நிற கரிச்சானை போலத் தோன்றும். ஆனால் வெள்ளைக் கலப்பு இல்லை. நான் அறிந்திராத ஒரு வகை நிறம். சில காலம் இங்கே காணப்பட்ட அவை பின்னர் எங்கேயோ போய்விட்டன.

புதிய குருவியைப் பார்த்த அந்த அம்மா அது பற்றி சிலாகித்து மேல் வீட்டுக்கு டேனியல் அங்கிளிடம் கூறினார். நான் பின் தோட்டப் புறத்தில் நின்றிருந்த போது அவர்கள் உரையாடலை கேட்டேன். அவரும் தான் அதைக்கண்டதாகவும் அவை இடம்பெயர்ந்து வரும் குருவி இனங்களில் ஒன்றாக இருக்கலாம் என்று கூறியதைக் கேட்டேன். பக்கத்து தோட்டம் ஒன்றில் பெரிய ஒரு மரம் இருப்பதாகவும் அந்த மரத்துக்கு குறிப்பிட்ட காலத்தில் புதிய பறவைகள் வருவதாகவும் பின்னர் அவை திரும்பிச் சென்று விடுவதாகவும் கூறினார். அத்துடன் தனது அம்மா அந்தக் காலத்தில் தனக்கு பத்து வயதானபோது நவம்பர் மாதம் தீபாவளி காலங்களில் வரும் ஒரு பறவையை அம்மா தன்னிடம் காட்டியதாகவும் அதனை அவர் 'காச்சில்' என்று கூறியதாகவும் என்னிடம் கூறினார்.

அது அழகான ஒரு பறவையாகவும், சிவப்பும் வேறு சில நிறங்களும் கலந்த ஒன்றாக காணப்பட்டதாகவும் கூறினார்.

இது மட்டுமல்லாது 'புடிக்.... புடிக்... புடிக்...' என்று கத்து குருவி மிகச்சிறய ஒன்றென்றும் ஆனால் அதன் சத்தம் பெரியதென்றும் விளங்கினார்.

காலம் எமக்காக காத்திருப்பதில்லை. இயற்கை மனிதனை விட தனது பணியை மிகச்சரியாக செய்யும். பணத்தால் பதவியால் உயர உயர குணங்களும் உறவுகளும் புதியதாய் முளைக்கும். இந்தச் சுழற்சியில் சிக்காத நல்ல உள்ளங்களும் வாழவே செய்கின்றன. எங்கோ எப்படியோ யாரிடமோ இந்த அன்பு, பாசம், கருணை, பரிவு இல்லாமல் இராது. அந்த சிலருக்காகவே மனிதம் வாழ்கின்றது. மற்றொரு வகையில் கூறுவதனால் இந்த சிலரினாலேயே மனிதம் உயிர் பெறுகின்றது.

"மற்றதுகளுக்கும் குடு.. நீ என்ன தனியே காலிடுக்கே திணிச்சிகிட்டு வாயிலையும் திணிச்சிகிட்டு இருக்கிற?"

எதிர் வீட்டு இந்த அம்மா போட்ட முறுக்கை ஒரு காகம் இப்படி தின்ன முற்படவே அதற்கு அன்பாக விடுக்கும் ஓர் அறைகூவலே இது.

"அந்தக் குண்டு குருவிகள் ஆறு, ஏழு வரும். வீட்டுக்குருவியும் வரும்... அதுக்கெல்லாம் இல்லாம நீ மட்டும் திங்குற... சரி சரி சாப்பிடு. நா பொறாகு அதுகளுக்கு குடுக்குறேன்" அந்த அம்மா பேசுகின்றார்.

காகங்களின் கா... கா... குரல்களும் குருவிகளின் ஒலிகளும் பூனைகளின் மியாவ் மியாவ் சத்தமும் அந்த வீட்டிலும் வீட்டைச் சுற்றியும் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கிறது.

அது மனிதனுக்கும் இயற்கைக்கும், ஏனைய உயிர்களுக்கும் இடையிலான பிரிக்க முடியாத ஒரு உறவைச் சொல்கிறது. அது மனிதம்.

கதவைத் தட்டுகிறவர்களுக்கு கொடுப்பது மனிதனின் கடமை. அதை அந்த அம்மா செய்கிறது. பசி பட்டினியோடு வரும் உயிர்களுக்கு உணவளிக்க வேண்டும். பசித்தும் போஷாக்கின்றியும் வரும் மனிதர்களுக்கும் தான்...

நான் அடிக்கடி நினைத்துக் கொள்வேன்.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 41

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | 03 | 04 | ■ | 05 |
| 06 | | ■ | ■ | 07 | | ■ | |
| 08 | | 09 | | ■ | 10 | 11 | |
| ■ | ■ | | ■ | 12 | | | ■ |
| 13 | 14 | | 15 | ■ | 16 | | |
| 17 | | ■ | 18 | 19 | ■ | ■ | ■ |
| 20 | | ■ | 21 | | 22 | ■ | 23 |
| 24 | | | | ■ | 25 | | |

திரு/திருமதி.செல்வி ..............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................................
..............................................
..............................................
............................... ...............................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 41
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 41

**இடமிருந்து வலம்**

01. இவ்வாரம் ஆரம்பமாகியுள்ள இந்துக்களின் விரதம்
06. பழம்
07. ஒரு விஷயத்தைக் குறிப்பால் உணர்த்துவது
08. மனத்துணிவு
10. ஒத்துழைப்பு
12. உண்மை நிலைக்கு மாறானது
13. பொருள் விற்பனை கடைகளின் தொகுதி
16. இதுவும் விலங்கினத்தைச் சேர்ந்தது
17. பாடல் வகை
18. புல், பூண்டு, செடி வகைகளை இப்படிச் சொல்வர்
20. நவக்கிரகங்களில் ஒன்று
21.பொருத்தமில்லாத அல்லது முறையற்ற
24.நெற்றிப் பொட்டு
25. நீரில் மலரும் மலர் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. விரல் நுனியின்மேல் பகுதியில் உள்ளது.
02. பெண்
03. திக்கு
04. அரண்மனையின் மேல்மாடம் (குழம்பியுள்ளது)
05. இதுவும் பறவையினத்தைச் சேர்ந்தது
09. உடம்பு ( குழம்பியுள்ளது)
11. வார நாட்களில் ஒன்று ( குழம்பியுள்ளது)
13. சொற்களை அகர வசையில் அமைத்து பொருள் தரும் நூல்
14. மிருகங்களுக்கு இப்படியும் ஒருபெயர் ( குழம்பியுள்ளது)
15 ஒருவருக்கொருவர் நலன் விசாரித்து எழுதும் மடல் (குழம்பியுள்ளது)
19. இளமைப் பருவத்து ஆண் மாடு ( தலைகீழ்)
22. நிலப்பகுதி
23. அன்னை (தலைகிழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 40

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பிடிவாதம் 04. சாது 06. சனி
07. அல்வா 08. புரவி 09. தடை
11. மேரு 12. ஆம் 13. நதி
15. கன்னி 16. பல 18. கொஞ்சம்
19. வெம்மை 20. சாட்டை 21.புகை

**மேலிருந்து கீழ்**

01. பிரமாதம் 02. வாசல் 03. தனி
04. சால்பு 05. துவாரம் 07. அருவி
10. ஆடை 11. மேதினி 13. நன்கொடை
14. சிலம்பு 15. கஞ்சா 17. பகைமை
18. நாம்

### பரிசு பெறுவோர் விபரம்

முதல்பரிசு (ரூ 500/)
**எப். ஆர். ஷக்கூர்**
145, குனேபனே மெதிகே,
மடவளபசார்

இரண்டாம்பரிசு (ரூ 350/)
**பி. பேரின்பராஜா**
இல 44, முதலியார் வீதி,
மட்டக்களப்பு

மூன்றாம் பரிசு (ரூ 150/)
**ஏ.சி.எஸ்.ஶ்ரீதரன்**
24 , 5/3 மாதங்காவத்தை வீதி
கொழும்பு 06

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 40

### பாராட்டு பெறுவோர்

**1. சுரைனா**
இரத்தினபுரி

**2. என். கிருஷ்ணவேணி**
பலாங்கொடை

**3. கே.சுபாஜினி**
களுவாஞ்சிக்குடி

**4. ரி. தக்கியா நூரி**
அக்கரைப்பற்று

**5.எஸ் கனகரெத்தினம்**
திருகோணமலை

**6. மங்களம் மனோரஞ்சன்**
கல்முனை

**7. மல்லிகாதேவி பத்மனாதன்**
பசறை

**8. ஆர். ஞானச்சந்திரன்**
மட்டக்களப்பு

**9. பி. பழனியாண்டி**
கம்பளை

**10. எம்.ஏ. அத்தாஸ்**
மாத்தறை

**11. ஆர்.ரம்சியா**
மட்டக்குளி

**12. எம். ஹூதாகண்டி**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -









# சிங்கள சினிமா, சின்னத்திரையில் அனைவரையும் தன்வசப்படுத்திய தர்ஷன்









★ அனைவரின் கண்களிலும் கண்ணீரை வரவழைத்த தர்ஷனின் திடீர் மரணம்

★ 14 ஆண்டு காலம் ரசிகர்களின் இதயத்தை வென்ற நடிகனின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்......

★ முழு நாட்டையும் சோகத்தில் ஆழ்த்திய மரணம்

தர்ஷன் தர்மராஜ் தமிழ் மகன் தமிழ் பெயரை கொண்டு சிங்கள சினிமா முதல் சின்னத்திரை வரை 14 வருடங்களாக பெருமளவான சிங்கள இரசிகர்களை கொண்ட சாமான்ய நடிகன். திரையிலும் சின்னத்திரையிலும் இவரின் நடிப்பில் மயங்காதவர் எவரும் இல்லை. நடிப்பு இவரின் இரத்தத்தில் ஊறிப் போய்விட்டது என்று தான் கூறவேண்டும். எந்த பாத்திரமானாலும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் நடிக்கும் வல்லமை கொண்டவர். சிறுவயதில் இருந்து நடிக்கும் ஆசையை வளர்த்து கொண்டு பாடசாலையிலும் இளமை காலத்தில் பல நாடகங்களில் பல கதாபாத்திரங்களில் நடித்திருக்கும் தர்மராஜ். நடிக்க வேண்டும் என்ற இலட்சியத்திற்காக கொழும்புக்கு வந்தவர். அவர் கொழும்பில் காலெடுத்து வைக்கும் அக்காலத்தில் இலங்கையில் உள்ளாட்டு இனப்பிரச்சினை யுத்தம் நடந்து கொண்டிருந்தது. அக் காலத்தில் கொழும்பில் தமிழர்களுக்கு வேலை தேடிக் கொள்வது குதிரைக் கொம்பாகவே இருந்தது. பொலிஸ் ரிபோட், கிராம சேவகர் ரிபோட் என்று அநேகமான ரிபோட்களை கொடுத்தாலே வேலை தேடிக் கொள்ளலாம். ஆனாலும் தனது குடும்ப சுமையை அவர் தோல் மேல் சுமந்து கொண்டு கொழும்பு வந்தார். குடும்ப சுமையை போக்க மூட்டை தூக்க ஆரம்பித்தார். ஏனென்றால் அந்த தொழிலுக்கு மட்டும் தான் எந்த ரிப்போட்டும் தேவையில்லை. மூடை தூக்கும் சுமையோடு அவரின் மனதில் இன்னொரு சுமையும் இருந்தது. அது அவரின் இலட்சிய பயணமான நடிப்பு. அதை எப்படியாவது அடைய வேண்டும் என்ற தேடலில் இறங்கினார். நடிப்புக்காக அதிக விண்ணப்பங்கள் செய்து நேர்முகத் தேர்வுகளை சந்தித்தவர். தொடர் முயற்சியும் வேற்றுமைகள் துன்பங்களை கடந்து மனதிலுள்ள தெம்புடன் சிரச T.V தயாரிப்பான A9 நாடகத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பு எவ்வாறு கிடைத்தது என்று எழுத வேண்டும் ஆனால் அதைவிட அவரின் இழப்பின் பின்னரான சமகால நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க நினைத்தே இப் பத்தி வடிக்கப்பட்டுள்ளது. என்னடா கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்று நினைக்க கூடும். ஏனென்றால் தமிழ் ஊடகங்கள் குறிப்பாக



இலங்கையிலுள்ள தமிழ் ஊடகங்கள் தர்ஷனுக்கு பெருவாரியான முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆனால் தினகரன் பத்திரிகை அவருக்கு பல சந்தர்ப்பங்களில் வாய்ப்பை வழங்கியுள்ளன. தினகரன் ஓர் தேசிய பத்திரிகை என்ற நம்பிக்கையை மக்களுக்கு நிரூபித்துள்ளது. 'செந்தூரத்தில்' தர்ஷன் தொடர்பான ஒரு பத்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. சிங்கள சினிமா மன்றும் சின்னத்திரையை தமிழ் மக்கள் வெறுக்கவில்லை. ஆனால் இந்திய திரைப்படங்கள் மற்றும் இந்திய தமிழ் சின்னத்திரையின் வேரூண்டல்கள் மிக ஆழமானதும் பழையயானதாகும். அதன் தாக்கத்திலிருந்து எமது தமிழ் சமூகத்தை மீட்டெடுக்க முடியாத நிலை உள்ளது. அத்தோடு வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு சிங்கள மொழியின் பரீட்சியம் மற்றும் மொழியில் விருப்பமற்ற தன்மை இன்றும் தொடர்கிறது. அதனால் என்னவோ தமிழ் மக்கள் அநேகருக்கு தர்ஷனை தெரியவில்லை என்று நினைக்க தோன்றுகிறது. தர்ஷன் பிறந்து வளர்ந்த இறக்குவானை மண் கலைத்துவம் மிக்கது. மலையும் மலைசார்ந்த குறிஞ்சி சூழல் அத்தோடு அமைதியான சூழல் கலைஞர்கள் உருவாவதற்கு உருவாக்கப்படுவதற்கு ஏற்ற சூழலாகும். அத்தோடு இறக்குவானை நகரம் மூவின மக்கள் சேர்ந்து வாழும் ஒற்றுமையின் சின்னமாகும்.

நகரில் தமிழர் நிறைந்து வாழ்கின்றனர். அத்தோடு நகரை சூழ உள்ள பகுதியில் சிங்கள மக்களும் வாழ்வதால் தமிழ், சிங்கள உறவு மிகவும் நெருக்கமாகும். அங்கு நாம் பிரிவினைகளை காணவில்லை. அச்சூழலும் தர்ஷன் சிங்கள நடிப்புத்துறையில் காலூன்ற ஏதுவாக இருந்திருக்கும். சிரேஷ்ட ஊடகவியலாளர் விசு கருணாநிதி முகநூல் குறிப்பில் தர்ஷனின் எளிமையை சிங்கள சினிமா பயன்படுத்திக் கொண்டதென்று எழுதியுள்ளார். சிங்கள சினிமாவைவிட சிங்கள சின்னத்திரை சிங்கள மக்கள் மத்தியில் முன்னணியில் உள்ள ஊடகமாகும். சின்னத்திரையில் எளிமையும் யாதார்த்தமும் நிறைந்திருக்கும். அவரிடம் இருந்த எளிமை தன்மை சிங்கள ரசிகர்களை கவர்ந்திழுத்துவிட்டது. விசுவின் கூற்று உண்மையே. தர்ஷன் தர்மராஜ், தர்மம் அதிகம் செய்தால் எண்ணவோ எமதர்மன் அவரை இவ்வளவு சீக்கிரம் அழைத்து சென்று விட்டார் போலும். எவ்வளவோ சாதனைகளை படைத்து விட்டு சிங்கள சினிமாத்துறை சார்ந்தோர் மரணித்துள்ளனர். ஆனால் தர்ஷனுக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம். அவன் தமிழன் என்பதனாலா? இல்லை சிங்கள மக்கள் அந்த கலைஞனை தங்களில் ஒருவனாக கருதிவிட்டதனாலா? அந்த பாசம் அன்பு தர்ஷனின் மறைவு எல்லோரதும் மனதையும் உருக வைத்துவிட்டது. கண்ணீர் சிந்த வைத்துவிட்டது. அவருடன் நடித்த சக கலைஞர்களுக்கும் அவரின் இழப்பை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஜயரத்தின மலர்ச்சாலைக்கு வந்த அத்தனை கலைஞர்களும் ஒருசொட்டு கண்ணீர் சிந்தாமல் போகவில்லை. ரவீந்திர ரந்தெனிய, ரஞ்சன் ராமநாயக்க முதல் அனைத்து கலைஞர்களும் சோகத்தில் முகம் வாடிய தருணத்தில் கண்ணீரை அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் சிலர் நினைத்திருக்கலாம் நடிகர்கள் தானே நடிக்கிறார்கள் என்று. இல்லை கட்டுப்பத்த முடியவில்லை அவரின் பிரிவை அவர்களிடம் அவ்வளவு ஒன்றித்து விட்டான் தர்ஷன்.





## நடிகை சுசிலா சொல்கிறார்,...

"வயதான என்னை விட்டு விட்டு தர்ஷன் போன்ற இளம் வயதினரை ஏன் கொண்டு செல்கிறாய் என்று கடவுளை திட்டிக் கொள்ளும் அவர், எனது மகன், சகோதரன் என்று விழித்து பேசிய அவர் தர்ஷனை தனது சகோதரனாக நேசித்துள்ளார். தர்ஷனிடம் நேருக்கு நேர் நடித்த நான். சில காட்சிகளில் எனக்கு ஏசி நடித்த பின்னர். ஐந்து நிமிடம் என்னை கட்டித்த மூவி அக்கா உங்களை ஏசி விட்டேன், என்னால் தாங்கி கொள்ள முடியவில்லை என்று கூறுவானாம். தர்ஷன் நேர்மையானவன், பொறுப்புடன் வேலை செய்யக் கூடியவர் அவரின் இழப்பை யாராலும் ஈடு செய்ய முடியாது என்றார்."

"மட்ட மகே பனத் அரி சுது மெனிக்கத் அரி... ஆத்ம சிய்யக் ஆதரே! அய்யே ஒயாட்ட பன வகே ஆதரே கொடாக்... தர்ஷன் தர்ம ராஜ் (ஜெயராஜ்) கே அயிமிவீம சுது மெனிகே கோமத தராகன்னே... சுமந்தா

எனக்கு என் உயிரும், சுது மெனிக்கவும் ஒன்று தான்.....

தர்ஷன் அண்ணே (ஜெயராஜ்) நூறு ஆத்மாக்கள் கடந்த அன்பு... உங்களுக்கு உயிரிலும் மேலான அன்பு என்னிடம் உள்ளது... உங்களின் இழப்பை சுது மெனிக்கே எப்படி தாங்கிக் கொள்வது..." "றெல்ல வெரலட்ட ஆதரே" தொடர் நாடகத்தில் தர்ஷனுடன் நடித்த சமந்தா என்ற நடிகையின் முக புத்தக பதிவில்... சொன்ன வார்த்தைகள் உயிரிலும் மேலாக மதித்து விட்ட தர்ஷனை எமது மக்கள் போற்றவில்லை என்ற குற்ற உணர்வு எப்போதும் நீங்கப்போவதில்லை.

தர்ஷனை பற்றி கூறுவதற்கு வசனங்கள் போதாது. அவர் தமிழராக இருந்தாலும் சிறந்த இலங்கையர். அவனின் கலை வாழ்க்கையில் எப்போது நாட்டின் கீர்த்திக்கு களங்கம் ஏற்படுத்தியவர் அல்ல. எப்போதும் எமது நாட்டின் சம்பிரதாயங்களை கடைபிடித்தவர் "அடேய் நீ இல்லாமல் எனக்கு தனிமை உறுத்துகிறது... அடுத்த ஜெம்மத்தில் நாங்கள் சந்தித்து கதைபோம்... சொல்லாமல் போய்விட்டாய் சோகம் வாட்டுகிறது...

நடிகர் விமல் ஜயகொடியின் பதிவில்...

## நிரஞ்சனி சண்முகராஜா...

கண்ணீர் விட்டதை விட அவரால் பேச முடியவில்லை. தர்ஷனின் இழப்பை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை விம்மி விம்மி அழுதார்.

கலையின் மூலம் நாட்டை வெல்லலாம் மக்களின் அன்பை பெற்றுக் கொள்ளலாம் என்பதை தர்ஷன் நிரூபித்து விட்டார். அவரின் வாழ்நாளில் விரும்பியது எக்ஸன், கட் மற்றும் இரசிகர்களின் கை தட்டும் ஒசையை மட்டுமே என்று நிரஞ்சனி கூற, இறுதி கிரியையில் அனைவரும் கைதட்டி ஒசை எழுப்பினர். இது கலைஞனுக்கு கிடைத்த மாபெரும் கௌரவமாகும்.

இவ்வாறான அநேக பதிவுகளில் தர்ஷனை நினைவு கூரும் கலைஞர்களின் வார்த்தைகள் எமது கண்களில் கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை. சிங்கள சினிமா சின்னத்திரை உலகில் தர்ஷனின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்பதே எமது ஆணித்தரமான கருத்தாகும். இவ்வளவு கலைஞர்களையும் சிங்கள மக்களையும் கவர்ந்த நடிகர் தர்ஷன் கடந்து வந்த பாதையும் சந்தித்த துன்பங்களும் துயரங்களும் வார்த்தைகளில் சுருக்கிவிட முடியாது.

தர்ஷனின் உண்மையான பெயர் லிங்கநாதன் தர்மராஜ், அவரின் அப்பா திருமண பந்தல் மற்றும் மணவறை அமைத்தல் தொழில் செய்து வந்தவர். தர்மராஜ் இறக்குவானை சென். ஜோன்ஸ் தமிழ் (தேசிய பாடசாலை) கல்லூரியில் க.பொ.த.சாதாரண தரம் வரை படித்துள்ளார். ஒரு தம்பியும் தங்கையும். தங்கை நாட்டிய ஆசிரியர், யாழ். பல்கலைக் கழகத்தில் நாட்டியத்துறையில் பட்டம் பெற்றவர். தம்பி அப்பாவின் தொழிலை செய்து வருகிறார். மனைவி ஆசிரியர். ஒரு மகள்.

1997ம் ஆண்டு ஒரு திரைப்படத்தில் நடிப்பதற்கு அழைப்பு வருகிறது. அச் சந்தர்ப்பத்தில் தர்ஷன் தன் தொழிலை விட்டு படத்தில் நடிக்க ஆயத்தமானார். ஆனால் படபிடிப்பு நடக்கவில்லை. மீண்டும் சொந்த ஊரான இறக்குவானைக்கு செல்கிறார். அங்கு செய்வதற்கு ஒன்றுமில்லாமல் 1998ம் ஆண்டு மீண்டும் கொழும்புக்கு வருகிறார். ஒரு வேலையும் இருக்கவில்லை. நாட்டாமை வேலைதான் செய்தார். ஏழு அடி கென்டேனரிலுள்ள பொருட்களை தனி மனிதனாக இறக்கியுள்ளார். அதிகாலையிலே மீன் கடைக்கு சென்று மீன் பெட்டிகள் இறக்குவேன் அதுவும் போதாததால் வெங்காயம், கிழங்கு மூடைகளும் இறக்குவேன். என்னுடன் வேலை செய்யும் நாட்டாமைமார்களில் பல்வேறுபட்டவர்கள் இருந்தார்கள் தினமும் மது அருந்துபவர்களே அதிகம். எனக்கு தங்குமிடத்துக்கான பணம் செலவழிக்க பணம் இருக்கவில்லை. புறக்கோட்டையில் இருந்து ஆமர் வீதிக்கு நடந்து சென்று அங்கிருந்த பலகை கடையில் தான் இருப்பேன். ஆனாலும் நடிக்க வாய்ப்பு தேடுவதை கைவிடவில்லை. நிறைய நேர்முக தேர்வுகளுக்கு செல்வேன். நான் நாட்டாமை வேலை செய்து 12 ரூபாவிற்கு ஒரு கண்ணாடியை வாங்கினேன். அதற்கு முன்னால் நின்று கொண்டு வசனம் பேசி நடிப்பேன் என்று சொல்லும் தர்ஷன். ஒரு நாள் ஒரு நாட்டாமைக்கு சத்திர சிகிச்சைக்கு பண தேவைப்பட்டு என்னிடம் வந்து கேட்டார். நான் குருவி போல் சேர்த்து வைத்திருந்த 9,460/= ரூபா பணத்தை அவர் சொன்ன சோகக் கதையை கேட்டு தங்கையின் சத்திர சிகிச்சைக்கு வைத்திருந்த பணத்தை அவருக்கு கொடுத்தேன். இன்று அந்த சிங்கள நாட்டாமை கோடிஸ்வர வர்த்தகர். புறக்கோட்டையில் அவரின் புடவை கடை ஒன்று இருக்கிறது. அவரின் கடையில் என்னுடைய படம் மட்டும் தான் இருக்கிறது வேறு எந்த கடவுளின் படமும் இல்லை. என்னுடன் அக்கடி கதைப்பார்.

அப்படி இருக்கையில் 1999 ஆம் ஆண்டு சிரச T.V தயாரித்த A9 நாடகத்துக்கு புதிய முகங்கள் தேவை என்ற விளம்பரத்தை பார்த்து நானும் சென்றேன். 108 பேர் வந்திருந்தனர். நேர்முகத் தேர்வில் 20 அடி கட்டடத்தில் இருந்து குதித்து பாய முடியுமா என்று கேட்டார், ஓம் என்றேன் தேர்ந்தெடுத்தார்கள். அன்று அந்த படத்தின் இயக்குனர் சிட்னி சந்திரசேகர சொன்னார், தர்ஷன் நீர் இலங்கையிலே சிறந்த நடிகனாக வருவாய் என்று, அவரே என் பெயரை தர்ஷன் தர்மராஜ் என்று வைத்தார். இவ்வாறு தான்



சிங்கள சினிமா துறைக்கு வந்ததா தர்ஷன் ஒரு பேட்டியில் கூறியுள்ளார். அதன் பிறகு மச்சான், சரோஜா, மரியானா, சுனாமி, மாத்தா போன்ற படங்கள் மற்றும் சின்னத்திரை நாடகங்கள் போன்றவற்றில் நடித்துள்ளார். தனது நடிப்பு வாழ்க்கையில் சிறந்த நடிகருக்கான சிங்கள சினிமா விருதை பெற்ற ஒரே தமிழராவார். அத்தோடு சர்வதேச மற்றும் பல விருதுகளை பெற்றுள்ளார். இறந்த பின்னர் வாழும் மனிதர்களில் தர்ஷனை நாம் முன்னிலைப்படுத்தலாம். எம்.ஜி.ஆர்க்கு பின்னர் நாம் கண்ட பெரும் ரசிகர்கள் கூட்டத்தை சம்பாதித்தவர் தர்ஷனாவார். தான் அனுபவித்த கஷ்டங்களை மறைத்து கொண்டு இரசிகர்களை சந்தோஷப்படுத்திய தர்ஷனை நினைக்கும் போது சார்லி சப்லினின் வாழ்க்கையை திரும்பி பார்க்க வேண்டியுள்ளது. சார்லி சப்பிலினின் வாழ்க்கையும் பெரும் துன்பங்களும் சோகங்களும் நிறைந்தது. ஆனால் அனைவரையும் சிரிக்க வைத்து சந்தோசப்படுத்தியவர். தர்ஷனும் அதே போல் இருக்கிறார். நாட்டில் புரையோடிப்போயுள்ள புற்றுநோயான இனப்பிரச்சினை தொடர்பில் தர்ஷனின் கருத்து வரவேற்கத்தக்கது.






அது என்ன கருத்து என்ற கேள்வி எழலாம்? இரு இனங்களுக்கிடையில் புரிதல் இல்லாமல் அதை மனதளவில் பூட்டிவைத்து வைராக்கியம் கொண்டதாலே யுத்தம் வெடிக்க காரணமாகும். அது மட்டுமல்ல சிங்களவர்கள் தமிழர்களை இலங்கையர் என்று வட்டத்துக்குள் அடக்கவில்லை. நாமும் தமிழர், சிங்களவர் என்ற வேறுபாட்டை வளர்த்தோமே தவிர அனைவரும் இலங்கையர் என்ற எண்ணத்தை வளர்க்கவில்லை. நாம் கொடுப்பதே எமக்கு திரும்ப கிடைக்கும் அது போலவே பெரும்பான்மை மக்களின் மனதிலும் மாற்றம் வேண்டும் என்றார். ஒரு பொலிஸார் தன்னை செக் பண்ணும் போது, நீர் யார் என்று கேட்ட போது நான் இலங்கையர் என்று கூறியும் பொலிஸார் அதை ஏற்றுக்கொள்ளாமல் தனது ID வை கேட்டதாகவும் சொன்னார். இவ்வாறான கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லப்படவில்லை. சிங்கள மக்கள் அவர் கூறிய கருத்தை ஏற்றுக் கொண்டதாலே அவரை இவ்வளவு உச்சத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.



02ம் திகதி இப் பூவுலகை விட்டு சென்ற தர்ஷனை பற்றி இந்த பத்தி எழுதும் வரை சிங்கள ஊடகமும், சிங்கள மக்களும் அவர் தொடர்பில் தெரிவிக்கும் கருத்துக்களை உற்று நோக்கினால் தர்ஷனின் நேர்மையும் பழகும் பாங்கும் நாம் அவரிடம் இருந்து கற்றுக் கொள்ள அநேகம் உள்ளன. இதே தர்ஷன் இந்திய சினிமாத்துறையில் தமிழ் சினிமாத்துறைக்கு சென்றிருந்தால் கூட நாம் இவ்வளவு உயர்த்தில் வைத்திருப்போமோ என்று நினைக்க தோன்றுகிறது. தர்ஷனை தமிழர்கள் அறிந்ததை விட சிங்கள மக்கள் நன்கறிந்து வைத்துள்ளனர்.

தர்ஷன் நீர் எதுவும் பேசாமல் எம்மை அதிகம் பேச வைத்து எழுத வைத்து விடைபெற்று விட்டாய். நீ வாழ்த்ததை விட இறந்த பின்னர் எல்லோர் மனதிலும் குடி கொண்டு விட்டாய் போய்வா மகனே... இப் பூமியில் உன் நாமத்தையும் இரசிகர்கள் மனதில் நீங்காத நினைவுகளையும் விதைத்துவிட்டாய்...



ஸ்ரீ

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -




# மட்டுநகரில் அருந்ததி வழங்கும் BRIDAL FASHION SHOW & CAKE EXHIBITION




Main Sponsor MUBARAK TEXTILES
Co Sponsor AZEEF FANCY
Official Sraee Blouse Partners
Official Photography & Videography INNOVO STUDIO
Official Sraee Florist Partner
Media Partner தினகரன் Daily News SUNDAY OBSERVER

சிறப்பு தேர்ச்சிபெற்ற அழகுக்கலை நிபுணர்கள் பலர் பங்கேற்பு


## மணப்பெண் அலங்காரக் காட்சி, கேக் கண்காட்சி 15 ஒக்டோபர் 2022 அஞ்சனா கிரேண்ட் பெலஷில்

2014 ஆம் ஆண்டு அருந்ததி தனியார் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்த இன்றுவரை திருமணத்தோடு தொடர்புடைய பலதரப்பட்ட துறைகளில் காலடி பதித்து திருமணங்களில் தனக்கென்ற ஒரு தனியிடத்தைப் பிடித்துள்ளது. அசைக்கமுடியாத பலமான அஸ்திவாரத்தோடு புது புது விடயங்களை அறிமுகம் செய்து நவீன காலத்திற்கேற்றவாறு தம்மை பதிவேற்றம் செய்துகொண்டிருக்கிறது.

50 இற்கும் மேற்பட்ட அழகுக் கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் Aari Work அனுசரணையாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறும். ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்வொரு நிறுவனமும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை பல இடங்களிலும் நடாத்துவதே அருந்ததியின் குறிக்கோள்.

அந்த வகையில் 2022 கடந்த ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வ தேச மாநாட்டு மண்டபத்திலும் மார்ச் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் மிகப் பிரம்மாண்டமாக இம் மாற்றுமோதிரம் நிகழ்வு நடைபெற்றது.

இந்தச் சிறப்பு நிகழ்வானது ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பெண் முயற்சியாளர்களை இந்த சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக மீண்டுமொரு மாற்று மோதிர நிகழ்வை நடாத்த அருந்ததி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அந்த வகையில் பலரின் நன்மதிப்பையும் நேர்மறையான கருத்துக்களையும் பெற்று வெற்றிப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் மணப்பெண் அலங்காரக் காட்சி மாற்றுமொரு பிரம்மாண்டத்தோடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி மட்டக்களப்பு அஞ்சனா கிரேண்ட் பெலஷில் நடைபெறவுள்ளது. பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளின் வருகையோடு பல பிரதேசங்களில் இருந்தும் சிறப்பு தேர்ச்சிபெற்ற அழகுக்கலை நிபுணர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

எதிர்பார்ப்புகளோடு வரும் அனைரையும் நிச்சயம் இந்நிகழ்வு திருப்திப்படுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.




# அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் "கலாரத்ன விபூஷண்" விருது வழங்கும் விழா


எஸ்.பி யுடன் தலைவர் விஜேராஜ்

**2022.10.09**
**இன்று பி.ப 2 மணி**
**கொழும்பு 07,**
**புதிய நகர மண்டபத்தில்**

### பிரதம அதிதிகள்



**மனோ கணேசன் எம்.பி** (முன்னாள் அமைச்சர்)

**பிரபா கணேசன்** (முன்னாள் இராஜாங்க அமைச்சர்)

**புரவலர் ஹாசிம் உமர்** (டவர் ஹோல் பணிப்பாளர் சபை உறுப்பினர்)

**தே.செந்தில்வேலவர்** (தினகரன்/ வாரமஞ்சரி பிரதம ஆசிரியர்)

ஊடக அனுசரணை: தினகரன் தினகரன் வாரமஞ்சரி







கலைஞர் விஜேயின் தலைமையில் இயங்கும் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம், கடந்த 4 வருடங்களாக தலைநகரில் உள்ள கலைஞர்களையும் சமூக சேவையாளர்களையும் தேர்ந்தெடுத்து விருது வழங்கி கௌரவித்து வருகிறது.

இந்தாண்டு வருடாந்தம் வழங்கப்படுகின்ற விருதுக்கு "கலாரத்ன விபூஷணன்" என நாமம் சூட்டப்பட்டுள்ளது. வழமைப் போல இவ்வருடமும் நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களும் சமூக சேவையாளர்களும் கலாரத்ன விபூஷணன் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இவ் விழாவானது இன்று 2022.10.09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள குளிரூட்டப்பட்ட புதிய நகர மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தினகரன், வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் நடைபெறும் இந்த விழாவில் கொழும்பு கருமாரியம்மன் ஆலய பிரதம குரு குருசாமி ஸ்ரீ ரங்கநாத சுவாமி விஜயாநந்த், அகில இலங்கை ஐயப்பன் சுவாமி யாத்திரிகர் சபையின் செயலாளர் ரவி குருசாமி, அமைப்பின் முன்னாள் அமைச்சர் மனோ கணேசன், முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன், புரவலர் ஹாசிம் உமர்(டவர் ஹோல் பணிப்பாளர் சபை உறுப்பினர்) தினகரன்/ வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தெ. செந்தில்வேலவர், கொழும்பு 11, கதிரேசன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கதிரேசன் ஆலய அறங்காவலர் கனக ரகுநாதன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ, சக்தி தொலைக்காட்சியின் டைரக்டரும் தயாரிப்பாளருமாகிய தினேஷ் கனகராஜ், கலைஞர்களான தேசபந்து எஸ். குமரேந்திரன், கே.மகேஸ்வரன் சுருதிப் பிரபா, நவகம்புர கணேஷ் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு இந்த விருதுகளை வழங்கவுள்ளார்கள். கலைஞர்களும் சமூக சேவையாளர்களும் இங்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம், வருடாந்தம் இவ்வாறான விழாக்களை நடத்தி நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள கலைஞர்களையும் சமூக சேவையாளர்களையும் இவ்வாறு கௌரவிப்பதுடன் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும் கிரிக்கெட் போட்டிகளையும் நடத்தி வருகின்றது.

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் கலைஞர் விஜே, கடந்தாண்டு பாடு நிலா எஸ். பி. பாலசுப்பிரமணியத்திற்கு அஞ்சலி கூட்டங்களை நடத்தி வந்ததுடன், இந்தாண்டு நடைபெறும் இவ்விழாவில் பத்து கலைஞர்களுக்கு பாடு நிலா எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் நினைவாக பத்து விருதுகளை வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -








## உறவே உனக்காக

நானுஓயா டெஸ்போட் தி.தர்விேனஷ்

தொட்டு விட்ட என் தொடர்பு
தொடர்ந்து வரும் உன் பின்னே!
உனைப் பார்க்க உன் விழிகள்
பதிலளித்தனவோ!

கண்டதும் நீ சொன்ன வார்த்தை
கொள்ளை கொண்டது என்
இதயம் உன் நினைவை

நாளாந்தம் நாளிகைகள்
நயமான பேச்சுக்கள்
ஆங்காங்கே சில வரிகள்
சிந்திக்க பல வழிகள்!

சேர்ந்த உன் வாழ்வு
சேர்ந்த என் உறவில் இனி
சேராது உன் இதயம்
சேராயோ என் உறவில்!

காலத்தின் கோலங்கள்
கர்த்தரின் கையில்
பக்கத்தில் நீயிருந்தால்
சொர்க்கங்கள் தேவையில்லை!

உயிரிலும் மேலான என்
உறவின் வருகைக்கு
ஆவலுடன் காத்திருப்பேன்
அன்பே உன் வருகைக்கு!

## வேர்களை மறந்தவர்கள்

அஸ்மியா நிசாம், அக்குரணை

பற்றிய கைகளை மறந்து
உயரப் பறக்கின்ற
பட்டங்களை
ஆராதிக்கும் உள்ளங்கள் இங்கே,
நிறைய உண்டு

ஏற்றிவிட்ட ஏணியை
எட்டி உதைத்துவிட்டு
வீர வசனம் பேசி கொண்டிருக்கும்
வீணர்கள் இந்த வீதிதோறும்
உண்டு

வேர்களை மறந்து விட்டு
வண்ணத்தில் மட்டுமே – மனித
எண்ணத்தை ஆளுகின்ற
மஞ்சரிகளின் மானிலம் – எங்குமே
உண்டு

இங்கு
அஸ்திவாரங்களை பற்றி
யாரும் அலட்டிகொள்வதில்லை
சிகரங்களை தொட்டவர்களுக்கு
பின்னால்
சிராய்ப்புடன் இருப்பவர்களை
பற்றியும் யாரும் சிந்திப்பதில்லை...





## யுக வஸந்தம்

வரக்காமுறையூர் ராசிக்

ஜாஹிலிய்யாப் பாலைப் புழுதியிலே
ஜன்னத் ரோஜா மலர்ந்ததுவே
ஜன்னத் ரோஜா மலர்ந்ததனால்
ஜாஹிலிய்யா மண்ணில் உதிர்ந்ததுவே

அந்த கார இருளிடையே
அருளின் ஜோதி பிறந்ததுவே
அருளின் ஜோதி பிறந்ததனால்
அனாச்சார மெல்லாம் மறைந்ததுவே

தயவில்லா இத் தரணியிலே
தௌஹீத்துச் சுடர் எழுந்ததுவே
தௌஹீத்துச் சுடர் எழுந்ததனால்
தரித்திர மெல்லாம் சரிந்தனவே

சாத்திரங்கள் சூழ் செகத்தினிலே
சத்தியங்கள் வெகுண் டெழுந்தனவே
சத்தியங்கள் வெகுண் டெழுந்ததனால்
சடத்துவங்க ளெல்லாம் சாய்ந்தனவே

வாழும் வழியறியா வையகத்தில்
வான்மறைக் குர்ஆன் வந்ததுவே
வான்மறைக் குர்ஆன் வந்ததனால்
வஸந்தம் மண்ணில் பிறந்ததுவே

கருமை படர்ந்த காசினியில்
கடமைக ளைந்து வந்ததுவே
கடமைக ளைந்து வந்ததனால்
காரிரு ளழிந்து போனதுவே

## என் கவி வரிகளும் நீயம்மா....

ஸ.ஹ.ஸம்ரூத்
மூதூர்01

அன்னையே!
உன் தியாகத்தால் அன்று
உன் மடியில் குழந்தையாய் நான்

நீர் பொக்கிஷமாய் வளர்க்கையில்
உன் கண் எதிரே இன்று மாணவனாய் ஆனேன்....

பல விடியல்கள் ஆனந்தமாய் கழித்தேன்....
உன் அருள் உணர்ந்து சில விடியல்கள்.....

கண்ணீருடன் கல்வி எனும் கடலை
கடக்க முயன்றவள் நானம்மா!

அதிலே காதலெனும் அலைகள்
என்னை தடவியதம்மா!

காதல் அலைகளை கடந்து உனக்காக
கல்வி எனும் கடலை கடக்க
முயற்சி எனும் தோணியை
தேடியவள் நானம்மா!

தோணியிலே நான் கல்வியை கடந்து
உன் பெயரை உரக்க உச்சரிப்பேன் ஓர் நாள்......

அன்று நான் ஓர் பட்டதாரியாக.......

## ஆசான்



ஆசான் பணி
என்பது கல்வி
மட்டும் போதிப்பது அல்ல......

நல் ஒழுக்கம்
பண்பு ஆன்மீகம்
பொது அறிவு
அனைத்தும்
மாணவர்க்கு
எடுத்து கூறி
தன்னலமற்ற
தியாக மனபான்பை கொண்டவரே
சிறந்த ஆசான்....

மாணவரின்
குழப்பங்களை
தீர்த்து தவறுகளை
தவிர்க்க வைத்து
அனைத்து கல்வியை
கற்பித்து வெற்றிற்கு
வழி காட்டி தோழனாக தோல்
கொடுத்து வாழ்க்கை
பாதையில் உயரத்திற்கு கொண்டு சென்று
ஒட்டு மொத்த
உலக அறிவையும்
ஒரே இடத்தில்
இருந்து கற்று
தருபவன் எங்கள் ஆசான்.....

ஆகையால் ஆசான்
மாணவர்களுக்கு
கடவுளாக விழங்குகிறார்.....

## சாடல் அம்பு!

தர்ஹா நகர் ஸுஎம்ஸா

ஒரு
வாழும் ஆளுமை
நூல் வாகனமேறி
மேடையில் நின்றது

ஆளுமை வாகனத்துக்கு
வந்தனம் பாடும் சந்தர்ப்பத்தை
சந்தி சாரலெங்கும்
சந்தன வாசம்
வீச விடாமல்
சதிகள்
சரிந்து போகச் செய்தன

பரவலாக
நாற்றம் வீசுவதில்
நாட்டம் எடுக்காமல்
நோக்கம் மட்டும்
எழுதி வரும்
ஊரில் ஊற்றெடுத்த
உவமைக் கவிஞன்

எனது அதிபரின்
வாழும் ஆளுமை
நூல் வாகனத்தில்
வரிகள் சிலதை
அமரச் செய்வதற்கு
ஆசனம் கிடைக்கப் பெறாமல்
காழ்ப்புணர்ச்சி கள்
கால் பதித்து விட்டன

அன்று_
எனது
முதல் கவிதை நூல்
பிறப்புச் சான்றிதழ்
பெற்றபோது
பிரதம அதிதி யாகி
வளர்ச்சிக்கு
பிராணவாயுவை
வரதட்சணையாக
வரம் தந்தவர்

இன்று
அவரது
நூல் வாகனத்தில்
எனது கவிதை
குந்தி இருப்பதற்கேனும்
சிந்திப்பதற்கு
சந்திக்கவிடாது
சோகத்தைச் சொந்தமாக்கியது

சிறியவர்களென்றாலும்
வீரத்தில்
பெரியவர்களென்பதால்
ஓரத்தில் ஒதுங்கி
தூரமாக்கி விடாதீர்கள்!
கடுகும் சிறிதுதான்;
ஆனாலும்,
காரத்தில் பெரிதென்பதை
நினைவிலிருந்துதான்
நீக்கி விடலாமா?

எனவே,
தகுதிக்கு
தாழ்ப்பாள் போடவிடாது
தரத்துக்கு
உரம் போடுவது
சிரம் பணிய
இறைவனை இருகரமேந்துகிறேன்

## ஒருதாய் வயிற்று பிள்ளைகள் நாம்...

வி.அபிவர்ணா
முல்லைத்தீவு.

அழகாய் தமிழில் வளமாய் பேசி
நலமாய் வாழ்ந்தோம்
எங்கள் நாட்டில்
இடையில் ஒருதடை
இடராய் வந்தது
அந்நிய தேசம்
பெயர்ந்தோம் வலியுடன்

பிறந்து வளர்ந்து வாழ்ந்த நாடு
மனதில் தங்கி மகத்துவம் ஆனது
மறைந்த வாழ்வை நாங்கள் தேடி
அந்நிய தேசம் நாடியே சென்றோம்

இன்றெங்கள் வாழ்வில்
நிம்மதி இல்லை
சுதந்திரக் காற்றெம்மை
தீண்டவும் இல்லை
நன்றெதும் நாங்கள்

உணரவும் இல்லை
சோதனை வேதனை
சூழ்ந்தது எமக்கு

ஆயினும் நாங்கள்
அசரவும் இல்லை
ஆதிக்க செயல்களை
செய்வதும் இல்லை
ஒருதாய் வயிற்று
பிள்ளைகள் போலே
உயிரால் உணர்வால்
ஒன்றாய் வாழ்கிறோம்

புலம்தான் பெயர்ந்தோம்
புலனில் நாங்கள்
தமிழாய் வாழ்வோம்
தமிழனாய் என்றும்
யாரும் எவரும் எதற்கும்
என்றும்
எங்களை அழித்திட
நினைத்தால் அழிப்போம்



## என்னவளுக்காய்..!

பொத்துவில் பாவலன் பௌஸான்

வண்ண நிலவை விட
வடிவான முகம் உனக்கு
பெண்ணே உன்
அழகெல்லாம் கவிதைகள் எனக்கு...!

தங்க மேனிக்கே
தங்க ஆபரணமெதற்கு
பொன்னுடம்பிற்கே
தங்கமெல்லாம் தவமிருக்கு...!

நிலவு வெளிச்சத்தில்
உலவுகையில் உன்
நிழலும் அழகு,
நிழலையும் விட நீயழகு...!

பூவினத்தத் தொட்டுத் தொட்டுச்
செய்தடுத்த பூவிழியோ...?
ராத்திரியே செப்பனிடடுத்
தட்டிச் செய்த கருமுடியோ...?

வற்றாத நதியாய்
மனதோடு நின்றாய்
மங்காத அழகையெல்லாம்
பார்க்க வைத்தே ஏன் சென்றாய்...!

## மின்னல் விழுந்தது

ரதிதேவி, மானிப்பாய்

மின்னல் விழுந்த ஒரு கிணறு
மின்மினிகள் பறந்த வானம்
தன்னைத் தொலைத்துவிட்ட பிம்பப் பிழை
தாகம் தீர்க்க வந்த வானின் மழை
ஒற்றைக் குறியில்

ஒரு விழி இடையில்
பாய்ந்து தப்பிக்கும் மானாய்
மனம் ஓடும்
அவன் பார்வை அதுவே –
ஆன்மாவின் நிலநடுக்கம்
நெடு நாள் கொண்ட கனவோ
நொடியில் பஸ்பமாகும்

சூரியன் உருகி
பால்வெளி மருகி
செல்லுது செம்மஞ்சள் நதியாய்
விண்மீன்களும் விழுந்து
பூமியில் விளைந்து
ஆயிரம் கதிர் கொண்ட விருட்சங்களாய்

ஒரு இரவு முடியும் தருணம்
விழி மயக்கம் தீரும் தருணம்
கனவுகள் களைத்து நீங்கும் தருணம்
நதியுள் எறிந்த கல்லொன்று
மீண்டும் எழுகுது மேல் பரப்பிற்கு



## ஆளுமையால் வாழ்வு

குப்பிளான் குமரன்

ஆளுமைப் பண்புகளுடன்
வாழுகின்ற மனிதர்கள்
ஆனந்த வாழ்வுபெற்று
வனப்புடன் வாழுவர்

அரியணையில் ஏறுவதற்கு
பாரியளவில் துணைபுரிவது
ஆளுமைப் பண்பு என்றால்
அனைவரும் ஏற்றுக் கொள்வர்

தலைவர்கள் அனைவரும்
கலைகளைப் பயில்வதனால்
தமது ஆளுமைப் பண்புகளை
உயர்த்திக் கொண்டனர்

ஆளுமைப் பண்புகள்
ஆழ ஊடுருவி வாழ்வை
வளப்படுத்துவதனால் வாழ்வு
ஆளுமையால் உயர்வு பெறுகிறது

## விடை பெறும் இரவுகள்....

நுஸ்ரத் மஹ்ரூப்ர்
மாதம்பை

இந்த வாழ்க்கை
எதுவெல்லாம்
கற்றுத்தரப் போகின்றதோ...

இருள் சூழ்ந்த கருவறை
வாழ்வு தொடங்கி
இருளான சமாதி வரை
எத்தனை பாடங்கள்...
இதுதான் பாடமென்று
அடித்துச் சொல்ல
இங்கே யாரால்தான் முடியும்...

திருப்திகளும் அதிருப்திகளுமாய்
ஒரு வாழ்வு...
வீம்புகளும் விட்டுக்கொடுப்புகளுமாய்
ஒரு வாழ்வு...

நினைத்த வாழ்வு கிடைத்த
சந்தோஷத்தில் சிலர்...
நினைக்காத வாழ்வு கிடைத்த
சோகத்தில் சிலர்....

தனக்கே உரிய தன் வாழ்வை
வாழ்ந்து முடிக்க சிலர்..
பிறருக்காய் வாழ்ந்து மடிய
இன்னும் சிலர்...

சுயம் தொலைத்து
சுகம் தேடலில் ஒரு சிலர்...



சுகம் தேட சுயம் இழக்காமல்
இன்னும் சிலர்...

இயந்திரத்தனமான வாழ்க்கையில்
இலட்சியத்தோடு ஒரு சிலர்....
இலக்கின்றி இன்னும் சிலர்...
இலட்சியத்தோடு பயணிப்பினும்
இலக்கின்றிப் பயணிப்பினும்
இறுதி இலக்கான மரணம்
இரு பாலாருக்கும் பொதுவானதே..

கரை நோக்கி வரும் அலைகள்
கடல் நோக்கி சென்றுவிடுவது போல்..
கையிருப்பில் உள்ள
கவலைகளும் கரைந்துதான் போய்விடும்...

விடை பெறும் இரவுகள்
விடைபெற்ற வண்ணமிருக்கையில்
விடியா விடியல்களாய்
விடை தேடலில் விடியல்கள்....
விடை தேடி முடிகையில்
விடை பெறும் நேரமும் வந்துவிடுதே...

## நாளைய தலைவர்களுக்காக...!

இரா.ஜெயக்குமார்

சூறைக் காற்றினிலே
சூடம் எரிப்பதுபோல்
நச்சுச் சூழலிடை
நம் பிஞ்சுகள் வளருகிறார்!
குருத்துகளை கருக்கவென
விரித்த வலைகள் பல...!
குறிப்பால் உணர்ந்தாலே
குறிக்கோளை அடைந்திடலாம்!
விலை வாசி ஏற்றம் வந்து
விலங்கிடலாம் கல்விக்கு!
போதைப் பொருள் பழக்கம்
பொசுக்கிடலாம் பிஞ்சுகளை!
தடைகள் பல தாண்டி
தடம் பதிக்க வேண்டாமோ?
நாளைய தலைவர்களை
நாம் செதுக்க வேண்டாமோ?

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






# கருணைக்கடல் காருண்ய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்



கருணையின் மறுவுருவான காருண்ய நபி (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய வெற்றிகரமான சமூகப்புரட்சிக்கு ஆணிவேராக அமைந்தது அன்பும், கருணையுமே ஆகும்.

நபி ஸல் அவர்கள் பற்றி அல்லாஹ் தன் திருமறையில், '(நபியே) உம்மை அகிலத்தாருக்கு அருட்கொடையாகவேயன்றி நாம் அனுப்பவில்லை.' (அல் அம்பியா –107) என்றும் மற்றொரு வசனத்தில் '(விசுவாசிகளே)! உங்களிலிருந்து திட்டமாக ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார், (உங்களுக்கு யாதொரு துன்பமும் ஏற்பட்டு) நீங்கள் கஷ்டப்படுவது அவருக்கு மிக வருத்தமாக இருக்கும். அவர் உங்கள் மீது மிக்க பேராசை கொண்டவர் விசுவாசிகளோடு மிக இரக்கமுள்ளவர்' **(அத் தவ்பா–128)**.

இவ்விரண்டு வசனங்களிலும் நபி (ஸல்) அவர்களது கருணையின் கனதியையும், அதன் எல்லையும் மிகத் தெளிவாக அல்லாஹ் குறிப்பிடுகின்றான். 'றஹ்மதுல் லில் ஆலமீன்' என்ற வாசகத்திலிருந்து, அவர் மனித குலத்திற்கு மாத்திரமல்ல இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து படைப்புகளுக்கும் 'ரஹ்மத்' கருணையாக அனுப்பப்பட்டுள்ளார் என்பது புலனாகின்றது. இதை நிரூபணம் செய்யும் வகையில் தான் அவரது முழு வாழ்வுமே அமைந்திருந்தது. கருணையின் மறு உருவாக வாழ்ந்ததால்தான் மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் இவ்வுலகமே வியந்து பார்க்கக்கூடிய அளவு உன்னதமான ஒரு சமூகத்தை உருவாக்கக்கூடியதாக இருந்தது.

கருணை, அன்பு, மன்னிப்பு, மாண்பு என்று எதுவுமே தெரியாமல் மனித நாகரிகத்திற்கும், மனித பண்பாடுகளுக்கும் எதிரான ஜாஹிலிய்ய சமூகம் என்று வர்ணிக்கப்பட்ட அச்சமூகம், நபி (ஸல்) அவர்களது கருணைக்கு முன்னால் அடிமையாகிவிட்டது. உண்மையான அன்பும், கருணையும், கசியாத உள்ளங்களையும் கசிய வைத்து விடும் என்பதற்கு இதைவிட வேறொரு சான்றும் தேவையில்லை.

நபி (ஸல்) அவர்களது கருணையின் உச்ச நிலையை தெளிவுபடுத்துகின்ற பல்வேறு வகையான வியத்தகு நிகழ்வுகளை அவரது வாழ்க்கையிலே கண்டுகொள்ளலாம். குறிப்பாக நபி (ஸல்) அவர்களை எதிர்ப்பதிலும், அன்னாருக்கு துன்புறுத்தல்கள் செய்து துன்புறுத்தி, உடலாலும் உள்ளத்தாலும் காயப்படுத்துவதிலும், அவர் உயிராக நேசித்து முழு மூச்சோடு ஈடுபட்டு வந்த பணியை முடக்குவதிலும் குறியாக செயல்பட்டவர்களோடு நபி (ஸல்) அவர்கள் காட்டிய கருணையும், அன்பும் அளவிட முடியாதது.

எந்தவொரு தனிமனித, சமூக வாழ்விலும் எவ்வகையான பாதிப்போ, சங்கடமோ ஏற்படா வண்ணம் வாழ்வை வசந்தமாக்க வல்ல ஒரு அழகிய ஆயுதம் தான் அன்பு, கருணை என்பதை உலக மாந்தருக்கு அன்னார் கற்றுக் கொடுத்துள்ளார்கள். ஒரு தனி மனிதனின் மானம், கௌரவம், நலன்கள் அனைத்தும் முறையே பேணப்பட்டு, அவனது அறியாமையின் காரணமாக அல்லது அவனது மரபு கலாசாரத்தைத் தழுவி பிற சூழலுக்கும் நாகரிகத்துக்கும் முரணாக அவனிலிருந்து வெளிப்படுகின்ற செயற்பாடுகளை முறையே அணுகி நெறிப்படுத்துவதுதான் கருணையின் இயல்பு என்பதை நபி (ஸல்) அவர்கள் எமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். இது எல்லாவற்றையும் தாண்டி மற்ற மனிதர்களை மனிதர்கள் என்ற வகையில் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கி இருக்கின்ற கௌரவத்தையும் மதிப்பையும் முழுமையாக வழங்கி வாழ்வதே வாழ்வை மகிழ்வுறச் செய்யும். இவ்விடயத்தில் சாதி, இனம், மதம், மொழி என்ற எந்த வேறுபாடும் இல்லாமல் அனைத்து படைப்பினமும் கருணையுடன் நடாத்தப்பட வேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும்.

இவ்வுலக வாழ்வு அருள் நிறைந்ததாகவும் மகிழ்ச்சியானதாகவும் மாற வேண்டுமெனில் பூமியிலுள்ள மனிதர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பையும், இரக்கத்தையும் பரிமாறி கருணை உள்ளம் கொண்டவர்களாக வாழ வேண்டும் என்று இஸ்லாம் பணிக்கின்றது. ஒருவருக்கொருவர் இரக்கத்தோடும் கருணையோடும் வாழ்கின்ற போது அவர்கள் மீது அல்லாஹ் அவனது கருணை மழையைப் பொழிகின்றான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் 'இரக்கம் காட்டக் கூடியவர்கள் மீது கருணையாளனாகிய அல்லாஹ் இரக்கம் காட்டுகின்றான். பூமியில் உள்ளவர்கள் மீது இரக்கம் காட்டுங்கள் வானில் உள்ளவர்கள் உங்கள் மீது இரக்கம் காட்டுவார்கள்.' **(ஆதாரம்: சுனன் அத் திர்மிதி)**

**கலாநிதி அல்ஹாபிழ், எம்.அய்.எம். சித்தீக்**
(அல்இன்ஆமி)
B.A.Hons,(Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

இந்த நபிமொழியிலே இரக்கம் காட்டுவதற்கும், கருணை கொள்வதற்கும் இனம், மதம், மொழி என்ற எந்த அடையாளமும் தேவையில்லை என்பதை நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். 'பூமியில் உள்ளவர்கள் மீது' என்று பொதுப்படையாகவே கூறியுள்ளார்கள். குறிப்பிட்ட ஒரு சாராரை நபி (ஸல்) அவர்கள் முற்படுத்தவில்லை. உயிரினங்களுக்கிடையில் அன்பு காட்டுவதில் எவ்வித பாகுபாடோ, பக்கச்சார்போ இல்லாத நிலையில் சமநிலை பேணி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் இஸ்லாம் பணிக்கிறது. எதிலும் எல்லை மீறிச் செயற்படுவதையோ அல்லது பொடுபோக்காக செயற்படுவதையோ இஸ்லாம் வன்மையாக கண்டிக்கிறது.

இன்றைய உலகின் போக்கு, கருணையற்ற, கல்நெஞ்சங்கொண்ட ஜடப்பிண்டங்களாக மனிதர்களை மாற்றி விடுவதில் முனைப்பாக உள்ளது. தன்னோடு ஒன்றாக வாழ்கின்ற தனக்காக உழைக்கின்ற, தனக்காகவே வாழ்கின்ற மனிதர்களுடன் கூட கருணை கொள்வதற்கோ, அன்பை பரிமாறிக் கொள்வதற்கோ எந்த அவகாசத்தையும் இன்றைய உலக ஒழுங்கு பெரும்பாலான மனிதர்களுக்கு வழங்குவதில்லை. இதைத்தான் இன்றைய நவீன உலகு (Individualism) தனித்துவம் என அழகுபடுத்தி போற்றி மகிழ்கின்றது. இது சுயநலத்தின் மிக மோசமான வடிவமாகும். இது கருணையிழந்த உள்ளங்களிலிருந்து பிறக்கின்ற மனித பண்பிற்கு முற்றிலும் மாற்றமான சிந்தனையாகும். இச்சிந்தனைக்கு அடிமையானவன் தன்னை குறித்து மட்டுமே கவலைப்படுபவனாக மாறி விடுகின்றான்.

முதலில் அவன் தன்னுடைய நாடு, தன்னுடைய சமூகம் என எல்லா வட்டங்களையும் விட்டும் வெளியேறி விடுகிறான். 'நான்' மற்றும் 'என்னுடைய குடும்பம்' என்ற அளவோடு அவனுடைய பார்வை சுருங்கிவிடுகின்றது. பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக குடும்ப உறவுகளின் முக்கியத்துவமும் குறைந்து கொண்டே போய்விடுகின்றது. ஒரு கட்டத்தில் அவனது ஆர்வங்கள், ஈடுபாடுகள், சிந்தனைகள், எண்ணங்கள் ஆகிய எல்லாவற்றின் மையம் அவனுடைய சுய ஆளுமை மட்டுமே என்பதாக நிலைமை வளர்ச்சி பெற்றுவிடுகின்றது.

ஒரு சமூகம் மனிதப் பண்பாடும் நாகரிகமும் கொண்ட சமூகமாக மாற வேண்டுமெனில் அச்சமூகத்தில் அன்பும் கருணையும் நிறைந்த மனிதர்கள் உருவாக்கப்படவேண்டும். மனிதர்கள் தொடர்புபடுகின்ற ஒவ்வொரு விடயத்திலும் கனிவும், கசிவும், இனிமையும், இங்கிதமும் இருக்கவேண்டும்.

எனவே நாம் காணும் இன்றைய இரக்கமற்ற, கொடுமையும், வன்மமும் நிறைந்த உலகிலிருந்து மீண்டெழ வேண்டுமெனில் மனித மனங்கள் அன்பும், கருணையும் நிறைந்ததாக மாற வேண்டும். மனித வாழ்வோடு தொடர்புபடுகின்ற ஒவ்வொரு செயற்பாடுகளிலும் கருணையும், கனிவும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இதில் இனம், மதம், மொழி என்ற அனைத்து வேறுபாடுகளுக்கும் அப்பால் 'அனைத்து படைப்பினங்களும் அல்லாஹ்வின் குடும்பத்தினர்' என்ற நபிமொழியை அளவுகோலாகக் கொண்டு செயற்பட வேண்டும். அப்போதுதான் நாம் விரும்பும், யுத்தமற்ற, மோதல்கள் அற்ற அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு உலகை காணலாம்.

## பெற்றோரை பேணுவது பற்றி

அண்ணல் நபியைத் தேடி அவைக்கு வந்தார் ஒருவர்,
அல்லாஹ்வின் தூதரே அறியவந்தேன் ஒருவிடயம்,
அல்லாஹ் விரும்பும் கிரியை எதுவெனக் கேட்டார்,
வேளை தவறாது தொழுக விழைவது என்றார்.

அதற்கடுத்து அல்லாஹ்வின் விருப்பம் எது
எனக் கேட்க,
அன்னை, தந்தையரை அன்புடன் பேணல் என்றார்,
அண்ணல் நபி கூறியதும் அகமகிழ்ந்த
அம்மனிதர்,
அன்பு சலாம் கூறி அங்கிருந்து அகன்று விட்டார்.

வேறொருவர் வந்து நபிநாதரிடம் சொன்னார்,
வேதத்திரு நபியே வீடிழந்து, மதியிழந்து
வேண்டும் சுகமிழந்து வல்ல இறை பாதையிலே
புனித போர்பூண பூண்டுவிட்டேன் மனவுறுதி,
போருக்கான பெறுமானம் எதுவென்று கூறுங்கள்.

என்றுரைத்த இதைக்கேட்டு ஏந்தல் நபி அடை...ன்,
நன்று உங்கள் பெற்றோர் சுகமா? எனக் கே...
அல்லாஹ்வின் பேரருளால் இருவருமே நல...
நல்லபடி வாழுகிறார் என்றவரும் பதிலளி...

அப்படியா! அன்னை தந்தை இருவருக்கும்
அன்பாகத் தொண்டு செய்து ஆதரவு பேணு...
அல்லாஹ் மிக விரும்பும் பணி இதுவே!
புனிதப்போர்,
ஹஜ்ஜுக்கான நன்மை அதிலுண்டு என்...
எம் நபி, இனிமையாக.

சுஜப் எம்,காசிம்



## சீரான வாழ்க்கைக்கு சிம்மாசனம் தந்தார்

நமதுநபி அல்லாஹ்வின் உயர் தூதுராவார்
மானுடரின் இதய கமழ மெங்கும்
வற்றாத வாசனையைப்போல் கலந்த கோமகன்
தீனுல் இஸ்லாத்தின் பேரொளியைத் தந்தார்.
முன்நபிகள் பெற்ற புகழ் வானைத் தாவ
ஒளிச்சுடராய் நபி உதிதார் இருளைப் போக்க
மக்கநகர் புனித மண்ணில் மலர்ந்த நபி
தேனாய் இனிக்கின்ற மறையைத் தந்தார்.

அறியாமை வெள்ளத்தில் மூழ்கி நின்ற
அரபுலகை எங்கள்நபி கச்சிதமாய் மீட்டெடுத்தார்.
எந்நாளும் இம்மண்ணில் அழியா தொன்றாய்
அற்புதமான புனித குர்ஆனை ஆக்கித் தந்தார்.
மனிதகுலம் உன்னதமாக வாழ வேண்டித்
தீங்கற்ற நல்வழியைக் காட்டித் தந்தார்.
உண்மையின் உத்தமரானார் மனிதரெல்லாம்
பொறுமையால் வாழ்வதையே குறியாய்க் கொண்டார்.

ஆக்கினார் ஹதீஸ் கலைகள் இலக்கணங்கள்
கனிசுவையை வெல்லுகின்ற இலக்கியங்கள்
தலைமுறைகள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு
அறவொழுக்கம் பண்பு எல்லாம் தந்தார்.
நிலையான வாக்கைக்கு தொழுகையைத் தந்தார்.
அடுத்தவரின் பசியறிய நோன்பினைத் தந்தார்.
எல்லோரும் போற்றிப் புகழும் மனிதர் ஆனார்.
இனிய இஸ்லாத்தை எந்நாளும் சுவைக்கச் செய்தார்.

பிறந்தவுடன் தூய்மையின் தூயவர் ஆனார்.
சீரான வாழ்க்கைக்குச் சிம்மாசனம் தந்தார்.

இக்பால் அலி

## மனித நேயம் மிக்க மாமனிதர்

அல்லாஹுதஆலா உலகத்தாருக்கு அருட்கொடையாக நபி (ஸல்) அவர்களை அனுப்பினான். அன்னார் ஆரம்ப காலம் முதலே நேரிய சிந்தனை, ஆழ்ந்த பார்வை, நுண்ணறிவு, சகிப்புத்தன்மை, சிறியவர்கள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் அன்புகாட்டுதல், தவறுகளை மன்னித்தல், தமது சமூகத்தவர்களுடன் நல்ல அணுகுமுறையைக் கையாளுதல் போன்ற நற்பண்புகளைக் கொண்டவர்களாக விளங்கினார்கள்.



அல்லாஹு தஆலா தன் அருள்மறையில், 'நிச்சயமாக, நீங்கள் மகத்தான நற்குணமுடையவராகவே இருக்கின்றீர்கள்.' ***(அல் குர்ஆன் 68:4)*** என்று குறிப்பிட்டுள்ளான்.

அண்ணலார் (ஸல்) அவர்கள் தமது மதிநுட்பம், நல்ல அணுகுமுறை, முதிர்ச்சியான அறிவு என்பவற்றைக் கொண்டு தவறு, குற்றம் செய்பவர்களை மன்னித்து விடக்கூடியவர்களாகவும் கருணைகாட்டக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். அன்னார் தம் ஸஹாபா தோழர்களுக்கு மத்தியில் ஆலோசனை செய்து முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாகவும் நேர்வழி காட்டக் கூடியவர்களாகவும் விளங்கினார்கள்.

அதேநேரம் மற்றொரு அத்தியாயத்தில், 'அல்லாஹ்வுடைய ரஹ்மத்(என்னும் கிருபை)யின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்துகொள்கிறீர். (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள். எனவே அவர்களின் (பிழைகளை) அலட்சியப்படுத்தி விடுவீராக. அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக, தவிர, சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும், பின்னர் (அவைபற்றி) நீர் முடிவு செய்துவிட்டால் அல்லாஹ்வின் மீதே பொறுப்பேற்படுத்துவீராக! நிச்சயமாக அல்லாஹ் தன் மீது பொறுப்பேற்படுத்துவோரை நேசிக்கின்றான். (3:159) என்றும் அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

அஷ் ஷெய்க்
**எ.எச்.எம். மின்ஹாஜ் முப்தி**
(காஸிபி)

நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் மஸ்ஜிதுன் நபவியில் ஒரு முறை அமர்ந்திருந்த சமயம், அங்கு ஒருவர் வந்து சிறுநீர் கழிக்கலானார். அதைக் கண்ட ஸஹாபாக்கள் அவரை தடுக்க முற்பட்டனர். இதனை அவதானித்த நபி(ஸல்) அவர்கள், அவர் சிறுநீர் கழித்து முடிக்கும் வரையும் அமைதியாக இருக்கும் படியும், அதன் பின்னர் அந்நபரை அழைத்து இனிமேல் இவ்வாறு செய்யாதே என்று உபதேசம் செய்ததோடு, ஸஹாபாக்களிடம் அந்த இடத்தில் தண்ணீர் ஊற்றி விடும் படியும் கூறினார்கள்.

***(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)***

மற்றுமோர் அறிவிப்பில் அனஸ் (ரழி) அவர்கள், அந்த நபரை தன்னருகே அழைத்து 'மஸ்ஜித்களை சிறுநீர் கழிப்பதற்கோ அல்லது அழுக்கு செய்வதற்கோ பயன்படுத்துவது பொருத்தமானதல்ல. உண்மையில் அவை அல்லாஹ்வை நினைவு கூறுவதற்காகவும் அல்குர்ஆன் ஓதுதல் போன்ற ஏனைய வணக்கங்களை மேற்கொள்வதற்காகவும் நிர்மாணிக்கப்பட்டதாகும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். நபிகளாரின் இந்த அணுகுமுறையை கண்ட அம்மனிதர் நற்பண்பு மிக்க மனிதராக மாறியதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் நபி(ஸல்) அவர்களை எதிர்கொண்ட ஒரு கிராமவாசி அண்ணலாரின் மேலங்கியை தோள்பட்டையில் பதியும் அளவுக்கு இழுத்துக்கொண்டு, உம்மிடம் இருக்கும் அல்லாஹ்வின் செல்வத்திலிருந்து ஏதேனும் எனக்கு தந்து உதவிடுவீராக... என்று கேட்டார். அவரை நோக்கி திரும்பிப் பார்த்து புன்முருவல் பூத்துவிட்டு அவருக்கு அன்பளிப்பு வழங்குமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

***(ஆதாரம்: புஹாரி)***

இந்த சம்பவங்கள் ஆசிரியர்கள், முகாமையாளர்கள், பணிப்பாளர்கள், பாதுகாவலர்கள், பிரசாரம் செய்பவர்கள் சமூக சீர்திருத்தவாதிகள் என அனைவரும் தங்களது பொறுப்பை நிறைவேற்றும் போது கையாள வேண்டிய நுட்பங்களையும் அணுகுமுறைகளையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த மனித நேயம் நிறைந்த நற்பண்புகள் நபி(ஸல்) அவர்கள் மீது மக்களுக்கு விருப்பத்தையும் நெருக்கத்தையும் ஏற்படுத்தியது. இப்பண்புகள் அன்னாரை முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்கள் உள்ளிட்ட அனைவர் மத்தியிலும் உள்ளங்கவர் தலைவராக இடம்பிடிக்கச் செய்தது.

இந்தப் பின்புலத்தில் தான் உலகத்தில் வாழ்ந்து மறைந்த 100 அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து 'த ஹன்ட்ரட்' என்ற ஆங்கில நூலை எழுதியுள்ள அறிஞர், நபி (ஸல்) அவர்களைத் தம் நூலில் முதலாவதாகக் கொண்டு வந்துள்ளார். அதற்குரிய காரணத்தை கூறுகையில், நபியவர்கள் ஈருலக வாழ்க்கையிலும் முன்னோடியாக திகழ்ந்தார்கள் என்று அந்த நூலாசிரியர் விபரித்துள்ளார்

எனவே நபியவர்களின் இந்த அணுகுமுறையை நாம் ஒவ்வொருவரும் எமது எல்லா நடவடிக்கைகளிலும் பின்பற்றுவோமேயானால் இஸ்லாம் குறித்தும் முஸ்லிம்கள் குறித்தும் ஏனையவர்கள் நல்லெண்ணம் கொள்வார்கள். இந்நாட்டில் நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்ப இது சிறந்த காரணியாகவும் அமையும்.

மலர் தயாரிப்பு:
**மர்லின் மரிக்கார்**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -








## முஹம்மதென்றொரு ஒளிப்பிரவாகம்

எனது பொழுதுகளில்
முஹம்மது என்ற சொல்லை நிரப்புகிறேன்
அதன்
கோடிச்சந்திரப் பிரகாசம்
என் கல்பில் ஊறிற்று

முஹம்மதென்று எண்ணுகிறேன்
இதயத்தில் ஈத்தம் பழத்தின் இனிமை
முஹம்மதென்று சொல்லுகிறேன்
உதட்டோரம் கசிகிறது
ஈமானின் வெளிச்சம்
முஹம்மதென்ற சொல்லைக் கேட்கிறேன்
காதுகளில் பொங்குகிறது
உள்ளொளி
முஹம்மதென்று எழுதுகிறேன்
என் எழுத்தில்
சிறகெடுத்துப்பறக்கிறதொரு
அபாபீல்

எனது பொழுதுகளில்
முஹம்மது என்ற சொல்லை நிரப்புகிறேன்
நடுநிசியில் அதிகாலையில்
நடுப்பகலில் அந்தியில்
சூரியன் மங்கும் மஃரிபில்
முன்னிரவிலென
சுஜூதின் நிலத்தில் பூத்த அடையாளம்
யாராலானது

நபிகளாராலானது

ரப்பே
ரஃமானே
எங்கள்
முஹம்மது நபிகளாரின் ஸபாஅத்துக்காய்
காத்திருக்கிறது எனது பொழுது
ஈமானின் சொற்களால்
நிரம்பி நிரம்பி

**முல்லை முஸ்ரிபா**

# அண்ணலாரின் முன்மாதிரிமிக்க பொருளாதார வாழ்வு

இஸ்லாத்தின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை நாம் எமது உயிரைவிட மேலாக நேசிக்கிறோம். அதன் ஒரு வடிவம்தான் அவரது வாழ்க்கை வரலாற்றை (ஸீரா) கற்று எமது வாழ்வை அதற்கேற்ப ஒழுங்கமைத்துக் கொள்வதாகும். இவ்வகையில் மாநபி (ஸல்) அவர்களின் பொருளாதார செயற்பாடுகளை அறிந்துகொள்வது எமது பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்று நம்புகின்றோம்.

அந்த வகையில் வறுமையிலிருந்தும் இருளிலிருந்தும் மக்களை விடுவித்து செல்வம் மற்றும் வெளிச்சத்தின்பால் வழிகாட்டுவதும் இஸ்லாத்தின் நோக்கங்களில் உள்ளதாகும். நபிமார்கள் அனைவரும் சமூகத்தின் தலைவர்களாக இருந்தார்களேயொழிய ஏழைகளாக இருக்கவில்லை. நபி (ஸல்) அவர்களும் இவ்விடயத்தில் விதிவிலக்காக இருக்கவில்லை. அல்லாஹ் அவரை மூன்று கட்டங்கள் ஊடாக செல்வத்தை கொடுத்து கண்ணியப்படுத்தினான். இது அல்லாஹ்வின் முன்னேற்பாடு தொடர்பான ஒரு விடயமாகும்.

1. தெரிவுக் கட்டம்: பிறப்பதற்கு முன்பிலிருந்து அநாதையாக பிறக்கும் கட்டம் வரை 'நிச்சயமாக அல்லாஹ் ஆதம் (அலை) நூஹ் (அலை) மற்றும் இப்றாஹீம் (அலை)யின் சந்ததிகள், இம்ரானின் சந்ததிகளை அகிலத்தாருக்காக தெரிவு செய்துள்ளான்' **(ஆல இம்ரான் 33,34)**

2.புகலிடக் கட்டம்: அநாதையாக பிறந்ததிலிருந்து திருமணம் வரையான கட்டம் 'நீங்கள் ஒரு அநாதையாக இருந்தீர்கள். அல்லாஹ் உங்களுக்கு புகலிடம் அளிக்கவில்லையா?' (ளுஹா 06)

3. செல்வம் நிறைந்த கட்டம்: திருமணம் முதல் மரணம் வரை '(அதிகமானவர்களை கவனிக்க வேண்டி இருந்தமையால்) ஏழையாக இருந்த உங்களை ஒரு செல்வந்தராக ஆக்கவில்லையா?' (ளுஹா 08)

நபி (ஸல்) அவர்களின் குடும்பம், கோத்திரம், மக்கத்து பூமி அனைத்தும் தெரிவு செய்யப்பட்டு மாநபியை வரவேற்பதற்காக, அவர் பிறக்க முன்பே வம்சாவளியும் பிரதேசமும் தயார்படுத்தப்பட்டது.

இரண்டாவது காலகட்டத்தில் தந்தையின் மூலமாக பெற்ற வாரிசு சொத்துக்கள், பாட்டனார் செய்த செலவுகள், பால்குடி காலத்தில் காணப்பட்ட அருள்கள், சிறிய தந்தையிடம் வளர்ந்தமை, ஆடு மேய்த்தல், வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டமை, வெற்றிகரமான வெளிநாட்டு வியாபார பயணங்களை முன்னெடுத்தமை, கதீஜா (ரழி)உடன் திருமணம் போன்ற விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

நபியவர்கள் தந்தை, தாய் இருவரையும் இழந்த அநாதையாகவும் (யதீம்) அதிகமானவர்களை பராமரிக்க வேண்டிய நிலையில் ஏழையாகவும் இருந்தார். அல்லாஹ்வின் ஏற்பாட்டின் பிரகாரம் அவருக்கு புகலிடம் வழங்கப்பட்டு ஒரு செல்வந்தராக மாறிவிட்டார். இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஒரு அறிவிப்பில், 'குறைஷியருக்கு ஒரு கடுமையான பஞ்சம் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்பட்டது. இத்துப்போன எழும்புகள், கயிறுகளைக்கூட சாப்பிடும் நிலை உருவானது. குறைஷியர்களில் இந் நிலைமையை தாக்குப்பிடிக்க அல்லாஹ்வின் தூதராலும், அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிப் (ரழி) அவர்களாலும் மாத்திமே முடியுமாய் இருந்தது. அப்போது நபி (ஸல்) அவர்கள் 'எனது சிறிய தந்தையே! உங்களது சகோதரன் அபூ தாலிபுக்கு அதிகமான பிள்ளைகள் காணப்படுகிரார்கள். இது உங்களுக்கு தெரிந்த விடயமாகும். குறைஷியர்களுக்கு ஏற்பட்டுள்ள விடயங்களையும் நீங்கள் அறிந்து வைத்துள்ளீர்கள். நாம் அவரிடம் சென்று சிலரை பொறுப்பேற்றுக்கொள்வோம்' என்றார்கள். பின்னர் இருவரும் அபூ தாலிபிடம் சென்று 'அபூ தாலிபே! உங்களது சமூகத்தின் நிலவரம் உங்களுக்கு தெரியும், அதனை நீங்கள் காண்கிறீர்கள், நீங்களும் அதனை சார்ந்தவராக உள்ளீர்கள், எனவே நாம் உங்களது குடும்ப பொறுப்புகளில் சிலவற்றை சுமக்க விரும்புகிறோம்' என்றார்கள்.

அதற்கவர் 'உக்கைல் என்பவரை விட்டுவிட்டு உங்களுக்கு விருப்பமானவர்களை எடுத்துக்கொள்ளுங்கள்' என்றார்கள். அப்போது நபி (ஸல்)அவர்கள், அலி (ரழி)யை எடுத்துக்கொள்ள, அப்பாஸ் (ரழி) அவர்கள், ஜஃபர் (ரழி)யை எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் உழைக்கும் வரை தொடர்ந்தும் அப்படியே இருந்தார்கள். (இமாம் ஹைஸமி தனது மஜ்மஃவில் 8/281)

ஸைத் இப்னு ஹாரிஸா (ரழி) அவர்கள் கதீஜா (ரழி)யின் அடிமையாக காணப்பட்டார்கள். அவரை தனக்கு வழங்குமாறு நபி (ஸல்) அவர்கள் வேண்டிக்கொண்டார்கள்.

இது திருமணத்தின் பின்னரான ஒரு நிகழ்வாகும். அவர் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள். உண்மையில் இஸ்லாத்தின் நோக்கம் இருளிலிருந்து ஒளியின்பால் வழிகாட்டுவது மாத்திரமல்ல. மாற்றமாக வறுமை, இழிவு போன்றவற்றிலிருந்து விடுவித்து கண்ணியமும் மதிப்பும் செல்வமும் உள்ள ஒருவராக மாற்றுவதும்தான். 'அல்லாஹ் அவனிடமிருந்து பாவமன்னிப்பையும் அருள்களையும் வாக்களிக்கிறான். அல்லாஹ் விசாலமாக உதவுபவனாகவும் அறிவுள்ளவனாகவும் இருக்கிறான்'

**(அல் பகரா 268)**

நபி (ஸல்) அவர்கள் பத்துக்கு மேற்பட்ட மூலங்களிலிருந்து வருமானம் ஈட்டியுள்ளார்கள். அவற்றுள் பெற்றோரிடமிருந்து வாரிசாக பெற்றவைகள், வியாபாரம், கதீஜா (ரழி) மூலமாக வாரிசாக பெற்றவைகள, கனீமத் பொருட்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

குறிப்பாக நபிமார்கள் தொழில் செய்துள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்துக்கு முன்பும் பின்பும் வியாபாரம் செய்தது

**அஷ்ஷெய்க்**
**யூ.கே. ரமீஸ் (எம்.ஏ சமூகவியல்)...**

டன் உழைப்பையும் ஊக்குவித்துள்ளார்கள். சஹாபாக்கள் தொழில் செய்துள்ளார்கள். 'எனது (மக்கத்து) முஹாஜிர் சகோதரர்கள் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். எனது அன்சாரி (மதீனத்து) சகோதரர்கள் அவர்களது சொத்துக்களில் வேலை (விவசாயம்) செய்தார்கள்... (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் வியாபாரம் செய்தமை குறித்து முஷ்ரிக்குகள் ஆச்சரியமாக நோக்கினார்கள் 'இந்த தூதருக்கு என்ன நேர்ந்துள்ளது. இவர் சாப்பிடுகின்றார், சந்தையில் நடமாடுகின்றார்' என்று ஆச்சரியமுற்றார்கள். (அல் புர்கான் 07) மதீனாவில் ஒரு சந்தையை நிறுவினார்கள்.

அவரது வியாபார அமானிதங்கள் காரணமாக 'அல் அமீன்' (நம்பிக்கையாளன்) என்ற பெயரைப் பெற்றார்கள். நபி (ஸல்) அவர்கள் கதீஜா (ரழி)யை அறிமுகமாக முன்னரும், கதீஜா (ரழி) யுடனும் அவரை திருமணம் முடித்த பின்னரும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் ஒரு வியாபார தூதுகோஷ்டியுடன் வியாபாரம் செய்தார்கள். கொடுப்பதற்கு அவரிடம் பணம் இருக்கவில்லை. அவருக்கு இலாபம் கிடைத்தது. பொருளை விற்பனை செய்து விட்டு இலாபத்தை அப்துல் முத்தலிபின் பிள்ளைகளின் விதவைளுக்கு ஸதகாவாக கொடுத்துவிட்டு கீழ்வருமாறு சொன்னார்கள் 'பெறுமதியை கொடுக்க முடியாத நிலையில் நான் எந்தவொரு பொருளையும் வாங்க மாட்டேன்' என்றார்கள்;. (ஆதாரம்: அபூ தாவூத்)

நபி (ஸல்) அவர்கள் தந்தை அப்துல்லாஹ் மூலமாக 'பரகா' என்ற பெயரையுடைய உம்மு அய்மன் என்ற ஹபஷி



பெண், ஐந்து ஒட்டகங்கள், ஒரு தொகுதி ஆடுகள் போன்றவற்றை வாரிசாகப் பெற்றுக்கொண்டார்கள். ஷுக்ரான் அவரது மகன் ஸாலிஹையும் பெற்றுக்கொண்டதாக கூறப்படுகிறது.

அவர் பத்ரிலும் கலந்துகொண்டார். தாயார் ஆமினா பின்த் வஹப் மூலம் பனூ அலி பள்ளத்தாக்கில் உள்ள பிறந்த வீட்டையும் கதீஜா பின்த் குவைலித் (ரழி) மூலம் ஸபா மற்றும் மர்வா மலைக் கிடையில் இருந்த அவரது வீட்டையும் மற்றும் சில செல்வங்களையும் வாரிசாக பெற்றுக்கொண்டார்கள்.

யுத்தங்களின் விளைவான கனீமத் பொருட்களும் நபி (ஸல்) அவர்களுக்கு கிடைக்கப்பெற்றன.

சில அறிஞர்களின் கருத்தின்படி நபி (ஸல்) அவர்கள் வபாத்தாகும்போது, சில பொது சொத்துக்கள் (வக்ப்), தரிசு நிலங்கள், விவசாய நிலங்கள், பெற்றோரிடமிருந்து வாரிசாக பெற்ற சில நிலங்கள், யுத்த வெற்றிகளின்போது மதீனாவிலும் அதனை சூழவுள்ள பிரதேசங்களிலும் கிடைத்தவைகள் (அல்பைஉ) போன்ற சொத்துகளை வாரிசாக விட்டுவிட்டு வபாத்தானார்கள் என்று குறிப்பிடுகின்றார்கள்.

என்றாலும் பற்றற்ற பணக்காரனாகவும் செலவளிக்கும் செல்வந்தராகவும் நபி (ஸல்) அவர்கள இருந்தார்கள். மாற்றமாக எதுவுமற்ற ஒட்டாண்டியாக இருக்கவில்லை. அவருக்கு கிடைத்த அத்தனை சொத்துக்களையும் சமூக நலனுக்காக செலவு செய்தார்கள்.

இமாம் இப்னு கஸீர் (ரஹ்) குறிப்பிடுவது போன்று 'நன்றியுள்ள செல்வந்தராகவும் பொறுமையான ஏழையாகவும்' காணப்பட்டார்கள். எனவே மாநபியின் பொருளாதார வாழ்வை கற்று வாழ்வை மேம்படுத்துவோம்.

# உத்தம நபியின் உயர் பண்புகள்

*அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உயர் பண்புகளை கண்டறிந்து அதனை எமது வாழ்வில் கடைபிடிப்பது, இறைவிசுவாசிகளான எம்மனைவரதும் பொறுப்பாகும். நபி (ஸல்) அவர்களிடம் ஏதாவதொன்று கேட்கப்பட்டு, அதனை அன்னார் இல்லையென்று சொன்னதில்லை என ஜாபிர் (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்.* ***(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)***

*சகித்துக் கொள்ளல், பொறுமை, மன்னிப்பு, சிரமங்களை தாங்கிக் கொள்ளல் போன்றன அண்ணலாருக்கு அல்லாஹ் வழங்கிய இயற்கைப் பண்புகளாகும். இதற்கு மேலாக துணிவு, வீரம் போன்ற பண்புகளும் அன்னாரிடம் காணப்பட்டன. எத்தனையோ அபாயகரமான நிலைமைகளை நபி(ஸல்) அவர்கள் சந்தித்துள்ளார்கள். அப்போதெல்லாம் நிலை குலையாமல், தடுமாற்றமில்லாமல், புறமுதுகு காட்டாமல் எதிரிகளை எதிர்த்து நின்றுள்ளார்கள்.*

*அனஸ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள். மதீனா வாசிகள் ஒரு நாள் இரவு சப்தத்தைக் கேட்டு பயந்து விட்டனர். சப்தம் வந்த திசையை நோக்கி மக்கள் விரைந்து செல்கையில் அதற்கு முன்பே நபி (ஸல்) அவர்கள் சென்று விவரத்தை அறிந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள்.*

*நபி (ஸல்) அவர்கள் கழுத்தில் வாளை தொங்க விட்டுக்கொண்டு அபூ தர்தாவுக்குரிய குதிரையில் எவ்வித கடிவாளம் இன்றி சென்று வந்தார்கள். மக்களைப் பார்த்து, நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை, பயப்பட வேண்டியதில்லை எனத் துணிவுடன் கூறினார்கள்.* ***(ஆதாரம்: புஹாரி முஸ்லிம்)***

*அதேநேரம் நபி (ஸல்) அவர்கள் கூச்ச சுபாவமுள்ளவராக இருந்துள்ளார்கள். 'திரை மறைவிலுள்ள கன்னிப் பெண்களை விட அதிக நாணயமுள்ளவராக நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள்.*

*ஏதாவது பிடிக்காவிட்டால் அதை அவர்களது முகத்திலிருந்து புரிந்து கொள்ளலாம். எவரது முகத்தையும் அன்னார் ஆழமாக உற்று நோக்கியதில்லை. அன்னார் கீழ் நோக்கி பார்ப்பதே அதிகம். பெரும்பாலும் கடைக் கண்ணால் பார்ப்பார்கள். வெட்கத்தினாலும் உயர்ந்த பண்பின் காரணத்தினாலும் யாரையும் வெறுப்பூட்டும் படி பேச மாட்டார்கள் என்று அபூ ஸஈத் குத்ரி (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்.* ***(ஆதாரம்: புஹாரி)***

*நபி (ஸல்) அவர்கள் மக்களில் முன்மாதிரி மிக்க நீதவானாகவும், ஒழுக்க சீலராகவும் உண்மையாளராகவும் நம்பிக்கையாளராகவும் திகழ்ந்தார்கள். நபி (ஸல்) அவர்களின் இப்பண்புகளை உடன் இருந்தவர்கள் மட்டுமல்லாமல் எதிரிகள் கூட நன்கு அறிந்து வைத்திருந்தார்கள்.*

*அலி (ரழி) அவர்கள் கூறுகிறார்கள், ஒரு முறை நபியவர்களைப் பார்த்து அபூ ஜஹ்ல் 'நாங்கள் உங்களை பொய்ப்பிக்கவில்லை, நீங்கள் சொல்கின்ற மார்க்கத்தை தான் பொய்பிக்கிறோம்' என்றான். இச்சந்தர்ப்பத்தில் அல்லாஹ் கூறுகிறான், நபியே! உங்களை பொய்யரென அவர்கள் கூறுவது நிச்சயமாக உங்களுக்கு கவலையை தருகிறது என்பதை நாம் உறுதியாக அறிவோம். நிச்சயமாக அவர்கள் உங்களை பொய்யாக்கவில்லை. ஆனால் இந்த அநியாயக்கரர்கள் அல்லாஹ்வின் வசனங்களையே (பொய்யாக்கி) நிராகரிக்கின்றனர் (அல்குர்ஆன் 6:33)* ***(ஆதாரம் திர்மிதி)***

*நபி (ஸல்) அவர்கள் மற்றவர்களை விட அதிகம் பணிவுடையவர்களாகவும் பெருமை கொள்ளாதவராகவும் இருந்தார்கள். நோயாளர்களை நலம் விசாரிப்பார்கள். ஏழைகளுடன் சேர்ந்திருப்பார்கள். அடிமை விருந்துக்கு அழைத்தாலும் இன் முகத்துடன் ஏற்றுக்கொள்வார்கள். தங்கள் தோழர்களுடன் அவர்களில் ஒருவராக அமர்ந்திருப்பார்கள்.*

*தம் மனைவிமாருக்கும் பிள்ளைகளுக்கும் உதவி ஒத்துழைப்புக்களை நல்கக்கூடியவர்களாக இருந்தார்கள். மக்கள் மீது மிகவும் அன்பும் பாசமும் கருணையும் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களுடன் மிக அழகிய முறையில் ஒழுக்கத்துடன் நடந்து கொண்டார்கள். மக்களில் மிக உன்னதமான குணம் பெற்றிருந்தார்கள். அருவருப்பான வார்த்தைகள், செயல்கள் ஏதும் அவரிடம் இருந்ததில்லை. சபிக்கும் பழக்கமோ, தெருக்கில் கூச்சலிடம் பழக்கமோ இருத்ததில்லை.*

*ஆடையில் தங்கள் அடிமைகளை காட்டிலும் தம்மை உயர்வாக காட்டிக்கொள்ள மாட்டார்கள். தங்களுக்கு பணிவிடை செய்தவர்களுக்கு பணிவிடை செய்வார்கள். தங்கள் பணியாளரை 'சீ' என கூட கூறிய தில்லை ஒரு செயலை செய்ததற்காகவோ செய்யாமல் போனதற்காகவோ யாரையும் கண்டித்ததில்லை. நபி (ஸல்) அவர்கள் தோழர்களை அதிகம் நேசித்து அவர்களுடன் அதிகம் பழகுவார்கள். அவர்களுடைய ஜனாஸாக்களில் கலந்து கொள்வார்கள். ஏழையை அவரது இல்லாமையால் இழிவாக பார்க்க மாட்டார்கள்.*

*ஒரு பயணத்தின் போது ஆடு ஒன்றை அறுத்து சமைக்கும் படி கூறினார்கள். ஒருவர் நான் அறுக்கிறேன் என்றார். ஒருவர் நான் உரிக்கிறேன் என்றார். ஒருவர் நான் சமைக்கிறேன் என்றார்.*

*நபி (ஸல்) அவர்கள் அதற்காக நான் விறகு சேர்த்து வருகிறேன் என்றார்கள். அதற்கு தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே.. உங்களுக்கு ஏன் சிரமம் நாங்கள் இதைச்செய்து கொள்கிறோம் என்றனர். அப்போது நபி (ஸல்) அவர்கள் உங்களால் செய்ய முடியும் என்பது எனக்கு நன்றாக தெரியும். இருந்தாலும் உங்களில் என்னை தனியே உயர்த்தி காட்ட விரும்பவில்லை. ஏனெனில் ஒருவர் தன் தோழர்களில் தனியாக வேறுபடுத்தி காட்டுவதை அல்லாஹ் வெறுக்கிறான் என்று கூறி விறகுகளை சேகரிக்க சென்றார்கள்.*

*ஒருவர் ஏதாவது தேவைக்காக வந்தால் அவராகச் செல்லும் வரை அவருடன் நபி (ஸல்) அவர்கள் இருப்பார்கள். தேவையை கேட்கும் போது அதனை நிறைவேற்றிக் கொடுப்பார்கள். அல்லது அழகிய பதிலைக் கூறுவார்கள். நபிகளார் தன் தயாளா தன்மையையும் நற்குணங்களையும் மக்களுக்கு விசாலப்படுத்தியுள்ளார்கள். எனவே மக்களுக்கு ஒரு தந்தையைப் போன்று திகழ்ந்தார்கள்.*



*கல்வி, கண்ணியம், பொறுமை, சகிப்புத் தன்மை வெட்கம், நம்பிக்கை அனைத்தும் நிறைந்ததாக அவரது சபை இருந்தது. அங்கு உரத்த குரல்கள் ஒலிக்காது. கண்ணியம் குலைக்கப்படாது. தவறுகள் நிகழாது. பெரியவர் சிறியவர்களுக்கு இரக்கம் காட்டுவார்கள். தேவை உடையோருக்கு உதவி செய்வார்கள். புதியவர்களுடன் நட்புடன் நடந்து கொள்வார்கள்.*

*எப்போதும் மலர்ந்த முகமும், இளகிய குணமும் நள்ளினமும் பெற்றிருப்பார்கள். கடுகடுப்பானவராகவோ, முரட்டு குணம் கொண்டவராகவோ, கூச்சலிடுபவராகவோ அருவருப்பாக பேசுவராகவோ அதிகம் புகழ் பகராகவோ அல்லர்.*

*மூன்று குணங்களை விட்டு தங்களை பாது காத்துக் கொண்டார்கள். முகஸ்துதி, அதிகம் பேசுவது, தேவையற்றவற்றில் ஈடுபடுவது. மேலும் பிறரை பழிக்கமாட்டார்கள், குறை கூற மாட்டார்கள். பிறரின் குறையை தேட மாட்டார்கள்.*

*எனவே இவ்வாறான நற்பண்புகள் எம்மிடம் குடி கொண்டு நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறைகளை பின்பற்றி வாழ வல்ல நாயன் அருள்புரியட்டும்.*

**மௌலவி எம்.யூ.எம். வாலிஹ்**
**(அல்அஸ்ஹறி) வெலிகம.**

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -




# அதிகரித்துச்செல்லும் மின்சார செலவுக்கான தீர்வாக அபான்ஸ் வழங்கும் LG உற்பத்திகள்



*மின் கட்டணம் 75% அதிகரித்துள்ளதால், யூனிட்டுக்கான கட்டணம் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இப்போது நீங்கள்; மின்சாரத்தில் இயங்கும் உற்பத்தியொன்றை வாங்கும்போது, குறித்த உற்பத்தியின் மின் திறன் தொடர்பாக கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும். அபான்ஸ் நிறுவனம் பல ஆண்டுகளாக ஆற்றல் சேமிக்கும் உற்பத்திகளையும், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற தயாரிப்புகளையும் சந்தைக்கு அறிமுகம் செய்து வருகிறது. அபான்ஸ் வழங்கும் மின்சார சேமிப்பு உற்பத்திகள் அனைத்தும் அதிகரித்துச் செல்லும் மின்செலவிற்கு மிகவும் ஏற்ற உற்பத்திகளாகும்.*

*அபான்ஸ் வழங்கும் விற்பனை நாமங்களில் பிரம்மாண்ட தொழில் நுட்பத்தைக் கொண்ட உலகப் புகழ் பெற்ற LG உற்பத்திகள் மின்சார சேமிப்பின் முதல்வனாகும். LG Insta View Door குளிர்சாதனப் பெட்டி இன்வெர்டர் லீனியர் கொம்பிரெஸருடன் வருவதால் 42மூ வரை மின்சாரத்தை சேமிக்கிறது. LG Door Cooling10 தொழில்நுட்பம் என்பதால் உணவுகளை நீண்ட நாட்கள் புத்துணர்வோடு வைத்துக்கொள்ள முடியும்.*

*மேலும், Linear Cooling மூலம் வெப்பநிலை மாற்றத்தை குறைத்து மின்சாரத்தை சேமிக்கிறது. LG InstaView Door in Door குளிர்சாதனப் பெட்டியின் நவீன கதவை இரண்டு முறை தட்டிய பின்னர் (நொக் செய்தல்) குளிர்சாதனப் பெட்டியின் உள்ளே இருக்கும் பொருட்களை குளிர்சாதனப் பெட்டியை திறக்காமல் பார்க்க முடியும். இதன் மூலம் 41% மின்சாரத்தை சேமிக்க முடியும்.*

*வைரஸ்களுக்கு எதிராக LG டுவல் கூல் இன்வெர்டர் வளிச்சீராக்கி சாதாரண இன்வெர்டர் வளிச்சீராக்கியை விடவும் மின்சாரத்தை சேமிக்கிறது. இதிலுள்ள LG டுவல் இன்வெர்டர் கொம்பிரெஸர் குறைந்த சத்தத்தில் இயங்கி மிகவும் வேகமாக குளிர்ச்சியூட்டுகிறது.*


## தமிழ் மக்களின் தனித்துவ... (04 ஆம் பக்கத் தொடர்)

தயாரிப்பு செலவினம் காரணமாகத் தொடர்ந்து அதனை முன்னெடுக்க முடியாதுபோய்விட்டது. எனவே, இந்திய படைப்புகளுடன் கலந்தே நாம் ஒளிபரப்பு செய்ய வேண்டியுள்ளது. கடந்த காலத்தில் அமைக்கப்பட்டிருந்த கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையில், இலங்கை வாழ் தமிழ் மக்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் ஊடகங்களில் பரந்த வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

வாழ்வியல், கலை, கலாசாரம் போன்றவற்றுக்குக் கூடுதல் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது. ஆகவே, அரச ஊடகம் என்ற வகையில் அவற்றுக்குக் கூடுதல் இடத்தை ஒதுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கிறது. எனினும், இதற்காகத் தற்போது திறைசேரியினால் எந்த நிதியொதுக்கீடும் கிடையாது. ஆகவே, நாங்கள் சுயமாகப் பயணிக்க வேண்டிய நிலையில், வர்த்தக சந்தையை வெற்றிகொள்ளும் சவாலுக்கும் முகங்கொடுத்தேயாகவேண்டும். கம்பியில் நடக்கும் இந்தச் சவாலை நிச்சயம் வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. எதிர்காலத்தில் தமிழ் நாடகத்துறைக்குப் புத்தூக்கம் அளிப்பதுடன் வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பகுதி மக்களின் வாழ்வியல், கலை, கலாசாரங்களை உள்வாங்குவதற்கும் கூடுதல் கவனம் செலுத்தவிருக்கின்றோம்.

நேத்ராவை சிங்கள அதிகாரிகள் மேற்பார்வை செய்ததாகச் சொன்னீர்கள். நீங்களும் சிங்கள மொழியில் கல்வி கற்றதுடன் சிங்கள இலக்கியத்திலும் தேர்ச்சி பெற்றவர். எனவே, ஒரு தமிழ் அலைவரிசையை வழிநடத்துவது உங்களுக்கு சவாலாக இல்லையா?

நிச்சயமாக இல்லை. நான் சாதார முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்தவன். எமது பெற்றோர் தமிழ் மொழியில் கல்வி கற்றவர்கள். நான் சிங்கள மொழியில் பயின்றாலும், எனது உடன்பிறப்புகள் தமிழில் கற்றார்கள். மாமாமார் தமிழ் ஆசிரியர்கள். இந்தப் பின்புலத்தைக் கொண்ட நான் தமிழையும் கற்றிருக்கின்றேன்.

அதேநேரம், இலங்கையில் சிங்களத்தில் விசேட பட்டம் பெற்ற ஒரேயொரு முஸ்லிம் உறுப்பினன் என்றால் அது நான்தான் என்று பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார். சிங்களத்தில் முதுமாணிப்பட்டப் படிப்பை மேற்கொண்டதுடன் சிங்களத்தில் நீண்டதூரம் பயணித்தேன். தமிழை மாத்திரமன்றித் தமிழ் இலக்கியமும் கற்றிருக்கிறேன். உதாரணமாகச் சொல்வதானால், இலங்கையில் தமிழ்க் கவிதை இலக்கியத்தை முதன் முதலில் சிங்களத்திற்குக் கொண்டு சென்றது நானே. எம். ஏ. நுஃமான், ராமலிங்கம், சபா ஜெயராசா, யேசுராசா, புதுவை ரத்தினதுரை, சிவசேகரம், ஷம்ஸ், சோலைக்கிளி முதலானோரின் கவிதைகளைச் சிங்களத்தில் மொழியாக்கம் செய்திருக்கின்றேன்.

இலங்கைத் தமிழ்க் கவிதையின் அடையாளம் என்று ஜெயபாலனின் நூலை மொழியாக்கம் செய்திருக்கின்றேன். இஃது முதலாவது ஓர் ஆய்வு நூல். சாதாரண ஒரு தட்டெழுத்தாளர் மொழிபெயர்ப்பதற்கும் இலக்கியத்தை மொழியாக்கம் செய்வதற்கும் வேறுபாடு உள்ளது. மொழி ஆளுமை இல்லாமல் மொழியாக்கம் செய்ய முடியாது. தமிழ் சிறுகதைகளை சிங்களத்திற்கு மொழியாக்கம் செய்திருக்கின்றேன். அயலவர்களின் இலக்கியம் என்று தமிழ் இலக்கியத்தைச் சிங்களத்தில் எழுதியிருக்கின்றேன். கடந்த 30 ஆண்டுகளில் சிங்கள மாற்றுக் கருத்துப் பத்திரிகைகளில் தமிழ் இலக்கியத்தை அறிமுகப்படுத்திக் கட்டுரைகள் எழுதியிருக்கின்றேன். ஆகவே, தமிழ் இலக்கியம், தமிழ் கலை, கலாசாரம் போன்றவற்றுக்கு நான் அந்நியன் அல்லன். அவற்றோடு பின்னிப் பிணைந்தே வாழ்கிறேன். மற்றையது, நான் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் இணைவதற்கு முன்னர் மனித உரிமை அமைப்பொன்றில் பணியாற்றினேன். சிவில், மனித உரிமை செயற்பாடுகளில் தீவிரமாகச் செயற்பட்டிருக்கின்றேன். 1994இல் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவிக்கு வந்தபோது வடக்கிற்குச் சென்ற முதலாவது தூதுக்குழுவில் நானும் இடம்பெற்றிருக்கின்றேன். வாசுதேவ நாணாயக்கார தலைமையிலான அந்தத் தூதுக்குழுவே 1983 இற்குப் பின்னர் பூநகரி ஊடாக வடக்கிற்குச் சென்ற முதலாவது குழு. 17 பேர் கொண்ட அந்தக் குழுவில் பங்கேற்ற நான் அப்போதிருந்தே மக்கள் நலன்சார் செயற்பாடுகளில் பங்கெடுத்திருக்கின்றேன். எனவே, இங்குப் பணியாற்றிய ஏனைய சிங்கள அதிகாரிகளைவிடத் தேவையான தகுதி எனக்கிருக்கிறது. நான் ஓர் அந்நியன் இல்லை. தொலைக்காட்சித் துறையில், கல்வித் துறையில், இலக்கியத்துறையில், சிவில் செயற்பாடுகளில் எனது தகுதியைப் பூர்த்தி செய்திருக்கின்றேன். நான் எழுதிய இரண்டாம் மொழி தமிழ் பாடப்புத்தகம், நாட்டிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்கிறார் இந்தத் தமிழ், சிங்கள இலக்கிய நிலா!


LITRO GAS

# PROCUREMENT NOTICE

National Competitive Bidding (NCB)

**SUPPLY OF MAINTENANCE ITEMS AND CONSUMABLES FOR CONVENTIONAL BUOY MOORING (CBM) OF LITRO GAS TERMINAL LANKA (PVT) LTD.**

**Tender No: LGTLL/OPS/047/NCB/2022**

Chairman, Departmental Procurement Committee, on behalf of Litro Gas Terminal Lanka (Pvt) Ltd now invites sealed bids from eligible and qualified bidders for "Supply of Maintenance Items and Consumables For Conventional Buoy Mooring (CBM) of Litro Gas Terminal Lanka (Pvt) Ltd".

A complete set of Bidding Documents in English language may be purchased by interested Bidders on the submission of a written request to the address below from **10th October 2022 to 28th October 2022 from 9:30 am to 2:30 pm on working days**. The bid document may be obtained upon the payment of a non-refundable fee of **Rs. 3,500.00 (Rupees of three thousand five hundred only)**. The method of payment will be in cash. This should be paid to **Litro Gas Terminal Lanka (Pvt) Ltd, No. 267, Union Place Colombo 02.**

Bids must be delivered by hand or sent by registered post to the address below on or before **31st October 2022 at 3:00 pm.** Late bids will not be accepted.

All bids shall be accompanied by a Bid Security obtained from any commercial bank approved by the Central Bank of Sri Lanka. The amount of the **Bid Security should be Rs. 200,000.00 (Two Hundred Thousand Rupees)**, and should be **valid until 20th February 2023**. The bid security should be written in favour of Litro Gas Terminal Lanka (Pvt) Ltd.

The Chairman
Department Procurement Committee
Litro Gas Terminal Lanka (Pvt) Ltd,
267, Union Place
Colombo 02
Sri Lanka
T.P. - 011 2 327714
Fax - 011-2327698



# பெறுகை அறிவித்தல்

SPC

## இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்

## Thermal Paper Rolls இன் வழங்கலுக்கான கேள்விகளுக்கான அழைப்பு

**கேள்வி இல.: AD/2/T P R / 332/2022**

**2022 ஒக்டோபர் 27 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு மூடப்படும்**

**Thermal Paper Rolls** இன் வழங்கலுக்காக நாராஹேன்பிட்ட, அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்களை அழைக்கின்றார்.

**நாராஹேன்பிட்ட, கிருள வீதி, 41 ஆம் இலக்கத்தின் 27 ஆம் மாடியிலுள்ள ''மெஹேவர பியச''** இலுள்ள காசாளரிடம் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக **12,500 ரூபா மற்றும் பெறுமதி சேர் வரி** ஆகியவற்றை **2022.10.11 ஆம் திகதியிலிருந்து 2022.10.26 ஆம் திகதி வரையும்** வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் செலுத்திய பின்னர், நாராஹேன்பிட்ட, கிருள வீதி, 41 ஆம் இலக்கத்தின் 16 ஆம் மாடியிலுள்ள ''மெஹேவர பியச'' அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபன வரவேற்பு கருமபீடத்தில் கேள்வி ஆவணத்தை இலவசமாக பரீட்சித்து பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் விலைமனுக்கோரலானது **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம், ''மெஹேவர பியச'', 16 ஆம் மாடி, இல. 41, கிருள வீதி, நாராஹேன்பிட்ட** என முகவரியிடப்பட்டு **2022 ஒக்டோபர் 27 ஆம்** திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள அமைவிடத்திலுள்ள நிருவாக திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியொன்றில் சேர்க்கப்படல் வேண்டும்.

தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விகளை அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். தேவைப்படும் மேலதிக தகவலை **011 2055410** என்ற தொலைபேசியூடாக வேலை நாட்களில் மாத்திரம் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் **நிருவாக அலுவலகரிடமிருந்து** பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்,**
**''மெஹேவர பியச'', 16 ஆம் மாடி, இல. 41,**
**கிருள வீதி, நாராஹேன்பிட்ட.**
**தொலைபேசி: 2320356-9**



**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு**

**இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்**

SLBFE

# பெறுகை அறிவித்தல்

## பயிற்சி நிலையங்களில் கொரிய தொழில் பயிற்சியாளர்கள் மற்றும் ஏனைய பயிற்சியாளர்கள் மற்றும் அதன் ஆலோசகர்களுக்கான சமைத்த உணவை வழங்குதல் 2022/2023

1. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் கீழ்க் காணும் முகவரிகளில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக வளாகத்தில் கொரிய மற்றும் ஏனைய நாடுகளுக்கான வெளிநாடு செல்லும் பயிற்சியாளர்களுக்கான உணவு வழங்குவதற்கு ஒரு வருட காலத்திற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
2. ஹாலிஎல, தங்கல்ல மற்றும் இரத்தினபுரி குடியகழ்வு நிலையங்களில் உணவகங்கள் உள்ளதால் உணவு தயாரிக்கும் விடயங்கள் பணியகத்தின் நிபந்தனைகளுக்கு உடபட்டு மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்காக தரை வாடகை மற்றும் உபகரணங்கள் வழங்குதல் சார்பாக ஒரு தொகை அறவிடப்படும். கொரிய தொழில் பெறுபவர்கள் சார்பாக வேறான உணவுப் பட்டியலின் பிரகாரம் உணவு வழங்கும் சேவையை மேற்கொள்ளல் வேண்டும்.
3. வியாபார பெயர் பதிவு (BRC) யுடன் நிறுவன/ தலைவர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றன.
4. கேள்வியுடன் கேள்விதாரரின் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பிப்பதுடன் அது விநியோகிக்கப்பட்ட திகதி இக் கேள்வி ஏற்றுக் கொள்ளும் தினத்திற்கு 03 வருடத்திற்கு முன்னரான தினமாக இருத்தல் வேண்டும்.
5. குறித்த துறையில் குறைந்தபட்சம் 03 வருட அனுபவம் உள்ளதாக ஆவணங்களின் மூலம் உறுதி செய்தல் வேண்டும். 'சிறந்த தயாரிப்பு முறைமை (Certificate of Good Manufacturing Practice) சான்றிதழ் இருத்தல் மேலதிக தகைமையாவதுடன் உணவு வழங்கும் பகுதிக்கு குறித்த பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
6. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவரின் பெயரில் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூ. 40,000.00 (கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 104 நாட்கள் செல்லுபடியாகும்) கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத ரூ. 5000.00 தொகையை கேள்விக் கட்டணமாக பணியகத்தின் தலைமையகத்தில் நிதிப் பிரிவிற்கு அல்லது கீழே பெயர் குறிப்பிடப்படும் குடியகழ்வு நிலையத்திற்கு செலுத்திய பின்பு, அப்பற்றுச் சீட்டை சமர்ப்பித்து பணியகத்தின் தலைமையகத்தில் கொள்வனவுப் பிரிவில் அல்லது கீழ்க்காணும் அலுவலகங்களில் கேள்வி கோரல் ஆவணங்களில் முழுமையான பிரதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
8. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் 2022.11.01 மு.ப. 10.00 இற்கு முடிவடைவதுடன் அவ்வேலை முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிப்பதற்காக கேள்விதாரருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அனுமதியளிக்கப்படும்.
9. ஒவ்வொரு நிலையத்திற்கும் கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் பயிற்சி நிலையத்தின் பயிற்சியாளர்களுக்கு உணவு, பானங்களை வழங்குவதற்கான விலைமனுக் கோரல் (குறித்த நிலையம்) என்று குறிப்பிட்டு 2022.11.01 மு.ப. 10.00 இற்கு முன்பு பணியகத்தின் இரண்டாம் மாடியில் கௌ்வனவு பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்தர பெட்டியில் வைப்புச் செய்தல் வேண்டும்.
10. இப் பெறுகை சம்பந்தமான இறுதித் தீர்மானம் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவருக்கு உரியது.

| தொடர் இல. | பயிற்சி நிலையம் | முகவரி | தொ. பே. இலக்கம் |
|---|---|---|---|
| 01 | தென் மாகாண குடியகழ்வு வள நிலையம் - தங்கல்ல | யாயவத்த கொடிகமுவ தங்கல்ல | 047-2240668 |
| 02 | சப்ரகமுவ மாகாண குடியகழ்வு வள நிலையம் இரத்தினபுரி | இல. 89/6, கல்லூரி மாவத்த, புதிய நகரம், இரத்தினபுரி | 045-2224062<br>045-2223077 |
| 03 | ஊவா மாகாண குடியகழ்வு வள நிலையம் ஹாலிஎல | இல. 202, பதுளை வீதி, ஹாலிஎல | 055-2294118 |

**தலைவர்,**
**திணைக்கள கொள்வனவுக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**Mgr_procurement@slbfe.lk**
**இல. 234, டென்சில் கொப்பெகடுவ மாவத்த,**
**கொஸ்வத்த. பத்தரமுல்ல.**
**தொலைபேசி (011 2880500 (நீடிப்பு இலக்கம் - 322)**
**இணையதளம்: www.slbfe.lk**

SLSI ISO 9001

*'அக்கரையில் மாண்புற - இக்கரையில் கைகோர்ப்போம்'*


## ஈரானில் தொடரும்...

(08ஆம் பக்கத் தொடர்)

அதனை முதன்மைப்படுத்தும் அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய நாடுகள் அரபு பண்பாட்டுக்கு எதிரானதாக ஈரானிய மக்களை மாற்றலாம் என பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. மேற்கின் பிரசார உத்தி ஒருபுறம் அமைய மறு பக்கத்தில் ஐ.நா.சபையின் மூலம் ஈரானியர்களுக்கு எதிரான பொருளாதாரத் தடையையும் முதன்மைப்படுத்துவதன் மூலம் ஈரானை முழுமையாக தோற்கடிக்க முயலுகின்றன. ஆனால் ஈரானியர்கள் தமது இருப்பினை பாதுகாப்பதற்கு பதிலாக தமது எதிரிகளுக்கு வாய்ப்புக்களையும் தோற்கடிக்கும் வழிமுறைகளையும் அடிக்கடி ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். இது அபாயமான நிகழ்வாகவே தெரிகிறது. ஒரு நாட்டின் குடிமக்களே அந்த நாட்டின் பலமாக அமையும். எதிரி நாடுகளின் ஊடுருவலால் இத்தகைய கிளர்ச்சிகள் ஏற்படுவதாக இருந்தால் அது ஈரானிய ஆட்சியாளர்களது பலவீனமாகதே அமையும். ஈரானிய ஆட்சியாளரது பலவீனமே அமெரிக்காவுக்கான பலமாக அமையும். எதுவாயினும் ஈரானிய குடிமக்கள் கொல்லப்படுவதும் சிறையில் அடைக்கப்படுவதும் ஈரானிய இருப்புக்கு அபாயமானதாகவே அமையும்.

## வீட்டுத் தோட்டம்...

(09ஆம் பக்கத் தொடர்)

எனவே மண்ணரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதாவது சமவுயரக் கோடுகளின் வழியே பாத்திகளை அமைத்தல், சரிவிற்குக் குறுக்காக பாத்திகளை அமைத்தல், உரி மட்டைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி பாத்திகள் கழுவிச் செல்லப்படுவதைத் தவிர்த்தல் போன்றவற்றை மேற்கொள்ள முடியும். மண் பாதுகாப்பு முறைகள் அனைத்தையும் பின்பற்றி பயிரிடும் போது நல்ல பயனைப் பெறலாம்.

அதேபோன்று மண் கழுவிச் செல்லப்படுவதை குறைப்பதற்கு நிலத்தை மூடி வளரும் பயிர்களான வல்லாரை, பொன்னாங்கண்ணி போன்றவற்றைப் பயிரிடுதல் அல்லது புற்களைப் பதித்தல் அல்லது தென்னை உரி மட்டைகளை பதித்தல் போன்றவற்றை மேற்கொள்ள முடியும். சேர, வெட்டிவேர் போன்றவற்றையும் வேலிகளாக இங்கு நடவு செய்ய முடியும்.

### மண்ணில் சேதனப் பொருட்கள் குறைவாகக் காணப்படல்

வீட்டுத்தோட்டத்திற்கு நாம் பெரும்பாலும் செயற்கை உரங்களை இடுவதில்லை. சேதன உரங்களையே இடுவோம். எனவே வீட்டுத் தோட்ட மண்ணில் சேதனப் பொருட்கள் அதிகளவில் இருத்தல் வேண்டும். மண்ணை வளப்படுத்திக் கொள்ள எத்தனையோ வழி முறைகள் உள்ளன. கால்நடைகளின் கழிவுகளை இடல், கழிவுகளை கூட்டெருவாக்கி இடல், கருக்கிய உமியை இடல், மரங்களை தகனமூட்டி கரியை இடல் போன்ற பல முறைகள் உள்ளன. இவற்றை நாம் பிறிதொரு கட்டுரையில் தெளிவாக அறிந்து கொள்வோம்.


**திகதி 06.10.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk** NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4900
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,346,190.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 5 8 5 2 3 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,826,839.00

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 209
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,410,920.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 01 13 27 32
விசேட இலக்கினம் சிம்மம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,885,405.00

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 1355
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,968,200.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 3 1 7 1 6 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,043,992.00

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 930
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,239,480.00
வெற்றி இலக்கினம் Z வெற்றி இலக்கங்கள் 23 34 68 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 128,724,373.20

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3142
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,551,260.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 37 41 56 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,936,042.80

**கோடி 27 + Mega POWER மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம் 1248
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,341,140.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 274,450,550.00
ஆங்கில எழுத்து Z சுப்பர் நம்பர் 02 வெற்றி எண்கள் 23 47 57 59
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

2022 க்கான இலக்குக் கொண்ட

# சந்தைப்படுத்தல் பிரசாரத்தை ஆரம்பித்துள்ள இலங்கை சுற்றுலா கூட்டமைப்பு



இலங்கை சுற்றுலாக் கூட்டமைப்பு (SLTA) குளிர்கால முன்பதிவுகள் மூலம் பல்வேறு வழிமுறைகளில் இலங்கையை உலகளவில பிரபலமடையச் செய்ய இலக்கு வைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் பிரசாரத்தை தொடங்கியுள்ளது.

பெரும்பாலான நாடுகள் இலங்கைக கான பயணத் தடையை நீக்கிய போதும், முக்கிய சந்தைகளில் உள்ள பயணிகளுக்கு நாடு ஸ்திரத்தன்மைக்குத் திரும்பியமை அறிவிக்கப்படவில்லை என்பதால் இது ஒரு முக்கியமான தேவையாகும்.

பிரசாரம் முதன்மையாக டிஜிட்ட லில் மேற்கொள்ளப்படுகின்றது, பயண கொள்முதல் முடிவின் சகல பகுதிக ளையும் உள்ளடக்கியது. இலங்கைக்கு வரக்கூடிய பயணிகளே முதன்மையான இலக்குக் கொண்ட குழுவாக உள்ளனர். ஐக்கிய ராச்சியம், பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் ஸ்பெயின் என்பனவே ஆரம்பத் தில் இலக்கு வைக்கப்பட்டன, அதைத் தொடர்ந்து வளைகுடா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளைச் சேர்ந்தோர் இலக்கு வைக்கப்படுவர்,

பேஸ்புக், இன்ஸ்டாகிராம், கூகுள் டிஸ்ப்ளே வலையமைப்பு மற்றும் யூடியூப் வீடியோ ப்ரீரோல் விளம்பரங் கள் உள்ளிட்ட பல தளங்களில் நுகர் வோர்பிரசாரம் அடுத்த மூன்று மாதங்களில் முன்னெடுக்கப்படும். இதற்கான பிரசா ரத்தின் கருப்பொருள், 'மீண்டும் காதலில் விழுதல்' என்பது, ''இலங்கையைக் காத லித்தல்' என்ற பெரிய கருப்பொருளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு தனித்துவமான முக்கிய கூறுகளுடன் இவ் வுள்ளடக்கமானது வழக்கமான அடிப்ப டையில் புதுப்பிக்கப்படும்.

மேலதிகமாக, தனித்தனியான காரணத் துடன் சமூக வலைத் தளங்களில்'இலங் கையை நேசிப்பதற்கான 100 காரணங் கள்' பிரசாரத்தை தொடங்கும். ஹைகிங், சர்ஃபிங், தேநீர், வனவிலங்குகள், உணவு வகைகள் மற்றும் பல பார்வையாளர்க ளுக்கு உணவளிக்கும் பல்வேறு கூறுகளில் பிரசாரம் கவனம் செலுத்தும். ஒவ்வொரு இடுகையும் இலங்கையைக் கருத்தில் கொள்ளக்கூடிய வெவ்வேறு பார்வையா ளர்களையும் முக்கிய இடங்களையும் குறி வைக்கும் வகையில் #lovesurfing போன்ற தலைப்புடன் குறியிடப்படும்.

# இதயத்திற்கு நன்மையபக்கும் நிகழ்வோடு உலக இதய தினத்தை கொண்டாடிய ஃபுளோரா




இதயத்தின் ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கும் உடல்ரீதியான செயல்பாடு கள் மிக்க மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு மக்களை வழிந டத்தும் நோக்கத்துடன், கொழும்பு 2, பார்க் வீதியில் இதயம் தொடர்பான நல்லுணர்வை ஏற்படுத்தும் அறிவுப் பகிர்வு நிகழ்வை ஏற்பாடு செய்து, 2022 ஆம் ஆண்டு உலக இதய தினத்தை ஃபுளோரா சிறப்பாகக் கொண்டாடியுள் ளது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து விருந்தினர்களும் இதய நோய் தொடர்பான ஆபத்து மதிப்பீட்டை மேற் கொள்ள உதவும் வகையில், Ayubo Life இன் ஏற்பாட்டில் இதயக் குழாய் நோய்களை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு வகை பரிசோதனைக் கருவியைக் கொண்டு மதிப்பீடு செய்யும் நிகழ்வுடன் மாலைப் பொழுது ஆரம்பித்தது. தொடர்ந்து, விருந் தினர்களும், சிறப்பு அதிதிகளும் 'ஆரோக் கியமான உள்ளம் என்பது ஆரோக்கியமான இதயத்தில் தங்கியுள்ளது' என்ற தலைப்பில் 15 நிமிட இதய ஆரோக்கியம் சார்ந்த யோகா பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். புகழ் பெற்ற யோகாசான பயிற்றுவிப்பாளரான அன்னி ஆவ் பிரிட்டிஷ் கொலம்பியா பல் கலைக்கழகத்தில் மனித இயக்கவியலில் பட்டம் பெற்றுள்ளார். உடல் செயல்பாட்டு வகை தயார்படுத்தலில் பயிற்சி பெற்றவர் என்பதுடன், யோகாசான உடற்கூறியல் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். அவர் தனது கணவரான ஆரன் விக்கிரமசிங்கவுடன் இணைந்து இந்நிகழ்வை வழங்கியதுடன், அதனைத் தொடர்ந்து பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

மனதை அமைதிப்படுத்தும் மற்றும் ஆறுதல் அளிக்கும் யோகாசன அமர்வைத் தொடர்ந்து, 'உங்கள் இதயத்தை எப்படி நேசிப்பது மற்றும் கவனித்துக்கொள்வது' என்ற தலைப்பில் ட்ரிஷ்மா பின்டோ அவர்க ளின் நெறியாள்கையுடன் குழு நிலை கலந்து ரையாடல் நிகழ்வொன்று இடம்பெற்றது.

# Christell Luxury Bridal Everlasting Confidence நடத்திய திருமண கண்காட்சி



இலங்கையின் நம்பிக்கையை வென்ற அழகுக்கலை நிலையமான Christell Luxury Bridal (Christell Luxury Wellness) முன்னெடுத்திருந்த முதலாவது திருமணக் கண்காட்சி நிகழ்வான 'Everlasting Confidence' அண்மையில் வெற்றிகரமாக நிறை வடைந்திருந்தது. செப்டெம்பர் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் கொழும்பு One Galle Face இல் இந்த நிகழ்வு இடம்பெற்றது. விரைவில் திருமணம் செய்து கொள்ள எதிர்பார்க்கும் தம்ப தியினருக்கு ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சிகரமான திருமண வாழ்க் கையை முன்னெடுப்பதற்கு உதவும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது.

இரு நாள்கள் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நாட்டின் திருமண நிகழ் வுகள் ஏற்பாடு செய்வோர் மற்றும் அழகுக் கலைத்துறையின் புகழ்பெற்ற செயற்பாட் டாளர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர். இவர்கள், இந்நிகழ்வில் கலந்து கொண்ட திருமணம் செய்ய வுள்ள தம்பதியினருக்கு, தமது திருமணத்தை திட்ட மிடுவது மாத்திரமன்றி, திருமணத்துக்கு பின்னரான விடயங்கள் பற்றிய விளக்கங்கள் மற்றும் தெளிவுப டுத்தல்களை வழங்கியிருந்தனர். இந்த Everlasting Confidence நிகழ்வின் போது தம்ப தியினருக்கு, பூக்கள் அலங்காரம், நிகழ்வுத் திட்டமிடுவோர், புகைப்ப டக் கலைஞர்கள், அலங்கார வடிவ மைப்பாளர்கள், போஷாக்கு நிபுணர் கள், ஆபரண வடிவமைப்பாளர்கள் மற்றும் சருமப் பராமரிப்பு நிபுணர் களை சந்தித்து முற்பதிவு செய்து கொள்ளும் வசதி வழங்கப்பட்டி ருந்தது.

அத்துடன், திருமணத்துக்கு முன்ன ரான உளச் சுகாதார மற்றும் ஆரோக் கிய நிகழ்ச்சிகள், உடற் தகைமை திட்டமிடல் அமர்வுகள், விற்றமின் பரிசோதனைகள், அழகியல் பற் சிகிச்சை ஆலோசனைகள் மற்றும் பல விடயங்கள் பற்றி அறிந்து கொள்ள முடிந்தது.

சருமம் மற்றும் கூந்தல் பராமரிப்பு தொடர்பான ஆலோசனைகளை பேராசிரியர் ரமணி மற்றும் வைத்தியர். ஷானிகா அரசகுலரட்ன, கூந்தல் மற்றும் அலங்கார ஆலோ சனைகளை துறையின் முன்னோடியான ரமணி பெர்னான்டோ மற்றும் மணமகனுக்கான அலங்கார பிரத்தியேக நடத்தை தொடர்பான பயிற்சிப்பட்ட றைகளை பவுசுல் ஹமீட் ஆகியோர் வழங்கியிருந் தனர்.

# இலங்கையின் பொருளாதாரத்திற்கு ரூ. 81 பில்லியனை பங்களித்துள்ள Uber



Uber இன் 2021 க்கான இலங்கை பொரு ளாதாரதாக்க அறிக்கையானது, ஐக்கிய இராச் சியத்தை தளமாகக் கொண்ட கொள்கை ஆராய்ச்சி நிறுவனமான Public First ஆல் தொகுக்கப்பட்டு, இன்று நாட்டின் தலைநகரில் இடம்பெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் இலங்கைப் பொருளாதாரத் திற்கு ரூபா 81 பில்லியன் தொகையை ஈட்டிக் கொடுப்பதன் மூலம் நுகர்வோர், ஓட்டுநர்கள் மற்றும் விநியோக கூட் டாளர்கள் மற்றும் பரந்த சமூகத்திற்கு அவர்களின் தேவைக்கேற்ப பொருளா தாரத்தை மாற்றியமைக்க Uber மற்றும் Uber Eats எவ்வாறு உதவியுள்ளன என்பதை இந்த அறிக்கை எடுத்துக்காட் டுகிறது.

இலங்கை பிரதமர் தினேஷ் குண வர்தன அவர்கள் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். Uber இன் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான பொதுக் கொள்கை மற்றும் அரசாங்க உற வுகளுக்கான சிரேஷ்ட பணிப்பாளரான மைக் ஓர்கில், Uber இன் இந்தியா மற்றும் தெற்காசிய பிராந்தியத்திற்கான பிராந்திய செயல்பாடுகளுக்கான பணிப்பாளரான சிவா ஷைலேந்திரன், Uber Eats இன் இலங்கைக்கான முகாமையாளர் திருமதி பாவ்னா தத்லானி ஜெயவர்தன, Uber Rides இன் இலங்கைக்கான முகாமை யாளரான திருமதி தனுஷிகா சிவநாதன் அடங்கலாக Uber Sri Lanka இன் தலை மைத்துவ அணி உறுப்பினர்களும் இந்நி கழ்வில் சமூகமளித்து சிறப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கை குறித்து கருத்து தெரி வித்த Uber இன் ஆசிய பசுபிக் பிராந்தி யத்திற்கான பொதுக் கொள்கை மற்றும் அரசாங்க உறவுகளுக்கான சிரேஷ்ட பணிப்பாளரான மைக் ஓர்கில் , "Uber, 2015 இல் இருந்து இலங்கையில் பொரு ளாதார வளர்ச்சி மற்றும் வாய்ப்புக்கான ஒரு முக்கிய உந்துசக்தியாகத் திகழ்ந்து வருகிறது " என்று குறிப்பிட்டார்.

SriLankan Airlines oneworld

## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் வழங்குனர்களை பதிவு செய்தல்
- சந்தைப்படுத்தல் பிரிவு

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸில் தங்கள் நிறுவனங்களை பதிவு செய்ய விரும்பும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டில் உள்ள புகழ்பெற்ற சப்ளையர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இதன் மூலம் கோரப்படுகின்றது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

| Procurement Category | Broad Listing of Items |
| --- | --- |
| Advertising | Creative agencies, media buying agencies (local/international), hoarding suppliers, media houses, publishing houses. |
| Promotions | Event management companies, suppliers of giveaway items/merchandising, production agencies, designers and interior design agencies/suppliers, fabrication agencies, printing suppliers, outdoor branding, hiring of furniture and other event management material, hiring of sounds and lights, vehicle hiring companies/suppliers, photographers, entertainment groups and comperes, hotels - for promotional and corporate events. |
| Brand Management | Production agencies, designers and interior design agencies. |
| Digital and Social Media | Photographers, videographers, audio/video production agencies, event strategist companies, courier services, tour operators, hotels, content writers, digital research companies, web developers, social media listening and solutions services, translators, digital and social media buying and planning /seo/sem, digital marketing agencies. |
| Sustainability | High resolution underwater photography and videography, videographers, photographers, audio /video production agencies, writers, boat facilities suppliers, fertiliser suppliers |
| Editorial and Publications | Translators - Sinhala, Tamil, Chinese, Japanese, Arabic, French and German, publishing houses. |

ஆவணங்களை (சப்ளையர்களுக்கான பொதுவான வழிமுறைகள், ஒவ்வொரு கொள்முதல் வகையின் விவரங்கள் மற்றும் சப்ளையர் பதிவு படிவம்) நேரடியாக **https://www.srilankan.com/en_uk/corporate/tender-notices.** இணையப்பக்கத்தில் அக்டோபர் 09, 2022 முதல், 1100 மணி தொடக்கம் (இலங்கை நேர GMT + 05:30 நேர மண்டலம்) பதிவிறக்கம் செய்யலாம்

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தேவையான அனைத்து ஆவணங்களுடன் **"ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் சந்தைப்படுத்தல் பிரிவின் வழங்குனர்களுக்கான பதிவு"** என்று குறிக்கப்பட்ட சீல் செய்யப்பட்ட உறையில் அனுப்பப்பட வேண்டும்.

பதிவு தபால் மூலம்:
சந்தைப்படுத்தல் தலைவர்
ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட், சந்தைப்படுத்தல் பிரிவு, விமான சேவை மையம்,
பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கா, இலங்கை.

30.10.2022 அன்று அல்லது அதற்கு முன்

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது சப்ளையர் பதிவு செயல்முறையை ரத்து செய்ய உரிமை உள்ளது.

## வக்குப் நியாய சபைக்கான தலைவர் மற்றும் அங்கத்தவர்களை நியமித்தல் – 2022

## நீதிச்சேவை ஆணைக்குழு

1982ஆம் ஆண்டின் 33ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1956ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க முஸ்லிம் பள்ளிவாசல்கள், தர்ம நம்பிக்கைப் பொறுப்புகள் அல்லது வக்குப் சட்டத்தின் கீழ் வக்குப் நியாய சபைக்கான தலைவர் மற்றும் அங்கத்தவர்களை நியமனம் செய்வதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதி நவம்பர் மாதம் 04ஆம் திகதி 2022

**விண்ணப்பிக்கும் முறை மற்றும் மேலதிக விபரங்கள்**
2022.10.07ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்

அரச வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**சிரேஷ்ட உதவிச் செயலாளர்,**
**காதிப் பிரிவு,**
**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,**
**த.பெ. இல. 573,**
**கொழும்பு -12.**
**011 2433119/ 011 2451159**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## மக்கள் வங்கி

## விலைமனுவிற்கான அழைப்பு

### பிலிமத்தலாவயில் தற்போதுள்ள மக்கள் வங்கி கட்டிடத்தின் எல்லைச் சுவர்களை வலுவூட்டல் மற்றும் மீள்நிர்மாணம் மற்றும் கட்டமைப்புரீதியிலான ஸ்திரத்தன்மையை மேம்படுத்தல்

**விலைமனு இல.: 040/2022**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் பெசேவ நீங்கலாக 23.8 மில்லியன் ரூபாவில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுமான பிலிமத்தலாவயில் தற்போதுள்ள மக்கள் வங்கி கட்டிடத்தின் எல்லைச் சுவர்களை வலுவூட்டல் மற்றும் மீள்நிர்மாணம் மற்றும் கட்டமைப்புரீதியிலான ஸ்திரத்தன்மையை மேம்படுத்தலுக்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

   இச்செயற்றிட்டமானது தற்போதுள்ள வங்கிக் கட்டிடத்தின் எல்லைச் சுவர்களை வலுவூட்டல் மற்றும் மீள்நிர்மாணம் மற்றும் கட்டமைபு ரீதியிலான ஸ்திரத்தன்மையை மேம்படுத்தல் ஆகியவற்றை அடக்கியுள்ளது.

   நிர்மாணக் காலப்பகுதியானது 120 நாட்களாகும்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்த வழங்கலை பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
   கட்டிட நிர்மாணத் துறையில் சி-5 அல்லது மேற்பட்ட தரத்திற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருத்தல்.

4. ஒப்பந்த வழங்கலின் தகைமையானது பின்வரும் தகைமைத் தேவைப்படுத்தல்களை அடக்குகின்றது.

   - கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதியானது ஆகக் குறைந்தது 108 மில்லியன் ரூபாவாகவிருத்தல்.
   - பிரதான ஒப்பந்தக்காரராக நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையில் எல்லை கட்டமைப்பு அடங்கலாக சித்திகரமான நிர்மாண வேலையை 4 மாதங்களுள் ஆகக் குறைந்தது 25.0 மில்லியன் ரூபாவில் பூர்த்தி செய்திருத்தல் அல்லது கடந்த ஐந்து வருடங்களில் விகிதாசார கால எல்லையில் மேற்பட்ட பெறுமதியையுடைய செயற்றிட்டத்தை பூர்த்தி செய்திருத்தல்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்த பெறுமதி 18.0 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் தலைமையக 6 ஆம் மாடியின் பொறியியல் சேவைகள் திணைக்கள கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 0112473206. தொலைநகல்: 0112341591) 2022 ஒக்ரோபர் 12 ஆம் திகதியிலிருந்து 2022 நவம்பர் 1 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

6. 2022 ஒக்ரோபர் 12 ஆம் திகதியிலிருந்து 2022 நவம்பர் 1 ஆம் திகதி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000 ரூபாவை (பத்தாயிரம் ரூபா) மாத்திரம் செலுத்திய பின்னர், மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மேலேயுள்ள முகவரியிலுள்ள கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7. 2022 நவம்பர் 02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மக்கள் வங்கியின் கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர், பொறியியல் சேவைகள் திணைக்களம், 6 ஆம் மாடி, மக்கள் வங்கி, இல. 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 2023 பெப்ருவரி 1 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. விலைமனுக்கோரல் தரவின் 16ஆம் உபபிரிவின் பிரகாரம் மக்கள் வங்கி நீங்கலாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் 2023 மார்ச் 1ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் இரண்டு இலட்சத்து நாற்பத்தையாயிரம் ரூபாவிற்கு மாத்திரம் (245,000 ரூபா) கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்டதும் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 9ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்திலுள்ளவாறான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியில் 2022 ஒக்ரோபர் 21 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர் - கட்டிட பொறியியல் சேவைகள்,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6 ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையலுவலகம்,**
**இல. 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

## தேசிய உப்பு நிறுவனம்

### பொறித்தொகுதியுடன் (PLANT) மேசை உப்புத் தொழிற்சாலையொன்றை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு விலைமனுக் கோரல்

தேசிய உப்பு நிறுவனமானது, கைத்தொழில் அமைச்சின் மேற்பார்வையின் கீழ், மன்னார் மற்றும் ஆனையிறவு உப்பளங்களில் சாதாரண உப்பை உற்பத்தி செய்யும் பூரணமாக அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு நிறுவனமாகும். அதன் பெறுமதி கூட்டப்பட்ட விற்பனை முறைகளை நாடு முழுவதும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன், 3MT/H முதல் 5MT/H அளவான கொள்ளளவுடைய மேசை உப்பை பதப்படுத்தும் தொழிற்சாலையை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் பிரகாரம் தேசிய உப்பு நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தலைவர், ஒரு மேசை உப்பு பதப்படுத்தும் ஆலையை ஆரம்பத்தில் 03 (மூன்று) ஆண்டுகளுக்கு குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கிறார் என்பதுடன் பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் தேவைக்கேற்ப நீட்டித்துக்கொள்ளலாம்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை 11/10/2022ஆம் திகதி முதல் 01/11/2022ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 25,000.00 ரூபா கொடுப்பனவு மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகளை தேசிய உப்பு நிறுவனத்தின் காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். விலைமனுக்களை 2022 நவம்பர் 02ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தேசிய உப்பு நிறுவனத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய உப்பு நிறுவனம், கைத்தொழில் அமைச்சு, இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அந்த நேரத்திற்குப் பிறகு உடனடியாக தேசிய உப்பு நிறுவனத்தின் மாநாட்டு அறையில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

கடித உறையின் இடதுபக்க மேல் இடது மூலையில் "மேசை உப்பு தொழிற்சாலை வாடகைக்கான விலைமனு" எனத் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தேசிய உப்பு நிறுவனம் எந்த காரணத்தையும் முன்வைக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய உப்பு நிறுவனம்,**
**கைத்தொழில் அமைச்சு,**
**561/3, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 05.**

## கல்முனை மாவட்ட நீதிமன்றம்

## ஏல விற்பனை அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி,
எச்.என்.பி. உயர் மாடிகள்,
இல. 479, ரி.பி. ஜாயா
மாவத்தை, கொழும்பு -10
**கிளை:**
இல. 30A, மட்டக்களப்பு வீதி,
கல்முனை

**வழக்காளி**

**வழக்கு இல. DR/39/18**

**எதிர்**

ஹயாத்து முகமது முகமது
யாசின
இல. 26/1,
வைத்தியா வீதி
தெஹிவளை

**எதிராளி**

மேற்குறித்த வழக்கின் எதிராளி வழக்காளிக்கு செலுத்த வேண்டிய கடன்தொகையை செலுத்த தவறியதனால் கௌரவ மாவட்ட நீதிபதியின் 13.05.2020ம் திகதிய தீர்ப்பின் பிரகாரமும் 18.07.2022ம் திகதிய கட்டளையின் பிரகாரமும் பிரசித்த நொத்தாரிஸ் A.M. றக்கீப் அவர்களால் 17.05.2017ம் திகதியிடப்பட்ட 2713 இலக்கமிட்ட ஈட்டுறுதியில் கீழ்க்குறித்த ஆதன இடாப்பில் குறிப்பிடப்படும் ஆதனம் எதிர்வரும் 26.10.2022ம் திகதி காலை 10.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் கல்முனை மாவட்ட நீதிமன்றப் பதிவாளரினால் ஏலத்தில் கூறி விற்கப்படும்.

**ஆதன இடாப்பு**

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம், கரைவாகுப்பற்று, கல்முனையில் கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட கல்முனை 03ல் கிராம சேவையாளர் பிரிவில் அனைந்துள்ள உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். நேசராஜா அவர்களல் 24.08.2011ந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட SNR/2011/378ம் இலக்க நில அளவைப்படத்தில் காட்டப்பட்ட ஆதனம், எல்லைகள் வடக்கு தனியார் ஒழுங்கை, கிழக்கு ஒழுங்கை, தெற்கு ஊதுமாலெப்பையின் ஆதனம் மேற்கு ஏ. சாகித்தின் ஆதனம், இதன் விஸ்தீரணம் 0.0184 ஹெக்ரெடயர் அல்லது ஏழு தசம் இரண்டு ஏழு பேர்ச்சஸ் இது கல்முனைக் காணிப் பதிவகத்தில் சுமைச்சீட்டு V42/107ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மன்றின் கட்டளைப்படி**

**பதிவாளர்.**

## கல்முனை மாவட்ட நீதிமன்றம்

## ஏல விற்பனை அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி,
இல. 470, ரி.பி. ஜாயா
மாவத்தை,
கொழும்பு -10
**கிளை:**
இல. 30A, மட்டக்களப்பு வீதி,
கல்முனை

**வழக்காளி**

**வழக்கு இல. DR/45/18**

**எதிர்**

ஓர்க்கிட் பிளாஸ்டிக் பிரைவட்
லிமிட்டட்,
இல. 48/05,
DR. SD பெர்ணான்டோ
மாவத்தை, கொழும்பு
**தற்காலம்:**
114/03, ஹனிபா வீதி,
கல்முனைக்குடி

**எதிராளி**

மேற்குறித்த வழக்கின் எதிராளி வழக்காளிக்கு செலுத்த வேண்டிய கடன்தொகையை செலுத்த தவறியதனால் கௌரவ மாவட்ட நீதிபதியின் 04.12.2019ம் திகதிய தீர்ப்பின் பிரகாரமும் 18.07.2022ம் திகதிய கட்டளையின் பிரகாரமும் பிரசித்த நொத்தாரிஸ் M.U. தாஹா செயினுதின் அவர்களால் 11.10.2010ம் திகதியிடப்பட்ட 11626 இலக்கமிட்ட ஈட்டுறுதியில் கீழ்க்குறித்த ஆதன இடாப்பில் குறிப்பிடப்படும் ஆதனம் எதிர்வரும் 02.11.2022ம் திகதி காலை 10.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் கல்முனை மாவட்ட நீதிமன்றப் பதிவாளரினால் ஏலத்தில் கூறி விற்கப்படும்.

**ஆதன இடாப்பு**

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம், கரைவாகுப்பற்று, கல்முனையில் கல்முனைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட கல்முனை 07ல் கல்முனைக்குடி, ஹனிபா வீதி, இல. 14/3ல் அமைந்துள்ள ஆதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.எச்.எம். மன்சூர் அவர்களால் 14.09.2010ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 894ம் இலக்க நில அளவைப் படத்தில் காட்டப்பட்ட ஆதனம், எல்லைகள் வடக்கு தனியார் ஒழுங்கை, கிழக்கு றுக்கியா உம்மாவின் ஆதனம், தெற்கு ரசீனாவின் ஆதனம், மேற்கு யூ.எல்.எச். மொஹமட் நாச்சியின் ஆதனம், இதன் விஸ்தீரணம் எட்டு தசம் ஐந்து ஒன்பது பேர்ச்சஸ் இது கல்முனைக் காணிப் பதிவகத்தில் சுமைச்சீட்டு K 220/209ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மன்றின் கட்டளைப்படி**

**பதிவாளர்.**

## கல்முனை மாவட்ட நீதிமன்றம்

## ஏல விற்பனை அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி,
H.N.B. உயர் மாடிகள்,
இல. 479, ரி.பி. ஜாயா
மாவத்தை, கொழும்பு -10
**கிளை:**
இல. 30A, மட்டக்களப்பு வீதி,
கல்முனை

**வழக்காளி**

**வழக்கு இல. DR/51/2020**

**எதிர்**

01. ஜயா அஹமட் ஹஸ்மி,
02. கலந்தர் நஸ்ரின் ஜகன்
இருவரும்
இல. 30A, ஜும்ஆ பள்ளி வடக்கு
வீதி. நிந்தவூர்

**எதிராளிகள்**

மேற்குறித்த வழக்கின் எதிராளிகள் வழக்காளிக்கு செலுத்த வேண்டிய கடன்தொகையை செலுத்த தவறியதனால் கௌரவ மாவட்ட நீதிபதியின் 19.08.2022ம் திகதிய தீர்ப்பின் பிரகாரமும் 18.07.2022ம் திகதிய கட்டளையின் பிரகாரமும் பிரசித்த நொத்தாரிஸ் M.U. தாஹா செயினுதின் அவர்களால் 18.05.2016ம் திகதியிடப்பட்ட 2352 இலக்கமிட்ட ஈட்டுறுதியில் கீழ்க்குறித்த ஆதன இடாப்பில் குறிப்பிடப்படும் ஆதனம் எதிர்வரும் 09.11.2022ம் திகதி காலை 10.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் கல்முனை மாவட்ட நீதிமன்றப் பதிவாளரினால் ஏலத்தில் கூறி விற்கப்படும்.

**ஆதன இடாப்பு**

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம், நிந்தவூர்பற்று, நிந்தவூரில், நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நிந்தவூர் -11 கிராம சேவையாளர் பிரிவில் நிந்தவூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நிந்தவூரில் அமைந்துள்ள ஆதனம் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். சின்னலெப்பே அவர்களால் 05.04.2016ந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 579ம் இலக்க நில அளவைப்படத்தில் காட்டப்பட்ட ஆதனம், எல்லைகள் வடக்கு கே. தஸ்னிம் ஜஹானின் ஆதனம், கிழக்கு வீதி, தெற்கு ஏ. ஹாலிதாவின் ஆதனம் மேற்கு கே. கதீஜாவின் ஆதனம் இதன் விஸ்தீரணம் 0.0187 ஹெக்ரெயர் அல்லது ஏழு தசம் மூன்று ஒன்பது பேர்ச்சஸ் இது கல்முனைக் காணிப் பதிவகத்தில் சுமைச்சீட்டு L101/82ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மன்றின் கட்டளைப்படி**

**பதிவாளர்.**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



SPC

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்

## Polythene Rolls இன் வழங்கலுக்கான கேள்விகளுக்கான அழைப்பு

**கேள்வி இல.: AD/2/ P R / 331/2022**

**2022 ஒக்டோபர் 28 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு மூடப்படும்**

**Polythene Rolls** இன் வழங்கலுக்காக நாராஹேன்பிட்டி, அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்களை அழைக்கின்றார்.

**நாராஹேன்பிட்டி, கிருள வீதி, 41 ஆம் இலக்கத்தின் 27 ஆம் மாடியிலுள்ள ''மெஹெவர பியச''** இலுள்ள காசாளரிடம் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக **3,000 ரூபா மற்றும் பெறுமதி சேர் வரி** ஆகியவற்றை **2022.10.11 ஆம் திகதியிலிருந்து 2022.10.27 ஆம் திகதி வரையும்** வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் செலுத்திய பின்னர், நாராஹேன்பிட்டி, கிருள வீதி, 41 ஆம் இலக்கத்தின் 16 ஆம் மாடியிலுள்ள ''மெஹெவர பியச'' அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபன வரவேற்பு கருமபீடத்தில் கேள்வி ஆவணத்தை இலவசமாக பரீட்சித்து பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் விலைமனுக்கோரலானது **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம், ''மெஹெவர பியச'', 16 ஆம் மாடி, இல. 41, கிருள வீதி, நாராஹேன்பிட்ட** என முகவரியிடப்பட்டு **2022 ஒக்டோபர் 28 ஆம்** திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள அமைவிடத்திலுள்ள நிருவாக திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியொன்றில் சேர்க்கப்படல் வேண்டும்.

தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விகளை அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். தேவைப்படும் மேலதிக தகவலை **011 2 055 410** என்ற தொலைபேசியூடாக வேலை நாட்களில் மாத்திரம் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் **நிருவாக அலுவலகரிடமிருந்து** பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்,**
**''மெஹெவர பியச'', 16 ஆம் மாடி, இல. 41,**
**கிருள வீதி, நாராஹேன்பிட்டி.**
**தொலைபேசி: 2 320356-9**

# காதி நீதிபதிகளை நியமித்தல் - 2022

# நீதிச்சேவை ஆணைக்குழு

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் பின்வரும் அட்டவணையில் உள்ள பிரதேசங்களுக்கான 'காதி' பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அட்டாளைச்சேனை | 2 | அக்கரைப்பற்று | 3 | அக்குரண | 4 | அனுராதபுரம் |
| 5 | அவிஸ்ஸாவளை | 6 | பதுளை | 7 | பலப்பிட்டி/எல்பிட்டி | 8 | பேருவளை |
| 9 | போறா சமூகம் | 10 | பியகம | 11 | கொழும்பு கிழக்கு | 12 | கொழும்பு வடக்கு |
| 13 | கொழும்பு தெற்கு | 14 | கொழும்பு மேற்கு | 15 | ஏறாவூர் பற்று | 16 | காலி |
| 17 | கம்பஹா | 18 | அம்பாந்தோட்டை | 19 | ஹாரிஸ்பத்துவ பூஜாப்பிட்டிய | 20 | ஹட்டன் |
| 21 | ஹொரணை | 22 | இறக்காமம் | 23 | கரைவாகுப்பற்று வடக்கு (கல்முனை) | 24 | கற்பிட்டி |
| 25 | களுத்துறை | 26 | கண்டி | 27 | காத்தாண்குடி | 28 | கேகாலை |
| 29 | கின்னியா | 30 | குளியாப்பிட்டி | 31 | குருநாகல் | 32 | மாஹோ |
| 33 | மன்னார் | 34 | மாத்தளை | 35 | மாத்தறை | 36 | மாவனல்ல |
| 37 | மேமன் சமூகம் | 38 | மொனராகலை | 39 | மூதூர் (கொடியார் பற்று) | 40 | நாவலப்பிட்டி |
| 41 | நீர்கொழும்பு | 42 | நிந்தவூர்பற்று | 43 | நுவரெலியா | 44 | ஓட்டமாவடி |
| 45 | பஹதஹேவாகெட்ட | 46 | பொலன்னறுவை | 47 | பொத்துவில் | 48 | புல்மோட்டை |
| 49 | புத்தளம் மற்றும் சிலாபம் | 50 | இரத்தினபுரி | 51 | இடம் பெயர்ந்தவர்கள் | 52 | கரைவாகுபற்று தெற்கு (சாய்ந்தமருது) |
| 53 | சம்மாந்துறை | 54 | தம்பலகாமம் கந்தளாய் | 55 | தங்காலை | 56 | திருகோணமலை |
| 57 | தும்பனை | 58 | உடபலாத கம்பளை | 59 | உடதலவின்ன (உடமெத மற்றும் பஹத தும்பறை) | 60 | உடுநுவர |
| 61 | வாழைச்சேனை (கோரளைப்பற்று) | 62 | வவுனியா | 03 | யடிநுவர | 64 | யாழ்ப்பாணம் |

**அடிப்படைத் தகைமைகள்**

- இஸ்லாம் சமயத்தைச் சார்ந்த 40 வயதுக்கு மேற்பட்ட விவாகமான ஆணாக இருத்தல்
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக இருத்தல் அல்லது
- முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக இருத்தல் அல்லது
- கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக இருத்தல் அல்லது
- சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்கு சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக இருத்தல் அல்லது
- ஓய்வு பெற்ற பதவிநிலை தரத்திலான அரச உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

**ஏனைய தகைமைகள்**

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்க வேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக இஸ்லாமிய சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும், மதிப்பும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர், நியமனக் கடிதத்தில் குறிப்பிடுகின்ற காலப்பகுதிக்காக நியமனம் செய்யப்படுவார்

காதியாக நியமிக்கப்படுபவர் தான் நியமனம் பெறும் பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசித்தலானது சட்டரீதியான தேவைப்பாடாக கருதப்படும்.

**கொடுப்பனவுகள்**

மாதாந்த கொடுப்பனவாக ரூபா 7,500/- மற்றும் உதவியாளர் சேவை எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் ரூபா 6,250/- கொடுப்பனவொன்றுமாகச் சேர்த்து மொத்தமாக ரூபா 13,750/- வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதி**
2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04ஆம் திகதி

**விண்ணப்பிக்கும் முறை மற்றும் மேலதிக விபரங்கள்**
2022.10.07ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்

அரச வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**சிரேஷ்ட உதவிச் செயலாளர்,**
**காதிப் பிரிவு,**
**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,**
**த.பெ. இல. 573, கொழும்பு -12.**

**011 2433119/ 011 2451159**

Daily News Classifieds, the Housewives' companion

Repeat Your Ad For Better Offers

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

# காதிச் சபை தலைவர் மற்றும் அங்கத்தவர்களை நியமித்தல் – 2022

## நீதிச்சேவை ஆணைக்குழு

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் காதிச் சபை தலைவர் மற்றும் அங்கத்தகர்களை நியமிப்பதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமைகள்**

- இஸ்லாம் சமயத்தைச் சார்ந்த 40 வயதுக்கு மேற்பட்ட விவாகமான ஆணாக இருத்தல்
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக இருத்தல் அல்லது
- முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக இருத்தல் அல்லது
- கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக இருத்தல் அல்லது
- சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்கு சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக இருத்தல் அல்லது
- ஓய்வு பெற்ற பதவிநிலை தரத்திலான அரச உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர். (நீதிச்சேவை உத்தியோகத்தர் தவிர)

**ஏனைய தகைமைகள்**

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்க வேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக இஸ்லாமிய சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும், மதிப்பும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர், நியமனக் கடிதத்தில் குறிப்பிடுகின்ற காலப்பகுதிக்காக நியமனம் செய்யப்படுவார்

**கொடுப்பனவுகள்**

காதிச் சபை தலைவருக்கு மாதாந்தம் 15,000/- நிரந்தரக் கொடுப்பனவாகவும் ஒவ்வொரு அமர்விற்கும் ரூபா 3,750/- வீதம் மாதமொன்றுக்கு ரூபா 15,000/- இற்கு மேற்படாத தொகை பிரயாணச் செலவாகவும், அங்கத்தவர் ஒருவருக்கு மாதாந்தம் 12,000/- நிரந்தரக் கொடுப்பனவாகவும் ஒவ்வொரு அமர்விற்கும் ரூபா 2,000/- வீதம் மாதமொன்றுக்கு ரூபா 8,000/- இற்கு மேற்படாத தொகை பிரயாணச் செலவாகவும் வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதி**
2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04ஆம் திகதி

**விண்ணப்பிக்கும் முறை மற்றும் மேலதிக விபரங்கள்**
2022.10.07ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்

அரச வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**சிரேஷ்ட உதவிச் செயலாளர்,**
**காதிப் பிரிவு,**
**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,**
**த.பெ. இல. 573,**
**கொழும்பு -12.**
**011 2433119/ 011 2451159**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

**කෘෂිකර්ම අමාත්‍යාංශය**
**கமத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

## வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு பிளாஸ்டிக் பெட்டிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, கிழக்கு, மத்தி மற்றும் ஊவா மாகாணங்களுக்கு பிளாஸ்டிக் பெட்டிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. வடக்கு, கிழக்கு, மத்தி மற்றும் ஊவா மாகாணங்களுக்கு பிளாஸ்டிக் பெட்டிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| ஊவா மாகாணம் பதுளை மாவட்டத்திற்கு பிளாஸ்டிக் பெட்டிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA-PMU-275850-GO-RFB | 8,400 Nos | 405,000.00 | 5,000.00 |
| ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பிளாஸ்டிக் பெட்டிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA-PMU-282685-GO-RFB | 11,000 Nos | 530,000.00 | 7,500.00 |
| வடக்கு, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பிளாஸ்டிக் பெட்டிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA-PMU-283007-GO-RFB | 5,500 Nos | 265,000.00 | 5,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022.10.10ஆம் திகதியிலிருந்து 2022.11.01ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. 2022.11.01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''வடக்கு, கிழக்கு, மத்தி மற்றும ஊவா மாகாணங்களுக்கு பிளாஸ்டிக் பெட்டிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக்குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
திகதி: 2022.10.09

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 212 அச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு

Heidelberg Offset Machine இறக்குமதி செய்யப்பட்ட நிலைமையில் விற்பனைக்கு. Kord Red Button Grey-3 மெஷின்கள், Kord Yellow Button Grey-3 மெஷின் கள், Heidelberg Cylinder Die Cutting Machine-2 மெஷின்கள், FT Auto Paper Cutter-2 மெஷின்கள் பரிசீலனைக்காக அழைக்கவும். ALI - 0777900381/ 0775771343. 059882

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

20 - 35 வயதிற்கு இடைப்பட்ட விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. (மோட்டார் சைக்கிள் இருத்தல் வேண்டும்.) 0759504235. 059221




### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

வாகன சேவை நிலையத்திற்கு (அனுபவமுள்ள/ அனுபவமற்ற) வேலையாட்கள் தேவை. அன்டர் வொஷ், பொடி வொஷ், இன்டீரியர், வெக்கூம், ஒயில் மற்றும் பிலிட்டர் மாற்றல் செய்யும் திறமையுள்ளவர்கள் விடுமுறை தினங்கள் (திங்கள், போயா நாட்களில் ) விடுதி வசதிகள் பெற முடியும். உடனடியாக தொடர்பு கொள்ளவும் பியகம 0706912344. 059736



### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

நிட்டம்புவவில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு லொறி ஓட்டுவதற்கு அனுபவமுள்ள கனரக சாரதிகள் தேவை. 0771531121. 059650

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பிலியந்தலை, மிரிஸ்வத்தையில் வீட்டில் தங்கி உணவு சமைப்பதற்கு சுத்தமான 45 - 55 வயதிற்கு இடைப்பட்ட பெண்கள் தேவை. 0774450684, (011)2609612. 059822

பெண் உதவியாளர்கள், வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 18 முதல் 30. அனுபவம் தேவையில்லை. சிறந்த சம்பளம். தொடர்பு 75/ 1, W.A. சில்வா மாவத்த, வெள்ளவத்தை, கொழும்பு6. அழையுங்கள் 011 2591169, 0777452 447, 0755091379. (வட்ஸ்அப் 0760 90945 8), 056258

வீட்டுப் பணிப்பெண் தேவை. வீட்டு வேலைக்கு வயது 40 - 50க்கு இடைப்பட்ட பணிப்பெண் தேவை. வயதான பெண்மணியை பராமரித்தல், வீட்டு வேலைகளில் உதவுதல் வேண்டும். ரூபா 40,000.00 சம்பளம் வழங்கப்படும். கலந்தாலோசித்து கொள்ளலாம். Tel: 0771927042. 059384

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

கம்பஹா பூகொடயிலுள்ள தோட்டமொன்றிற்கு காவற்காரர் ஒருவர் தேவை. ஆண் ஒருவர் குடும்ப பொறுப்பில்லாமல் தங்கியிருந்து வேலை செய்தல் வேண்டும். 059742

காவலாளி தேவை. கம்பஹா, பூகொட தோட்டத்திற்கு குடும்பச் சுமையிலிருந்து விடுவிக்கப்பட்டு தங்கி வேலை செய்வதற்கு ஆண் தேவை. அர்ப்பணிப்பின்படி கூடுதல் சம்பளம். தங்குமிடம், உணவு இலவசம். தொடர்புகள் 0760011511, 0764085111. 060061

தங்கி நெல் வயல் மற்றும் தோட்ட வேலை செய்ய விவசாயி தேவை. இடம் பிங்கிரிய. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு. 0770 059996. 059946

பண்ணையில் உள்ள ஓர் 5 ஏக்கர் தென்னந் தோட்டத்திற்கு தம்பதி அல்லது குடும்பம் தேவை. சுத்திகரித்தல், பராமரித்தல், கண்காணித்தல் வேலைகள் பண்ணை விடயங்களில் அடிப்படை அறிவு அவசியம். கிறிஸ்தவ குடும்பங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு இலக்கத்துடன் அழையுங்கள். 07 73506000, 07 13386494. 058357

புத்தளத்தில் உள்ள தோட்டத்தை கவனித்துக் கொள்ள ஒரு ஜோடி தேவை. 071 4513889/ 077 7349119. 059533

புத்தளத்தில் பயிர் செய்கைக்காக தொழிலாளர் குடும்பம் தேவை. (இலகு வாகனங்களுக்கான உரிமம் மேலதிக தகைமையாகும்.) 0764596563, 0775952208, 0707244218. 059744

### 325 தொழில்துறை பொது

ஆயுர்வேத SPA பொறளையிலுள்ள எமது நிறுவனத்திற்கு 18 வயதிற்கு மேற்பட்ட அழகான பயிற்சி பெற்ற/ பயிற்சி யில்லாத பெண்ணொன்று தேவை. பாதுகாப்பான சூழ்நிலையில் தங்கியிருந்து நாளொன்றிற்கு 10, 000 - 15, 000 வருமானமுள்ள எமது சிநேகபூர்வமான ஊழியர்களுடன் இணைந்து உங்கள் வாழ்க்கையை வெற்றிபெற செய்யுங்கள். 0772026082, 0776419242. 059757

கொழும்பு சுத்திகரிப்பு கம்பனிக்கு சுப்பவைசர் ஆண், பெண் பொலிசர் இயந்திர இயக்குநர்கள் தேவை. கூடுதல் சம்பளம் + EPF/ ETF அழையுங்கள் 0772771022. 059387

## காணி/தோட்டம்

### 601 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் விற்பனைக்கு

ஜா-எல, ஏக்கல, மிலேனியம் விலா குடிமனைத் தொகுதி II ஆம் வலயத்தில் ஆடம்பரமான வீடொன்று, உரிமையாளர் வெளிநாடு செல்ல இருப்பதனால் விற்பனைக்கு. தொடர்பெண் 0773951560. 059793

### 612 கட்டிட நிர்மாணம்/ பொருட்கள்

மதில் பூச்சு, பொடி, பிளேன்ட் உட்பட சகல மேசன் வேலைகளும் மலிவு விலையில் செய்து தரப்படும். 0765526182. 060062

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

நுகேகொட சந்திக்கு நடை தூரத்தில் குடியிருப்புக்கு மிகவும் பொருத்தமான 44 பேர்ச் காணி விற்பனைக்கு. 0713409313. 059223

பத்தரமுல்ல பைப் பாதையில் 15 பேர்ச், கொஸ்வத்தயில் 20 பேர்ச், கோட்டை ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையிலிருந்து 500 மீ. தூரத்தில் 15 பேர்ச் என 3 காணித்துண்டுகள் மற்றும் மிரிஹானவில் முழுமையான வீடொன்றும் விற்பனைக்குண்டு. 0773951560. 059749

பொறளை, கொழும்பு08, கோத்தமி பாதையில் கோத்தமி விஹாரைக்கு அண்மையில் 10 பேர்ச் சிறந்த காணி உடனடி விற்பனைக்கு. 0773951560. 059790

### 618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

களுத்துறை கெலிடோ கடற்கரைக்கு முகப்பாக 177 பேர்ச் காணி விற்பனைக்கு. 0713409313. 059228

களுத்துறை, பயாகல காலி வீதிக்கு மற்றும் கடற்கரைக்கு முகப்பாக 40 பேர்ச் சகல பரிந்துரைகளும் பெற்றுள்ள காணி விற்பனைக்கு. 0713409313. 059225

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

0777438169 கண்டி நகரிற்கு அருகில் ஹோட்டல் F/L/11 லைசன் உள்ள 10 அறைகள் முதல் அதற்கு மேலும் உள்ள A/C, கராஜ் பொருட்களுடன வீடு குண்டசாலை திகன பிரதான வீதிக்கு முகப்பாக சிறந்த கட்டிடங்கள் பல உள்ளது. மிகவும் பெறுமதி வாய்ந்த 80 பேர்ச் இடைப் பயிருடன் காணியும் உண்டு. 1 பேர்ச் 12 இலட்சம். தனியார் மருத்துவமனைக்கு, மாடி வீட்டிற்கு, டியூஷன் கிளாஸ் இற்கு, களஞ்சியம், மொன்டிசூரிக்கு பொருத்தமானது. விற்பனைக்கு வங்கிக் கடன் உண்டு/ இல்லை. 0777282147.057359

### 646 வீடு சொத்து கண்டி மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

Peradeniya house for lease. close to Engineering faculty of university. 4BR, 3 toilets, kitchen, pantry, sitting, dining full furnished. 0764482824. 058877

## மணமகள்

கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த ஆங்கிலத்தில் உயர் கல்வி கற்ற அழகான மணமகளுக்கு நன்கு தகைமை பெற்ற ஏறக்குறைய 30 வயது மதிக்கத்தக்க மணமகனை எதிர்பார்க்கின்றோம். email: officeal42@gmail.com B187790



தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845










Advertise Here
வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com




தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
-ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 /
ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342

CHEF SCHOOL DIPLOMA
OPPORTUNITY TO WORK ABROAD
By Chef Jean Pierre
Diploma in Pastry / Bakery and Commercial Cookery
3 months and 6 months courses
A well renowned certificate and work reference will be given by French Chef Jean Pierre after your diploma as per your performance
CHEF SCHOOL HAS IT ALL!
To register:
Call/SMS : 077 9 144 219
Whatsapp: 076 635 1191
Email: chefschool15@yahoo.com
Location: 31/27 1st Lane, Narahenpita Road, Nawala

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -





## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 24

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# மலையகம் என்னும் உணர்வுக்கு எழுத்தாற்றலால் உருவம் கொடுத்த தெளிவத்தை ஜோசப்

மலையக இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர்களுள் ஒருவர் தெளிவத்தை ஜோசப். மலையக இலக்கிய வளர்ச்சி என்பது தெளிவத்தை ஜோசப்பின் பங்களிப்பையும் உள்ளடக்கியதாகவே விளங்குகிறது. மலையக இலக்கியத்தின் வளர்ச்சியிலும் வரலாற்றிலும் அவரது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம், திரைப்படத்துறை, தொலைக்காட்சி போன்ற பல்வேறு துறைகளிலும் அவரது பங்களிப்பின் பதிவுகள் உள்ளன. சிறுகதைத்துறையில் முன்வரிசையில் வைத்து எண்ணக்கூடிய ஓர் எழுத்தாளராக தெளிவத்தை ஜோசப் திகழ்கிறார்" எனக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் துரை மனோகரன். (ஞானம் மே 120 தெளிவத்தை ஜோசப் பவள மலர்)

சந்தனசாமி ஜோசப் என்ற இயற்பெயர் கொண்ட இவர், ஹாலிஎல்லைக்கு அருகேயுள்ள ஊவாக்கட்டவளை என்கிற தேயிலைத் தோட்டத்தில், ஆசிரியராகப் பணிபுரிந்த தங்கசாமி சந்தனசாமிப் பிள்ளைக்கும் பரிபூரணத்திற்கும் 16.02.1934இல் மகனாகப் பிறந்தார்.

ஜோசப் தனது ஆரம்பக்கல்வியை தோட்டப் பாடசாலையில் கற்றபின், தமிழ்நாடு கும்பகோணம் லிட்டில் பிளவர் உயர்நிலைப்பள்ளியில் இரண்டுவருடகாலம் கற்று, இலங்கை திரும்பி பதுளையில் உள்ள புனித பீட்ஸ் கல்லூரியில் சாதாரணதரம்வரை கற்றவர்.

1956இல் தெளிவத்தைத் தோட்டத்தில் இவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. அக்காலகட்டத்தில் தனது இருப்பிடத்தின் பெயரைத் தனது பெயருடன் இணைத்து தெளிவத்தை ஜோசப் என்ற பெயரில் எழுதத் தொடங்கினார்.

பிந்திய ஐம்பதுகளில் தமிழக சஞ்சிகையான உமாவில் 'வாழைப்பழத்தோல் என்ற இவரது முதற்கதை வெளியாகியது.

1964இல் இவர் கொழும்பு வந்து ஸ்டார் டொபி நிறுவனத்தில் பிரதம கணக்காளராக இணைந்து பணியாற்றினார்.

1963இல் மலையக எழுத்தாளர் மன்றம் நடத்திய முதலாவது சிறுகதைப் போட்டியில் பாட்டி சொன்ன கதை என்னும் சிறுகதைக்கும் 1964இல் நடத்திய இரண்டாவது போட்டியில் பழம் விழுந்தது என்னும் சிறுகதைக்கும் முதற் பரிசில்கள் பெற்றுக்கொண்டார்.

கண்டியில் இருந்து வெளிவந்த மலைமுரசு என்ற பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியிலும் இவரது நாமிருக்கும் நாடே என்ற சிறுகதை முதற்பரிசைத் தட்டிக் கொண்டது.

1979இல் இக்கதையின் தலைப்பைக் கொண்ட இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி வெளிவந்தது. இச்சிறுகதைத் தொகுதி 1979இல் அரச சாஹித்திய விருதினைப் பெற்றுக்கொண்டது.

இனவிவகார அமைச்சு மும்மொழிகளில் நடத்திய சிறுகதைப் போட்டியில் தமிழ்மூலம் படைப்புக்கான சிறுகதைப் போட்டியில் இவர் 1998இல் முதற்பரிசு பெற்றார். எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள இவரது இரண்டாவது தொகுப்பான தெளிவத்தைஜோசப் சிறுகதைகள் பாக்யா வெளியீடாக வெளிவந்து 2013இன் தேசிய சாகித்திய விருதினைப் பெற்றுக்கொண்டது. மீன்கள் என்று மகுடத்தில் இவரது மூன்றாவது சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. 1980க்குப் பிற்பட்ட காலப்பகுதியில் புதிதாக எழுத வருபவர்களை உற்சாகப்படுத்தும் பணியிலும் இவர் ஈடுபடத் தொடங்கி வாரம் ஒரு சிறுகதை விருந்து என்னும் பகுதியை தினகரன் வாரமஞ்சரியில் எழுதினார். இரு நூறுக்கும் அதிகமான சிறுகதை எழுத்தாளர்களை அறிமுகஞ் செய்தார்.

இவரது முதலாவது நாவல் காதலினால் அல்ல என்னும் தலைப்பில் மித்திரனில் 1967இல் தொடராக வெளிவந்தது. காலங்கள் சாவதில்லை என்ற நாவல் வீரகேசரியில் தொடராக வந்து பின்னர் வீரகேசரிப் பிரசுரமாக 1974இல் வெளிவந்தது. மாறுதல்கள் என்ற நாவலையும் இவர் எழுதியுள்ளார். நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் என்ற மற்றுமொரு தொடர்கதை தினகரன் வாரமஞ்சரியில் 1996இல் வெளியாகியது.

இவரது பாலாயி என்ற குறுநாவல் கதம்பம் தீபாவளி மலரில் 1967ஆம் ஆண்டு வெளிவந்தது. ஞாயிறு வந்தது என்னும் குறுநாவல் 1966 கலைமகளில் வெளிவந்தது. மனம் வெளுக்க என்ற குறுநாவல் தினகரனில் வெளிவந்தது. இந்த மூன்று குறுநாவல்களும் தொகுக்கப்பட்டு ஒரே தொகுப்பாக 1997இல் வெளிவந்தது.

தேசிய இலக்கியப் பேரவையும் தமிழ்நாட்டின் சுபமங்களா சஞ்சிகையும் இணைந்து 1995இல் நடத்திய குறுநாவல் போட்டியில் இவரது குடைநிழல் என்ற படைப்பு இரண்டாவது பரிசு பெற்றது. இக்குறுநாவல் பின்னர் நூலுருவம் பெற்றது.

இவரது, நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983 என்ற நாவல் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகம், சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளையுடன் இணைந்து வழங்கும் 2016ஆம் ஆண்டுக்கான கரிகாற் சோழன் விருதினைப் பெற்றுக்கொண்டது.

ஈழத்து சிறுகதை மூலவர்களில் ஒருவரான இலங்கையர்கோன் பற்றிய நூல் ஒன்றையும் இவர் எழுதியுள்ளார்.








இவரது மலையகச் சிறுகதை வரலாறு 2000ஆம் ஆண்டில் வெளிவந்து இவரை ஒரு சிறந்த ஆய்வாளராக இனங்காட்டியது.

இந்த ஆய்வுநூல் அவ்வாண்டின் தேசிய சாகித்திய விருதினையும் யாழ். இலக்கிய வட்டத்தின் சம்பந்தன் விருதினையும் பெற்றுக் கொண்டது.

இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கியமும் சிற்றிதழ்களும் என்ற ஆய்வு இவரது மற்றுமொரு ஆய்வு முயற்சியாகும்.

துரைவி பதிப்பகத்தின் பதிப்பாசிரியராகப் பணிபுரிந்து இவர் வெளிக்கொணர்ந்த 33 சிறுகதைகள் அடங்கிய மலையகச் சிறுகதைகள்|, 55சிறுகதைகள் அடங்கிய உழைக்கப் பிறந்தவர்கள் ஆகிய இரண்டு தொகுப்புகளும் மலையக இலக்கி யத்திற்கு இவர் அளித்த அரிய செல்வங்களாகும். துரைவி தினகரன் சிறுகதைகள், சுதந்திர இலங்கையின் ஐம்பது சிறுகதைகள் என்னும் நூல்களை தொகுத்து பதிப்பிக்க வழிசமைத்தார்.

இவர் சிறுகதைகள், நாவல், விமர்சனம், இலக்கியக் கட்டுரைகள், தொலைக் காட்சி நாடகம், வானொலி நாடகம் என இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்துச் செயற்பட்டார். இலங்கையில் உருவான புதிய காற்று திரைப்படக் கதை வசனம் இவரது கைவண்ணமாகும்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலும், பேராதனை, யாழ்ப்பாணம், சப்ரகமுவ பல்கலைக் கழகங்களிலும் இவரது படைப்புகளைக் குறித்து உயர் பட்டப்படிப்பு மாணவர்கள் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்கள்.

தெளிவத்தை ஜோசப் 2003இல் கனடாவில் இருந்து வரும் காலம் சஞ்சிகையின் நினைவரங்கொன்றில் சொற்பொழிவாற்ற அழைப்புக் கிடைத்துச் சென்றுவந்தார். அவ்வேளை இலண்டன் பத்மநாப ஐயருடன் தங்கியிருந்து சில இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். 2009இல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டுக்கு முருகபூபதியின் அழைப்பின்பேரில் கலந்துகொண்டார். திரும்பிவரும்போது சிங்கப்பூரிலும் தங்கி சில இலக்கியக் கூட்டங்களில் பங்குபற்றினார். 2003இல் காலச்சுவடு நடத்திய தமிழ் இனி மாநாட்டிலும் கலந்துகொண்டார்.

தலைநகர் கொழும்பில் மலையக எழுத்தாளர் மன்றம் உருவாக முன்னின்று உழைத்தவர் ஜோசப். அம்மன்றத்தின் தலைவராக வெகுகாலம் பணிபுரிந்துள்ளார். தமிழ் சிங்கள எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவர்களில் ஒருவராகவும் பணிபுரிந்துள்ளார். ஜோசப், பிலோமினா, திரேசா, சியாமளா, ரமேஷ், ரவீந்திரன், ஜேயார் ஆகிய புனைபெயர்களில் இலக்கியத் தகவல்கள், கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

இவரது மனைவியின் பெயர் பிலோமினா. ஜோசப் தம்பதியினருக்கு திரேசா, தோமஸ் ரமேஷ், திருமதி ரவீந்திரன், தெக்ளா சியாமளா ஆகியோர் பிள்ளைகளாவர்.

இவரது படைப்புகள் சிங்களம், ஆங்கிலம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன.

மூன்று தடவை சாகித்திய விருது பெற்ற இவர், சம்பந்தன் விருது, கம்பன் கழக விருது, தேசிய ஒற்றுமைக்கான விருது, கொடகே தேசிய சாஹித்திய விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது, கலாசார அமைச்சின் தேசநேத்ரு விருது, மத்திய மாகாண, மேல்மாகாண இலக்கிய சாதனையாளர் விருது, தமிழியல் வித்தகர் விருது, பேராதனைப் பல்கலைக்கழக இலக்கிய விருது(2007), இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு வழங்கிய தமிழ்மணி| (1992) இலக்கியச் செம்மல்| (1993)விருதுகள், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது (2008) கலாபூஷணம்| விருது(1996), தமிழ் நாடு விஷ்ணுபுர விருது(2003) உட்படப் பல விருதுகள் பெற்றுள்ளார்.

மல்லிகை சஞ்சிகை இவரைக் கௌரவிக்கும் முகமாக இவரது படத்தை அட்டையில் பொறித்து கட்டுரையும் வெளியிட்டது. ஞானம் சஞ்சிகை இவரது பணிகளைப் பாராட்டுமுகமாக இவரது பவளவிழாவை கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 16.05.2010இல் கொண்டாடியது. பவளவிழாச் சிறப்பிதழையும் வெளியிட்டது. அத்தோடு இவரது தொடர் நேர்காணலை ஞானம் சஞ்சிகையின் 23 இதழ்களில் தொடராக வெளியிட்டுக் கௌரவித்தது.

இலங்கை அரசின் அதியுயர் விருதான சாஹித்திய ரத்னா விருது 2014இல் இவருக்கு வழங்கப் பெற்றது.





## படித்ததும் பகர்வதும் 113

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



### நல்லதை சொல்கிறோம்

#### செய்வன திருந்தச் செய்

ஒவ்வொருவரும் தாம் செய்யும் எந்தவொரு செயலையும், வேலையையும் திருத்தமாக, சிறப்பாக, சரியாக, முறையாக செய்திட முயற்சித்தல் வேண்டும். செய்யும் வேலை மிகச் சிறியதாக இருப்பினும், மிகப் பெரியதாக இருப்பினும் போதிய கவனிப்புடனும், அவதானத்துடனும், உரிய நடைமுறைகளை பின்பற்றி செய்தலே சிறந்தது.

கை, கால், முகம் கழுவுதல், குளித்தல், உடுத்தல், உண்ணுதல் போன்ற அன்றாட கட்டாய சாதாரண செயற்பாடுகளிலிருந்து அனைத்து காரியங்களிலும் சரியான செயன்முறைகளை பின்பற்றி செய்திட முயற்சித்தல் அவசியம்.

இத்தகைய செயற்பாடுகளில் அந்தந்த வேலைக்கு பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களை பயன்பாடு முடிந்த பின் உரிய இடத்தில் முறையாக வைத்தல், பயன்படுத்தும் பொருட்களை வீண் விரயமின்றி உச்சப்பயனோடு உபயோகித்தல், வீண் விரயத்தை முற்றிலும் தவிர்த்தல், இயலுமான எல்லா வழிகளிலும் சிக்கனத்தை கடைப்பிடித்தல் போன்றன ஒரு வேலையை திருந்த செய்வதற்கு அத்தியாவசியமானது என்றால் மிகையல்ல.




இவ்வாறு அன்றாட பணிகளை மட்டுமன்றி செய்யும் தொழில், வியாபாரம் உட்பட அனைத்து செயற்பாடுகளையும் ஒவ்வொருவரும் தமது ஆற்றலுக்கும், அறிவுக்கும், சிந்தனைக்கும் ஏற்ப சிறப்பாக செய்திட எல்லா முயற்சிகளையும் செய்வது சாலச்சிறந்தது. எந்தவொரு பணியையும் திருத்தமாகச் செய்தால் அது செய்வோருக்கு மட்டுமன்றி அதனோடு சம்மந்தப்பட்டோர்களுக்கும் சூழ இருப்பவர்களுக்கும் பெரும் நன்மையாக அமையும். அதன் நேர்த்தி அனைவரையும் கவரும். இதன் மூலம் தனி மனிதனுக்கும், குடும்பத்துக்கும், ஊருக்கும், நாட்டுக்கும், ஏன் முழு உலகுக்குமே பெரும் நன்மைகள் ஏற்படும் என்பது உறுதி.

இந்த வகையிலான நல்ல பழக்க வழக்கங்களை பாடசாலைகளில் கற்கும் மாணவர் பருவத்திலிருந்தே ஆரம்பித்தல் சிறந்தது. இதனை ஆசிரியர்களும், பெற்றோரும் தமது கட்டாய கடமையாக ஏற்று செயல்படுத்த முன்வர வேண்டும். எனவே, சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை தாம் செய்வதை திருத்தமாக செய்திட உறுதி கொள்வது அவசியம். “செய்வன திருந்தச் செய்”என்பதை தாரக மந்திரமாகக் கொள்ள வேண்டும்.

### நெஞ்சுக்கு நீதி

உன் முதுகையே உன்னால் பார்க்க முடியாதே!
பிறர் குறைகளை நீ எப்படி விமர்சிப்பாய்?
உன் நிழல் கூட உன் மனம்போல் வருவதில்லையே!
பிறர் எப்படி உன் விருப்பம் போல் நடந்திடுவர்?

### பிரிந்தார் பெருமை

#### பேரறிஞர் யூசுப் அல் கர்ளாவி

உலகப் புகழ் பெற்ற இஸ்லாமிய மார்க்கப் பேரறிஞர் யூசுப் அல் கர்ளாவி கடந்த செப்டம்பர் 26 ஆம் திகதி (26.09.2022) காலமானார். 1926.09.09ல் எகிப்து நைல் நதிக்கரையோர கிராமமான சபத் துராபில் பிறந்த இவர், நவீன இஸ்லாமிய அறிஞர்களின் மிகப் பிரபலமானவராக திகழ்ந்தார். இலங்கையில் ‘பொதுபலசேனா’ அமைப்பினர் இவரை இஸ்லாமிய தீவிரவாத தலைவர்போல் சித்தரித்து, இவரோடு தொடர்பு வைத்திருந்தவர்களை இஸ்லாமிய தீவிரவாதிகளாக காட்ட முற்பட்டமையால், இலங்கையின் பெரும்பான்மையின மக்கள் மத்தியிலும் இவர் நன்கு அறியப்பட்டிருந்தார்.



அல் அஸ்ஹர் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வியை கற்ற இவர், ‘இஹ்வானுல் முஸ்லிமீன்’ அமைப்புடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தார். இத் தொடர்பின் காரணமாக 1949ல் மன்னர் பாரூக்கின் ஆட்சியிலும், 1954முதல் 1956 வரை ஜமால் அப்துல் நாசர் அரசிலும் 1962ல் சிறிது காலமும் எகிப்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். எத்தனை காலம் சிறையில் இருந்தாலும் தனது கொள்கைப் பிடிப்பிலும் நற்பணிகளிலும் இவர் தளர்வுறாமல் செயல்பட்டார். யூசுப் அல் கர்ளாவி, இஸ்லாமிய வக்பு அமைப்பின் கீழ் இயங்கிய இமாம்களின் நிறுவனத்துக்கான தலைவராகவும், கட்டார் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய ஷரீஆ துறை தலைவராகவும், அல்ஜீரியாவின் அமீர் அப்துல் காதிர் பல்கலைகழக கல்வியியலாளர் குழுத் தலைவராகவும், இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சின் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

வறுமை மற்றும் நோய்களால் அவதியுறும் உலகளாவிய மக்களுக்கு உதவும் பொருட்டு, சர்வதேச இஸ்லாமிய நிவாரண நிறுவனத்தை நிர்மாணிப்பதற்கான முதல் முயற்சி இவராலேயே ஆரம்பிக்கப்பட்டது. அயர்லாந்தைத் தலைமையகமாகக் கொண்ட ஃபத்வா மற்றும் இஸ்லாமிய ஆய்வுக்கான ஐரோப்பியக் கவுன்சிலின் தலைவராகவும், முஸ்லிம் அறிஞர்களுக்கான சர்வதேச ஒன்றியத்தின் தலைவராகவும் இருந்துள்ளார்.

120க்கும் மேற்பட்ட பிரபல்யமிக்க நூல்களை இவர் எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றில் பல தமிழ் மொழி உட்பட உலகின் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. “திருக்குர்ஆன் கூறும் பொறுமை, இளைஞர்களே..., நாங்கள் உங்களிடம் எதை எதிர்பார்க்கிறோம்?, முரண்பாடுகளில் உடன்பாடு, இஸ்லாம் நடுநிலை மார்க்கம், எது முதலில்.?” போன்ற பல மொழிபெயர்ப்புகள் மிகவும் பிரபலமானவை.

‘அல் ஜெசீரா’ தொலைகாட்சியில் உலகளாவிய நேயர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து இவர் நடத்திய நிகழ்ச்சி மிகவும் பிரபல்யம் பெற்றது. நவீன காலத்தில் முஸ்லிம்கள் எதிர் நோக்கிய பல்வேறு சன்மார்க்க பிரச்சினைகளுக்கு இவர் வழங்கிய “பத்வா” எனும் மார்க்க தீர்ப்புகள் பலரதும் கவனத்தை ஈர்த்தன. இவ்விடயத்தில் உலகளாவிய சன்மார்க்க அறிஞர்கள் மத்தியில் இவர் சிறப்பிடம் பெற்றிருந்தார். கத்தார் பல்கலை கழகத்தில் இஸ்லாமிய ஷரீஆ துறையையும், சீறா, சுன்னாஹ்வுக்கான ஆய்வு மையத்தையும் ஆரம்பித்தவரும் இவரே..

பாலஸ்தீனம் உட்பட அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காக குரல் கொடுப்பதில் முக்கியத்துவம் பெற்று விளங்கினார். எகிப்திலிருந்து நாடு கடத்தப்பட்ட இவர் 2013ம் வருடம் முதல் கட்டார் நாட்டின் குடியுரிமை பெற்று வாழ்ந்து வந்தார். தனது அந்திம காலம் வரை அயராது நற்பணிகளை செய்து வந்த பேரறிஞர் யூசுப் அல் கர்ளாவியின் மறைவு உலகளாவிய முஸ்லிம்களுக்கு பேரிழப்பாகும்.

### சிந்தனை செய் மனமே

#### முன்னெச்சரிக்கை அவசியம்!

இந்த வருடம் பெப்ரவரியில் இலங்கையின் மத்திய மலைநாட்டில் நடந்த சம்பவமிது. ஒரு ஆசிரியரின் சற்றும் எதிர்பாராத மரணத்தால் ஊர் மக்களை சோகத்தில் மூழ்கடித்த நிகழ்வு. கவனயீனமான, பொறுப்பற்ற, முறையற்ற, பாதுகாப்பற்ற நடவடிக்கையால் ஏற்பட்ட விபரீத விளைவு. தலவாக்கலை, லோகி தோட்ட மக்கள் மனதை கசக்கிப் பிழிந்த கசப்பான நிகழ்வு.



ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியின் தலவாக்கலை, லோகி தோட்ட சந்தியில் பாரிய மரமொன்றை எவ்வித பாதுகாப்பு வழிமுறைகளையும் பின்பற்றாது சிலர் வெட்டினர். பாதையில் முறையான எச்சரிப்பு பதாகைகளோ, அறிவிப்போ செய்யப்படாமல், எச்சரிக்க நபர்களைக்கூட நிறுத்தாமல் இப்பெரிய மரம் வெட்டப்பட்டுள்ளது.

அந்த சந்தர்ப்பத்தில் நுவரெலியா வலயக் கல்வி பணிமனைக்கு சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த, வேலுசாமி மகேஷ்வரன் என்ற ஆசிரியர், அவ்வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார். அவர் மீது அம்மரம் முறிந்து வீழ்ந்திருக்கிறது. இதனால் அவரது வாழ்க்கைப் பயணமும் சம்பவ இடத்திலேயே முடிவிற்கு வந்துள்ளது.

லோகி தோட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட 39 வயதேயான மகேஷ்வரன் கணிதப் பாட ஆசிரியராக தலவாக்கலை தேசிய பாடசாலையில் கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்திற்கே பெருமை சேர்க்கும் வகையில் இவர் சேவைகளை ஆற்றியிருந்தார்.

பாசம் நிறைந்த மகனாகவும் அன்பான கணவராகவும் இரண்டு பிள்ளைகளின் தந்தையாகவும் மகேஷ்வரன் வாழ்ந்தவர். சிறு வயது முதல் கல்வியிலும் விளையாட்டிலும் அதீத ஆர்வத்தை வெளிப்படுத்திய இந்த ஆசிரியரின் ஆற்றல்களுக்கு அவரின் வீட்டில் நிறைந்திருக்கும் விருதுகளும் சான்றிதழ்களுமே சாட்சியாக விளங்குகின்றன.

தலவாக்கலை தேசிய பாடசாலையிலும், லிந்துலை சாந்த கூம்ஸ் தமிழ் மகா வித்தியாலயத்திலும் மாணவர்களின் கணித பாட சித்திக்கு காரணமாக இருந்த ஆசிரியர் மகேஷ்வரனின் எதிர்பாராத மறைவு சமூகத்திற்கு ஈடுசெய்ய இயலாத இழப்பாகும். இவ் ஆசிரியரின் அகால மறைவு, இவ்வாறு கவனயீனமாக நடக்கும் அனைவருக்கும் சிறந்த பாடமாக அமைய வேண்டும்.

எந்தவொரு செயலாக இருப்பினும் அதனால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் குறித்து முன்கூட்டியே சரியாக, முறையாக சிந்தித்து, தகுந்த பாதுகாப்புடன் அதனை நிறைவேற்றினால் இத்தகைய ஆபத்துகளை தவிர்க்க முடியும் என்பதை எல்லோரும் புரிந்துகொள்வது அவசியம்.

### தகவல் களஞ்சியம்

#### புதிய சாரதி அனுமதிப்பத்திரங்கள்

சாரதி அனுமதிப் பத்திரங்களில் உள்ள மெமரி சிப் (memory chip)களை நீக்கி அதற்குப் பதிலாக ‘கியூஆர்’ குறியீடு (QR code) கொண்ட புதிய சாரதி அனுமதிப்பத்திர அட்டையை அறிமுகப்படுத்த மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.



இலங்கையில் ஏறக்குறைய ஐம்பத்தேழு இலட்சம் பேர் சாரதி அனுமதிப்பத்திங்களைப் பெற்றுள்ளதோடு அவர்களின் ஆள் அடையாளம், செலுத்தக் கூடிய வாகன வகைகள், செல்லுபடியாகும் காலம் போன்ற விடயங்கள் சாரதி அனுமதிப் பத்திர சிப்பைப் போன்ற நினைவகத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

இந்த ‘சிப்’ களைக் கொண்ட அட்டைகள் ஒஸ்ரியாவில் இருந்து யூரோக்களில் பணம் செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டன. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் திறைசேரியில் யூரோ இல்லாததால் இந்த அட்டைகளின் இறக்குமதி இப்போது நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவசியமாகவுள்ள பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்படாமல் உள்ளன. இப்போது வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு மட்டும் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சடித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வாகவே, ‘கியூஆர்’ குறியீடு (QR code) கொண்ட புதிய சாரதி அனுமதிப்பத்திர அட்டையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. ஏற்கனவே எரிபொருள் விநியோகத்துக்கு ‘கியூஆர்’ குறியீடு (QR code) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நலமே வாழ்வோம்

#### உட்கார்ந்து சாப்பிடுவது !

முன்னோர்கள் கூறிய மருத்துவங்களில் இதுவும் ஒன்று. நாம் காலை மடக்கி சம்மணம் போட்டு உட்கார்ந்திருக்கும் பொழுது இடுப்பு பகுதியில் இருந்து மேல் பகுதிக்கு இரத்த ஓட்டம் அதிகமாக செல்கிறது. அந்த சமயத்தில் இடுப்புக்கு கீழே உள்ள பகுதிக்கு இரத்த ஓட்டம் குறைந்து காணப்படும். இதனால் உடலின் மிக முக்கிய உறுப்புக்களாகிய சிறு நீரகம், கணையம், நுரையீரல், மூளை, கண், காது, ஆகியவை இடுப்பின் மேல் பகுதியில் இருப்பதால் இந்த பகுதிக்கு இரத்தம் சென்று நமக்கு சக்தியும் ஆரோக்கியத்தையும் அதிகரிக்க செய்கிறது.



இதனால் தான், ‘சாப்பிடும் பொழுது கீழே உட்கார்ந்து, காலை மடக்கி அமர்ந்து சாப்பிட வேண்டும்’ என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள். ஏனென்றால் இச்செயற்பாடு, இடுப்புக்கு கீழுள்ள பகுதிக்கு இரத்த ஓட்டம் அதிகம் செல்லாமல் முழு சக்தியையும் வாயிற்றுப் பகுதிக்கு சென்று நம்முடைய உறுப்புகளின் இயங்குத் திறனை அதிகரிப்பது மட்டுமல்லாமல் ஜீரணத்தையும் நன்றாக நடைபெற உதவுகிறது என்கிறார்கள்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்ஸப் (WhatsApp): 0777314207

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 32

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | | 08 | |
| 09 | 10 | 11 | 12 | | 13 |
| | | 14 | | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | | 21 |
| 22 | 23 | | 24 | 25 | 26 |

பெயர் ..................................................

வகுப்பு ..................................................

தொலைபேசி இல ..................................................

பாடசாலை பெயர் ..................................................

வதிவிட முகவரி ..................................................

..................................................

............................ ............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) உணவுகளைச் சமைக்கும் போது சுவையூட்டியாகப் பயன்படுத்தப்படுகின்ற வித்து இது. உறைப்புச்சுவை நிறைந்தது. ஆனால் மிளகாய் அல்ல. கொடியில் விளைவது.

(2) சூரியன் உதயமாகியதும் இருள் நீங்கி தோன்றுகின்ற புத்துணர்ச்சியான பொழுது.

(9) செவ்வகமொன்றுக்கு சமாந்தரமான இருசோடி பக்கங்கள் உள்ளன. ஒன்று நீளம் எனப்படும். மற்றையது இது.

(15) குழந்தைகள் முதல் முதியோர் வரை நம் அனைவருக்கும் ஊட்டச்சத்துகள் நிறைந்த நிறையுணவான திரவ ஆகாரம் தருகின்ற நன்றிக்குரிய மிருகம் இது. (தலைகீழான சொல்)

(17) நாம் வாழ்கின்ற புவியின் துணைக்கோளுக்கு இவ்வாறும் ஒரு பெயர் உள்ளது. (தலைகீழான சொல்)

(22) உயிரினங்கள் பலவற்றின் இடப்பெயர்ச்சி அங்கம்.

(24) சில தாவரங்களின் இனப்பரம்பல் தண்டுகளை நடுவதால் நிகழ்கின்றது. பல தாவரங்களின் இனப்பரம்பல் இதனால் நிகழ்கின்றது. (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

1) அன்றைய காலத்தில் வீடுகளில் உள்ள சமையலறைச் சாதனங்களில் இதுவும் ஒன்றாகும். கருங்கல்லால் ஆனது. உணவுப்பொருட்களை அரைத்துக் கொள்வதற்கு உதவுவது. இன்று பாவனையை விட்டு நீங்கிச் செல்கின்றது. (தலைகீழான சொல்)

(3) நாம் வாழும் பூமிக்கு உலகம், தரணி, ஞாலம், புவி, அகிலம், உலகு, வையகம் என்றெல்லாம் பல்வேறு பெயர்கள் உள்ளன. அதேபோன்று பூமிக்கு மற்றொரு பெயர் இது.

(4) மரங்கள் அடர்ந்த இடம். ஏராளமான உயிரினங்களின் வாழ்விடம்.

(13) நிலைக்கண்ணாடியின் முன்னால் நின்று பாருங்கள். கண்ணாடியில் தெரிகின்ற மாயத்தோற்றம் இது. (தலைகீழான சொல்)

(17) தென்மாகாணத்தின் மாவட்டங்களில் ஒன்று. (தலைகீழான சொல்)

(18) தரையில் நாம் காணும் இடங்களில் எல்லாம் பச்சைப்பசேலென்று முளைத்துக் கிடக்கின்றது. மாடு, குதிரை போன்ற பல மிருகங்களின் உணவு இது.

(20) ஒன்றன்பால் ஒருமையைச் சுட்டுகின்ற படர்க்கைச் சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 31

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கறுவா 07. பாதி 07. கடை 09. பகலவன்
18. இருட்டு 22. நாம்

**மேலிருந்து கீழ்**

02. கயிறு 04. பாகன் 07. வடை 09. பட்டம்
11. லட்டு 16. இலை 20. குரு

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 30

### பாராட்டு பெறுவோர்

**1. கு. துவாரகன்**
தரம் 05, கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை.

**2. எம்.ஏ. சனா**
தரம் 01, தி/ கிண்ணியா ம.ம.வி,
நகரசபை வீதி, கிண்ணியா.

**3. உதய ராஜன் வய்ஸ்ணவ்**
தரம் 02, கார்மேல் பற்றிமா மத்திய கல்லூரி,
இல. 127, புதிய சோமநாதர் வீதி, பாண்டிருப்பு.

**4. றமீஸ் இமாரா இஸ்ரா**
தரம் 09, அல் - அமான் மு.ம.ம.வி,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

**5. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, வெலிப்பன்னை றஹ்மானிய்யா ம.வி.தே.பா,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**6. அப்துல்லாஹ் பவாஸ்**
தரம் 4B, தல்துவ முஸ்லிம் ம.வித்தியாலயம்,
இல. 25, சீத்தாகம II, குடகம வீதி, அவிஸ்ஸாவெல்ல.

**7. தையிபா ஹசன்**
தரம் 08, பா.மு.ம. கல்லூரி,
இல. 34, டி வாஸ் லேன், கிறேன்ட் பாஸ்,
கொழும்பு -14

குறுக்கெழுத்துப் போட்டி இல. 32
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்து
ணையுங் கல்லாத வாறு**

**தெளிவுரை :**
*கற்றவனுக்கு தன் நாடும் ஊரும் போல வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும் ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்.*

# புத்தியை தீட்டு



ஒரு காட்டிற்குள் இரண்டு மரவெட்டிகள் சென்றார்கள். மாலை மீண்டும் இருவரும் கூடும் போது ஒருவரிடம் அதிக விறகும் மேலும் அவர் அதிக களைப் படையாமலும் இருந்தார். மற்றொருவருக்கோ பயங்கர ஆச்சரியம்.

நம்மை போல தானே அவனும், அவனால் மட்டும் எப்படி சாத்தியமானது என்று. ஆர்வம் தாங்காமல் அவனிடமே கேட்டு விட்டான். நண்பன் அவனிடம் கேட்டான், இந்த விறகுகளுக்காக நீ என்ன செய்தாய் என்று! அவன் சொன்னான். இடைவிடாமல் வெட்டி கொண்டே இருந்தேன் என்று. சிறிதும் ஓய்வு இல்லாமலா என்று கேட்டான் நண்பன். ஆம் அதிக விறகுகள் பெற வேண்டுமே. ஆனால் நீ கொஞ்சமும் களைப்படையாமல் இருப்பது எப்படி என்று கேட்டான். நான் இடையில் அடிக்கடி ஓய்வு எடுத்து கொள்வேன் என்று சொன்னான் நண்பன்.

மறுநாள் அவனும் அதேபோல் ஓய்வு எடுத்து எடுத்து மரம் வெட்டினான். இருப்பினும் அவனால் நண்பன் அளவுக்கு மரம் வெட்டமுடியவில்லை. மறுநாள் மரம் வெட்டும் போது ஒளிந்திருந்து பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டு வீடு திரும்பினான். மறுநாள் மரம் வெட்ட பிரிந்து சென்ற பின், அவன் நண்பனை பின் தொடர்ந்து சென்றான். நண்பனும் அரைமணி நேரம் மரம் வெட்டி விட்டு ஓய்வாக அமர்ந்தான். ஆனால் அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடாலியை தீட்டி கொண்டிருந்தான்.

# இவ்வார மழலை



**ஆபியா**

**எம். சஹ்ரான் / ஆத்திக்கா றம்சீன்,**
பேருவளை

## கற்பனை கிறுக்கல்கள்

**"மாயமான உலகில் காயங்கள் கண்டு கலங்கி விடாதே, அச்சம் இன்றி நடை போட்டிடு; காயங்களையே மாயமாக்கி விடலாம்"**

**எம்.கே. அம்னா நஸ்ரீன்,**
வெலிகம.






**எச்.எஸ். அப்துல்ஹா**
தரம் 8S, சென். லூசியஸ் கல்லூரி,
கொட்டாஞ்சேனை.



**சஜாவல்**
தரம் 10, அலெக்சாண்டிரா கல்லூரி,
கொழும்பு.



**வி. ஓமாயா**
தரம் 02, அலெக்சாண்டிரா கல்லூரி,
கொழும்பு.

## ஆநெய்க்கு ஒரு காலம் வந்தால் பூநெய்கு ஒரு காலம் வரும்
### உண்மையான அர்த்தம் தெரியுமா?



மேலே கூறிய பழமொழி தான் உண்மையான பழமொழி 'யானைக்கு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வரும்' என்று மறுவி கூறப்படுகிறது. அதாவது ஆ என்றால் ஆவினம். ஆவினம் என்றால் பசுக் கூட்டம் என்று பொருள், பசுவின் பாலிலிருந்து கிடைக்கக்கூடிய நெய்யை இளமைக் காலத்தில் சாப்பிட்டு வந்தால் உடலுக்கு பொழிவு ஏற்படும். அதேபோல் பூ நெய் என்றால் பூவினால் கிடைக்கும் தேன். இந்தத் தேனை முதுமைக் காலத்தில் உட்கொண்டால் உடலுக்கு எந்த விதமான தீங்குகளும் ஏற்படாது.

இந்த கருத்தை உணர்த்தவே ஆநெய்க்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும் என்று கூறியிருக்கிறார்கள். மேலும் யானைக்கும் பூனைக்கும் இப்பழமொழியில் எவ்வித சம்பந்தமும் இல்லை.



## உலகின் நீளமான மலைத்தொடர்

தென் அமெரிக்காவில் வடக்கு தெற்காக பரந்திருக்கும் ஆன்டிஸ் மலைத்தொடர் தான், உலகின் மிக நீளமான மலைத்தொடர். நீளம் 7,000 கி.மீ. அகலம் 200 முதல் 700 கி.மீ வரை இருக்கும். இது வெனிசுலா, கொலம்பியா, ஈக்குடார், பெரு, பொலிவியா, சிலி மற்றும் ஆர்ஜன்டீனா ஆகிய ஏழு தென் அமெரிக்க நாடுகளில் பரவியுள்ளது. உலகின் உயரமான எரிமலையும் இங்கு தான் உள்ளது.

## ஏளனம் வேண்டாம்

காளான் ஒன்று, தன் அருகிலுள்ள ஆலமர விதையைப் பார்த்து, 'ஒரே நாளில் நான் வளர்ந்து விட்டேன் பார்த்தாயா... நீ இன்னும் துளிர் விடவேயில்லை' என்று ஏளனமாகப் பேசும். அடுத்தடுத்த நாட்களில், அந்த ஆலமர விதை மெள்ளத் துளிர்விட்டு, செடியாகி, காலப்போக்கில் மாபெரும் விருட்சமாகப் படர்ந்து விரிந்து நிற்கும். ஏளனம் பேசிய காளான் இருந்த இடம் தெரியாமல் எங்கோ மறைந்துபோயிருக்கும். ஒவ்வொருவருக்குள்ளும் நிச்சயம் பொறுமை, நம்பிக்கை, முயற்சி அவசியம். எவரையும் ஏளனமாக பார்க்காதீர்கள்.



# வாரம் ஒரு பெரியார்
## அன்னை தெரேசா



அன்பு, நேசம், பாசம், கருணை இவை அனைத்திற்கும் ஒட்டு மொத்த இலக்கணமாய் திகழ்ந்தவர் அன்னை தெரேசா.

அன்னை தெரேசா அல்போனியா என்ற நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர். இவர் 1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26ம் திகதி நிக்கல் நிகோலா, பொஜாஜியூ திராணி பெர்னாயின் தம்பதியினருக்கு மகளாக பிறந்தார். இவரது இயற்பெயர் ஆக்னஸ் கோன்சா பெர்ஜனாக்கா என்பதாகும்.

அன்னை தெரேசா அவர்கள் தனது பன்னிரண்டாவது வயதிலேயே சமூக சேவையில் ஈடுபட ஆரம்பித்தார். இந்தியாவின் மேற்கு வங்கப் பயணம் முடிந்து திரும்பிய அருட் சகோதரிகளின் மூலம் இந்தியாவில் இருக்கும் ஏழ்மை நிலையினை பற்றித் தெரிந்து கொண்டார். அதன் பின்னர் மக்களுக்கு உதவிகளை செய்வதற்காக துறவறம் பூண்டார்.

பின்னர் 1929 ஆம் ஆண்டு முதல் முறையாக இந்தியாவின் மேற்கு வங்கத்தில் உள்ள கத்தோலிக்க திருச்சபைக்கு வந்தார். கொல்கத்தாவில் தங்கியிருந்து அங்குள்ள ஏழைகளுக்கு உதவினார்.

கொல்கத்தாவில் தங்கியிருந்து அங்கு வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த ஏழை மக்கள், தொழிலாளர்களின் நிலை, வேலை வாய்ப்பில்லாத் திண்டாட்டம், பசியுடன் திரிந்த குழந்தைகள், சுகாதாரமற்ற குடியிருப்புகள், வியாதியுடன் கூடிய மக்கள் போன்ற அனைத்து அவலங்களையும் கண்டு வருந்தினார்.

குழந்தைகளுக்கு அன்பு காட்டிப் பாடம் கற்பித்தார். அதுமட்டுமல்லாது குழந்தைகளை குளிப்பாட்டி, உணவு ஊட்டி அன்னை போல் கவனித்துக் கொண்டார்

பலவிதமான நோய்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவ பயிற்சி பெற்றுக் கொண்டு பின் மக்களுக்கு சிகிச்சை அளித்தார். மருத்துவமனையை உருவாக்கி இலவச சிகிச்சைகளை வழங்கினார். பசியால் வாடியவர்களுக்கும் வீடு இன்றித் தவித்தவர்களுக்கும் உதவினார்.

1983ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை ரோம நகரில் சந்தித்த போது மாரடைப்பு ஏற்பட்டது. பின்னர் 1989ஆம் ஆண்டு இரண்டாவது மாரடைப்பு ஏற்பட்டது. இதனால் இதயநோய் கோளாறால் அவதிப்பட்ட அன்னை தெரேசா அவர்கள் 1990ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் திகதி மரணமடைந்தார்.மறைந்தும் மறையாது வாழும் புனிதர் வழி நாமும் பிறர் மீது அன்பு கொள்வோம்.

அன்பிற்கு அன்னை தெரேசா என்று நாம் அடைமொழி கொடுக்கும் அளவிற்கு வாழ்ந்து மறைந்தவ இவரின் இரக்க குணத்தையும் மற்றவர்களுக்கு உதவி செய்யும் குணத்தையும் நாம் ஒவ்வொருவரும் நமக்குள்ளும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**உலகில் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்த பெரியார்கள் பற்றிய சிறு தகவல்கள் வாரமொரு தடவை இப்பகுதியில் இன்று முதல் பிரசுரமாகின்றது. நீங்களும் உலகப் பெரியார் பற்றிய தகவல்களை எமக்கு அனுப்பி வைக்க முடியும். உங்கள் பெயர், வயது, பாடசாலை விபரங்களுடன் பிரசுரம் செய்வோம்.**







நவராத்திரி விழாவின் ஒன்பதாம் நாளான கடந்த 04ஆம் திகதியன்று வத்தளை, அல்விஸ் டவுனில் அமைந்துள்ள சுந்தரேசர் கலைக்கோயிலில் நடைபெற்ற விஜயதசமி வித்யாரம்ப பூஜையின் போது எடுக்கப்பட்ட படங்கள். படத்தில் சுந்தரேசர் கலைக்கோயிலின் நடன ஆசிரியை சுகன்யா நித்யானந்தன் அவரது மாணவிகள் மற்றும் பெற்றோரும் காணப்படுகின்றனர்.

# மஞ்சரி விளையாட்டு




# பயணம் ஆரம்பம்...

**சரியாக இற்றைக்கு ஓர் ஆண்டுக்கு முன் இலங்கை டி20 உலகக் கிண்ணத்தை வெல்லும் எதிர்பார்ப்புடன் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு புறப்பட்டுச் சென்றது. அணியை பார்த்தால் குத்துமதிப்பாக வலுவாகத்தான் இருந்தது. ஆனால் நம்பிக்கைதான் சற்றுக் குறைவு.**

அணித்தலைவர் தசுன் சானக்கவின் வார்த்தைகளிலும் அந்த நிச்சயமற்ற தன்மை தெளிவாகத் தெரிந்தது. “எமது வீரர்கள் தமது பலத்துடன் ஆடினால் இந்தத் தொடரில் எமக்கு நீண்ட தூரம் செல்ல முடியும் என்று நான் நினைக்கிறேன்” என்று அப்போது அவர் கூறியிருந்தார்.

ஆனால் அந்தப் போட்டி இலங்கைக்கு சாதகமாக இருக்கவில்லை. அங்கங்கே திறமைகள், சில வெற்றிகள் தெரிந்தாலும் ஒட்டு மொத்தமாக சேர்த்துப் பார்த்தால் அணியின் ஆட்டப் போக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லை.

என்றாலும் 2021இல் இலங்கை உலகக் கிண்ணத்துக்குச் செல்லும்போது அணிக்கு மாத்திரமல்ல, யாருக்கும் இலங்கை அணி பற்றி நம்பிக்கை இருக்கவில்லை. குருட்டு அதிஷ்டத்தில் வென்றால் ஒழிய உலகக் கிண்ணம் என்பது எட்டாக் கனிதான் என்பது எல்லோரினதும் கருத்தாக இருந்தது.

சரியாக ஓர் ஆண்டு கழித்து இலங்கை அணி மீண்டும் ஒரு உலகக் கிண்ணத்தை வெல்லும் எதிர்பார்ப்போடு அவுஸ்திரேலியா புறப்பட்டுச் சென்றிருக்கிறது. ஒரு மாதத்திற்கு முன் இலங்கை வெற்றிகரமான ஆசிய கிண்ணம் ஒன்றை எதிர்கொண்டு விட்டு அவுஸ்திரேலியா சென்றிருப்பதால் இப்போதைய சூழல் வேறு.

ஆப்கானிடம் படுதோல்வி அடைந்து ஆசியக் கிண்ணத்தை ஆரம்பித்த இலங்கை அடுத்தடுத்த வெற்றிகளுடன் இந்தியா, பாகிஸ்தானையே ஆட்டம் காணச் செய்து கிண்ணத்தை சுவீகரித்தது.

இப்போது சானக்கவின் வார்த்தைகளில் உறுதியான நம்பிக்கை தெரிகிறது. “எமது திட்டங்களை சரியாக செயற்படுத்தினால் எம்மால் நிச்சம் வெற்றிகளைப் பெற முடியும்” என்று அவுஸ்திரேலியா புறப்பட்டு செல்வதற்கு முன் நடந்த கடைசி செய்தியாளர் சந்திப்பில் கூறினார்.

“(கடந்த உலகக் கிண்ணத்தை விடவும்) நம்பிக்கை அதிகமாக உள்ளது. என்றாலும் தீவிர அவதானத்துடனேயே இப்போது உள்ளேன். கடந்த உலகக் கிண்ணத்தில் கூட, குறைந்தது அரையிறுதிக்கு முன்னேறும் அளவுக்கேனும் எம்மிடம் திறமை இருந்ததாக நான் உணர்ந்தேன். எமது திறமைகளை அந்த நாளில் வெளிப்படுத்துவதுதான் முக்கியம்” என்கிறார் சானக்க.

உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி தனது முதல் சுற்றுப் போட்டியில் வரும் ஒக்டோபர் 16ஆம் திகதி நமீபியாவை எதிர்கொள்கிறது. அதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே இலங்கை அவுஸ்திரேலியா புறப்பட்டுச் சென்றிருக்கிறது. புறப்பட்டுச் செல்வதற்கு முன் கண்டியில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். உலகக் கிண்ணத்திற்கான இலங்கையின் தயார்படுத்தல்கள் உற்சாகமாக உள்ளன.

அதிகம் பரீட்சயம் இல்லாத சூழலில் இம்முறை டி20 உலகக் கிண்ணம் நடைபெறுவதால் அதிகம் கரிசனை எடுத்துக்கொள்வது முக்கியம். அவுஸ்திரேலியா என்றாலே பந்து அதிகம் மேலெழும். வேகப்பந்துக்கு அதிகம் சாதகமாக இருக்கும். அதுவே சில நேரம் சுழற்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்த வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்.

எனவே வேகப்பந்துதான் சரிப்பட்டு வரும் என்று பொதுபோக்காகவும் இருந்து விட முடியாது. சுழற்பந்திலும் அவதானம் செலுத்த வேண்டும். இலங்கை குழாத்தில் வனிந்து ஹசரங்க மற்றும் மஹீஷ் தீக்ஷன என இரண்டு முன்னணி சுழல் வீரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எந்தச் சூழலிலும், எந்த ஆடுகளத்திலும் சோபிக்கக் கூடியவர்கள் என்பதால் பெரிதாகக் கவலைப்பட வேண்டியதில்லை.

என்றாலும் வேகப்பந்து வீச்சில் சற்று அதிகம் அவதானம் எடுத்துக்கொள்ள வேண்டும். துஷ்மந்த சமீர மற்றும் லஹிரு குமாரவுடன் டில்ஷான் மதுஷங்கவும் இலங்கை வேகப்பந்து முகாமில் இருக்கிறார்கள். இந்த மூவராலும் மணிக்கு 140 கிலோமீற்றர் வேகத்தில் பந்துவீச மூடியும். அது ஆஸி. ஆடுகளத்திற்கு பொருந்துவதாக இருக்கும்.

என்றாலும் முதல் இருவரது உடல் தகுதி பற்றி கவலை இருக்கத்தான் செய்கிறது. உபாதை காரணமாக ஓய்வுக்குப் பின்னரே துஷ்மந்த, லஹிரு அணிக்குத் திரும்பி இருக்கிறாரர்கள். ஆனால் கண்டி பயிற்சி முகாமில் இருவரும் எந்த அசௌகரியத்தையும் வெளிப்படுத்தவில்லை.

“லஹிரு மற்றும் துஷ்மந்த இருவரும் எமது முகாமில் அங்கம் வகித்து, எந்தப் பிரச்சினையும் இன்றி தமக்கு வழங்கப்பட்ட பந்து வீச்சு கோட்டாவை பூர்த்தி செய்தார்கள். அவர்கள் உலகக் கிண்ணத்திற்கு சிறந்த முறையில் தயார் நிலையில் இருப்பதாக நான் நினைக்கிறேன்” என்கிறார் தசுன் ஷானக்க.





**அவுஸ்திரேலியா என்பது இலங்கைக்கு அந்நியப்பட்ட இடம் என்பதால் வழக்கமான தயார்படுத்தல்கள் கைகொடுக்காது. ஆசிய கிண்ணத்தை வென்று விட்டோம் இனி உலகக் கிண்ணம்தான் பாக்கி என்று குருட்டுத் தனமாக இருந்தால் காரியம் ஆகாது.**

வேகப்பந்தில் இடைவேளியை நிரப்புவதற்கு சாமிக்க கருணாரத்ன மற்றும் தசுன் சானக்க இருந்தபோதும் இந்த மூவரும் அணியில் இருப்பது அவசியம்.

“எமது திட்டங்களை வலுப்படுத்துவதை உறுதி செய்வதற்கும் அவுஸ்திரேலிய ஆடுகளத்தில் எமது திறமையை வெளிப்படுத்துவதை உறுதி செய்வதற்கும் யோக்கர்களை வீசுவதில் தொடர்ந்து பயிற்சி கொடுத்து வருகிறோம்” என்கிறார் இலங்கை அணி பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட்.

யோக்கருக்கு பிரபலமான இலங்கை முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க இலங்கையின் பந்துவீச்சு பயிற்சியாளராக செயற்படுவது வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும்.

அவுஸ்திரேலியா என்பது இலங்கைக்கு அந்நியப்பட்ட இடம் என்பதால் வழக்கமான தயார்படுத்தல்கள் கைகொடுக்காது. ஆசிய கிண்ணத்தை வென்று விட்டோம் இனி உலகக் கிண்ணம் தான் பாக்கி என்று குருட்டுத் தனமாக இருந்தால் காரியம் ஆகாது.

அதனாலேயே கண்டியில் சிறப்பு பயிற்சிகள் இடம்பெற்றன. “என்ன பயிற்சி பெறுகிறோம் என்பதை நாம் வகைப்படுத்தி பயிற்சி பெற்றோம். உதாரணமாக, கண்டியில் நாம் சுப்பர் ஓவருக்கு முகம்கொடுப்பதற்கு பயிற்சி பெற்றோம். அது வேடிக்கையாக இருந்தபோதும், சுப்பர் ஓவர் குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதை அவதானித்தோம். அது விரைவாக நிகழும் நிலையில் நாம் எமது நிலையை உறுதிப்படுத்திக்கொண்டோம்” என்கிறார் சில்வர்வுட்.

இலங்கை உலகக் கிண்ணத்தில் தனது ஆரம்பம் போட்டியில் வரும் ஒக்டோபர் 16 ஆம் திகதி நமீபிய அணியை எதிர்கொள்ளவுள்ளது. அந்தப் போட்டிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே இலங்கை அவுஸ்திரேலியாவுக்கு புறப்பட்டு சென்றது. அவுஸ்திரேலிய சூழலை பழகிக்கொள்வதற்கு அது அவசியமானதாக இருக்கும். ஏனென்றால் அவுஸ்திரேலியாவில் பெரிய அனுபவம் உள்ள வீரர்கள் இந்த இளம் அணியில் இல்லை. எனவே, அவுஸ்திரேலிய மண்ணில் மேலதிக நேரம் என்பது தீர்க்கமானது.

“நமீபிய போட்டிக்கு முன் எமக்கு சில பயிற்சி போட்டிகள் இருக்கின்றன. நாம் பயிற்சி பெற்றதை எம்மால் செய்ய முடியும் என்பதை உறுதி செய்வதற்கு அதற்கு முன் நாம் எமக்கும் போட்டிகளில் ஆடுவோம்” என்று சில்வர்வுட் அவுஸ்திரேலியா புறப்பட்டுச் செல்லும் முன் தெரிவித்திருந்தார்.

இலங்கை துடுப்பாட்ட வரிசை டி20 போட்டிக்கு பொருந்துகின்ற வகையில் வலுவாக உள்ளது. என்றாலும் ஆஸியில் மேலெழும் ஆடுகளத்தில் பந்தை எதிர்கொள்வதற்கு பழகிக் கொள்வது அவசியம். குறிப்பாக பௌன்ஸர் பந்து விழுந்தால் ஹுக் செய்ய வேண்டும் என்ற பாடப் புத்தகக் கிரிக்கெட்டுக்கு அப்பால் சிந்திப்பது அவசியம்.

ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க மற்றும் சரித் அசலங்க போன்றவர்கள் ஹுக் செய்து ஓட்டங்களை குவிப்பதில் விருப்பம் காட்டுபவர்கள். அவுஸ்திரேலிய மண் அதற்கு சாதகமாக இருந்தாலும் பாடப்புத்தகக் கிரிக்கெட் மைதானத்தில் முழுமையாகக் கைகொடுக்காது.

குசல்மெண்டிஸ், பானுக்கராஜபக்ஷமற்றும் தசுன் சானக்க மூவரும் அண்மைக் காலத்தில் சோபித்து வருகிறார்கள். இவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு பொருந்திப்போவது அவசியம். குறிப்பாக அவுஸ்திரேலியாவில் இருக்கும் பெரிய மைதானங்களில் நினைத்தபடி சிக்ஸர் விளாசுவது கடினம். ஏனைய மைதானங்களை அளவிட்டு அங்கே சிக்ஸர் அடிக்கப்போனால் பிடியெடுப்பில்தான் முடியும்.

**“வெற்றிக்கு தன்னம்பிக்கை முதலில் அவசியம். அதுவே எதிர்பார்ப்பை அதிகரிக்கும். நீண்ட காலத்திற்குப் பின் இலங்கை தன்னம்பிக்கையுடன் பெரும் எதிர்பார்ப்போடு பிரதான போட்டித் தொடர் ஒன்றில் களமிறங்குகிறது. உண்மையில் இது பாதி வெற்றிக்குச் சமன்.”**

“அவுஸ்திரேலிய மைதானங்களின் அளவை நாம் அவதானிக்க வேண்டும். அங்கே சில மிகப்பெரிய மைதானங்கள் இருக்கின்றன. அவைகளை கையாள்வதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும்” என்று சில்வர்வுட் கூறுவதும் மைதானங்களின் அளவும் போட்டியின் முடிவை தீர்மானிப்பதாக இருப்பதால்தான்.

ஆசிய கிண்ண வெற்றியை உலகக் கிண்ணத்தில் பயன்படுத்துவதென்றால் முதலில் ஆசிய கிண்ணத்தில் எமக்கு இருந்த சாதகமான சூழல் கூட உலகக் கிண்ணத்தில் எமக்கு பலவீனமாக இருக்கலாம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஆசிய கிண்ணத்துக்கு அப்பால் நாம் இன்று மேம்படுத்திக் கொள்ள வேண்டிய விடயங்களை அடையாளம் காண வேண்டும்.

ஆசிய கிண்ணத்தை பொறுத்தவரை, இலங்கை நாணய சுழற்சியில் வென்று நிர்ணயிக்கும் ஓட்டங்களை துரத்தியே பெரும்பாலும் வெற்றிகளை குவித்தது. இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் தோற்று எதிரணிக்கு வெற்றி இலக்கை நிர்ணயித்து கிண்ணத்தை கைப்பற்றியதை தவிர்த்துப் பார்த்தால் இலங்கையின் சாதகமான புள்ளி இதுதான். மறுபக்கம் இதுவே பலவீனமாகவும் இருக்கிறது.

“எப்போதும் நாம் பலப்படுத்திக் கொள்ள வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. (ஆசிய கிண்ண) இறுதிப் போட்டியில் சிறந்த முறையில் வெற்றி இலக்கொன்றை நிர்ணயித்தபோதும் அது பற்றி அதிகம் அவதானம் செலுத்த வேண்டி இருக்கிறது” என்று கூறும் சில்வர்வுட், “நாம் சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகவே அது இருக்கிறது” என்றார்.

எப்போதும் ஆடுகளத்தின் போக்கை தீர்மானிக்க முடியாத சூழலில், அல்லது காலநிலை மற்றும் இன்ன பிற காரணங்களில் உறுதியான முடிவு எடுக்க முடியாத சூழலில் அணி ஒன்று எப்போதும் எதிரணிக்கு வெற்றி இலக்கொன்றை நிர்ணயிக்குமாறு அழைப்பு விடுக்கும். இது ஒரு தவிர்க்க முடியாத நிலை என்றபோதும், அதையே வழக்கமாகக் கொள்வது நல்லதல்ல.

என்னதான் கூறியபோதும் வெற்றிக்கு தன்னம்பிக்கை முதலில் அவசியம். அதுவே எதிர்பார்ப்பை அதிகரிக்கும். நீண்ட காலத்திற்குப் பின் இலங்கை தன்னம்பிக்கையுடன் பெரும் எதிர்பார்ப்போடு பிரதான போட்டித் தொடர் ஒன்றில் களமிறங்குகிறது. உண்மையில் இது பாதி வெற்றிக்குச் சமன்.

“நான் இதை வித்தியாசமாகப் பார்க்கிறேன். இலங்கையின் எதிர்பார்ப்பு திரும்பியுள்ளது. ரசிகர்களிடம் உள்ள ஆர்வம் அபாரமாக இருக்கிறது. அதனை வீரர்களும் உணர்கிறார்கள். அதனை எமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும்” என்கிறார் சில்வர்வுட்.

“உண்மை என்னவென்றால் எல்லோரும் எமக்கு பின்னால் நிற்கிறார்கள். முழு நாடும் எமக்குப் பின்னால் உள்ளது. நாம் எல்லோரது முகத்திலும் மீண்டும் புன்னகையை கொண்டுவர முயற்சிக்கிறோம். இதனை எமக்கு உத்வேகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஏற்கனவே உடைமாற்றும் அறையில் இதனை ஒரு உத்வேகமாக பயன்படுத்தியுள்ளோம்” என்றும் சில்வர்வுட் கூறுகிறார்.

தசுன் சானக்க இதனை சற்று தீவிரமாகப் பார்க்கிறார். “ஆசிய கிண்ணத்தை வென்றது நல்லது, ஆனால் அது ஒரு தொடர் மாத்திரம் தான். நாம் அதனைப் பற்றி இப்போது சிந்திப்பதில்லை. அது கடந்த காலம். ஏனென்றால் அதனை நாம் பார்த்துக்கொண்டிருந்தால் முன்னோக்கிப் பார்த்து தேவையான திறமையை வெளிப்படுத்த முடியாமல் போய்விடும்” என்கிறார்.

எப்படியோ, கடந்த ஆறேழு வருடங்களில் இல்லாத அளவு இலங்கை அணி மீதான நம்பிக்கை அதிகரித்திருக்கிறது. அதனால் இம்முறை உலகக் கிண்ணமும் முன்னரை விட சுவாரஸ்யமாக இருக்கும்.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

Senthooram
# செந்தூரம்

2022 ஒக்டோபர் 9 ஞாயிற்றுக்கிழமை





















2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# அர்த்தமில்லாத பாலம்



மத்திய அமெரிக்காவில் உள்ள ஹொன்டுராஸ் நாட்டின் சொலுடேகா நதிக்கு மேலால் பாலம் கட்ட நிர்வாகம் தீர்மானித்தபோது அந்தப் பாலம் எந்த வெள்ளத்துக்கு தாக்குப்பிடிக்க முடியுமாக இருக்க வேண்டும் என உறுதியாக இருந்தார்கள்.

இதற்காக ஜப்பானிய நிறுவனம் ஒன்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. எந்த ஒரு பயங்கர இயற்கை அனர்த்தத்துக்கும் ஈடு கொடுக்கும் வகையில் அந்தப் பாலம் வடிவமைக்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு புதிய பாலம் திறக்கப்பட்டது. அது ஹொன்டுராஸின் பெருமைக்குரிய சின்னமாக மாறியது.

ஆனால் இயற்கைக்கு முன்னாள் எதுவும் தூசி தான். 1998 ஒக்டோபர் மாதத்திலே வெறுமனே நான்கு நாட்களில் 1900 மில்லிமீற்றர் மழை பெய்தது. ஆறு மாதத்தில் கிடைக்க வேண்டிய மழை இப்படி 96 மணி நேரத்தில் கொட்டித் தீர்த்தது.

சொலுடேகா நதி கரையை கடந்து பொங்கியது. பிராந்தியம் என்றும் பயங்கர வெள்ளம். 7000 பேர் வரை உயிரிழந்தார்கள். ஹொன்டுராஸில் இருக்கும் அனைத்து பாலங்களும் உடைந்தன. ஆனால் சொன்னபடி புதிய சொலுடேகா பாலத்திற்கு மாத்திரம் ஒன்றும் ஆகவில்லை. குத்துக் கல் போல அங்கேயே இருந்தது.

ஆனால் நதி தான் திசைமாறி விட்டது. பெரு வெள்ளத்தால் நதியின் திசை பாலத்தில் இருந்து விலகிச் சென்றது. புதிய பாலம் சம்பந்தம் இல்லாமல் தரையில் இருந்தது. பாலத்துக்கு கீழ் நீரில்லை. வெறும் தரை தான் இருந்தது. அந்தப் பாலம் எத்தனை வலுவாக இருந்தாலும் இன்றாகும்போது அது ஓர் அர்த்தமில்லாத பாலமாகிவிட்டது.

# வீண் செலவுக்கு நல்ல பாடம்

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



டொரொன்டோவில் இருக்கும் பூங்காவுக்கு படி ஒன்றை கட்டுவதற்கு 65,000 டொலர்கள் செலவாகும் என்று நகர நிர்வாகம் மதிப்பிட்டதால் ஆச்சரியம் அடைந்த அந்த நகரத்தார் ஒருவர் அந்த படிக்கட்டை வெறும் 550 டொலருக்கு செய்து முடித்தார்.

டொம் ரில்லி பூங்காவில் இருக்கும் படிக்கட்டு சேதமாகி இருந்ததால் அதில் ஒருவர் தடுக்கி விழுந்திருந்தார். இதனாலேயே ஓய்வு பெற்ற மெக்கானிக் ஒருவரான எடி அஸ்ட்ல் என்பவருக்கு அந்த படிக்கட்டை கட்டுவதற்கு எண்ணம் தோன்றியது.

முதலில் அவர் நகர சபை உறுப்பினரான ஜஸ்டின் டி சியானோவை தொடர்பு கொண்டு படி ஒன்றை கட்டுவது பற்றி பேசினார். அப்படி படி கட்டுவதற்கு 65,000 தொடக்கம் 150,000 டொலர் வரை செலவாகும் என்று அவர் பதில் அளித்திருந்தார்.

"அவர்கள் இங்கு ஆடம்பர மின்சார படிக்கட்டு அமைக்கப்போகிறார்கள் என்றே நான் நினைத்தேன்" என்று நையாண்டியாகக் கூறுகிறார் அஸ்ட்ல்.

எனவே அங்கே இருக்கு வீடற்ற அனாதரவான ஒருவரை உதவிக்கு அழைத்த அஸ்ட்ல் அந்தப் படியை கட்டும் பணியை ஆரம்பித்தார். ஒரு நாளைக்குள் வெறுமனே 14 மணி நேரத்திற்குள் அந்தப் படியை கட்டி முடித்தார்.

# மலையையே குள்ளமாக்கிய கலைஞர்





இங்கிலாந்தின் உயரமான மலையான ஸ்கெபல் பைக்கை ஒரு கலைஞர் சற்று குள்ளமாக்கியது அங்கு அரச மட்டத்தில் பெரும் கோபத்துக்கு உள்ளானது. ஒஸ்கார் சன்டிலன் என்ற கலைஞர் ஸ்கெபல் பைக்' மலை ஊச்சிக்கே ஏறி அங்கிருக்கும் பாறையின் முகட்டை ஒரு அங்குலம் அளவு பெயர்த்து எடுத்து வந்தார்.

அந்த ஓர் அங்குலத் துண்டை லண்டனில் கண்காட்சிக்கு வைத்தார். இதனால் 3,209 அடி உயரமான இங்கிலாந்தின் மிக உயரமான மலையின் உயரம் ஓர் அங்குலத்தால் குறைந்துவிட்டது.

இதனால் அந்த ஓர் அங்குலத் துண்டை தரும்படி சன்டிலனிடம் அதிகாரிகள் கேட்டுகொண்டார்கள். இது இயற்கைக்கு சேதம் விளைவுக்கும் வேலை என்று அவர்கள் குற்றம்சாட்டினார்கள். ஆனால் சன்டிலனோ, கடற்கரையில் கூழாங் கல்லை பொருக்குவது போன்று தான் நான் அந்த ஓர் அங்குலத் துண்டை எடுத்து வந்தேன் என்கிறார். அதிகாரிகளுக்கு வேறு பதிலில்லை.

# சாடி முழுவதும் பணம்!

இந்த சாடி முழுவதும் இருப்பது பணம். ஆனால் இன்றைய திகதிக்கு செல்லாது. இது ஜப்பானில் மத்திய காலப் பகுதியில் பயன்படுத்தப்பட்ட நாணயக் குற்றிகள்.

இந்த சாடியில் 100,000 வெண்கல நாணயக் குற்றிகள் இருக்கின்றன. 2018 ஆம் ஆண்டு 6.5 அடி ஆழத்தில் இருந்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்தப் புதையலைக் கண்டுபிடித்தனர்.

இது 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாமுராய்களுக்கு சொந்தமானது என்று நம்பப்படுகிறது. அரசியல் குழப்பத்திற்கு மத்தியில் தமது செல்வத்தை பதுக்கி வைத்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். உண்மையில் இன்றைய திகதிக்கு இதன் பெறுமதி எத்தனையாக இருக்கும்?



# முதலில் வந்தது தீப்பெட்டியா, லைட்டரா?





தீவைக்கப் பயனப்படுத்தும் லைட்டர் கருவி தொழில்நுட்ப ரீதியில் தீப்பெட்டியை விடவும் மேம்பட்டது போன்று தெரியும். காலவரிசையை பார்த்தால் தீப்பெட்டிக்கு முன்னரே லைட்டர் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது.

17ஆம் நூற்றாண்டில் இருந்தே லைட்டர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அது நவீன லைட்டர் போல் இருக்காது. அது வெடிமருந்தை பயன்படுத்தி துப்பாக்கியை அழுத்தினால் தீ வருவது போல் தான் இருந்தது. 1823 ஆம் ஆண்டு ஜெர்மனி நாட்டு இரசாயனவியலாளர் ஜொஹான் டொபரெய்னர் முதல் லைட்டர் கருவியை உருவாக்கினார். அது தான் தற்போதுள்ள நவீன லைட்டரின் முன்னோடி. அவரது கண்டுபிடிப்பை அப்போது டொபரெய்னரின் விளக்கு என்று தான் அழைத்தார்கள்.

மறுபுறம் உராயச்செய்து தீயை பற்ற வைக்கும் தீப்பெட்டி 3 ஆண்டுகள் கழித்துத் தான் கண்டுபிடிக்கப்பட்டது. 1826 ஆம் ஆண்டு ஆங்கிலேயரான ஜோன் வோக்கர் அதனைக் கண்டுபிடித்தார். அவர் அந்தத் தீப்பெட்டிக்கு ரொக்கெட் கண்டுபிடிப்பின் முன்னோடியான சேர் வில்லியம் கொங்ரேவின் பெயரை வைத்தார். அப்போது அதனை கொங்ரேவ் தீப்பெட்டி என்று தான் அழைத்தார்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -





# பேய்கள் உலாவும் உல்லாச உலகம்!

(கடந்த வாரத் தொடர்)

அதோடு பூனியான் உலகத்தில் நம் உலகம் போல நேரம் கிடையாது. இரவும் இல்லை பகலும் இல்லை. வயதும் ஆகாது. எப்போதோ எங்கேயோ பூனியான்களைத் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்தவர்கள் ஏதோ ஒரு காலக்கட்டத்தில் குடும்பத்தினர் ஞாபகம் வந்ததும் பூலோகத்துக்குத் திரும்பினால், அவர்களின் குடும்பத்தினர் வயதானவர்களாய் சிலர் இறந்தவர்களாய் இருப்பார்கள்.

ஆனால் இவர்கள் காணாமல் போனபோது எப்படி இருந்தார்களோ அப்படியே தான் இருப்பார்கள்.

பூனியான் வாசம் செய்யும் இடம் நீர்வீழ்ச்சிகள் பெரிய பாறைகளில் பட்டுத் தெறித்தபடி பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும். நறுமணம் வீசும்.

பல வண்ண பூச்சிகளும் பறவைகளும் இனிமையான ஒலியெழுப்பியபடி ஒருவித பனிமூட்டம் ததும்பி கொண்டே இருக்கும்.

பார்ப்பதற்கே சொர்க்கம் போல ஆனந்தமாக இருக்கும். அவர்களின் குரல் மனதுக்குக் குளிர்ச்சியை ஏற்படுத்தும். எதிர்பாரா ஒரு சந்தர்ப்பத்தில் அப்படிப்பட்ட ஒரு பெண்குரலை சந்துபோங் மலையுச்சியில் எனக்குக் கேட்க ஒரு வாய்ப்புக் கிடைத்து.

மெய்சிலிர்க்கும் படி ஒரு குரல். பூனியான்களை காணவேண்டும் என்றால் மட்ட மத்தியானத்தில் குறிப்பிட்ட ஒரு வாக்கியத்தை ஜெபித்த படி குனிந்து இரு கால்களை அகட்டி தலை கீழாகக் கால்களுக்கு நடுவில் பார்த்தால் பூனியான்களின் கால்கள் தரையில் படாமல் பனித்துளிகள் போல தவழ்ந்து வருவதைப் பார்க்கலாம். (தயவு செய்து யாரும் இந்த விஷ பரிட்சையில் இறங்க வேண்டாம்). மற்றப்படி பூனியான்கள் நல்லவர்கள்.

மனிதனைப் போலல்லாமல் இயற்கையை நேசித்து இயற்கையாகவே வாழக்கூடியவர்கள்.

மிகுந்த சக்தி படைத்தவர்கள். அதோடு இவர்களிடமிருந்து சக்தியைப் பெற இன்றும் மலையுச்சிகளிலும் குகைகளிலும் சிலர் நீண்ட தவத்தை மேற்கொள்கிறார்கள். இப்படியாகப் பேய்கள் பற்றிய கதைகள் கடவுள் பற்றிய கதைகள் தொடங்கிய காலத்திலேயே தோன்றிவிட்டன.

வெள்ளையென்றால் கருப்பும் ஒளி என்றால் இருளும் உருவாகிக்கொண்டிருப்பதுதான் இயல்பு.

பேய் குறித்த ஏராளமான கட்டுரைகள், ஆய்வுகள் என தொடர்ந்து கொண்டே உள்ளன.

அறிவியல் ரீதியாக இவற்றுக்கு நிரூபணம் இல்லை. ஆனால் உலகம் முழுவதும் மக்கள் பேய்களை நம்புகிறார்கள். பேய்கள் இல்லாத வாழ்க்கை சுவாரசியம் அற்றது.





**பேய்கள் பற்றிய கதைகள் கடவுள் பற்றிய கதைகள் தொடங்கிய காலத்திலேயே தோன்றிவிட்டன. வெள்ளையென்றால் கருப்பும் ஒளி என்றால் இருளும் உருவாகிக்கொண்டிருப்பதுதான் இயல்பு. பேய் குறித்த ஏராளமான கட்டுரைகள், ஆய்வுகள் என தொடர்ந்துகொண்டே உள்ளன. அறிவியல் ரீதியாக இவற்றுக்கு நிரூபணம் இல்லை.**



அவை நமது இருள் வாழ்வை விழிப்படைய வைக்கின்றன. கடவுளுக்கு நிகராகப் பலரது வயிற்றுப்பாட்டுக்குப் பேய் நம்பிக்கை அளவுக்கு வேறொன்றும் உதவுவதில்லை.

குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் எது மிகை என ஆராயச்சொல்லி வள்ளுவரே கூறியுள்ளார்.

அப்படியானால் பேய்களால் கெட்டது நடக்கிறதோ இல்லையோ ஆனால் மனிதர்களுக்கு நன்மைகள் தொடர்ந்து நடந்து கொண்டுதானே இருக்கின்றன.

ஆக, பேய்கள் வாழ்க

(முற்றும்)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



## செந்தூர மழலைச் செல்வங்கள்



Asam Lafeer Matheera
Akkaraipattu
08.10.2022



Kavi
Rakwana



ஒலிப்பதிவாளர்கள்

## செல்ஃபி உலா

நீங்கள், உங்கள் Phone களில் விதவிதமாக எடுத்துப் பார்த்து ரசிக்கும் Selfie படங்களை இந்த செந்துாரம் இதழில் பிரசுரிக்க உங்கள், பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு என்ற 0773124543 whatsappக்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.

# கவிஞர் பொத்துவில் அஸ்மின் பாடல்கள் எழுதிய தென்னிந்திய டிவி தொடர் "ஜமீலா"

தமிழ் சினிமாவில் பாடல் எழுதிவரும் பிரபல கவிஞரும் பாடலாசிரியருமான பொத்துவில் அஸ்மின் வரிகளில் "ஜமீலா" என்ற புதிய தொலைக்காட்சி தொடர் இம்மாதம் 10 திகதி முதல் தென்னிந்திய கலர்ஸ் தொலைக்காட்சி ஒளிபரப்பாகவுள்ளது.

நடிகை ராதிகா சரத்குமாரின் ராடன் நிறுவனம் மற்றும் கலர்ஸ் தொலைக்காட்சி தயாரித்துள்ள இந்த தொடர் தமிழ் தொலைக்காட்சி வரலாற்றில் முதன் முறையாக இஸ்லாமிய பெண்ணின் கதை களத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த தொலைக்காட்சி தொடரின் பாடல்களுக்கு இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானிடம் பணிபுரிந்த இளம் இசையமைப்பாளர் ரிஸ்வான் இசையமைத்துள்ளார். பாடல்களை கேராளவின் "Star Singer 8" போட்டியில் இறுதிசுற்றுக்கு தெரிவாகி கவனம் பெற்ற மலையாளத்தின் இளம்பாடகி சிரில் சாஜி பாடியுள்ளார்.

மலையாள திரைப்படங்களில் தற்போது பாடி வரும் இவர் தமிழில் பாடும் முதல் பாடல் இது வென்பது குறிப்பிடத்தக்கது.







ராடன் நிறுவனத்தின் மேலதிகாரி சுபா வெங்கட் மற்றும் கலர்ஸ் தொலைக்காட்சியின் நிகழ்ச்சிப்பிரிவு தலைமை அதிகாரி ஜெரால்ட்டின் நெறிப்படுத்தலில் நிகழ்ச்சி முகாமையாளர் ஹரி வழிகாட்டலில் "திருமணம் எனும் நிக்காஹ்" திரைப்படத்தின் இயக்குநர்



அனீஸின் மேற்பார்வையில் இயக்குனர் ஆஸிப் குரைஷி இந்த தொடரை இயக்கியுள்ளார்.

எழுத்தாளர் ஐஸ்வர்யன் கதை, வசனம் எழுதியுள்ள பிரபல சினிமா நட்சத்திரங்கள் பலர் நடித்துள்ளனர்.

ஒக்டோபர் 10 முதல், திங்கள், சனி இரவு 7 மணிக்கு கலர்ஸ் தொலைக்காட்சியில் ஜமீலா தொடரை கண்டு ரசிகர்கள் களிக்கலாம்.













மகாத்மா காந்தியின் நினைவு ஜெயந்தியை முன்னிட்டு பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா சென்னை மயிலாப்பூரில் ஏ ஆர் கலை மாமன்றம் சார்பில் நடாத்தப்பட்டது. கடலூர் மாவட்ட நீதிபதி எம் ராஜலக்ஷ்மி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மக்கள் திலகம் எம் ஜி ஆருடன் பணியாற்றிய முன்னாள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் எச் வி ஹண்டே விருது வழங்கி வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக ஏ. ஆர். ரமேஷ் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களாக தமிழ் சினிமா தயாரிப்பாளரும் இயக்குனருமான தர்மசீலன் செந்தூரன், துரதர்ஷன் தொலைக்காட்சி இணை இயக்குனர் விஜயன் உட்பட பலர் கலந்து கொண்டனர். விழாவில் தமிழ் திரைப்பட நடிகை வைஷாலி கோபால் உட்பட நாற்பது பேர், விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -















# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி










A: ஒருத்தன் ஊதுபத்தி ஸ்டாண்ட முழுங்கிட்டா ஆனா அவனுக்கு ஒன்னும் ஆகல...

B: ஏன்?



A: ஏனா அவன் சாப்பிட்டது வாழைப்பழத்தை....











"வீட்ல பெயின்ட் வேலை நடந்துட்டு இருக்கு. எதுக்காக ரெண்டு கோட் போட்டுருக்கீங்க?"
"பெயின்ட் பளிச்'னு வரணும்னா ரெண்டு கோட் போடணும்னு பெயின்டர்தான் சொன்னார்!"

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# செந்தமிழால் சிலம்பமாடும் சமூகஜோதி சிலாவத்துறை எம்.ஏ.றபீக்



ஆயிரக்கணக்கான உலக மொழிகளில் ஆதிமொழியான நம் தமிழ் மொழி அளப்பரிய சிறப்புகளைக் கொண்டதாகும்.

பைந்தமிழ், பூந்தமிழ், செந்தமிழ், தேன்தமிழ், கன்னித்தமிழ், வண்ணத் தமிழ் என்றெல்லாம் வர்ணிக்கப்படும் வளமான மொழியாகும்.

அமுதத் தமிழாக, அழகு தமிழாக, அடுக்குத் தமிழாகப் பேசி சபையோரை கலகலப்பாக்குவதில் வல்லவர் நமது சமூகஜோதி எம்.ஏ. றபீக்.

முக்கனியின் சுவையைவிட முத்தமிழின் சுவையே மிகையானது மேலானது என்பதை மெய்ப்பித்துக் காட்டும்திறன் இவருக்கு கைவந்த கலை.

இவரது எழுத்திலும் சரி, பேச்சிலும் சரி ஒரு கவர்ச்சி இருக்கும். கேட்போரையும் படிப்போரையும் கவர்ந்திழுக்கும் காந்தம் இருக்கும். செந்தமிழால் சிலம்பமாடி ஆயிரக்கணக்கான அபிமானிகளைப் பெற்றிருப்பவர்.

அறிமுகஉரை, அஞ்சலிஉரை, வரவேற்புரை, வாழ்த்துரை, சிறப்புரை என்று பல்வேறு கோணங்களிலே உரையாற்றும் போது மட்டுமல்லாமல் பட்டிமன்றங்களிலே வாதிடும் போதும் இவரது வார்த்தை ஜாலங்களால் வசீகரிக்கப்படாதவர் இருக்க முடியாது.

பண்பும், பணிவும் அணிகலன்களாகக் கொண்ட இவரை செந்தூரம் நேயர்களுக்காக நேர் காணுகிறோம்.

**கேள்வி : உங்கள் ஊர் மற்றும் பூர்வீகம் பற்றிக் கூறுங்களேன்.**

**பதில்** : முத்துக் குளித்த துறை, முத்தமிழும் செழித்த துறை முசலி எனும் மாதாவின் முகமாக ஜொலிக்கும் துறை எங்கள் ஊர் சிலாவத்துறை. மன்னார் மாவட்டத்தில் முசலி எனும் நிர்வாகப் பிரதேசத்தின் 26 கிராமங்களுக்குத் தலைநகரமாகும்.

முன்னொரு காலத்தில் முத்துக்களினுடைய சர்வதேசச் சந்தை எங்கள் சிலாவத்துறையில்தான் நடைபெற்றது.

உலக அழகியாகத் திகழ்ந்த எகிப்து ராணி கிளியோபாட்ரா தனது மகுடத்திலும் காதணிகளிலும் பதிந்திருந்த முத்துக்கள் எங்கள் சிலாவத்துறைக் கடலிலே எடுக்கப்பட்ட முத்துக்கள் என்பதற்கு வரலாறு உண்டு.

என் பெற்றோர்கள் பெரும் செல்வந்தர்கள். பொருளாதாரத்திலே அல்ல. எல்லாம் வல்ல இறைவன் பிள்ளைச் செல்வத்தை அள்ளி வழங்கிஇருந்தான். ஆண்களில் ஒன்பதும் பெண்களில் மூன்றுமாக என்னுடன் 12 செல்வங்கள் என பெற்றோர்கள் பெருமிதப்பட்டதை பலமுறை அவதானித்திருக்கிறேன். வறுமையானவர்கள் என்றாலும் பண்பு என்ற வயல்களையும் பணிவு என்ற தோட்டங்களையும் எங்களுக்கு தந்து சென்ற பெற்றோர்களின் மறுமைவாழ்வுக்காகப் பிரார்த்திக்கிறேன்.

**பதில் : கல்வித்தகைமை பற்றி..?**

**கேள்வி** : ஆரம்பக் கல்வியான அரிச்சுவடியை கற்றுத் தந்தவர் யாழ் சின்னத்தம்பி ஆசிரியர். எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த தலைமை ஆசிரியர் ஷரீப்பும் அவர் மனைவி நபிசா ஆசிரியையும் 05ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து முசலிப் பகுதியின் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முதலாவது மாணவன் என்ற பேற்றை பெற வழியமைத்துத் தந்தனர்.





ஆறாம் வகுப்பிலிருந்து எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி தொடர்ந்தது கட்டாயப் பாடங்களான கணிதம், தமிழ் மொழி ஆகிய இரண்டு பாடங்களிலும் அதிஉச்சசகட்ட புள்ளிகள்(D) உட்பட க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி அடைந்தும் கல்வியைத் தொடரமுடியாமல் போனதற்கு யாரையும் குறைகூற விரும்பவில்லை. போதும் என்ற மனமே பொன் செய்யும் மனம் என்று எண்ணினேனோ என்னவோ தெரியவில்லை.

**கேள்வி : உங்களுக்கு தமிழ் ஆர்வம் எப்படி ஏற்பட்டது?**

**பதில்** : ஆர்வத்தின்





ஆரம்பம் என் தாயின் தாலாட்டுத்தான். இலக்கிய சுவை மிகுந்த என் தாயின் தாலாட்டு இன்னும் என் செவிகளிலே ரீங்காரம் இட்டுக்கொண்டிருக்கிறது. என் அன்னை கல்வி அறிவு இல்லாதவர்தான். ஆனால் அவர் ஒரு பல்கலைக் கழகம். வாய் திறந்தால் வார்த்கதைகள் எல்லாம் தத்துவங்களாகவும், சத்தியங்களாகவுமே இருக்கும்.எட்டாம் வகுப்பில் விடத்தல்தீவைச் சேர்ந்த அமீர் ஆசிரியர் வகுப்பாசிரியாராகவும், இலக்கியப்பாட ஆசிரியராகவும் இருந்தார். அவரின் அற்புதமான நயம் மிகுந்த கற்பித்தல் என்னை இலக்கிய ஆர்வலனாக மாற்றியது.

அந்த ஆர்வம் நம் நாட்டிலுள்ள அறிஞர்கள், கவிஞர்கள் மட்டுமல்லாமல் தமிழகத்தில் இருந்து வருகின்ற தலைசிறந்த தமிழ் தென்றல்களின் பேச்சுக்களையும் உள்வாங்கச்செய்தது.

(தொடர் 7ஆம் பக்கம்)

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -





(06ஆம் பக்கத் தொடர்)

**கேள்வி : மேடைப் பேச்சுக்களின் தொடர்பு எப்படி ஏற்பட்டது?**

**பதில் :** மறைந்த இலங்கை நெய்னார் தமிழகத்தில் இருந்து இலங் கைக்கு வந்து நடத்திய ஒரு நிகழ் வில் என்னை நன்றியுரையாற்றுவ தற்கு வேண்டிக் கொண்டார். அதைத் தொடர்ந்து எனக்கு பல அமைப்புக் கள் என்னை அழைத்தன. நினைவில் நிற்பவர்களில் நெய்னாரும் ஒருவர்.

**கேள்வி : பட்டிமன்றம் தொடர்பாக..?**

**பதில் :** பட்டிமன்றத்தில் பேசுவதற்கு நான் பயந்து ஒதுங்கிய போதும் பலாத்காரமாக என்னை உள்வாங் கியவர் அப்பட்டிமன்றத்தை ஏற்பாடு செய்து நடுவராகவும் இருந்து அசத் திய தமிழ்த்தென்றல் அலிஅக்பர் தான்.

'அறிஞர் அண்ணாவுக்கு அதிக புகழ் சேர்த்தது அரசியலா? இலக்கி யமா?' என்ற தலைப்பிலான பட்டிமன் றத்தில் இலக்கியம் என்ற அணியில் நான் வாதிட்டேன். கலைஞர் கம்பளை தாசன் உட்பட ஆற்றல்மிகு அனுபவசா லிகள் பலர் பேசினார்கள். நடுவரின் தீர்ப்பில் இந்த பட்டிமன்ற விவாதத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றவர் சமூக ஜோதி றபீக் என அறிவித்தபோது சபையில் எழுந்த சரமாரியான கரகோ சம் எனக்கு ஒரு உத்வேகத்தையும், ஊக்கத்தையும் தந்தது.

தில்லை நடராஜா, கலாநிதி வைத் தமாநிதி, மணிசிறிகாந்தன், திருமதி ஷாமிளா ஷெரிப் முஸ்டீன், அதிபர் ஏ.எல்.எம். பீலிக்ஸ், திருமதி சுகந்தி ராஜகுலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்ட 'நகைச்சுவை சிரிப்பதற்கா? சிந்திப்பதற்கா?' என்ற தலைப்பி லான பட்டிமன்றத்தில் நான் நடுவராக இருந்து சபையோரின் பலத்த கரகோ ஷத்துடன் அந்நிகழ்வை செய்து முடிப் பதற்கு புரவலர் ஹாஸிம் உமரின் தொடர்ச்சியான வேண்டுதலும் கலா பூஷணம் பாரம்பரியம் புகழ் எம். எஸ்.எம். ஜின்னாவின் தொய்வில் லாத தூண்டுதலுமே காரணமாகும்.

அறங்காவலர் பொன் வல்லிபுரம் ஐயாவின் தலைமையில் உலக அறி விப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத் தின் தொகுப்பில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் புகழாஞ்சலி விழா BMICH மண்டபத்தில் நடை பெற்ற போது இலங்கை கலைஞர் சார்பாக பேசுவதற்கான வாய்ப்பு எனக்கே கிடைத்தது. இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட உலக நாயகன் கமலஹாசன், பிரபு, சரத்குமார், நெப்போலியன், விஜய குமார், மீனா, சரோஜாதேவி, ராதிகா, மஞ்சுளா, மனோரமா ஆகியோர் கைலாகு கொடுத்து பாராட்டியது எனக்கு மனநிறைவை தந்தது.

இந்த வாய்ப்புக்கு காரணமாக இருந்தவர்களான அறங்காவலரின் செயலாளர் ஓவியத்திலகம் செல் வராஜ், கலைப்புரவலர் சிவாஜி மௌலானா ஆகியோர் நிரந்தரமான நன்றிக்குரியவர்கள்.

**கேள்வி : வெளிநாடுகளிலும் பேசி இருக்கிறீர்களா?**

**பதில் :** பெரிதாக இல்லை. திருச்சி, நீடூர் மகளிர் உயர்நிலை பாடசாலையி லும் வருடாந்தம் சென்னையில் நடை பெறும் புத்தகத் திருவிழாவை முன் னிட்டு மணிமேகலைப் பிரசுரத்தாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற முப்பது நூல் களின் வெளியீட்டு விழாவில் பேசி யதும் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். எனது சொற்பொழிவுகள் இடம்பெற்ற நூலை லேனா தமிழ்வாணன் பெற் றுக்கொண்டு என்னை கௌரவப்ப டுத்தினார். ரவி தமிழ்வாணன், லேனா தமிழ்வாணன் இருவருக்கும் எனது இதயம்கனிந்த நன்றி.

தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் உட்பட பன்நாட்டு அறிஞர்கள், கவி ஞர்கள் கலந்துகொள்ளும் மாபெரும் இலக்கிய விழா கம்பன் கழகத்தால் ஆண்டுகள் தோறும் நடத்தப்படு கின்றது.

மூன்று தடவைகள் அவ்விழாவில் தலைமையுரை ஆற்றுகின்ற வாய்ப்பி னைத் தந்த கம்பவாரிதி இ. ஜெயராஜ் எனது மரியாதைக்கும் நன்றிக்கும் உரியவர்.

**கேள்வி : வேறு என்ன நிகழ்வுக ளில் கலந்துகொண்டுள்ளீர்கள்?**

**பதில் :** நம்நாடு நற்பணிப் பேர வையின் ஏற்பாட்டில் மாதாந்தம் வரும் பௌர்ணமி தினத்தில் நகைச் சுவை சங்கமம் என்ற தலைப்பில்



பார்வையாளர்களும் கலந்துகொள் ளும் விதமான நகைச்சுவை களஞ் சியத்தை நடத்தியதும் இந்நிகழ்ச்சி சந்தோஷ சங்கமமாக அமைவதற்கு பேரவையின் செயலாளர் போல்ரெஜி பிரேம்குமார் பிரதான காரணமாக அமைந்தார் என்பதும் முக்கியமான தகவல்தான்.

**கேள்வி : பத்திரிகைகளில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற்றதுண்டா?**

**பதில் :** 'நம்நாட்டு நடப்பும், நடிப் பும்' என்ற தலைப்பில் நவமணி பத்தி ரிகையில் உள்நாட்டு கலைஞர்களின் ஆற்றல் பற்றியும் அவர்கள் தொடர் பான தகவல்கள் பற்றியும் எழுதிவந் துள்ளேன்.

'தேனும், பாலும்' என்ற தலைப்பி லும் பின்னர் 'சமூகஜோதியின் சங்க மம்' என்ற தலைப்பிலும் வாசர்களின் கேள்விகளுக்கு பக்குவமாக பதில ளித்து வந்திருக்கிறேன்.

நவமணியின் முன்னாள் பிரதம ஆசிரியரான மறைந்த அல்ஹாஜ் எம்.பி.எம். அஸ்ஹர் அவருக்குப் பிறகு பிரதம ஆசிரியராக இருந்த முஸ்லிம் கவுன்சில் தலைவர் அனு பவசாலியான ஊடகவியலாளர் என். எம். அமீன் ஆகியோர் இந்த வாய்ப்பு களை தந்து எனது வளர்ச்சிக்கு உதவி னார்கள்.

**கேள்வி : நாடகங்கள் பற்றி?**

**பதில் :** பாடசாலைக் காலங்களில் சாம்ராட் அசோகன் நிதி எல்லாம் நீயே, காதலா? கடமையா? ஆகிய நாடகங்களில் கதாநாயகனாக நடித்தி ருக்கிறேன். கொழும்பிற்கு வந்த பிறகு டவர் மண்டபத்தில் தேசிய அரச நாடக விழாவில் 'ஒரு கலைஞனின் கதை' என்ற நாடகத்திலும் புனித யாத்திரை என்ற தொலைக்காட்சி நாடகத்திலும்



ரசிகர்களின் நெஞ்சிலே நிற்கின்ற அளவு தலைகாட்டி இருக்கிறேன். இவ்விரு நாடகங்களிலும் வாய்ப்புத் தந்தவர் கலாபூஷணம் கலைஞானி கலைச்செல்வன் தான்.

**கேள்வி : நூல்கள் ஏதாவது வெளி யிட்டுள்ளீர்களா?**

**பதில் :** நான் பல மேடைகளில் பேசிய சொற்பொழிவுகள் 'சமூகஜோ தியின் சங்கநாதம்' என்ற பெயரிலே புரவலர் புத்தக பூங்காவின் 31வது நூலாக வெளிவந்தது. அப்பூங்கா வின் அப்போதைய செயலாளராக இருந்த கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர் கனி அவர்கள் இந்த வெளியீட்டுக்காக அர்பணிப்புடன் செயல்பட்டது பாராட் டுக்குரியது.

சினிமா மெட்டுக்களில் சில இஸ்லா மியப் பாடல்கள் எழுதி சகாயம் பெர் ணான்டோ அவர்களைப் பாடவைத்து இறுவட்டாக வெளியிட்டுள்ளேன். இசைத்துறையில் இலங்கையில் பிரப லமான பசால் எம். ஜின்னா அவர்கள் ஒலிப்பதிவு செய்த இந்த இறுவட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங் கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களும் கௌரவ அதிதிகளான அரசியல் பிரமுகர்கள் பஷீர் சேகுதா வூத், ஹசன் அலி ஆகியோர் என்றும் மரியாதைக்குரியவர்கள்.

**கேள்வி : நீங்கள் ஏதாவது நிகழ் வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுண்டா?**

**பதில் :** வலம்புரி கவிதாவட்டம், ஒருமுறை அவர்களது கவியரங் கில் பிரதம அதிதியாக என்னை அழைத்து கௌரவித்தது. வகவத் தின் நிர்வாகிகளான இளநெஞ்சன் முர்ஷிதீன், கலாபூஷணம் கவிமணி நஜ்முல் ஹுசைன், மேமன் கவி ஆகியோரே இந்த அரிய வாய்ப்பை எனக்கு அளித்த அன்பானவர்கள்.

**கேள்வி : உங்களுக்கு கிடைத்த பட்டங்கள், விரு துகள் பற்றி?**

**பதில் :** அரச சாகித்திய விருது, கலாபூஷணம் விருது, வட மாகாண முத லமைச்சர் விருது உட்பட பல சங்ககளின் விருதுகள் கிடைத்துள்ளன.

சமூகஜோதி, கலாஜோதி, தமிழ்த்தென்றல், சொல்லின் செல்வன் போன்ற பட்டங்களும் கிடைத்துள்ளன. இவை என் தகுதிக்கு கிடைத்தது என்பதை விட தந்தவர்க ளின் பண்பினால் கிடைத்த தாகவே நம்புகின்றேன்.

இதில் சமூகஜோதி என்ற பட்டம் அகில இன நல்லுறவு ஒன்றியம் எனக்கு அளித்தது. அதன் அப்போ தைய தலைவர் சரத் மல்லவராச்சி அமைப்பாளரும் செயலாளருமான நுகவெல ஹுசைன் பொருளாளர் கோமளராஜ் ஆகியோரும் அந்த விழாவிற்கு என்னை அறிமுகப்படுத் திய எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் அன்பு நண்பர் இத்ரீஸ் அவர்களும் நன்றிக்குரியவர்கள் தான்.

**கேள்வி : தொலைக்காட்சி பேட்டி களில் பங்குபற்றி இருக்கின்றீர் களா?**

**பதில் :** இன்று கவிப்பூங்கவில் புகழ்மனம் பரப்பிக்கொண்டிருக் கும் கவிஞர் பொத்துவில் அஸ்மின் அவர்களின் ஏற்பாட்டில் தேன்;த மிழ் அறிவிப்பாளர் திருமதி. நாகபூ ஷணி அவர்களின் நேர்காணலில்; வசந்தம் தொலைக்காட்சியில் எனது பேட்டி ஒளிபரப்பாகியது. இருவருமே என் இதயம் நிறைந்தவர்கள்.

**கேள்வி : நீங்கள் பதவிகள் எதிலா வது இருந்திருக்கிறீர்களா?**

**பதில் :** அதற்கான தகுதி எனக் கில்லை. ஆனாலும் அமைச்சர் ரிஷாத் பதியுத்தீன் அவர்கள் தமது அமைச்சுக்குக் கீழ் இருந்த ஸ்ரீ லங்கா சீ மெந்து கோபரேசன் பணிப்பாளர் ச பையில் ஒரு உறுப்பினராக நிய மித்து கௌரவப்படுத்தினார். அரசி யலிலே அவருக்கு ஆதரவாக நான் செயல்படாவிட்டாலும் அந்த பதவி எங்கள் ஊருக்கு தந்த கௌரவமா கவே நான் கருதுகிறேன்.

**கேள்வி : உங்கள் இல்லற வாழ்வு பற்றி?**

**பதில் :** என் பெற்றோர்களை போல நானும் பிள்ளைச் செல்வந்தன் தான். முத்தான பத்து குழந்தைகளை சொத் தாகப் பெற்றிருக்கின்றோம். நல்ல தொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பது உண்மையானால் எங்கள் குடும்பமும் ஒரு பல்கலைக்கழகம் தான்.

**கேள்வி : உங்கள் உயர்வுக்கு காரணம் உங்கள் அழகு தமிழ்தானா?**

**பதில் :** இல்லவே இல்லை. அழகு தமிழ் பேசுபவர்கள் அனேகம்பேர் உள்ளனர். அற்ப ஆணியைக் கூட அலவாங்காக ஆக்கக்கூடிய ஆற்றல் மிகு ஊடகவியலாளர்கள் என்பது அப் பட்டமான உண்மை. எனவே எனது வளர்ச்சிக்கோ, நீங்கள் கூறும் உயர் சிக்கோ காரணம் நிச்சயமாக என்மீது அன்பும், அரவணைப்பும் காட்டுகின்ற ஊடகவியலாளர்கள்தான்.

**கேள்வி : உங்களால் மறக்கமுடி யாத முக்கியமான நபர் யார்?**

**பதில் :** மறக்கமுடியாதவர்கள் இதில் நான் குறிப்பிட்டவர்களை விட இன்னும் அனேகர் இருக்கி றார்கள். ஆனால் நான் மட்டுமல்ல என் குடும்பமும் மறக்கக்கூடாதவர் ஒருவர் தான் இருக்கின்றார். அவர் புரவலர் ஹாஷிம் உமர். மன்னாரில் இருந்து நாங்கள் இடம்பெயர்ந்து கொழும்புக்கு வந்த போது வீடில்லா மல் தவித்துக் கொண்டிருந்தோம். அப்போது புங்குடு தீவைச் சேர்ந்த வர்த்தகர் கோபாலன் ஐயா இரண்டு வருடங்கள் வாடகைக்கு ஒரு வீட்டை எடுத்து தந்தார். அதன்பிறகு எங்கள் நிலைமையை உணர்ந்து தானே முன்வந்து வசதியான ஒரு வீட்டை இனாமாக எங்களுக்குத் தந்தார் புர வலர். அப்போது 12 இலட்சம் ரூபா பெறுமதியான அந்த வீடு இப்போது ஒரு கோடி ரூபா பெறுமதியில் உள்ளது.

**கேள்வி : நீங்கள் கடைசியாக என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

**பதில் :** அமுதத் தமிழ் அறிவிலும் சரி, ஆற்றலிலும் சரி தலைப்பிறை போல் ஒரு சிறு கீற்றாகவே நான் இருக்கிறேன். வளர்பிறைகளாக, முழுமதிகளாக் பலர் இருக்கின்றார் கள். இலை மறை கனி போல இருக் கும் அந்த இனிய வர்கள் அம்பலத்தில் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்பது தான். நன்றி.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

எஸ்.எம். கார்மேகம், கலஹா.

**கேள்வி:** பிரபல நடிகர் கார்த்திக்கின் மகன் நடிகர் கௌதம் கார்த்திக்குக்கும் ஒரு நடிகைக்கும் விரைவில் திருமணம் நடக்கப் போகிறதாமே....இது உண்மையா...யார் அந்த நடிகை?

**பதில்:** உண்மைதான்.தந்தை நடிகர் கார்த்திக்கைப் போல் அவரது வாரிசான கௌதம் கார்த்திக்கும்,தன்னுடன் 'தேவராட்டம்' எனும் படத்தில் இணைந்து நடித்த நடிகை மஞ்சிமா மோகனை காதலித்து, விரைவில் கரம் பற்ற விருக்கிறார்.

நிரஞ்சனி.நாராஹென்பிட்டிய.

**கேள்வி:** நடிகை திரிஷா தனது சமூக வலைத்தளத்தில் தனது பெயரை "குந்தவி"என்று மாற்றியிருக்கிறாராமே..ஏனாம்?

**பதில்:** நடிகை திரிஷா தன்னுடைய சமூக வலைதள பக்கத்தில் சுயவிவர குறிப்பில் ,திரிஷா என்ற அவருடைய பெயருக்கு பதிலாக 'குந்தவை'என பெயர் மாற்றம் செய்து ரசிகர்களை உற்சாகமடைய செய்திருக்கிறார்.

'நாற்பது வயதைக் கடந்து விட்ட

பெண்மணி'

'வெற்றி பெற்ற எந்த திரைப் படத்திலும் கதையின் நாயகியாக நடக்காத நடிகை'

'சொந்த வாழ்க்கையிலும் இயல்பாக வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் தெரியாத நடிகை.'என திரிஷாவைப்பற்றி இணையத்தில்தொடர்ந்து எதிர்மறையான விமர்சனங்கள் வந்து கொண்டே இருக்கிறது .

இருப்பினும் நடிகை திரிஷா இதைப்பற்றியெல்லாம் கவலை கொள்ளாமல் தன் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்புகளை தெரிவு செய்து நடித்து வருகிறார். அதில் முக்கியமானது 'பொன்னியின் செல்வன்'இது தொடர்பாக அவர் பேசுகையில் "ஜீனியஸ் மணிரத்னம் இயக்கத்தில் நடிப்பது எப்போதும் பிடிக்கும்.'ஆயுத எழுத்து'படத்திற்குப்பிறகு அவரின் படத்தில் மீண்டும் நடிக்க மாட்டோமா என ஆசையும் கனவும் கொண்டிருந்தேன்.

அவை அனைத்தும் 'பொன்னியின் செல்வன்' படம் மூலம் நனவாகி இருக்கிறது.அதிலும் நிஜ சரித்திரத்தை தழுவி தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தில் குந்தவை பிராட்டி யாராக நடித்திருப்பது மிக்க மகிழ்ச்சி.

இந்த படத்திற்கான ஆடை அணிகன்கள் ஒவ்வொன்றையும் இயக்குனரும்,ஆடை அலங்கார வடிவமைப்பு நிபுணர் குழுவினரும் தேடித் தேடி உருவாங்கினர். அதை அணிந்து நடித்ததில் கூடுதல் மகிழ்ச்சி." என்றார் திரிஷா.

தற்போது அறிமுக இயக்குநர் வசீகரன் இயக்கத்தில் தயாராகும் 'தி ரோடு'எனும் படத்தில் கதையின் நாயகியாக நடித்து வருகிறார்.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.



# அழகுக்கு அறுவை சிகிச்சை

**பூஜா** ஹெக்டேயின் மூக்கு அழகாக இல்லை என்றும், அதை வெளிநாட்டுக்கு சென்று அறுவை சிகிச்சை மூலம் சரி செய்ய திட்டமிட்டு இருக்கிறார் என்றும் தகவல் பரவியது. இதற்கு பூஜா ஹெக்டே விளக்கம் அளித்துள்ளார். நடிகைகள் பலர் அழகுக்காக வெளிநாடு சென்று அறுவை சிகிச்சை செய்துள்ளனர். இந்த வரிசையில் தமிழில் முகமூடி, பீஸ்ட் படங்களிலும், தெலுங்கு, இந்தி படங்களிலும் கதாநாயகியாக நடித்துள்ள பூஜா ஹெக்டேவும் அறுவை சிகிச்சை செய்ய இருப்பதாக தகவல் வெளியானது. பூஜா ஹெக்டே நடிப்பில் சமீபத்தில் வெளியான அனைத்து படங்களும் தோல்வி அடைந்தன. இந்த நிலையில் பூஜா ஹெக்டேவின் மூக்கு அழகாக இல்லை என்றும், அதை வெளிநாட்டுக்கு சென்று அறுவை சிகிச்சை மூலம் சரி செய்ய திட்டமிட்டு இருக்கிறார் என்றும் தகவல் பரவியது.



# கவர்ச்சியில் கலக்கும் பாடகி ஜொனிதா

பாடகி ஜொனிதா காந்தி கவர்ச்சியிலும் கலக்கி வருகிறார். ஏ.ஆர்.ரகுமானின் மேடை கச்சேரிகள் என்றாலும் சரி, அனிருத் பாடல்கள் என்றாலும் சரி தவறாமல் இடம் பிடித்து விடுபவர் ஜொனிதா காந்தி. இவர் தமிழில் 'காப்பான்' படத்தில் 'ஹே ஹமிகோ...', 'காற்று வெளியிடை' படத்தில் 'அழகியே...', 'டாக்டர்' படத்தில் 'செல்லம்மா... செல்லம்மா...', 'பீஸ்ட்' படத்தில் 'அரபி குத்து' உள்பட பல பாடல்களை பாடியுள்ளார். பாடகியாக இருந்த அவருக்கு படவாய்ப்பும் வந்திருக்கிறது. இந்தியில் விநாயக் இயக்கும் 'வாக்கிங் டாக்கிங் ஸ்ட்ராபெர்ரி ஐஸ்கிரீம்' என்ற படத்தில் கிருஷ்ணகுமாருக்கு (சூரரைப் போற்று படத்தில் சூர்யாவின் நண்பராக சைதன்யா எனும் கதாபாத்திரத்தில் நடித்தவர்) ஜோடியாக நடித்து வருகிறார். காதலை மையப்படுத்தி எடுக்கப்படும் இந்த படத்தை நயன்தாரா மற்றும் விக்னேஷ் சிவன் இருவரும் கூட்டாக தயாரிக்கிறார்கள். இந்த நிலையில் ஜொனிதா காந்தி கவர்ச்சியிலும் கலக்கி வருகிறார். அவரது கவர்ச்சி படங்கள் ரசிகர்களை பரவசப்படுத்தி வருகிறது. கதாநாயகியாக நடிக்க தொடங்கியவுடனே கவர்ச்சி பாதையில் கால்பதித்துள்ளார்,



# பஞ்சு போன்ற நான் நடிகர்களின் திறமைகளை உறிஞ்சி கொள்வேன்

தெலுங்கு திரை உலகில் பிரபல நடிகையாக இருப்பவர் ராஷ்மிகா மந்தனா. நடிகர் அல்லு அர்ஜுனுடன் நாயகியாக இணைந்து நடித்த புஷ்பா திரைப்படம் ரசிகர்களை பெருவாரியாக கவர்ந்தது. அவருக்கு ஒரு திருப்புமுனையையும் ஏற்படுத்தி கொடுத்தது. இதன் தொடர்ச்சியாக தமிழில் கார்த்தியுடன் சுல்தான் படத்தில் ஜோடி சேர்ந்த அவர், வாரிசு படத்தில் நடிகர் விஜய்யுடன் நடித்து வருகிறார். இதுதவிர, இந்தி திரைப்படங்களிலும் நடிக்க தொடங்கியுள்ளார். பிரபல பட தயாரிப்பாளரான ஏக்தா கபூரின் தயாரிப்பில் உருவாகியுள்ள குட்பை என்ற இந்தி திரைப்படத்தில் நடிகை ராஷ்மிகா நடித்துள்ளார்.

குடும்பத்தின் முக்கியத்துவம், ஒவ்வொரு சூழலிலும் வாழ்க்கையை கொண்டாடுவது மற்றும் அர்த்தமுள்ளதொரு வாழ்வை வாழ உதவ கூடிய சுய உண்மையை அறிதல் (தன்னிலை, தன்மதிப்பு போன்றவற்றை அறிதல்) ஆகியவை படத்தில் அழகாக வர்ணிக்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு குடும்பமும் எதிர்கொள்ளும் வாழ்வின் ஏற்ற, இறக்கங்களை இத்திரைப்படம் வெளிப்படுத்தும்

இந்த படத்தில் நடித்ததில் ஒரு பெரிய உருமாற்றம் பெற்றுள்ளேன் என கூறும் ராஷ்மிகா, நான் ஒரு பஞ்சு போன்றவள். அதனால், என்னுடன் நடிக்கும் நடிகர்களின் திறமைகளை உறிஞ்சி கொள்வேன் என கூறியுள்ளார்.



# சினிமாவுக்கு ரோஜாவின் மகள் அன்சு மாலிகா

நடிகையும், ஆந்திர மாநில மந்திரியுமான ரோஜாவின் மகள் அன்சு மாலிகா விரைவில் சினிமாவில் கதாநாயகியாக நடிக்கப் போவதாக செய்திகள் வெளியாகின. துருவ் விக்ரம் ஜோடியாக அவர் நடிக்க உள்ளதாகவும் கூறப்பட்டது. இது பெரிய எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது. இந்தநிலையில் அன்சு மாலிகா சினிமாவுக்கு வருகிறாரா, இல்லையா? என்பது குறித்து அவரது தந்தையும், இயக்குனருமான ஆர்.கே.செல்வமணி விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது: "அன்சு மாலிகா தற்போது மேற்படிப்பு படிப்பதற்காக அமெரிக்கா சென்றுள்ளார். இன்னும் 4 வருடங்கள் அவர் அங்குதான் இருக்க போகிறார். எனவே அவர் நடிக்க இருப்பதாக வெளிவரும் செய்தியில் உண்மை இல்லை. அது வெறும் வதந்தி மட்டுமே". இவ்வாறு அவர் கூறியுள்ளார். இதன் மூலம் ரோஜா மகள் சினிமாவுக்கு வருவதாக உலா வந்த வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டு உள்ளது.



# ஐஸ்வர்யா ராய் மீண்டும் கர்ப்பம்

ஐஸ்வர்யா ராய் மீண்டும் கர்ப்பம் அடைந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. உலக அழகி பட்டம் வென்ற ஐஸ்வர்யா ராய், 2007ம் ஆண்டில் நடிகர் அபிஷேக் பச்சனை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 10 வயதில் ஆராதியா என்ற மகள் இருக்கிறார். திருமணத்துக்கு பின்னரும் ஐஸ்வர்யா ராய் பல படங்களில் நடித்தார். தமிழில் 'ராவணன்', 'எந்திரன்' ஆகிய படங்களில் நடித்தார்.

தற்போது அவரது நடிப்பில் 'பொன்னியின் செல்வன்' படம் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது. அவரது 'நந்தினி' கதாபாத்திரம் பெரிய அளவில் பேசப்படுகிறது. தற்போது ஐஸ்வர்யா ராய் மீண்டும் கர்ப்பம் அடைந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

சமீபத்தில் மும்பை விமான நிலையத்தில் இருந்து அவர் வெளியே வந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களில் சற்று குண்டாகவும், பூரிப்பாகவும் காணப்பட்டார். ஆனாலும் இதுகுறித்து ஐஸ்வர்யா ராய் தரப்பில் இருந்து விளக்கமோ, மறுப்போ வரவில்லை.

# நாகார்ஜுனா அரசியலுக்கு வர முடிவு

நாகார்ஜுனா அரசியலுக்கு வர முடிவு செய்து இருப்பதாகவும் வருகிற பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட இருப்பதாகவும் தகவல்கள் பரவின. இதற்கு நாகார்ஜுனா விளக்கம் அளித்துள்ளார். தெலுங்கு திரையுலகில் முன்னணி கதாநாயகனாக இருக்கும் நாகார்ஜுனா ஆந்திர முதல்மந்திரி ஜெகன்மோகன் ரெட்டி குடும்பத்துக்கு நெருக்கமாக இருக்கிறார். அரசு விளம்பர படங்களிலும் நடித்து வருகிறார். இதையடுத்து நாகார்ஜுனா அரசியலுக்கு வர முடிவு செய்து இருப்பதாகவும் வருகிற பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட இருப்பதாகவும் தகவல்கள் பரவின. இதற்கு நாகார்ஜுனா விளக்கம் அளித்துள்ளார். அவர் கூறும்போது, ''நான் அரசியலில் குதித்து விஜயவாடா தொகுதியில் எம்.பி பதவிக்கு போட்டியிடப்போகிறேன் என்று தகவல்கள் வந்துள்ளன. அதில் உண்மை இல்லை. இப்போதைக்கு நான் அரசியலை விட்டு விலகி இருக்கிறேன். எந்த ஒரு தேர்தலிலும் போட்டியிடும் எண்ணம் இல்லை. நல்ல கதை கிடைத்தால் அரசியல் தலைவர் கதாபாத்திரத்தில் நடிப்பேனே தவிர அரசியலுக்கு வரும் ஆர்வம் இல்லை. தேர்தல் நெருங்கும் ஒவ்வொரு முறையும் நான் தேர்தலில் போட்டியிடப் போகிறேன் என்ற பிரச்சாரம் நடப்பது வழக்கமாகி விட்டது. இப்போது கூட அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது'' என்றார். நாகார்ஜுனா தற்போது கோஸ்ட் என்ற தெலுங்கு படத்தில் நடித்து இருக்கிறார்.



# கிரீட்டி ஜூனியர்



இயக்குனர் ராதாகிருஷ்ண ரெட்டி புதிய படம் ஒன்றை இயக்கி வருகிறார். இந்த படத்தில் நடிகர் கிரீட்டி கதாநாயகனாக நடிக்கிறார். இப்படத்தின் மூலம் இவர் நடிகராக அறிமுகமாகியுள்ளார்.

மேலும், இதில் வி. ரவிச்சந்திரன், ஜெனிலியா ரித்தேஷ் தேஷ் முக், ஸ்ரீலீலா உள்ளிட்ட பலர் நடிக்கிறார்கள். 'பாகுபலி' படப் புகழ் ஒளிப்பதிவாளர் செந்தில்குமார் ஒளிப்பதிவு செய்து வரும் இந்த படத்திற்கு, தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். பெயரிடப்படாத இப்படத்தின் டீசர் அண்மையில் வெளியாகி கன்னட திரையுலகில் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

இதையடுத்து இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. வாராஹி ஃபிலிம் புரொடக்ஷன் தயாரிக்கும் இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, நடிகர் கிரீட்டி நடித்துள்ள இப்படத்திற்கு 'ஜூனியர்' என படக்குழு பெயரிட்டுள்ளது.

இதன் டைட்டில் லுக் சமீபத்தில் வெளியாகி சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

இப்படம் கன்னடம் மட்டுமல்லாமல் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல மொழிகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# பெண்கள் நீச்சல் பயிற்சியாளராகலாம்- ஷீஜா



பெண்கள், பரபரப்பான வேலை மற்றும் குடும்ப பொறுப்புகளில் இருந்து சற்றே விலகி புத்துணர்ச்சி பெறுவதற்கு நீச்சல் சிறந்த வழி. இது எளிமையான ஏரோபிக் பயிற்சி ஆகும். நீச்சல் பயிற்சியால் உடலில் இருக்கும் அதிகப்படியான கொழுப்பு கரைந்து, தசைகள் வலிமை பெறும். மன அழுத்தம், மனச்சோர்வு போன்ற பிரச்சினைகளுக்கு நீச்சல் தீர்வாக அமையும்" என நீச்சல் பயிற்சியின் பயன்களை பட்டியலிடுகிறார் பயிற்சியாளர் ஷீஜா. பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் நீச்சல் சொல்லிக்கொடுத்து வரும் இவர், கர்ப்பக் காலம் மற்றும் மாதவிடாய் காலங்களில் நீச்சல் செய்யலாமா? பெண்களுக்கு ஏற்ற நீச்சல் டெக்னிக்குகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார்.

"நீச்சல் குளங்களில் தொற்று நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் குறைவு. நீரில் குளோரின் கலப்பதால் அனைத்து கிருமிகளும் இறந்துவிடும். ஆனால், தொடுதல் மூலம் தொற்று நோய்கள் பரவ வாய்ப்புகள் உள்ளன. கர்ப்பிணி பெண்கள் ஏற்கனவே நீச்சல் தெரிந்திருந்தால் மட்டும் பயிற்சி செய்ய வேண்டும். புதிதாக பழக நினைக்கும் கர்ப்பிணிகள் நீரில் இறங்க பயப்படுவது மற்றும் அதிர்ச்சியாகும் வாய்ப்புகள் உள்ளதால், குழந்தை பிறந்த பின்னர் நீச்சல் பழகலாம். மாதவிடாய் காலங்களிலும் பெண்கள் நீச்சல் பயிற்சி செய்யலாம். அதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது. குழந்தைகள் அதிக அளவில் நீச்சல் கற்றுக் கொள்ள தொடங்கி இருக்கிறார்கள். 7 வயதுக்கு மேல் உள்ள குழந்தைகளால் தான் நன்றாக நீச்சல் கற்றுக் கொள்ள இயலும்.

4 வயது குழந்தைகளுக்கு நாம் சொல்லிகொடுக்கும் நுட்பங்கள் உடனடியாக புரியாது. ஒரு ஸ்ட்ரோக் கற்றுக் கொடுக்க வெளிநாடுகளில் 6 மாதங்கள் பயிற்சி கொடுப்பார்கள்.

பிரீ ஸ்டைல், பேக் ஸ்ட்ரோக், பிரஸ்ட் ஸ்ட்ரோக் மற்றும் பட்டர்பிளை என நீச்சலில் மொத்தம் 4 ஸ்ட்ரோக்குகள் உள்ளன. நேராக நீந்துவது பிரீ ஸ்டைல், பின்னாடி திரும்பியவாறு நீந்துவது பேக் ஸ்ட்ரோக், தவளை போல் நீந்துவது பிரஸ்ட் ஸ்ட்ரோக் மற்றும் கையும், காலும் ஒரே மாதிரி தூக்கி நீந்துவது பட்டர்பிளை ஸ்டைல் ஆகும். இதில் கடினமானது பட்டர்பிளை முறையாகும். தவளை போல் நீந்துவது மெதுவாக செல்வதற்கு உதவும். ஆபத்தான காலங்களில் முதல் மூன்று ஸ்ட்ரோக்குகள் பயன்படும்" என்கிறார் ஷீஜா.

# தனித்துவமான திருமணம்



திருமணம், ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் முக்கியமான நிகழ்வு. இளைய தலைமுறையினர் தங்கள் திருமணத்தை, மறக்க முடியாத நினைவாக மாற்ற விரும்புகின்றனர். அவ்வாறு திருமணத்தை, தனித்துவமாகத் திட்டமிட நினைப்பவர்களுக்குசில ஆலோசனைகள்.

திருமணத்தில் பெரும்பாலும் பூக்களினால் ஆன அலங்காரத்திற்கே பலரும் முக்கியத்துவம் தருகின்றனர். இதற்குப் பதிலாக, கைவினைப் பொருட்கள், தனிப்பட்ட அலங்காரங்கள், பரிசுப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு திட்டமிடலாம்.

திருமணம் நடக்கும் காலநிலை மற்றும் அதற்குரிய சிறப்பு உணவுகள் போன்றவற்றை திட்டமிட்டு விருந்து ஏற்பாடு செய்யலாம். பாரம்பரிய முறையில் திருமணம் நடத்துவதென்றால், விருந்தும் அதற்கு ஏற்றவாறு இருக்க வேண்டும்.

பாரம்பரியத்திற்கு ஏற்ப அல்லது திருமண நிகழ்வு திட்டமிடலுக்கு ஏற்ப உங்கள் திருமண ஆடையை வடிவமைத்துக் கொள்ளலாம். அதற்கான கைவினை வேலைப்பாடுகள் அந்த ஆடையில் இருப்பது, தனித்துவமாக இருக்கும். குறிப்பாக, எம்பிராய்டரி, ஓவியங்கள் என திருமண ஆடைகளை அழகுபடுத்தலாம். பழங்கால பாரம்பரிய உடைகளைக் கண்டறிந்து அணிந்தால் அது மேலும் தனித்துவம் பெறும்.

# சரும பிரச்சினைகளை தீர்க்கும் தக்காளி



பல்வேறு விலை உயர்ந்த அழகு சாதன பொருட்கள் மார்க்கெட்டில் கிடைத்தாலும், இயற்கையாகவே நமது சருமத்தை ஆரோக்கியமாக மாற்ற உதவும் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது சிறந்த பலன்களை கொடுக்கும். அந்த வகையில் சரும ஆரோக்கியத்திற்கு மிகுந்த நன்மை பயக்கும் அற்புதமான பல பொருட்கள் நம்முடைய சமையலறையிலேயே இருக்கின்றன.

நம் கிச்சன்களில் தயாரிக்கப்படும் பல உணவு வகைகளுக்கு கூடுதல் சுவை சேர்க்கும் முக்கியமான ஒன்று தக்காளி. இவை உமாவுகளுக்கு மட்டுமல்ல நம் சருமத்தை பராமரிப்பதிலும் பல அதிசயங்களை செய்யும் என்பது உங்களுக்கு தெரியுமா?ஆம், தக்காளியில் நிரம்பியுள்ள வைட்டமின்கள் மற்றும் ஊட்டச்சத்துக்கள் முக அழகை பராமரிக்கவும் உதவுகின்றன.

முகப்பருவை எதிர்த்துப் போராடும் தரமான தயாரிப்புகளில் உள்ள அனைத்து பொருட்களும் தக்காளியில் நிறைந்துள்ளன. இதில் வைட்டமின்கள் ஏ, பி, சி மற்றும் கே ஆகியவை நிறைந்துள்ளன. கூடவே அமில பண்புகள் இருப்பதால் முகப்பருக்கள் வராமல் இருக்க தக்காளியை ஃபேஸ் பேக்காக பயன்படுத்தலாம். மேலும் தக்காளி சருமத்தின் பிஎச் அளவை பராமரிக்கிறது.



நீங்கள் எண்ணெய் பசையான சருமத்துடன் போராடி வருகிறீர்கள் என்றால் உங்களுக்கான சரியான நிவாரணம் தக்காளி தான். தக்காளியை வெட்டி நேரடியாகவோ அல்லது அதன் சாற்றை தனியாக எடுத்தோ முகத்தில் நன்கு தேய்த்து சுமார் 15 நிமிடங்கள் ஊறவைத்து பின் கழுவவும். இது உங்கள் சருமத்தில் வழிந்த எண்ணெயை முற்றிலும் நீக்கி அழகான மற்றும் தெளிவான முகத்தை அளிக்கிறது.

# அழகுக்கு அழகூட்டும் பாலாடை



பெண்களின் சருமத்தை பாலாடையோடு ஒப்பிடுவது வழக்கம். அத்தகைய மென்மையான, பளபளக்கும் சருமத்தை பெற அவ்வப்போது முகத்துக்கு 'பாலாடை மாஸ்க்' உபயோகிக்கலாம். பாலில் இருக்கும் 'லாக்டிக் அமிலம்' சருமத்தில் படிந்திருக்கும் இறந்த செல்களை நீக்க உதவுகிறது. அதனால் அந்த இடத்தில் புதிய செல்கள் தோன்றி சருமம் எப்போதும் புதுப்பொலிவுடன் இருக்கும். பாலாடையை சருமத்தில் பூசுவதன் மூலம், திசுக்களில் தேங்கி இருக்கும் முகப் பருவை உருவாக்கும் கிருமிகள் நீங்கும். பாலாடையுடன் சிறிது மஞ்சள் சேர்த்து முகத்தில் தடவினால் 'பேஷியல்' செய்தது போன்ற பொலிவு கிடைக்கும். பாலாடையை முகத்தில் நன்றாகத் தேய்த்து ஸ்கிரப் செய்வதன் மூலம் சருமத்தில் உள்ள மாசு மருக்கள் நீங்கும். வறண்ட சருமம் கொண்டவர்கள் பாலாடையை அவ்வப்போது தடவி வந்தால், சரும வறட்சி நீங்கி ஈரப்பதத்துடன் ஆரோக்கியமாக இருக்கும். எண்ணெய் தன்மை கொண்ட சருமத்தில் பாலாடையுடன் ரோஜா பன்னீர் அல்லது தயிர் கலந்து மாஸ்க் போன்று பயன்படுத்தலாம்.



பாலாடையை அப்படியே உபயோகிக்காமல், சிறிது நேரம் குளிர்பதனப் பெட்டியில் வைத்துப் பயன்படுத்தினால், சருமத்தில் பெரிய அளவில் இருக்கும் துவாரங்கள் சிறியதாகும். முகத்தில் எந்த மாசுவும் சேர விடாமல் தடுத்து அழகை அதிகரிக்கும்.

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



# கவிதைகள் எழுத்துக்களாக எப்பொழுதும் எனக்கு ஆறுதல் தரும்

## கவிதை மீது காதல் கொண்ட ப்ரியா காசிநாதன்

தமிழ் இலக்கிய உலகுக்குள் கவிஞராகவும் பாடலாசிரியராகவும் வலம் வந்து கொண்டிருக்கும் ஒரு இளம் பெண் ப்ரியா காசிநாதன். கொக்குவில்லை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர், கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக கவிதை எழுதுவதில் தன் திறமையை காட்டி வந்தார்.




பாடல்கள் எழுதுவதிலும் தன் திறனை வெளிப்படுத்தத் தொடங்கியதன் விளைவாக குறும்படங்களுங்களுக்கும் பாடல்கள் எழுதியதுடன் பக்தி பாடல்களும் எழுதத் தொடங்கினார். இவ்வாறு தன் திறனை வெளிப்படுத்தி வளர்ந்து வரும் இவருடன் உரையாடியதில் கிடைத்த தகவல்களை பகிர்ந்து கொள்கின்றோம்.

**உங்களைப் பற்றிய அறிமுகம்?**

நான் ப்ரியா காசிநாதன் எனும் புனைப்பெயரில் கடந்த ஏழு ஆண்டுகளாக ஆக்கங்கள் எழுதி வருகிறேன். பிறந்த இடம் வளர்ந்த இடம் அனைத்துமே கொக்குவில், அப்பா தியாகராஜா, அம்மா மங்கள நாயகி, எனக்கு மூன்று சகோதரர்கள். அக்கா, அண்ணா, தங்கை.

**நீங்கள் படித்த பாடசாலை....?**

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் இந்து கல்லூரியில் எனது கல்வி பயணங்கள் அமைந்து இருந்தன.

**கவியின் மீது ஆர்வம் ஏற்பட்ட சந்தர்ப்பம்.....**

பாடசாலை காலத்திலேயே பல கவிதைப்போட்டிகளில் பங்குபற்றுவேன். இருந்தும் தரம் 11ல் கல்வி கற்றுக்கொண்டு இருக்கும் பொழுது வாசிப்பு போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப் போட்டியிலேயே அடையாளம் காணப்பட்டு முதல் இடத்தை பெற்று பணப்பரிசை பெற்றுக்கொண்டேன். அதுவே மேலும் கவிதை எழுத ஒரு தூண்டுகோலாக இருந்தது என்று சொல்லலாம்.

உயர் தரத்தில் உயிரியல் விஞ்ஞானத் துறை சார்ந்த கற்றலில் எனது உயர்தரம் அமைந்து இருந்தது.

புத்தகத்தில் வெளியிட்ட முதல் கவிதையாக்கமாக பாடசாலையில் உயர் தரத்தில் வெளியிடப்பட்ட சாரதி நூலிலேயே எழுதியிருந்தேன். அதனைத் தொடர்ந்து British way English Academy இல் ஆங்கில ஆசிரிய விரிவுரையாளராகவும் பணியாற்றினேன்.

அதனைத் தொடர்ந்து ருவன்புர தேசிய கல்லூரிக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கான ஆசிரிய பயிலுனராக தெரிவு செய்யப்பட்டு தற்சமயம் இரத்தினபுரி / சிவானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் தகவல் தொடர்பாடல் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன் .

**இலக்கிய துறையில் ஆர்வம் ஏற்படக் காரணம் என்ன?**

எனக்கு தமிழ் மொழியே மிகவும் பிடிக்கும். நிறைய கவிதைகள், கட்டுரைகள், கதைகள், சிறுகதைகள் , சஞ்சிகைகள் வாசிப்பேன். தொடர்ந்து எழுதுவேன்.

மகிழ்ச்சி, கோபம், சோகம் போன்ற எல்லா நேரங்களிலும் கவிதைகள் எழுத்துக்களாக எப்பொழுதும் எனக்கு ஆறுதல் தரும்.

புதுவை இரத்தினதுறை, வைரமுத்து, வாலி, மேத்தா, கண்ணதாசன் ஆகியோரின் கவிதைகள் மிகப் பிடிக்கும்.

எனக்குக் கிடைக்கும் ஒய்வு நேரங்களில் புத்தகங்கள் வாசிப்பதே வேலையாக இருந்தது, இப்போதும் இருக்கிறது.

புத்தகங்கள் உண்மையிலே நல்ல நண்பர்கள் தான். அதை நான் நூலகங்களில் தனிமையில் புத்தகங்கள் வாசிக்கும் போது உணர்ந்து இருக்கிறேன்.



**கலைப்பயணம் சம்பந்தமாக சில விடயங்கள் கூறலாமே..?**

ஆம்.. கலை சார்பாக எனக்கு வயலின் மீது ஈடுபாடு உண்டு, மேடையில் ஓர் அரங்கேற்றமும் செய்து இருக்கிறேன்.

சக்தி Fm இல் செவ்வாய், வெள்ளிகளில் காதோடு கவிதை தரும் காந்த குரல் செல்டன் அண்ணாவின் கவிச்சமரிலும் கொழும்பில் கலந்து கொண்டு இருக்கிறேன்.

ஆயிரம் கவிஞர்கள் கவிதைகள் நூலில் என் கவியும் இடம் பெற்றிருக்கிறது.

மேலும் கலை சம்பந்தமாக கூற வேண்டும் என்றால் வலம்புரி , மித்திரன் , தினகரனில் தொடந்து கவிதைகள் எழுதி வருகிறேன்..

**சமூகம் சார்ந்த செயற்பாடு....?**

சமூகம் சார்ந்ததென்றால் சுன்னாகம் றோட்டரிக் கழகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக இருந்து வருகிறேன். இந்த கழகமானது முற்றிலும் சமூகம் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற ஓர் கழகமாகும். அவர்களின்



சமூகம் சார்ந்த அனைத்து விடயங்களுக்கும் என்னாலான உதவிகள் செய்து வருகிறேன்.

**உங்கள் நூல் பற்றி கூறுங்களேன்.**

இன்னமும் நான்கு வருடங்களில் ஓர் நூல் ஒன்றை வெளியிடுவேன் என்று நம்புகிறேன். அதற்கான தயார்படுத்தல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

**இதுவரை உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றிக் கூறலாமே...?**

நிலா முற்றம் குழுமத்தின் ஊடாக நான் எழுதிய கவிதைகள் பல சான்றிதழ்களையும் விருதுகளையும் பெற்றுள்ளன.




**உங்களைப் போன்ற பெண்களுக்கு எவ்வாறான கவிதைகள் பிடிக்கும் என்று நினைக்கின்றீர்கள்?**

என்னைப் போன்ற பெண்களுக்கு, பெண்கள் மற்றும் குழந்தைகள் சம்பந்தமான கவிதைகளே கூடுதலாக பிடிக்கும். அதுவே அனைவராலும் விரும்பப்படும் என்று நினைக்கிறேன்.

**பாடலாசிரியராக உங்கள் முதல் பாடல் வெளியீடு பற்றி என்ன கூற விரும்புகிறீங்கள்?**

"அஞ்சனை உன்னை பெற்றிடவே.." எனும் பக்தி பாடல் ஒன்றை நானே எழுதி அதனை 2020ம் ஆண்டு தயாரித்து வெளியிட்டும் வைத்தேன். பாடலாசிரியரை தவிர தயாரிப்பாளராக அறிமுகமாகும் வாய்ப்பும் அந்தப் பாடல் வெளியீட்டின் மூலம் கிடைத்தது.

அந்தப் பாடல் பெரும் வரவேற்பைப் பெற்றது என்றால் அது மிகையாகாது.

(Priya Kasinathan எனும் youtube ஊடாக அப்பாடலை இப்போது அனைவராலும் கேட்க முடியும்)

அதைவிட PRIYA KASINATHAN என்ற YouTube ஊடாக கவிக்காணொளிகளை பார்வை இட முடியும். ப்ரியா காசிநாதன் என்ற முகப்புத்தகத்திலும், ப்ரியாவின் கவிதைகள் எனும் முகப்புத்தக பக்கத்திலும் கவிதைகளையும் பார்வை இட முடியும்.

இவர் குறும்படங்களுக்கும் பாடல் எழுதியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



# அழகர் யானை



ஆனை ஆனை
அழகர் ஆனை

அழகரும் சொக்கரும்
ஏறும் ஆனை

கட்டிக்கரும்பை
முறிக்கும் ஆனை

காவேரி தண்ணீரை
கலக்கும் ஆனை

குட்டி ஆனைக்குக்
கொம்பு முளைச்சுதாம்

பட்டணமெல்லாம்
பறந்தோடிப் போச்சுதாம்!



## 07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





## தொடர்புபடுத்துங்கள்



## நான் ரொம்ப பிஸி...



# பாடசாலை பஸ் சேவை நடத்துவதில் வருமானத்தை விட மனத் திருப்தி அதிகம்

## 27 வருடங்களாக பாடசாலை தனியார் போக்குவரத்து சேவை நிறுத்தும் நிலார்

பாதுகாப்பான முறையில் பாடசாலை மாணவர்களை உரிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதில் பெற்றார்கள் கூடிய கவனம் செலுத்தி வருகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு எமது நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பாடசாலைகளுக்கான தனியார் போக்குவரத்து சேவைகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் பெற்றோர்களுக்கு ஓரளவு மன ஆறுதலும் கிடைக்கின்றது. மாதாந்தக் கட்டண அடிப்படையில் பஸ் வண்டியொன்றினை சேவைக்கு அமர்த்தி பாடசாலை மாணவர்களை பாடசாலைகளுக்கு எடுத்துச் செல்லும் நாத்தாண்டிய, துன்கன்னாகம பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய நிலார் மொஹமட் ஜிப்ரி என்பவரை " நான் ரொம்ப பிஸி பகுதிக்காக நாத்தாண்டிய, சாஹிரா முஸ்லிம் வித்தியாலயத்துக்கு அருகில் சந்தித்தேன் .

**கேள்வி: உங்களுடைய சொந்த இடம் எது ?**

**பதில்:** எனது சொந்த இடம் துன்கன்னாகவ, நாத்தாண்டிய என்ற பிரதேசமாகும் .

**கேள்வி: பாடசாலை மாணவர்களை பாதுகாப்பான முறையில் பாடசாலைகளுக்கு கொண்டு போய் விடுவதும் பாடசாலை விட்ட பின்னர் அவர்களை வீடுகளில் ஒப்படைப்பதும் மிகவும் பொறுப்புடன் செய்ய வேண்டிய காரியமாகும். இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள் ?**

**பதில்:** மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளோடு சம்பந்தப்பட்ட தொழிலொன்றையே நான் சேவையாகக் கருதி செய்து கொண்டு வருகின்றேன். இது எனக்கு மிகவும் மனத் திருப்தியைத் தருகின்றது . பெருமையாகவும் உள்ளது.

**கேள்வி: இந்த தனியார் போக்குவரத்து சேவையை நீங்கள் ஆரம்பித்து எவ்வளவு காலமாகின்றது ?**

**பதில்:** நான் இந்த சேவையை கடந்த 1995ம் ஆண்டு ஆரம்பித்தேன் . வாடகைக்கு பெற்றுக் கொண்ட வேன் ஒன்றின் மூலமே இந்த தொழிலை ஆரம்பித்தேன் .அப்போது வருமானம் குறைந்தளவில் இருந்தது . பின்னர் சொந்தமாக வேன் ஒன்றை வாங்கினேன் . அதை விற்பனை செய்த பின்னர் பஸ்ஸொன்றை வாங்கினேன் . மேலும் மாணவர்களுக்கு சேவை செய்வது என்ற நோக்கம் எனக்கு சிறந்த அனுபவத்தைத் தந்துள்ளது . சுமார் 27 வருட கால அனுபவத்தை இந்த தொழில் மூலம் நான் பெற்றுக் கொண்டேன் .




**கேள்வி: வாரத்துக்கு ஐந்து நாட்களே பாடசாலை நடக்கும். இவ்வாறு இருக்கையில் வேறு ஏதும் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றீர்களா ?**

**பதில்:** நான் பாடசாலை விடுமுறை நாட்களிலும் மற்றும் விடுமுறை காலங்களிலும் நாத்தாண்டிய சந்தையில் மளிகைச் சாமான்களை வைத்து வியாபாரம் செய்கிறேன். மேலும் வாகனங்களை விற்பனை செய்து தரகுத் தொகையையும் பெற்றுக் கொள்வேன். இதனால் பாடசாலைகளுக்கு மாணவர்களை எடுத்துக் கொண்டு செல்வதில் எனக்கு பொருளாதார பிரச்சினைகள் வருவதில்லை.



**கேள்வி; உங்களது வாகனத்தில் செல்லும் மாணவர்கள் , வாடகையை குறிப்பிட்ட மாதத்திலேயே தருவார்களா?**

**பதில்:** அவ்வாறு கிடைப்பதில்லை.

நாத்தாண்டிய பிரதேசத்தைச் சேர்ந்த மானிங்கல, தும்மோதர , பாந்துராவ மற்றும் துன்கன்னாவ ஆகிய பிரதேசங்கள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகும் . அங்கே குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களே அதிகமாக உள்ளன . அவ்வாறான குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே நாத்தாண்டிய பாடசாலைகளுக்கு எனது வாகனத்தில் செல்கின்றனர் . இதனால் மாதாந்த வாடகைப் பணம் உரிய நேரத்தில் கிடைப்பது மிகவும் குறைவாகவே இருக்கும் .

**கேள்வி: கடந்த சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் எமது நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதன் போது உங்களது தொழிலை எவ்வாறு முன்னெடுத்து சென்றீர்கள்?**

**பதில்:** எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருள்களைப் பெற்றுக் கொள்வதிலும் நான் சிரமப்பட்டேன் . அதன் போது எனது போக்குவரத்து தேவைகளுக்காக ஒரு லீட்டர் டீசலை சுமார் ஆயிரம் ரூபாய் வீதம் பெற்றுக் கொண்டு பாடசாலைகளுக்கு மாணவர்களை கொண்டு சென்றேன் . அப்போது ஒரு லீட்டர் டீசல் 440/= ரூபாய்க்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விநியோகம் செய்யப்பட்டது . அதனையும் பொருட்படுத்தாமல் எனது சேவையை தொடர்ச்சியாக செய்தேன்.



**கேள்வி; இப்போது நீங்கள் ஒரு பஸ்ஸொன்றை வைத்து தொழில் செய்து வருகிறீர்கள்? இதில் எத்தனை மாணவர்களை பாடசாலைகளுக்கு கொண்டு செல்கிறீர்கள்?**

**பதில்:** 38 அல்லது 40 மாணவர்கள் எனது வாகனத்தில் பயணிக்கின்றார்கள் . சிங்கள மொழி மூலம் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களும் பாடசாலைகளுக்கு எனது வாகனத்தில் சென்று வருகின்றனர். எல்லா மாணவர்களும் ஒற்றுமையாகவே எனது வாகனத்தில் பயணம் செய்கின்றனர்.

**கேள்வி; பாடசாலை சேவையை மேற்கொண்டு வருகின்ற சாரதி சங்கமொன்றில் உங்களது வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ளதா ? அந்த சங்கத்தின் சேவை எவ்வாறு உள்ளது?**

**பதில்:** நாத்தாண்டிய நகரத்திலுள்ள பாடசாலை சேவையை மேற்கொண்டு வருகின்ற சங்கமொன்றில் நான் அங்கத்தவராக சேர்ந்துள்ளேன் . அந்த சங்கத்தின் அனுசரணையில் மாறவில பொலிஸார் சேவையை மேற்கொள்ளும் சகல வாகனங்களையும் மாதத்துக்கு ஒரு முறை சோதனை செய்வர் . இந்த சேவை தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகிறது .

**கேள்வி: எரிபொருள் விநியோகம் சிக்கலாக இருந்த வேளையில் உங்களது வாகனத்திற்கு டீசல் வழங்குவதற்கு நீங்கள் அங்கத்துவம் பெற்றுள்ள சங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டது ?**

**பதில்:** இலங்கை போக்குவரத்து சேவைக்கு சொந்தமான வென்னப்புவ டிப்போ எமது சங்கத்தின் வாகனங்களுக்கு டீசல் எரிபொருளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது .

**கேள்வி: தற்போது டீசல் மற்றும் பெற்றோல் ஆகிய எரிபொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன . மாணவர்களிடம் நீங்கள் தற்போது மாதாந்த பாடசாலை போக்குவரத்து சேவைக் கட்டணமாக எவ்வளவு அறவிடுகிறீர்கள்.**

**பதில்:** மாதாந்த கட்டணமாக நாலாயிர ரூபாயை பெற்று வருகின்றேன் . பொருளாதார பிரச்சினைகள் காரணமாக மாணவர்களிடம் கூடுதலான கட்டணத்தை அறவிட முடியாது . வாகனங்களின் உதிரிப் பாகங்களின் விலைகளும் அதிகரித்துள்ளன . இந்த கட்டணமும் போதாது தான் . வேறு வழியில்லை .

**கேள்வி: நீங்கள் மாணவர்களுக்கு கூறும் அறிவுரை என்ன ?**

**பதில்:** பெற்றார்கள் தமது பொருளாதார நெருக்கடியிலும் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு கூடுதலான பணத்தை செலவு செய்து வருகின்றனர் . இதனை பாடசாலை மாணவர்கள் உணர வேண்டும் . மாணவர்கள் கல்வி பயின்று வருகின்ற காலங்களில் கல்வியில் கூடுதலான கவனத்தைச் செலுத்த வேண்டும். இதனால் கூடுதலான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம் .

(படங்கள் மற்றும் தகவல்கள்)
நீர்கொழும்பு தினகரன் நிருபர்
நுஸ்மான்...

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -






## அகம் பத்து 06

சங்கத்துப் பரணரின் மருதத்து ஊடற் பாடல் இது. வயற் காற்றுப் போல வீசும் மொழியின் லாவகம். பரத்தையரில் திளைத்து மீண்ட தலைவனுக்கு இல்லக் கிழத்தி கூறுவதாக அமையும் மருதத்தின் கரு அமைத்த மொழி.

'அரி பெய் சிலம்பின் ஆம்பல் அம் தொடலை'' எனத் தொடங்கும் பரணர் மொழி கடத்தும் அகவுணர்வுக் காட்சிகள் முற்றுரு சார்ந்தவை. கதைகளோடு நகரும் படிமங்கள் இப்பாடலுக்கு அழகு சேர்க்கின்றன. பரல்களிட்ட சிலம்பும், ஆம்பல் மலர் மாலையும் அரத்தால் பிளக்கப்பட்ட வளையல்களும் அணிந்த கை, மூங்கிலொத்த தோளும் கொண்டவள் ஐயை.

அவளது தந்தை தித்தன். மழை வளம் போன்ற கொடையாளன். அவனது ஊர் உறையூர். ஓடக்கோலும் நிலைக்காத படி வெள்ளம் பெருகிய காவிரியூர் என காவிரியின் வெள்ளக் கனதியைப் பரணர் கூறுவார்.

உறையூரில் காவிரியிலே புதிய குழை அணிகலன் பூண்ட உன் விருப்புக்குரிய பரத்தையோடு புனலாடினாய். பூழி நாட்டாரது குளத்தை நாடி விளையாடும் கழிரும் பிடியும் போல வேழக் கரும்பினாலான வெள்ளிய தெப்பத்தில் மார்பிலணிந்த மாலைகள் கசங்குறுமாறு நேற்று அவளோடு புனலாடினாயென தலைவி, புனலாடிய தலைவனை நோக்கியுரைக்கிறாள்.

இன்று நம் இல்லம் வந்து, 'ஆக வன முலை அரும்பிய சுணங்கின் மாசு இல் கற்பின் புதல்வன் தாய்'' என வஞ்சனையுடன் பொன்மொழி கூறி என் முதுமையை இகழ்கிறாய். அம் முதுமைக்கு நான் பொருந்துவேன் எனத் தன்னைப் புதல்வரை ஈன்றெடுத்த தாயென முன்னிறுத்தும் தலைவி கூற்றாகத் தொடர்கிறார் பரணர்.

மத்தி என்பவனின் ஊர் கழாஅர். அவ்வூர் மருத வளமிக்கது. தீச்சாரை போல் தாமரைப் பூக்களுடைய நீர் மிகு வயலில் அழகிய துளையுடைய வள்ளைக்கொடி உண்டு.

அம் மெல்லிய கொடிகளை உழக்கிக்கொண்டு அவ் வயலிலுள்ள வாளை மீனைத் தின்ற நீர்நாயொன்று, முள் நிரம்பிய தண்டுகளையுடைய பிரப்பந் தூறுகளில் தங்கியிருக்கின்ற வளமுடையது கழாஅர்.

அவ்வூர் ஒத்த என் அழகிய இளமை கழிந்து விட்டது. தலைவி தொடர்கிறாள், 'இனிமை எவன் செய்வது, பொய்ம்மொழி, எமக்கே'' என நிறைவுறுத்துகிறாள். உன் பொய்ம்மொழி இனி இனிமை செய்வது எவ்வாறு? ஊடல் மிளிர்கிற வார்த்தை இது.

தலைவியின் மருதப் பிரிவு, ஊடல் கொள்கின்ற பாங்கைப் பரணர் பாடுகிறார். உள்ளுறை வரிகளின் அர்த்தச் செறிவை இப்பாடலில் வாசிக்கலாம்.

நீர்நாய் தலைவன், வள்ளைக்கொடி பரத்தையின் காவலர், வாளைமீன் பரத்தை என்கிற தொடர்பு உள்ளுறை இரசனைக்குரியது.

கற்பின் மேன்மையைக் காட்சிப் படிமங்களளூடே பரணர் முன்வைக்கிறார். ஐயை கற்பின் மகள். மழை வளக் கருத்தும், மன்னனுடைய செங்கோன்மைக்கு காரணமாதலும் கற்பின் பயன்களை தலைவனுக்குக் குறிப்பால் உணர்த்தல், பிள்ளை பெற்றதால் உண்டாகும் முதுமை கற்பு மகளிர்க்குரியதே என்று நிறுவுகிறார்.

மேலும் எங்கு போய் சேர்ந்தாலும் கடைசியில் பிரப்பம் புதருக்கே நீர்நாய் வந்து சேர்வதனைத் தலைவனுக்கு உணர்த்துவது இல்லறம் என்கிற சமுதாயக் கட்டமைப்பை காட்டுகிறது.

நேற்று புனலாடியவன் இன்று கற்பையும், மகப்பேற்றையும் போற்றுவது எங்ஙனம்? இந்த முரணே மாயப்பொய்.

இது புறத்திணைப் பெயராலான அகப்பொருள் நிகழ்வு.

## வள்ளை

உள்துளை மிகு வள்ளைக் கொடியெனக்
கிடந்தது மனம்

பூத்த காலத்தின் கனவுகள் பல
உதிர்ந்த வயற்புறம் நடந்தாய் தோழி

செழுமையின் நெற்கதிரென உன் சொற்கள்
இள மஞ்சளாய்ப் பூத்தன

வரப்போரம் காத்திருந்தாய்
குளத்தோரம் தனித்திருந்தாய்

காற்றள்ளி வீசிய மருதத்தின் வாசம்
பகிர்ந்த மெல்லிய இரவுகள்

பின் பலநாள் தனித்தன
பெருகும் நீர் ரூபத்தின் குளிர் சொற்கள்

பின் பல நாள் கரைந்தன
கோடை காலத்தின் வெடிப்பென
மனசு காண்கையில்

சொட்டு நீரற்று வரண்டது
நா எனும் ஒரு சொல்

நீர்நாயெனத்
தோழி
குரைத்தெழுகிறது அழுகிய சொல்

தோழி
உன் அழகிய மனம்
வள்ளைக்கொடியென நசிவுறல் கண்டேன்

## ஆயிஷா

### இரா. நடராசன் ஆசிரியர்களுக்கெழுதிய முன்னுரை

ஆயிஷா நடராசன் எனத் தன் கதையின் பெயரால் தன் பெயர் பெற்ற குழந்தை இலக்கியக்காரனின் அதி உச்சமான படைப்பு 'ஆயிஷா'. ஒரு விஞ்ஞான நூலுக்கு அதன் ஆசிரியை எழுதிய முன்னுரை என்பது நூலின் பெயர்.

ஒரு இலட்சம் பிரதிகள் விற்பனையானதும், எட்டு மொழிகளில் வெளிவந்ததுமான குறுநாவல் இது. 1996 இல் கணையாழி குறுநாவற் போட்டியில் முதல் பரிசு வென்ற கதை.

இந்தக் கதை கல்விப் புலத்தில் ஏற்படுத்திய அதிர்வுகள் அதிகம். கல்விப் புலத்தின் மீது எழுப்பிய கேள்விகள் மிக அதிகம். கிராமப்புறக் குழந்தைகள் ஆயிஷா மன்றங்களை நிறுவி, அதனூடு அறிவியல் ஆய்வுகளை நிகழ்த்தும் அளவுக்கு சிந்தனைப் பரப்பில் பேரதிர்வை ஏற்படுத்தியவள் ஆயிஷா.

குறும்படம், படக்கதை, வீதி நாடகம், ஒலிவடிவம் எனப் பல்லுரு வெளிப்பாடு கொண்டது ஆயிஷா என்கிற குறுநாவல்.

இரா.நடராசன் என்கிற சிறுவர் இலக்கிய ஆளுமை கல்விப் பரப்பைச் சேர்ந்தவர். சிறுவர் இலக்கியத்தை இயக்குபவர். ஆயிஷா உட்பட, 'இது யாருடைய வகுப்பறை', 'ஒரு தோழனும் ஐந்து நண்பர்களும்', 'கணிதத்தின் கதை', 'நம்மூர் பூதம்', 'இரா.நடராசன் கதைகள்' உள்ளிட்ட பனுவல்களைத் தந்தவர். ஆயிஷாவுக்காக 'சாகித்ய அக்கடமி' விருது பெற்றவர்.




இவரது ஆயிஷா கதை, ஆயிஷாவின் விஞ்ஞான ஆசிரியையின் கூற்றாக – கதை கூறலாக நகர்கிறது. கதையின் மையம் ஆயிஷா என்கிற பதினைந்து வயதுச் சிறுமி. சிறுமி என்ன சிறுமி கேள்விகளால் மேலெழும் பேராளுமைக்காரி. அத்தகைய பேராளுமைக் காரியைச் சூழ்ந்து நிற்கும் நமது கல்விப் புலம், உறவு, பொருளாதாரம், ஆசிரிய மனோபாவம், மரபுசார் கல்வி முறைமைகள் மீது விமர்சனத்தை எழுப்புகிறது கதை.

தேடலும், வாசிப்பும், சிந்தனை வீச்சும், புதியன காணும் விஞ்ஞானப் பார்வையும், கேள்வியெழுப்பும் சாதுரியமுமாகக் கதை கூறும் கதை நம் கண் முன் நிற்கிறது. ஆயிஷா என்கின்ற ஏழைச் சிறுமி கேள்வி கேட்கும் திறனால் அல்லது தனது ஆய்வுமனத்தால் பெரும் ஆற்றல் மிக்கவளாகக் காணப்படுகிறாள். ஆசிரியர்களிடம் கேள்வி எழுப்புகிறாள். ஆனால் அவள் எழுப்பும் கேள்விகளை ஏற்றுக்கொள்ளாத ஆசிரியர்கள் அவளை குழப்பக்காரியாகப் புத்தி பேதவலித்தவளாக அவளது உச்ச ஆற்றலை புரிந்துகொள்ளாது நிற்கும் சூழலில் அவளது பிஞ்சு மனம் துன்புறுகிறது. ஆயிஷாவை ஏற்றுக்கொள்ளும் பாத்திரமாக கதை சொல்லும் ஆசிரியை அமைகிறாள். கதை சொல்லும் ஆசிரியையின் உளப்பாங்கு ஆயிஷாவை வெளிக்கொணர்கிறது.

ஆனாலும் ஆயிஷா கல்விப் புத்தாக்கத்தில் கொல்லப்பட்ட இலட்சோப இலட்சக் குழந்தைகளின் குறியீடு. நம்முள் எழும் அறிவுத்திரட்சி. கதாசிரியரின் கதை கூறு நிலை, கதை மொழி, உணர்வு இழைகளின் இறுக்கம், நீரோட்டமான நகர்ச்சி யாவுமே ஆயிஷாவை உயிர்ப் படைப்பாக்கியிருக்கிறது.

அறிவியல் ஆசிரியையின் உணர்வு மையத்தில் மையம் கொள்ளும் ஆயிஷா, தனது பாடக் கொப்பியின் இறுதியில் அவ் ஆசிரியையின் பெயரை பக்கம்பக்கமாக எழுதியிருக்கிறாள்.

என்தாய்
என் முதல் ஆசிரியர்
என் உயிர்

என்கிற சொற்கள் ஆயிஷாவுக்கும் ஆசிரியைக்குமிடையேயான உயிர்மைய உறவு.

அவளது ஆய்வு மனம் மரத்துப்போன மருந்தைக் கண்டுபிடிக்கிறது. துயரூட்டப்பட்ட அவளது மனம் தன் உடலை மரத்துப் போகச்செய்கிறது. ஏனெனில் ஏனைய ஆசிரியர்களால் அடிபட்டு வலிக்கும் அவளது உடல் மரத்துப் போகவேண்டுமென்று நினைக்கிறாள். இந்நிலை இந்தக் கதையில் ஆயிஷாவைக் கொன்று விடுகிறது. சடங்கு முறை சார்ந்த கல்வியாலும் ஆசிரிய மனப்பாங்கினாலும் தினமும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் ஆயிஷாக்களுக்கு முன்னுதாரணமாகி.

ஆயிஷா சிறுவர் தினத்துக்கும் ஆசிரியர் தினத்துக்குமான பொருத்தமான ஞாபகமூட்டவல்ல படைப்பாகும். ஆமாம். ஆயிஷா: இரா.நடராசன் ஆசிரியர்களுக்காக எழுதிய கதையின் முன்னுரைதான்.

## ஔவன் கவிதை



தர்மவிதிப் புத்தகத்தின்
பதின்மூன்றாம் பக்கக் குறிப்பை
வாசிக்கிறேன்
வியக்கிறேன்

தலைவிதியையெழுதி
முடித்த பின்
தொடரும் இருளின் நிழல்
சொற்களாகி

என் குரலை அழுத்துகிறது

நான் இருள் மீது
தொலைகிறேன்
ஒன்பதாயிரத்துச் சொச்ச
நாட்கள் என்னைத் துரத்தின

நான் மனமிலி
நான் முகமிலி
நான் கனவிலி

தர்மவிதிப் புத்தகத்தின்
பதின்மூன்றாம்
பக்கத்திலிருந்து மீளப்
புரட்டுகிறேன்
கொட்டுண்ட அட்சரங்களில்
ஆயிரமாயிரம் முகங்கள்
கண்ணீர்த் துளிகள்
வியர்வைகள் மூச்சுக்காற்றுக்கள்

அட்சரங்களைக்
கூட்டியள்ளினேன்
புதிய முகம்
புதிய பொருள்
புதிய சொல்

அடிக்குறிப்பை எழுதுகிறேன்
தர்மவிதிப் புத்தகம்
எனக்குள் ஒளிரத்
தொடங்கிற்று

***இது பாடசாலைத்***
***தர்மவிதிப் புத்தகத்தின்***
***பதின்மூன்று பக்க அடிக்குறிப்பு***

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -



அங்கம் 02

முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா

அண்ணாதுரையின் எழுத்தாற்றல், பேச்சாற்றலை அறிந்து வைத்த சில எழுத்தாளர்கள் அண்ணாவை வைத்து ஒரு சிறப்பு சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அக்கூட்டத்திற்கு "இந்தியாவின் வால்டேர்" என்று அழைக்கும் எழுத்தாளரான கல்கி கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார்.

அண்ணாதுரையோடு வேறு சில எழுத்தாளர்களும் சொற்பொழிவாற்ற ஏற்பாடாகியிருந்தது. கூட்டம் நடந்த தினத்தன்று தலைமை தாங்க கல்கி கிருஷ்ணமூர்த்தி நேரத்திற்கு மேடைக்கு வந்து அமர்ந்துவிட்டார். என்ன காரணத்தாலோ சொற்பொழிவாளர்களில் அண்ணாவைத் தவிர வேறு யாரும் வெகு நேரமாகியும் வரவில்லை. தலைமை தாங்க வந்திருந்த கல்கி கிருஷ்ணமூர்த்தியும் பொறுமையோடு காத்திருந்தார். மற்றைய சொற்பொழிவாளர்கள்; சமூகமளிக்காத நிலையில் தலைமை தாங்கிய கல்கி கிருஷ்ணமூர்த்தி சொற்பொழிவாற்ற அண்ணாத்துரைக்கு அனுமதி வழங்கினார். அண்ணா எழுந்து பேச ஆரம்பித்தார். அண்ணா தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த தலைப்பில் பேசி முடித்தார். ஒவ்வொரு பேச்சாளருக்கும் ஒவ்வொரு தலைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. மற்றைய பேச்சாளர்கள் வராத காரணத்தால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தலைப்புக்களிலும் பேச ஆரம்பித்தார். அண்ணாவின் சொற்பொழிவு அழகும் செறிவும் இனிமையும் நிறைந்த வெள்ளம் போல் பாய்ந்து வந்தது. கூட்டத்தில் பலத்த கைதட்டல் ஒலியும் எழுந்தது. பின்னர் கல்கி கிருஷ்ணமூர்த்தி எழுந்து பேச ஆரம்பித்தார்.

கல்கி கிருஷ்ணமூர்த்தி, "நான் தலைமை உரை ஆற்ற வேண்டியவன் என்பதையே மறந்து வியப்புக் கடலில் ஆழ்ந்து போனேன் அப்படிப்பட்ட ஒரு நிலையை அன்பர் அண்ணாதுரை தமது அரிய சொற்பொழிவால் ஏற்படுத்தி விட்டார். பல தலைப்புக்களில் முன் தயாரிப்பு இன்றி எவராலும் இவ்வளவு அழகாக பேச இயலாது. தலைப்புக்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாதவை. இருப்பினும் அவற்றைப் பற்றி விரிவாகவும் ஆழமாகவும் சிறப்பாகவும் உரையாற்றிய அண்ணாதுரை சாதாரண அண்ணாதுரையாகவே எனக்குத் தெரியவில்லை. அறிஞர் அண்ணாதுரையாகவே எனக்குத் தெரிகிறார். இனிமேல் இவரை "அறிஞர் அண்ணாதுரை" என்று எல்லோரும் அழைப்பதே பொருத்தமாக இருக்கும் என்று வியந்து பாராட்டினார். அன்றிலிருந்து அண்ணாதுரையை "அறிஞர் அண்ணா" என்று அனைவரும் சிறப்புப் பெயருடன் அழைக்கத் தொடங்கி விட்டனர்.

மக்கள் தன்னை "அறிஞர்" என்று அழைப்பதை அண்ணா ஏற்றுக் கொண்டாரோ இல்லையோ, ஆனால் அதன் பிறகு தனது கடின உழைப்பால் அறிவையும் திறமையையும் பிறநாட்டு அறிஞர்களும் போற்றும்படி வளர்த்துக்கொண்டார்.

சென்னை கிறிஸ்தவக்கல்லூரியின் தமிழ் மன்றக் கூட்டத்தில் அறிஞர் அண்ணாவிடம் "தலைப்பு இல்லை" என்று சொல்லிப் பேசச்சொன்னார். அப்போது தமிழ்துறைத்தலைவராக இருந்த ஆலாலசுந்தரம், அண்ணா உடனே "ஆம், தலைப்பு இல்லை, தமிழுக்கு தலைப்பு இல்லை, தமிழனுக்கு தலைப்பு இல்லை" என்று பேச ஆரம்பித்தார். எதையும் மேடையில் சமாளிக்க வல்லவர். அண்ணா என்பதற்கு இது போல சம்பவங்கள் பல உள்ளன.



வெளிநாட்டில் ஒரு விருந்துக்கு அண்ணா சென்றார். அந்த விருந்தை அளித்த பணக்காரரின் உணவு மேசையில் பலவித தட்டுக்கள் காணப்பட்டன. அவை தங்கம், வெள்ளி, பீங்கான் என வகை வகையாக இருந்தன. "நான் தினம் ஒரு தட்டு வீதம் முப்பது நாளைக்கு முப்பது தட்டில் சாப்பிடுவேன்" என்றார் அந்தப் பணக்காரர். "எங்கள் நாட்டில் சிறு கிராமத்தில் இருக்கும் ஏழை கூட ஒருவேளை சாப்பிட்ட தட்டில் மறுவேளை சாப்பிட மாட்டார்" என்றார் அண்ணா.

பணக்காரர் உட்பட அங்கு இருந்த அனைவரும் ஆச்சரியமாக எப்படி? என்று கேட்டனர்.

"அது வாழை இலை" என்றாராம் அண்ணா.

(தொடரும்)

கலாபூஷணம் பரீட் இக்பால் ...
யாழ்ப்பாணம்

கனீர் சாரீரத்தால் இசையுலகை அதிர வைத்த

# கொடுமுடி கோகிலம் கே.பி.சுந்தராம்பாள்



கே. பி. சுந்தராம்பாள் என அறியப்படும் கொடுமுடி பாலாம்பாள் சுந்தராம்பாள் என்ற இவர் (ஒக்டோபர் 10) 1908 இல் பிறந்தார். (செப்டம்பர் 19) 1980 இல் அமரரானார். தமிழிசை, நாடகம், அரசியல், திரைப்படம், ஆன்மிகம் எனப் பலதுறைகளிலும் புகழ் ஈட்டியவர். இவர் கொடுமுடி கோகிலம் என்றும் அழைக்கப்பட்டார்.. அறிஞர் அண்ணா இவரை கொடுமுடி கோகிலம் என்று புகழ்ந்தார்.

ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமுடியில் பாலாம்பாள் என்ற அம்மையாருக்கு சுந்தராம்பாள் பிறந்தார். இவருக்கு கனகசபாபதி, சுப்பம்மாள் என்ற இரண்டு சகோதரர்கள். இளம் வயதிலேயே தந்தையை இழந்தார். தனது சகோதரர்களின் ஆதரவால், குடும்பத்தை நடத்தி வந்தார் தாயார். 'கொடுமுடி லண்டன் மிஷன் பள்ளி' யில் கல்வி கற்றார் சுந்தராம்பாள். வேலுநாயர் ராஜாமணி அம்மாள் நாடகக் குழுவினர் நல்லதங்காள் நாடகம் நடத்த கரூருக்கு வந்திருந்தனர். அந்த நாடகத்தில் நல்லதங்காளின் மூத்த பிள்ளையான ஞான சேகரன் வேடத்தை சுந்தராம்பாள் ஏற்று ஆண் வேடத்தில் நடித்தார். பசிக்குதே! வயிறு பசிக்குதே என்ற பாட்டை மிக அருமையாகப் பாடி ரசிகர்களிடன் ஏகோபித்த பாராட்டைப் பெற்றார். தொடர்ந்து நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். சொந்தக் குரலிலேயே பாடி நடித்தார்.1917-ல் கொழும்பு சென்று நடிக்கத் தொடங்கினார். இலங்கையின் பல ஊர்களிலும் இவர் நடித்த நாடகம் நடைபெற்றது. 1929களில் நாடு திரும்பினார்.

வள்ளி திருமணம், நல்லதங்காள், கோவலன், ஞானசௌந்தரி, பவளக்கொடி போன்ற அக்காலத்தில் புகழ்பெற்ற நாடகங்களில் நடித்தார்.மீண்டும் கே.பி. எஸ். 1926-ல் கொழும்புக்கு நாடகக் குழுவுடன் சென்றார். கே.பி.எஸ் புகழ் பரவலாக வளர்ந்திருந்தது. அக்காலத்தில் எஸ். ஜி. கிட்டப்பா தனது குரல் வளத்தால் நடிப்பால் பலரது கவனத்தைப் பெற்று புகழுடன் இருந்து வந்தார். கொழும்பில் கேபிஎஸ் உடன் இணைந்து கிட்டப்பா நடிக்க ஆரம்பித்தார்.1926ஆம் ஆண்டு சுந்தராம்பாள்

கிட்டப்பா நடித்த வள்ளிதிருமணம் அரங்கேறியது. இருவரும் பின்னர் திருமணம் புரிந்து கொண்டனர்.

பல்வேறு இசைத் தட்டுகளில் கேபிஎஸ் பாடல்கள் பதிவு செய்யப்பட்டு எங்கும் ஒலிக்கத் தொடங்கின.1933-ல் டிசம்பர் 2இல் கிட்டப்பா காலமானார். அப்போது அவருக்கு வயது 28. சுந்தராம்பாளுக்கு வயது 25. அன்றிலிருந்து அவர் வெள்ளை சேலைக் கட்டத்தொடங்கினார். எந்தவொரு ஆண் நடிகருடனும் ஜோடி சேர்ந்து நடிப்பதில்லை என சபதம் மேற்கொண்டார். அதைக் கடைசி வரை காப்பாற்றி வந்தார்.நீண்டகாலமாக பொதுவாழ்க்கையில் இருந்து ஒதுங்கி இருந்த கேபிஎஸ் 1934-ல் நந்தனார் நாடகத்தில் நடித்தார். தொடர்ந்து பல நாடகங்களை நடத்தி வந்தார். அவைகளில் பெரும்பாலும் அவர் ஆண் வேடம் தரித்து பெண் வேடத்துக்கு வேறு பெண் நடிகர்களை அமர்த்தியிருந்தார். பக்த நந்தனார் என்னும் படத்தில் நந்தனார் வேடம் பூண்டு நடித்தார். பக்த நந்தனாரில் மொத்தம் 41 பாடல்கள். இவற்றில் கேபிஸ் பாடியவை 19 பாடல்கள். 1935இல் இப்படம் வெளி வந்தது.

அடுத்ததாக மணிமேகலையில் நடித்தார். 1938-ல் படப்பிடிப்பு ஆரம்பிக்கப்பட்டு 1940-ல் படம் வெளி வந்தது. இப்படத்தில் 11 பாடல்களை இவர் பாடியிருந்தார்.தமிழிசை முதல் மாநாட்டு இசையரங்கில் ஜனவரி 4, 1944 இல் கலந்து கொண்டார்.

தொடர்ந்து கேபிஎஸ் ஒளவையார் என்ற படத்தில் ஒளவையார் வேடமேற்று நடித்தார். இப்படம் 1953-ல் வெளிவந்தது. 'பொறுமை யென்னும் நகையணிந்து' , 'கன்னித் தமிழ்நாட்டிலே வெண்ணிலவே' போன்ற பாடல்கள் பிரசித்தமானவை. ஒளவையார் படத்தில் 48 பாடல்கள். இவற்றில் கேபிஎஸ் பாடியவை 30.இந்திய சினிமா வரலாற்றில் ஒளவையார் சரித்திரம் படைத்த படமாகும்.

இதன் தயாரிப்பாளர் ஜெமினி எஸ். எஸ்.வாசன்.1964 பூம்புகார் படம் வெளிவந்தது. இப்படத்தில் கவுந்தி அடிகள் பாத்திரத்தை கேபிஎஸ் ஏற்று நடித்திருந்தார்.

மகாகவி காளிதாஸ் (1966), திருவிளையாடல் (1965), கந்தன் கருணை (1967), உயிர் மேல் ஆசை (1967), துணைவன் (1969), சக்தி லீலை (1972), காரைக்கால் அம்மையார் (1973), திருமலை தெய்வம் (1973), மணிமேகலை (பாலசன்யாசி) உள்ளிட்ட 12 படங்களில் கேபிஎஸ் பாடி நடித்தார்.காங்கிரஸ் பிரச்சாரங்களில் சுந்தராம்பாள் தவறாது ஈடுபட்டு வந்தார். கதர் இயக்கம், தீண்டாமை ஒழிப்பு, வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகிய பாடல்களையும் பாடி வந்தார்.தன்னிடமிருந்த தங்கத் தட்டை மஹாத்மா காந்தியிடம் சுதந்திர விடுதலைக்காக வழங்கினார். காந்திஜி அதனை ஓர் பெருந்தொகைக்கு ஏலமிட்டு சுதந்திர விடுதலை நிதியில் சேர்த்தார். காமராஜர் ஆட்சியின் போது 1958 ஆம் ஆண்டில் தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

2021 Thinakaran and Vaaramanjari epaper -Lanka News E Paper -lankanewsepaper@gmail.com -

# அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு




அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.